உ

சிவமயம்.

அருணந்தி சிவாசாரியர்

இயற்றிய

சிவஞான சித்தியார்

சுபக்ஷம்

௩—௪—௫—௬—சூத்திரங்கள்.

மறைஞானதேசிகர்

சிவாக்ரயோகியர்

ஞானப்பிரகாசர்

சிவஞானயோகியர்

நிரம்பவழகியர்

சுப்ரமண்யதேசிகர்

இவர்களின் உரையுடன்

சிவஞானபோதயந்தரசாலையில்

பதிப்பிக்கப் பட்டன.

சென்னை-சித்ராதிரிப்பேட்டை

சர்வதாரிஹு தை மீ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

க-௪-௫-௬-௯,சூத்திரங்களுக்கு
உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டிய
பிரமாண நூல்கள்.

மறைஞானதேசிகர்.

பார்க்யை	பௌஷ்கரம்
சிந்தியம்	சர்வசித்தாந்த சங்கரஹம்
சுப்ரபேதம்	காந்தபுராணம்
காலோத்தரம்	பாரதம்
ரௌரவம்	திருமந்திரம்
மகுடம்	விஸ்வசாதாக்யம்
சித்ததந்த்ரம்	சிவஞானபோதம்
கிரணம்	நிஸ்வாசம்
ஸ்வாயம்புவம்	நிஸ்வாசகாரிகை
ம்ருகேந்த்ரம்	வாதுளோத்தரம்
மதங்கம்	சர்வஞானோத்தரம்

ஆ - ௨௨.

சிவாக்கிரயோகியர்.

வடநூற் சிவஞானபோதம்	சித்தாந்தசாராவளி
நிஸ்வாசகாரிகை	சித்தாந்தபோதம்

ஆ - ௪.

சர்வஞானோத்தரம்
பீடகதந்த்ரம்
காபிலம்
ம்ருகேந்த்ரம்
பௌஷ்கரம்
கிரணம்
காமிகம்
தேவிகாலோத்தரம்
சிவப்பிரகாசம்
ரௌரவம்
ரத்நத்ரயம்
ஈஸ்வரகீதை
ஸ்வச்சந்தம்

ஆ. - கஎ.

ஞானப்பிரகாசர்.

———0———

ரௌரவம்
கோயிற்புராணம்
திருவாதவூரார் புராணம்
தேவாரம்
சிவதருமோத்தரம்
சுப்ரபேதம்
சதுர்வேததாத்பரியம்
திருவாசகம்
கந்தரலங்காரம்

ஆ - கூ.

சிவஞானயோகியர்.

———0———

சிவஞானபோதம்
துகளறுபோதம்
சர்வஞானோத்தரம்
உபநிடதம்

ஆ-௯.

நிரம்பவழகியர்.

———0———

சிவஞானபோதம்
பரபக்ஷம்
சங்கற்பநிராகரணம்
திருமந்திரம்

ஆ-௯.

———

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷ

௩-௪-௫-௬-௭. இ அதிகரணம்.

௬-அதி.

௩—௧—உளதாய்

௨—உற்றுச் செயிருறும்

௩—இச்சாஞானச் செய்திசளுடையதாகி

௪—துயிலொடும் பயிலுறும்

௫—இன்பதுன்பப் பலன்கள் பார்க்கின் றுகரும்

௬—ஐஞ்சவத்தைப்படும்

எ—துரியாதீத முண்மை (இந்தவுடலி னுயிரென ப்படுவது வேறு)

முதலதிகரண நீங்கலாக, உ-௩-௪-இ-உ-௩-௪- விருத்தங்கள். ஏனைய-௪-௬-உள், சேர்த்து ரைக்கப்பட்டன.

———0———

௪—௧—உணர்வன கரணமென்னி னொன்றையொன் றுணரா ௧௫0௧

௨—யானெனதென்ப தினைதரும் ௧௫௨எ

௩—வெவ்வே றணைதருஞ் செயல்களுன்கு மறிந்தவை யடக்கியாக்கிப் புணருமுட் கரணமாக்கிப் புறக்கருவியினும் போக்கி இவற்றின் வேறு மான்மா. ௧௬௬௨

———0———

௫—௧—பொறிபுலன் கரணமெல்லாம் புருடனாலறிந் தான்மாவை யறிதரா ௧எ௪எ

௨—அவையேபோல வான்மாக்க ளனைத்து மெங்குஞ் செறிதருஞ் சிவன்றன் னாலே யறிந்திடுஞ் சிவனைக்காணு ௧எ௮௫

பாரிசேடம்—அறிதருஞ் சிவனேயெல்லா மறிந்த
றி வித்துநிற்பன்.

—o—

௬—க—அறிபொரு ளசித்தசத்தாம் கஅ0௫
உ—எங்குஞ் செறிசிவமிரண்டுமின்றிச் சித்தொ
டு சத்தாய்நிற்பன் கஅக௫
புறநடை—அறியாததின்றும் கஅ௨௭
ஒழிபு—அறிவுறும் பொருளோவீச னறிவுறுதவ
ஞெவன்னி னெறிதருஞ்சிததின்முன
ன ரசத்தெலா நின்றிடாவே. கஅ௩௨

—o—

அதிகரணத்திற்கு உதாரண விருத்தத்தொகை.

௩—சூ, விருத்தம்			க
,,	உ	அதி	க
,,	௩	,,	க
,,	௪	,,	க
			ஆ௪
௪—சூ, விருத்தம்			க
,,	க	அதி	௪
,,	உ	,,	உ௬
,,	௩	,,	௯
			ஆ௪0
௫—சூ, விருத்தம்			க
,,	க	அதி	உ
,,	உ	,,	௬
			ஆ௯
௬—சூ, விருத்தம்			க
,,	க	அதி	உ
,,	உ	,,	க
௩—புறநடை			உ
௪—ஒழிபு			௩
			ஆ௯

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷ

விஷய சூசிகை.

௩ — சூத்திரம்.

பசு இலக்கணம்.

௩—சூ, அதிகரணம்.

௪ — சூத்திரம்.

அவத்தையிலக்கணம்.

இச்சூத்திரம் மூன்றாஞ் சூத்திரத்திற் றொகுத்துப்போந்த ஆன்ம விலக்கணத்தை விரித்துணர்த்துகின்றது.

௪ - சூ, ௧ - வது, அதிகரணம்.

	மையும் (நி) சிவஞானபோதம்-௪-சூ, ௪-வெ, கருத்து	௧௫௧௪
௫ ஆன்மா	எல்லாங்கூடிய சமுதாயம் ஆன்மாவென்பதைமறுத்தல். மாயாவாதி மறுப்பு (ஞா) பவுத்தன் மறுப்பு(சிவ)௩-சூ,௭ - அதி, கருத்து சவுத்திராந்தி மறுப்பு (நி) சிவஞானபோதம் ௪-சூ, ௭-வெ, கருத்து	௧௫௨௦

௪-சூ, ௨-வது, அதிகாரணம்.

௬ அறிவிச்சை	மீளவுமவனைக் குறித் துணர்த்தல்(சி-ஞா) சிவாத்விதிமறுப்பு(சிவ)௩-௬-அதி, கருத்து	௧௫௨௭
௭ குணங்களை	ஷை	௧௫௩௨
௮ சன்னிதிகுண	ஷை	
	(சி-ஞா-சிவ) சாங்கியன் ம	௧௫௩௭
௯ உருவுயி	ஆன்மா ஒருவடிவா யிருக்குமென்றவன் மறுப்பு பாஞ்சராத்திரி மறுப்பு (சி-ஞா-சிவ) பௌராணிகர் மறுப்பு	௧௫௪௪
௧௦ சூக்குமவுருவ	ஷை	௧௫௪௮
௧௧ அருவுரு	ரூபாரூப மென்பானை மறுத்தல்(சி-ஞா-சிவ)கௌளார்மறுப்பு	௧௫௫௨
௧௨ சந்திரன்	ஷை	௧௫௫௭

ச-சூ, ரு-வது, அதிகரணம்.

ரு—சூத்திரம்.

பாசமோசந இலக்கணம்.

கருத்து

இவ்வான்மாக்க ளிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதல்.

ரு - சூ, க - வது, அதிகரணம்.

ரு - சூ. உ - வது அதிகரணம்.

—o—

ச கருவியாற் கர்த்தாதானே (கூ) கருவியாலுணர்த்தல். இவை மூன்று செய்யுளானும்முறையே கன்மமு முயிரு மாயேயமு மென்னு மாருகதர் மீமாஞ்சகர் சாங்கியர்முதலியோர் மறுப்பு கஎருஅ

ரு கருவியும் ஷ (நி)சிவஞானபோதம் ரு-சூ ங-வெ கருத்து கஎசுச

சு இறைவன்றன் சிவன் எல்லாத்தையுமறிந் தறிவிப்பானரு லவனுஞ் சுகதுக்கங்களை யனுபவிப்பானென்பதற்கு மறுப்பு (நி) பரிணமவாதி மறுப்பு. சிவஞானபோதம் ரு - சூ, உ - வெ, கருத்து கஎசுகூ

எ உலகமேயுருவ பஞ்ச கிருத்தியங்களைத் தனதுசன்னிதிமாத்திரத்தில் நடத்து முறைமை கஎஎரு

அ தெரிந்து சிவனுன்மாக் கட்கு இந்திரிய துவாரத்தாலே அறிவித்து போகமோக்ஷந் தருதல் கஎஅங

கூ அருளிதுசத்தி அனுக்கிரகஞ் செய்ய சத்தியுடைமையாதோ வெனின் அதற்குத் தலைமை யீசன் எ

சா—சூத்திரம்.

பதிபாச தரிசன இலக்கணம்.

சா-சூ, க - வது, அதிகரணம்.

—o—

சா - சூ, உ - வது, அதிகாணம்.

---o---

ச உணராதபொ ஈசன் அறியப்படா னென்றவ
னுக்கு அறியப்படுவ னென்
றுணர்த்தல். (நி) பாடா
ணவாதி மறுப்பு கஅகரு

சா - சூ, ந - வது புறனடை.

---o---

ரு தத்துவஞ்ச சிவனை ஏனைப்பொருள்களை அ
தத றிவாலறிவதுபோ லறியக்கூ
டா தென்பது.பாடாணவா
திமறுப்பு (ஞா) வேதாந்தி
மறுப்பு சிவஞான போதம்
சா - சூ, உ-வெ, கருத்து கஅ௨ഠ

சா அறிபொருள் ஆன்மாவா லறியப்படாததா
கில் ஒருமுதலு மில்லையோ
வெனறவனைக் குறித் தறியு
மிட முணர்த்தல்(சிவ) மா
யாவாதிமறுப்பு (நி) சிவஞா
னபோதம் சா-சூ; ந-வெ க
ருத்து சஅ௨ரு—சா

சா - சூ, ச - வது ஒழிபு.

---o---

எ பாவிப்பதென் ஷெ
(சிவ) பாதஞ்சலர் மறுப்பு
(நி) பாடானவாதி மறுப்பு

	சிவஞானபோதம் சு - சூ, சு-வெ, கருத்து	௪அ௩உ
அ அன்னிய	சிவன் பின்னமாகக் காணப்படான் (நி) சங்கிராந்தவாதி மறுப்பு சிவஞானபோதம் சு-சூ, ரு-வெ, கருத்து	௪அ௩௩
௬ ஒன்றெனு	ஆன்மாசிவனல்ல (ஞா) வேதாந்தி மறுப்பு (சிவ)முன்னிரண்டுசெய்யுளும் சிவசமவாதி மறும்பு (நி) பரிணாமவாதி மறுப்பு சிவஞானபோதம் சு - சூ, சு - வெ, கருத்து	௪அ௪ரு

விஷயசூசிகை முடிந்தது.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௩ - ௪ - ௫ - ௬-ஞ்-சூத்திரச்செய்யுளகராதி.

	ப —	சூ-	செ.
அ			
அசித்தரு	௧௫௯௬	௪	௨௦
	௧௫௯௭		
அசித்தெனி	௧௫௬௫	௪	௧௪
அயனரியர	௧௫௧௪	௪	௪
அருவவிகாரி	௧௫௬௨	௪	௧௩
அருவுரு	௧௫௫௨	௪	௧௧
அருளதுசத்	௧௭௮௭	௫	௯
அவ்வுடனுவ்	௧௫௦௭	௪	௩
அறிதரு	௧௬௮௫	௪	௩௫
அறிந்திடும்பி	௧௪௮௧	௩	௪
அறிந்திடுமா	௧௭௫௩	௫	௩
அறிபொருள்	௧௮௨௫	௬	௬
	௧௮௨௬		
அறிவதைம்	௧௪௭௫	௩	௩
அறிவிச்சை	௧௫௨௭	௪	௯
(௪-சூ, ௨-அதி)			
அறிவிலன்	௧௭௦௩	௪	௩௮
அறிவுடல்	௧௬௪௪	௪	௨௯
அறிவுறும்	௧௭௯௫	௬	௧
அன்னிய	௧௮௩௯	௬	௮
ஆ			
ஆவதாயழிவ	௧௮௦௫	௬	௨
(௬-சூ, ௧-அதி)			
ஆன்மா	௧௫௨௦	௪	௫
இ			
இருவகை	௧௬௯௨	௪	௩௬
இருவினை	௧௭௧௫	௪	௪௦
இறைவன்ற	௧௭௬௯	௫	௬
	—௭௦		
இறைவனே	௧௭௪௭	௫	௨
(௫-சூ, ௧-அதி)			
உ			
உடலினிலே	௧௫௭௫	௪	௧௬
உடலினவே	௧௪௭௧	௩	௨
	௧௪௭௨		
உடலியான	௧௬௩௩	௪	௨௭
உணர்வன	௧௪௯௩	௪	௧
உணராத	௧௮௧௫	௬	௪
(௬-சூ, ௨-அதி)			
உயிரினை	௧௫௭௦	௪	௧௫
உயிரெனப்	௧௪௬௫	௩	௧
உருவினை	௧௭௦௮	௪	௩௯
	௧௭௦௯		
உருவினி	௧௫௮௦	௪	௧௭

உருவுயி	கருசா	சா	கூ
உலகமே	களஎரு	ரு	எ
எ			
எங்குந்	சருஅரு	சா	கஅ
என்னுடல்	கஷஉரு	சா	உரு
ஐ			
ஐந்து	கஷஎரு	சா	ஙசா
ஒ			
ஒன்றெனு	சஅசாரு	கஷ	கூ
க			
கண்டுணர்	கஷரு௰	சா	ங௰
கருவியாமன (சா-சூ, க-அதி)	கரு௰க	சா	உ
கருவியாற் (ரு-சூ, உ-அதி)	களருஅ	ரு	சா
கருவியும்	களகஷசா	ரு	ரு
கு			
குணங்களை	சருஙஉ	சா	எ
கே			
கேவல	கஷகூஅ	சா	ஙஎ
ச			
சந்திரன்	கருருஎ	சா	சஉ
சன்னிதிகுண	கருஙஎ	சா	அ
சா			
சாக்கிர	ககூகஷகஷ	சா	ஙங
சு			
சுத்தமா	சருகூ௰	சா	ககூ
	கருகூக		
சூ			
சூக்குமதேகி	கஷச௰	சா	உஉ
	கஷகக		
சூக்குமவுருவ	கருசாஅ	சா	க௰
த			
தத்துவஞ் (கஷ-சூ, ங-புற)	கஅஉ௰	கஷ	ரு
தெ			
தெரிந்து	சஎஅக	ரு	அ
	களஅஉ		
தோ			
தோற்பாவை	கஷஉ௰	சா	உசா
ப			
படைகொடு (சா-சூ, ங-அதி)	கஷகஷஉ	சா	ஙஉ
பா			
பாவிப்ப (கஷ-சூ, சா-ஒழி)	கஅஙஉ	கஷ	எ
பு			
புந்தியை	கஷஙகூ	சா	உஅ
புருடனே	கஷருகஷ	சா	ஙக
பொ			
பொறிபுலன்	களஙஎ	ரு	க
பொன்னணி	கஷஉகூ	சா	உகஷ
ம			
மண்டனில்	கஅ௰கூ	கஷ	ங
மருவானந்த	கஷகசா	சா	உங
மா			
மாயையின்	சகஷ௦உ	சா	உக
	கஷ௦ங		

செய்யுளகராதி முற்றியது.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௩ - சூத்திரம். பசு இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

இச்சூத்திர மிரண்டினாலும் பதியினதிலக்கண முணர்த்திப் பதிக்கிலக்கணமாகிய பசுவினுடைய விலக்கண மெப்படி யென்ற மாணாக்கனை நோக்கி, அதனை யருளிச்செய்கிறார்.

மேலித் தலைச்செய்யு ளென்னுதலிற்றோவெனின்? அவ்வான்மா வுடலி னுண்டெனக் காட்டிக் கூட்டி னுயிருண்டென்று தொகுத் துணர்த்துகிறார்.

உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுற்றுச், செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப், பயில்வுறு மின்பத்துன்பப் பலன்களு நுகரும்பார்க்கிற், றுயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை துரியாதீதம்.

(இ - ள்.) உயிரெனப்படுவது	ஆன்மாவென்று சொல்லப்படுவது
இந்தவுடலின் வேறுளதாய்	இச்சரீரத்துக் கன்னியமாய்,
உற்று	இந்தச் சரீரத்தைப் பொருந்திநின்று
செயிருறுமிச்	குற்றத்தைப் பொருந்திய மலத்தாற்

சாஞானச் செய் திசனுடையதாகி	றடைபடப்பட்ட விச்சாஞானக் கிரியைக ளையுடையனாகி,
பயில்வுறுமின் பத்துன்பப் பல ன்களு நுகரும்	சந்தோடத்தையுடைய சுகத்தையுந் துக் கத்தையுடைய பாவபலத்தையுங் கன்மத் துக் கீடாகப்பொருந்தியந்தந்தப் போகங்க ளை யதுவதுவாகப் புசியாநிற்கும்.
பார்க்கிற் றுயி லொடுமைந்தவத் தைப்படும்	அப் போகத்தைப் புசிக்கையி னித்தி ரையுடனு மைந்தவத்தையைப் பொருந்தா நிற்கும். ஆனாலெப்பொழுது மிப்படியிருக் குமோ வென்னில்?
உண்மை துரி யாதீதம்.	இந்த ஆன்மாக் கருவிகளாகிற வுபாதிக ளைவிட் டேகாந்தமாய்த் துரியாதீதத்தைப் பொருந்தி யிருப்பதுவே யுண்மை.

துயிலொடு மென்பதனாற் சகலாவத்தையின்கண்ணும் பஞ் சாவத்தையு முறுமென வறிக.

இதற்குப் பார்க்கினையி னறிக. (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இவ்வாறு ஆன்மாக்களுடைய கன்மானுகுணமாக உபாதா னத் திரவியங்களிலே சிருஷ்டியாதி கிருத்தியத்தைப் பண்ணுமு றைமையையும், உபாதானத் திரவியங்களினது லக்ஷணமும், ஆண வ கன்மத்தினது லக்ஷணமும் உணர்த்தி; இந்தச் சூத்திரத்தி லே 'அலகிலா உயிர்கள்'என்றதற்கு ஆன்மா சூனிய மென்பவனையு ம் தேகேந்திரியப் பிராணவாயுக்களே ஆன்மா வென்பவர்களையு ம் நிராகரித்து, தேகேந்திரியப் பிராணவாயுக்களுக்கு அன்யனாக

நித்திய விபாபக சித்ரூபீபாக ஆன்மா வுண்டென்று மேல் மூன்றுஞ் சூத்திரம் நாலு விருத்தத்தினாற் கூறுகின்றது.

க - உ - ௩ - வுரைகளை-௪ - வது, விருத்தவுரையிற் காண்க

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பதி பதார்த்தத்தை யிரண்டு சூத்திரத்தாற் பரீக்ஷித்துப் பசு பதார்த்தத்தைப் பரீக்ஷிக்கின்றார்.

(உண்டெனும்பொருளை யில்லதென்பது மாதலால் உடலின்வேறுயிர் நீஇல்லையென்று சொல்லுதலால்) உயிரெனப் பவடுிந்த உடலின் வேறுளதாய்- ஆன்மாவென்னும் பொருள் இந்தச் சரீரத்துக் கன்னியமாயுண்டாய்.

அதெப்படிச் சொன்னீர்? முக்காலத்து மில்லாத முயற்கொம்பு இல்லையென்று தள்ளப்பட்டதில்லையோ? சத்தியம் நீ சாற்றியது; முயலினது கொம்பு முயற்கொம்பென்று ஆறும் வேற்றுமைத் தொகைபண்ணி இல்லை யென்று தள்ளியதன்று. முயலிற் கோ முதலானவற்றிற் காணப்பட்ட கொம்பில்லை யென்று தள்ளியதாதலால், இல்லையென்று சொல்லுதலால் அப்படி யான்மா வுண்டாய்,—

உற்று - உடலோடு சம்யோக சமவாய சம்பந்தங்கள் சாற்றப்படா வாகையால், போக்கிய போக்திருத்துவ சம்பந்தியாய்ப் பொருந்தி,—

செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகி-மலத்தினால் மலினமாகப் பண்ணப்பட்ட முத்தொழி லுடையதாகி,—

பயில்வுறு மின்பத் துன்பப் பலன்களும் நுகரும்-பழகியசுக துக்கங்களையு மனுபவிக்கும்,—

பார்க்கில் - விசாரிக்கில்,—

துயிலொடு மஞ்சவத்தைப்படும் - நித்திரைப்பண்ணு மிடத்து இனிமேல் விஸ்தரித்துச் சொல்லப்படும் அஞ்சவத்தைகளைப் பொருந்தும்,—

உண்மை துரியாதீதம் - உயிரினது லக்ஷணம் பசுத்துவ முற்றறியாமை, சிவத்துவம் முற்றறிகை.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

முதற் சூத்திரத்து மிரண்டாஞ்சூத்திரத்தும் முறையே பதியுண்மைக்கும் பாசவுண்மைக்கும் பிரமாணங்கூறிய வாசிரியர், இரண்டாஞ் சூத்திரத்தின் 'அலகிலாவுயிர்' என்று எடுத்துக் சொள்ளப்பட்டெஞ்சிநின்ற பசுவுண்மைக்குப் பிரமாணம் மூன்றுஞ்சூத்திரத்திற் கூறுகின்றார்.

உயிர்சூனியமெனின்? அவ்வாறு சொல்வதொன்றுளதாய் நிற்றலானும், உடம்பேயுயிரெனின்? உடம்பகத்தே பொருந்திநின்று யானெனதென்னுஞ் செருக்குறுதலானும், ஐம்பொறியேயுயிரெனின்? ஞானமாத்திரையேயன்றி ஞானங்கிரியையிச்சையென்னு மூன்று முடைத்தாகலானும், சூக்குமவுடம்பேயுயிரெனின்? கனவொடு பயின்றதனை நனவின்கணுற்றறிந்து நிற்றலானும், பிராணவாயுவே யுயிரெனின்? இன்பதுன்பப்பயன் ஒடுங்கியவிடத்தின்றி யொடுங்காதவிடத்து நுகர்ந்துநிற்றலானும், பிரமமேயுயிரெனின்? அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப்பட்டறிதலானும், அனைத்துங் கூடிய சமுசாயமுயிரெனின்? அனைத்துநீங்கிய துரியாதீதத்து முண்மையானும், இந்தவுடலின்கணுயிரெனப்படுவது இவையனைத்திற்கும் வேறென்பதாம்.

உயிரெனப்படுவதென்றது சாதியொருமை.
துயிலொடும் பயில்வுறுமென விகையும்.
துயிலென்றது ஈண்டுக் கனவின்மேற்று.
பயில்வுறுமென்புழி இரண்டாவது விரித்துரைக்க.
பயில்வு ஆகுபெயர்.
பார்க்கில் நுகருமென மாறுக.
பார்க்கில் விழித்தவிடத் தென்றவாறு.

"ஐயுங்கண்ணு மல்லாப்பொருள்வயின் மெய்யுருபுதொகா விறுதியான" என்பதோத்தாகலின், ஏழாவது இறுதிக்கட் டொக்கது.

துரியாதீதத்தி லுயிருண்டென்பது, விழித்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேனென்று உணர்வு நிகழ்தல்பற்றித் தெளியப் படும்.

'உளதாய்' என்பதுமுதலிய வேழுங் குறிப்பேதுவாகலான் அவற்றையிங்ஙனம் விரித்துரைத்து, முதனூலுண் மூன்றுஞ் சூத்திரம்போல இச்செய்யுள் எழுகூற்ற தாயவாறு கண்டுகொள்க.

அற்றேல், சூனியமுதலிய வற்றுள் ஏனையவெலாமறியு மென்பது காட்சியளவைக்கு எய்தாமையின், உயிர் அவற்றின் வேறெனக் கொள்ளினும், உடம்பாதல் உட்பினகணுனவாகிய ஐம்பொறிகளாதல் அவ்வைம்பொறிகளை யூக்கி இயங்குவதாய பிராணவாயுவாதல் அறியுமென்பது காட்சியளவையா னறிபக்கிடத்தலின், உயிர் அம்மூன்றனுளொன்றாகற்பாற்றென்றலே பொருத்தமுடைத்துப்போலு மென்பாரை நோக்கி; அம்மூன்றையுஞ் சிறந்தெடுத்தோதி மறுத்தற் கெழுந்தன வருஞ் செய்யுட்களென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

முதற் சூத்திரமு மிரண்டாஞ் சூத்திரமும் பதியிலட்சணம். முன்சொல்லப்பட்ட கர்த்தாவினுடைய சிருத்தியங்களிலே படுவருகிற பசுவினுடைய விலட்சணம் எப்படியென்றமாணாக்களை நோக்கி மேலான்ம லட்சண மருளிச்செய்கிறார்.

உயிரெனப்படுவ திந்த வுடலின்வேறு - ஆன்மாவென்று சொல்லப்பட்டது இந்தத் தேகத்துக்கு அன்னியமாயிருக்கும். அப்படி யிந்தச் சரீரத்துக்கு வேறேவென்னில்? வேறாயிராது. அதெப்படி யென்னில்?—உளதாயுற்று - இப்படி அன்னியமாயிருக்கவும் இந்தத் தேகத்திலே யுள்ளதுமாய் தேகந்தானாய் நின்று,—செயிருறு மிச்சாஞனச் செய்திகளுடையதாகி - குற்றத்தைப் பொருந்தின இச்சாஞானக் கிரியைகளை யுடையதாய்,—பயில்வுறு மின்பதுன்பப் பலன்களை நுகரும் - முற்சனனத்திலே பயின்று பொருந்தி யிருக்கப்படாநின்ற சுகதுக்கங்களையும் புசிக்கும். இஃதொழிந்து,— பார்க்கிற்றுயிலொடுமஞ்சவத்தைப்படும் - இதனுடைய வுண்மையை விசாரித்துப்பார்க்கில் நித்திரையிலே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் அஞ்சவத்தையும்படும். இந்த வஞ்சவத்தையிலும் ஆன்மாவுக் குண்மையான வவத்தை யேதென்னில்?—உண்மை துரியாதீதம் - இவனுக்கியற்கை துரியாதீத மொன்றும். மற்றுள்ள நாலவத்தையும் செயற்கை.

இதனாற் சொல்லியது, ஆன்மா விந்தவுடலுக்கு வேறுமாய் வேறல்லவுமாய் மலத்தாலே மறைக்கப்பட்ட விச்சாஞானக் கிரியைகளையுமுடையதாய்ச் சுகதுக்கங்களையும் அநுபவிப்பதாய் அஞ்சவத்தையும் படுவதாய் அந்த வவத்தையில் இவனுக்குண்மையானவவத்தை துரியாதீதமென்னு முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

உளதாய் - உயிர்சூந்யமெனின் அவ்வாறுசொல்வதொன்றுளதாய் நிற்றலானும்,—உற்றுச்செயிருறும்-உடம்பே யுயிரெனின்? உடம்பகத்தே பொருந்திநின் றியானெனதென்னுஞ் செறுக்குறுகலானும்,— இச்சாஞானச் செய்திகளுடையதாகி - ஐம்பொறியே யுயிரெனின்? ஞானமாத்திரையே யன்றி ஞானங் கிரியை யிச்சையென்னு மூன்றுமுடைத்தாகலானும்,— துயிலொடும் பயிலுறும் - சூக்குமவுடம்பே யுயிரெனின்? கனவொடு பயின்றதனை நனவின்க ணுற்றறிந்து நிற்றலானும்,—இன்பத்துன்பப் பலன்களும் பார்க்கி னுகரும்,—பிராணவாயுவேயுயிரெனின்? இன்பத்துன்பப் பயனொடுங்கிய விடத்தின்றி ஒடுங்காத விடத்து நுகர்ந்து நிற்றலானும்,— அஞ்சவத்தைப் படும்-பிரமமேயுயிரெனின்? அறிந்தாங்கறிதலன்றி யைந்தவத்தைப்பட் டறிதலானும்,— துரியாதீதமுண்மை-அனைத்துங்கூடிய சமுதாயமுயிரெனின்? அனைத்து நீங்கியவுயிர் துரியாதீதத்து முண்மையானும்,— இந்தவுடலினுயிரெனப்படுவதுவேறு- இந்தவுடலின்க ணுயிரெனப்படுவதுஇவையனைத்திற்கும் வேறு என்பதாம்.

'உளதாய்'என்பது முதலிய வேழும் குறிப்பேது வாகலான் அவற்றை யிங்ஙனம் விரித்துரைத்து,முதனூலின் மூன்றாஞ் சூத்திரம்போல விச்செய்யு ளெழுகூற்றதாயவாறு கண்டுகொள்க

மறைஞானதேசிகர் உரை.

இந்த வுடலுக்கு வேறாக வோரான்மா வில்லை யென்று லோகாயதன் சொல்ல, அவனை மறுத் துணர்த்துகின்றார்.

உடலின்வே றுயிரோனிந்த வுடலன்றோ வுணர்வ
தென்னி, னுடல்சவ மானபோது முடலினுக் குணர்வு
ண்டோதா, னுடலினில் வாயுப்போறு னுணர்ச்சியின்
றுடலுக்கென்னி, னுடலினின் வாயுப்போகா துறக்கத்
து முணர்வதின்றே. (௨)

(இ-ள்) உடலின் வேறுயிரோனிந்த வுடலன்றோ வுணர்வதென்னில்	இந்தச் சரீரத்துக்கு வேறுயிருப்பதோ ரான்மா வுண்டென்று நீர்சொல்லுகிறதெப்படி? இந்தச் சரீரந்தானே யல்லோ சேதோஷ்ணங்க ளெல்லாத்தையு மறிகிறது, ஆன்மா வேறில்லை யென்னில்?
உடல் சவமானபோது முடலினுக் குணர்வுண்டோதான்	பூதக்கூட்டரவா லுண்டாமென்று நீசொல்லிய சரீரம், பிணமானபோது அவ்வுடலின்க ணின்று போகங்களைப் புசிக்க வோரறி வவ்விடத் துண்டாகக் கண்டோமில்லையே! அஃதேதுகாரணத்தா லென்னில்? கடபடாதிகளைப்போலச் சடமாதலால்.
உடலினில் வாயுப்போறு னுணர்ச்சியின் றுடலுக்கென்னில்	அஃதறியாது பிராணவாயுப் போனபடியினாலேகாணு மென்று நீ சொல்லில்?
உடலினில் வாயுப்போகா துறக்கத்து முணர்வதின்றே	அந்தவாயுவானது நித்திரைசெய்யும்போழு துன்னுடலிற் பொருந்திருக்கவு முணக் சறிவின்றி யிருப்பானேன்? ஆதலா லான்மா வவத்தாந்தரத்தையடையுமென் றறிவாயாக.

இதற்குப் பார்க்கியையென வறிக. (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

௨ - வது, ௭-உரையிற் காண்க.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பாமதசங்கையு மூத்தரமுமாய்ப் படிக்கின்றார்.

வெளிப்பொருள்.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

அவபவங்களி னொன்றனுங் குறைபாடின்றிக் கிடக்கும் பிணக்கிடையினும், நீகூறும் பூதக்கூட்டத்தி னொன்றனுங்குறைவின்றிக் கிடக்கு முறக்கத்தினும், அறிவு நிகழக் காணாமையான்; உடம்பறியுமாறு யாண்டையதென்பதாம்.

போகாதவென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது.

———

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மேல் உலகாயதன் உடலுக்குவேறு யிருப்பதோ ரான்மாவில்லை, உடலறியுமென்று சொல்ல; அவனைமறுத் தருளிச்செய்கிறார்.

உடலின்வேறுயிரோ னிந்தவுடலன்றோ வுணர்வதென்னில் - இந்தத் தேகத்துக்கு அன்னியமாயிருப்பதொரு ஆன்மா வு

ண்டென்று நீர் சொல்லுகிறபடி யெப்படி? இந்தத் தேகமல்லோ சர்வத்தையு மறிகிறது என்று நீ சொல்லில்?— உடல் சவமானபோது முடலினுக் குணர்வுண்டாகும் - இந்தத் தேகம் பிணமானபோது இந்தத் தேகத்துக்குப் பிரஞ்ஞையுண்டாய் எல்லாத்தையு மறியவேணும்,— உடலினில் வாயுப்போ று லுணர்ச்சியின் றுடலுக் கென்னில் - தேகமறியுங்காணும், இந்தத் தேகமான பூதங்களில் வாயுப்போனது கொண்டு காணும் தேகத்துக் கறிவில்லாம லிருந்தது என்று நீ சொல்லில்?—உடலினில்வாயுப்போகா துறக்கத்து முணர்வதின்றே - நீ சொல்லுகிறவாயு உடலிலே நிற்கச்செய்தேயும் நித்திரையி லொருபிரஞ்ஞையுங் கண்டோமில்லை, ஆகையால் உடலறியாதுகாண்.

உடலினவே றுயிரோ லிந்தவுடலன்றோ வுணர்வதென்றது உலோகாயதன். இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். ௩-சூ,உ - வெ "எனதென்றமாட்டி லெனதலாதென்று, தனதல்லாதன்கைகா லாக்கை— யெனதென்று, மென்னறிவதென் றுமுரைத்திநிற்றிகா, ணுன்னில்வை வேறு முணர்" என்றும், பரபக்ஷம்அவன்மறுப்பு -௧௦-செ." அறிவுபூதம தென்னில்வேறு புறத்தறிந்தமைகண்டிலஞ், செறிவுதானு டலத்தெனிற்சவமான போதுடல்தேறுமோ,குறிகொளாதுடல்வாயுவானவைகூடிடாமையி லென்னில்நீ, பிறிதராதுயிர்நிற்கஞான முறக்கமென்பிற வாதத"என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, உலோகாயதன் இந்த வுடலுக்கு வேறு யிருப்பதோ ரான்மா வில்லையென்ன, அவனைநோக்கி இந்த வுடலுக்கு வேறுயிருப்பதோ ரான்மாவுண்டு, அதுவே எல்லாத்தையு மறிகிறதொழிந்து உடலறியாதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

உடலில்வேறுயிரேன்-இவ்வுடம்பின்வேறு யுயிரென்றுண்டென்பதெற்றுக்கு,—இந்தவுடலன்றே வுணர்வதென்னில்-இவ்வுடம்பே யறியுமென்னில்?—உடல்சவமானபோது வுடலினுக்குணர்வுண்டோதான் - அவயவங்களி லொன்றனுங் குறைவின்றிக்கிடக்கும் பிணக்கிடையின் அவ்வுடலன்றி யுளதோ? இன்று,— உடலினில் வாயுப்போனு லுடலுக் குணர்ச்சியின்றெனில் - இவ்வுடம்பினுள்ள பிராணவாயு நீங்கிடின் உடலுக்கு உணர்வு நிகழாதென்னின் ?—உடலினில் வாயுப்போகா துறக்கத்துமுணர்வதின்றே - நீ கூறும் பூதகூட்டத்தி லொன்றனுங் குறைவின்றிக் கிடக்கும் உறக்கத்தினும் அறிவு நிகழ்வ தின்றாகலின் உடம்பறியுமாறு யாண்டையதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

முதற்கண் டொகுத்துப் போந்ததற்குச் சௌதிந்ராந்திகனை நோக்கி வகுத்துணர்த்துகிறார்.

அறிவைதம் பொறியேயென்னி னுறக்கத்தி னறியாவாகு, மறிவது மொன்றொன்றாக வொன்றொன்று வறியுமென்னி,னறிவுகளொன்றையொன்றங் கறிந்திடா வைந்தையுங்கொண், டறிவதொன் றுண்டதான் மாவைம்பொறி யறிந்திடாவே. (ரு)

(இ-ள்)அறிவைதை பஞ்சேந்திரியங்களுமே யான்மாவென்றும்பொறி நீ சொல்லில்?
யேயென்னில்

உறக்கத்தின நியாவாகும் உறக்கத்தின்கண் ஒன்றையு மறியக்கண்டோமில்லையே! அப்படியன்றுகாணும்,

அறிவது வொன்றொன்றாக வொன்றொன்று வறியுமென்னின் உறக்கத்தின்கணின் றறியமாட்டாது, உணர்ந்தபொழு தொன்றொன்றாகவே விடயங்களை யறியுங்காணும், பஞ்சேந்திரியங்களு மறிவாயிருந் தறியுமாகி லவ்வஞ்சு மெப்பொழுது மறிந்துகொண்டிராம லொருவிடயத்தை யொன்றறிகிறபோது மற்ற விந்திரியங்கள் அறிவின்றியிலே கெட்டுப்போவானேனென்னில்? கெட்டுப்போகா தறிவாயிருந்து தனக்கேற்ற விடயங்களை யொவ்வொரு காலங்களிலொருவிடயத்தை யோரிந்திரியமறிகிற தியல்புதானென்னில்?

அறிவுக ளொன்றையொன்ற றிந்திடாவைந் தையுங்கொண் டறிவதொன் றுண்டதான் மாவைம்பொறியறிந்திடாவே. அஃ தப்படியாயி னோரிந்திரியத்தின் விடயத்தையு மவ்விந்திரியத்தையு மறிகிறவிந்திரியங்க ளறியா திருப்பானேன்? ஆதலா லிந்திரியங்க ளறிவல்ல. இவையிற்றுக்கு வேறாகி யோரான்மாநின் றிவையிற்றையுமறிந் திவையிற்றால் விடயங்களையு மறிந்து பஞ்சவிடையங்களையு முன்பின்னாக வறிந்து நிற்கும் எ-று.

உ-ம். "ஓசையைச் செவியாலோர்ந்து முருவினைக் கண்ணாலுற்று, நாசியாற்கந்தங்கொண்டு நாவினாலிரதந்துய்த்தும், பூசியதோலினாலே புலப்படப்பரிசமுற்று, மாசறவுடலினிற்கு மறிவுகாணுன்மாத்தானே" எனவறிக.

இதற்குகாரணம் 'அறிந்திடும்' என்கிற கவியிற்காண்க.(ங)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

ச - வது - செ,உரையிற் காண்க.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

திருச்சியமா யிருக்கின்ற சரீர மான்மா வென்பதடாது; திருக்குருபமாயிருக்கின்ற இந்திரியங்களோ ஆன்மா வென்று லோகாயத விசேடனு யிருக்கின்ற ஒருவன் சொல்ல; மறுத் துரைக்கின்றார்.

அறிவதைம் பொறியே யென்னில் - ஆன்மா வென்று நீர் சொல்லிய பொருளின தறிதற் றொழிலை யித்திரியங்கள் தானே பண்ணுவதுபோல எங்களுக்குத் தோற்றுதலால் இந்திரியந்தா னே யான்மா வென்று நீ சொல்லில்?—உறக்கத்தி லறியாவாகு ம் - நித்திரையி லிந்திரியங்க ளறியாவாகும்; ஆதலினால் இந்தி ரியங்க ளான்மா வன்று. இந்திரியத்துக்கு வேறாய் நீர் சொ ல்லுமான்மா நித்திரையி லறியாதிருப்பானேன்? மல தோஷத் தா லென்பீராகில்? எங்களிந்திரிய வான்மாவும் தாமதகுண தோஷத்தால் என்றுசமாதானம் நீ சொல்லில்?— அறிவது மொன்றொன்றாக - பஞ்சேந்திரயங்களான்மா வென்றாலும் அ வைகளறிவதோ ரிந்திரியம் சத்தாதி விஷயத்தில் ஒருவிஷய மாக அந்தச்சமயத்தில் அந்த விஷயத்திலே நானுமான்மா வல் லாதேபோம்.—ஒன்றொன்று யறியுமென்னில் - வர்கோஷ்டி நி யாயத்தால் ஓரிந்திரிய மொருவிஷயமாயறியும், அதனால் ஐந்து ங் கூடி யான்மாவென்னில்? ஓருரி லேக்துரவர்கள் போல ஒரு காலத்து மாறுபடுதலானும்,—அறிவுகள் ஒன்றையொன் றங் க

றிந்திடா - ஆதலானும்,—ஐந்தையுங் கொண்டறிவதொன்றுண்டு-ஐந்தையுங் கருவியாகக் கொண்டறிவதோரறிவுண்டு.—அசான்மா-அந்தவறிவான்மா,—ஐம்பொறி யறிந்திடாவே - பஞ்சேந்திரியங்களும் கருவியாதலால் கர்த்தாவாக அறியா.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பிணமாம்போது கெட்டொழிவதாகிய ஐம்பொறிகளே அவ்வுடம்பினின்று நனவின்கணறியும் உறக்கத்தின்கணறிதலின்றி ஒடுங்கிநிற்குமெனின்? அது பொருந்தாது. நனவின்கணறிவை யறிவதும் ஒவ்வொரு பொறியாயறிவதன்றி ஒருங்கேயறிவனவல்லவாதலானும், ஒன்றொன்றாயறிபுமதுவே யவற்றியல்பெனின்? அங்ஙனமாயினும் இந்திரியங்களொன்றறிந்த தொன்றறியாமையானும், இவ்வைந்திரனுமைம்புலன்களையு மறிவதொன்று உளதாகலானுமென்பதாம்.

அறிவதைம்பொறியே யுறக்கத்தி னறியாவாகுமென்னின் எனவிளையும்.

அறிவதென்பது அதுதொழின்மே னின்றது.

உம்மைசிறப்பு.

அறிவுகள் ஆகுபெயர்.

அஃதென்னுமாய்தம் விகாரத்தாற்றொக்கது.

இவ்வாறன்றி, அறிவதைம்பொறியேயென்னி னுறக்கத்தினறியாவாகு மறிவதுமொன்றொன்றாகவொன்றொன்றாயறியுமென்னின் என்பதற்கு எண்ணுடம்பகத்து நின்றறிவது ஐம்பொறிகளேயாம். அவையுறக்கத்தினறியாதவாகும். நனவின்கணவ்

வொரு விடயமாகவறிவதும் இருவர் மதத்தினுமொக்கும். அது பற்றி யென்னையாசங்கித்தல் கூடாமையான் அவ்வைம் பொறிகளை யொருதலையாகவறியும், வேறுமோருயிர் கோடன் மிகையாமென்பையாயின் என்றுரைத்தலுமொன்று.

உறக்கத்தி னறியாமை யிழுக்கன்றென்பான் வாகென்றா னென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் புத்தரில் சவுத்தராந்திகன் இந்திரியங்களறியுமதொழிந்து நீர் சொல்லுகிறதொருவான்மா வில்லையென்ன, இந்திரியங்களைந்தினையுங் கூடிநின்று ஒன்றொன்றாக வறிகிறதொரு ஆன்மா வுண்டென்று அருளிச்செய்கிறார்.

அறிவதைம் பொறியேயென்னில் - இந்திரியங்களைந்துங் காணு மறிவதென்று நீ சொல்லில்,—உறக்கத்திலறியாவாகும்- அவை நித்திரையி லொன்றையு மறியமாட்டாது. அதுவொழிந்தும் விழித்த வவதரத்தும் ஐந்தையு மொக்க வறியமாட்டாது,—அறிவதுமொன்றொன்றாக - அவத்தையி லறியாது உணர்ந்தபோது ஒவ்வோ ரிந்திரியமாக நின்றறியுங்காணும்,— ஒன்றொன்றாவறிவதென்னில் - தனித்தனியே நின்றறியுங்காணு மென்றுசொல்லில்?—அறிவுகளொன்றையொன்றறிந்திடா - இந்த வுணர்வுகள் ஒன்றையொன்றறியமாட்டாது. பின்னையறியும்படி யெப்படி யென்னில்?— ஐந்தையுங்கொண் டறிவதொன் றுண்டதான்மா - இந்திரியங்களைந்தையுங்கொண் டறிகிற தொன்றுண்டு அதுகாணான்மா. ஆகையால்,—ஐம்பொறியறிந்திடாவே-இந்தப் பொறிகளைந்துந் தானாக வறியமாட்டாது.

இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம். ௬-சூ, ௬-வெ "ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி, யன்று புலனும வஞ்செழுத்தை—யொன்றறிக, வுள்ளதேயாகி லது நீத வித்தனிதண், டுள்ளவை யொன்றல்ல யோர்" என்றும், பரபக்ஷம் புத்தன் மறுப்பு. ௩0-செ. "ஒருகாலத் தோரிடத்தி லோருணர்வேற் செவிதா, னொன்றுணரா திருசெவியு முணருமோசை, ஒருகாலத் திருகண்ணு மிருசெவியு மனமு, மொருவனைக்கண் டவனுரைகேட் டுணர்ந்திடுமைம் பொறியு, மொருகாலும்பொறிவிகற்பித் துணராவுள்ளுணர்வுக் குள்ளதுகாண் விகற்பமிரண் டும்முணர்வ துயிரே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது புத்தன் இந்திரியங்க ளறியுமென்று சொல்ல, அவனை நோக்கி இந்திரியங்கள் அவத்தையி லறியாதென்றும், விழித்தவிடத்தும் ஐந்துமொக்க வறியாதென்றும், ஓரிந்திரிய மறிந்த தோரிந்திரிய மறியாதென்றும், ஆகையால் இந்திரியங்கள் தானாகவறியாது இவையிற்றைக்கொண் டறிகிறதோரான்மா வுண்டென்று முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஐம்பொறிபே-பிணமாம்பொழுது கெட்டொழிவதாகிய வைம்பொறிகளே,—அறிவது - அவ்வுடம்பிலிருந்து நனவின்கணறியும்,—உறக்கத்தினறியா வாகுமென்னின்-உறக்கத்தின்க ணறிதலின்றி யொடுங்கிநிற்குமெனின்? அது பொருந்தாது.—அறிவது மொன்றொன்றாக-நனவின்கணவையறிவது வொவ்வொருபொறியா யறிவதன்றி பொருங்கேயறிவனவல்ல.—ஒன்றொன்றாயறிவ தென்னில்-ஒன்றொன்றா யறியுமதுவே யவற் றியல்பென்னி

ல்?—அறிவுகளொன்றை யொன்றுங்கறிந்திடா-அங்ஙனமாயினும் இந்திரியங்களொன்றறிந்த தொன்றறியாது.— ஐந்தையுங் கொண்டறிவதொன்றுண்டு- இவ்வைந்தினுமைம்புலன்களையு மறிவதொன்றுண்டு,—அதான்மா-ஆகலானது வேதான்மாவெனப்படும்.—ஐம்பொறி யறிந்திடாவே-ஐம்பொறிகளறியாவாம்.

மறைஞானதேசிகர் உரை

மேற் கன்மயோகிகள் பிராணவாயுத்தானே யறியுமென்ன, மறுத் துணர்த்துகிறார்.

அறிந்திடும் பிராணவாயு வடங்குதல் விடுதல்செய்தா, லறிந்திடா துடலுறக்கத் தறிவின்மை கரணமின்மை, யறிந்திடு முதலியாகி னதுநிற்கக் கரணம்போகா, வறிந்திடும் பிராணன்றன்னை யடக்கியும்விட்டுமான்மா. (௪)

(இ-ள்) அறிந்திடும் பிராணவாயு	சரீரத்தின்க ணின்று பிராணவாயுதானு மறிகிறது, அஃதெக்காரணத்தா லென்னில்?
அடங்குதல் விடுதல் செய்தால்	சரீரத்திலொருத்தானங்களி லடங்கிச் சீவியாமல் மூர்ச்சித்திருந்த விடத்தும் சரீரத்தைவிட்டுப் போனபொழுதும் சரீரமறியாதபடியாலென்னில்?
அறிந்திடா துடலுறக்கத்து	நித்திரையின்கட் பிராணவாயுப் போக்குவரவுசெய்து நிற்கையிலும் அறியாதிருப்பானேன் என்னில்?
அறிவின்மை	அறிவில்லாத படியாலேகாணும்.அஃதெக் காரணத்தா லெனனில்?

கரணமின்மை அறிந்திடு முத லியாகினது நிற்க க் கரணம்போ கா	கரணங் கூடிச் சீவியாதிருக்கையினாலே? இராசாவைப்போல வாயுவே தலைவனு மாய்க் கரணங்களே சேவகருமாயின் இரா சாவான வாயுநிற்கச் சேவகரானகரணமொ டுங்குவானேன்? ஆதலால்
அறிந்திடும் பி ராணன் றன்னை யடக்கியும் விட் டுமான்மா	ஆதலா லான்மாவே பிராணவாயுவை யுள் ளே யெட்டங்குல மடக்கியும், புறம்பே பன் னிரண்டங்குலம் புறப்பட நாலங்குலங் க ழிந்து நாடோறு மறுபத் திராயிரஞ் சுவாச ம் போக்குவரவு செய்விப்பிக்கையால் அறிந் திடும்.எ - று.

இந்தவிரண்டிற்கும் பார்க்சிவை யென வறிக. (ச)

மூன்றாஞ்சூத்திர முடிந்தது.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— ∩ ——

உயிரெனப்படுவதுஎது - சூன்யான்மவாதி ஆன்மாவெ ன்ப தொன்றில்லை என்பவனைக்குறித் தான்மா வுண்டென்றது. அதெவ்வா றெனனில்? இல்லையென்ப தொரு ஞான முண்டா கையால் அந்த ஞானமே ஆன்மா. உண்டானதாகவொரு*பிர தியோகி யில்லையாகில் இல்லையென்கிறதே கூடாது, ஆகையால் ஆன்மாவுண்டு. உண்டாகுதாம்,அந்த ஆன்மா தேகமேயென்னும் சார்வாகனைக் குறித்து,—

* பிரதியோகி-எதிராளி,

வேறு விந்தவுடலினுற்றுச் செயிருறுமிச்சாஞானச் செய் சஞுடையதாகிப் பயிலுறுமின்பதுன்பப்பலன்களும் நுகரும் - ஆன்மாவானவன் தேகேந்திரியாதிகளுக்கு அன்யமாய்க் கன்

மவசத்தினாலே இந்த ஸ்தூலதேகத்தைப் பொருந்தி † சங்குசிதமான இச்சாஞானக் கிரியாவிருத்திகளை யுடைத்தாய்ப் பண்ணப்பட்ட புண்ணியபாபத்தினுடைய பலமாகிய சுகதுக்கத்தை யனுபவிக்கும்.

இதற்குமேற் சங்கை.—

† சங்குசிதம்-அடங்கின.

உடலின்வே றுயிரோ வின்தவுடலன்றோ வுணர்வதென்னில் - இந்தத் தேகத்துக்கு அன்யமாக ஒரு ஆன்மா இந்தத் தேகத்தைப் பொருந்திநின் றறியுமென்பானேன்? இந்த தேகந்தானே யறியுமென்னில்?—

உடல்சவ மானபோது முடலினுக் குணர்வுண்டாகும் - சடமாயிருக்கிற தேகத்தைப் பிரேரிக்கிற சித்தாகியஆன்மா பிராரத்த கன்மந் தொலைந்தவாறே இந்தத் தேகத்தைவிட்டு நீங்க இந்தத் தேகம் பிரேதமாயிருந்தபொழுது மறிவுண்டாக வேணும். அது காணுதபடியாலே தேகமல்லவறிகிறது.

இதற்குமேல் வாதிவசனம்.—

உடலினில் வாயுப்போனு லுணர்ச்சியின் றுடலுக்கென்னில் - பிருதிவி அப்பு தேசசு வாயு இந்தநாலு பூதங்களுடைய சம்யோகத்தினாலே, மாவும் வெல்லமும் கூட்டிப் பாகம பண்ண * அபூபமென்றொரு ரூபமுண்டாம், அப்படி தேசமுண்டாம். சிறிது திரவியத்தினுடைய சம்யோகத்தினாலே யுண்டான † சுரையிலே மதசத்தி யுண்டானாற்போல தேகத்திலே யறிவுண்டாம். வாயு பிரிந்ததினாலே தேகம் பிரேதமானது, ஆகையால் உடலுக் கறிவில்லை யானதென்னில்,—

* அபூபம்-பணியாரம், † சுரை - கள்.

உடலினில் வாயுப்போகா துறக்கத்து முணர்வதின்றே - உடலில் வாயுவானது போகாமல்*உஸ்வாச நிஸ்வாசங்களைப் பண்ணிக்கொண் டிருக்கிற சுழுத்தி யவத்தையிலு மறிவில்லை

டே! ஆகையா லிந்த தேகத்துக்கு அந்யமாக அறிவுருவாகிய ஆன்மாவுண்டு.

* உஸ்வாச நிஸ்வாசம் - மூச்சுப் போக்குவரவு.

மேல் இந்திரியான்ம வாதி.

அறிவ தைம்பொறியேயென்னில் - இன்பதுன்பங்களை யனுபவிக்கும் ஆன்மாவென்கையா லந்தச் சுகதுக்கங்களை யறிகிறது இந்திரியங்க ளாகையால் இந்திரியமே ஆன்மாவென்னில்?—

உறக்கத்தி னறியாதாகும் - நித்திரையிலே இந்திரியங்கள் சப்தாதி விஷயங்களை யறியாம லிருக்கிற தாகையாலே இந்திரியங்க ளனுபவிப்பதுமல்ல, ஆதலா லவைகளே யான்மாவுமல்ல.

இதற்கு வாதி வசனம்.

பஞ்சேந்திரியங்களுடைய * ஆவிர்ப்பாவமே உத்பத்தியு மவைகளுடைய † உபரதியே இலயமு மாகையால், நித்திரையென்றது இந்திரியங்களுடைய உபரதியே யாகையால், இவ்விடத் தறிவுண்டாக வேணுமென்ப தில்லையென்னில்?

* ஆவிர்ப்பாவம் - தோற்றம், † உபாதி - ஒழிவு.

ஆகில் பஞ்சேந்திரியங்களுடைய * சமஷ்டியே ஆன்மாவென்கிறாயோ † வியஷ்டியே ஆன்மாவென்கிறாயோ? சமஷ்டியென்னில்?—

* சமஷ்டி - கூட்டம், † வியஷ்டி - பிரிவு.

அறிவது மொன்றொன்றாக - ஐந்து இந்திரியங்களுங் கூடியொன்றை யறியாமல் ஒவ்வொரு விஷயத்தை ஒவ்வோரிந்திரியமே யறிகையினாலே சமஷ்டி யான்மாவல்ல. இஃதன்றியு மநுஷ்டக் * கிராமணிகளினாலே † நயிப்பிக்கப்பட்ட கிராமம் போல, நானறியவேணும் நானறியவேணுமென்கிற ‡ அநேகயோன்

ய §கலஹத்திருலே சேஹநசம் வரும். அப்படியேன்,—

* கிராமணி - கிராமத்தலைவன். † நயிப்பித்தல் - நடத்தல், ‡ அந்யோந்யம் - ஒன்றுக்கொன்று § கலஹம் - சண்டை.

ஒன்றொன்று யறிவதென்னில்-வரகோஷ்டி ந்யாயமாக வொவ்வோரிந்திரியம் ஒவ்வொரு விஷயங்களை இதரசகாயமாக வறியுமென்னில், அதற்கு ஐந்தும் பிரதானமன்றி ஒன்றுக்கதுபிரதான குணங்கூடாது. இதன்றியும் ஒரு இந்திரியம் கெட்டபொழுது ஆன்மாவும் கெடும், ஆகையால் சமஷ்டியான்மாவல்ல. இதற்குஇந்திரியான்மைக தேசவாதி ஐந்தும் ஐந்தான்மாவே! ஒருவிருக்ஷத்திலே அநேக பக்ஷிகளிருந்து பலத்தைப் புசிக்கின்றதுபோல வொருதேகத்திலேயிருந் தறியுமென்னில்?—

அறிவுகளொன்றை யொன்றறிந்திடா - ஆன்மாவென்கிறதற்குப்பொருள் ஞாதா, ஆனபொழுதே யெல்லாத்தையும் அறியவேணும். ஒரு இந்திரியவிஷயத்தை ஒரு இந்திரிய மறியாதாகையாலும், ஒருஇந்திரியத்தை ஒரு இந்திரியமறியாதாகையாலும் வியஷ்டி யான்மாவல்ல.—

ஐம்பொறி யறிந்திடாவே - பஞ்சேந்திரியங்கள் விஷயானுபவிகளே யல்ல. பின்னை யேதென்னில்? தன்கண் டெரியாது, தன்செவி கேளாது, என்று இந்திரியாபிமானியாகச் சொல்லுகிறவ னொருத்த னுண்டாகையால்,—

ஐந்தையுங்கொண் டறிவதொன்றுண் டதான்மா - இந்த ஐந்து இந்திரியங்களையும் கரணங்களாகக் கொண்டு சகலவிஷயங்களையு மறிவதொன்றுண்டு, அதுவே யான்மா.—

மேல் பிராணன்மவாதி . . . .

அறிந்திடும் பிராணவாயு வடங்குதல் விடுதல்செய்தால் பிராணவாயுவானது உஸ்வாச நிஸ்வாசங்களைப் பண்ணிக்கெ

ண்டு நின்ற காலத்தி லிந்திரியங்களாகிற கரணங்களைக்கொண்டு விஷயங்களை யறியுமென்னில்?—

அறிந்திடா துடலுறக்கத்து - இந்த தேகத்திலேதானே ஆன்மா சுழுத்தி யவத்தையை யடைந்தபொழுது பிராணவாயு உஸ்வாச நிஸ்வாசங்களைப் பண்ணிக்கொண்டு நிற்கையிலு மறிவில்லையே! ஆகையால் பிராணவாயுவும் ஆன்மாவல்ல;—

இதற்கு வாதிவசனம்.—

அறிவின்மை கரணமின்மை - சுழுத்தி யவத்தையிலே பிராணவாயுவானது விஷயங்களை யறியாமலிருந்தது இந்திரியங்களாகிற கரணங்களில்லாமையினாலே யென்னில்?—

அறிந்திட முதலியாகி லதுநிற்கக் கரணம்போகா - பிராணவாயுவே யறிகிறகர்த்தாவாகில் அது ஜீவித்து நிர்கையாலே கர்த்ரு வசமாயிருக்கிற கரணங்க ணிங்காது. அதெப்படிப்போல? இராஜா ஆஸ்தான மண்டபத்திலே இருக்கையிலே ப்ரத்திய ரில்லாம லிராததுபோல. ஆதலால்,—

பிராணன்றன்னை யடக்கியும் விட்டு மறிந்திடுமான்மா - நீயான்மாவென்ற பிராணவாயுவைக் * கும்பித்தும் † ரேசித்தும் ‡ பூரித்தும் தன்வசம் பண்ணிக்கொண்டு சகலவிஷயங்களையு மறிகிற தான்மா. சகல விஷயத்தையு மறிகிற தான்மாவேயாகையால் ஏககாலத்து மறியவேண்டும், அறியா திருப்பானேனென்னில்?—

* கும்பித்தல் - ஸ்தம்பித்தல், † ரேசித்தல்-விடுதல், ‡ பூரித்தல் - நிறைத்தல்.

பார்க்கிற் றுயிலொடு மஞ்சவத்தைப் படும் - அதைவிசாரித்துப் பார்க்கில் ஆன்மாவினுக்குணமாக நித்திரைக்கு ஏதுவான ஆணவமலத்துடனே *அப்பிரதிபா சாக்ரம் ஸ்வப்னம் சுழுத்தி துரியம் துரியாதீதமென்னும்ஐந்தவத்தையையடையும்.அதனால்

ஏககாலத்து மறிவில்லை.

* அப்பிரதிபா - தோற்றுமை.

ஆகிலைஞ்சவத்தைக்குள்ளே § சகசமேது + ஆகந்துகமேதெனில்?—

§ சகசம் - கூடவுண்டானது, + ஆகந்துகம் - நடுவில்வந்தது.

உண்மை துரியாதீதம் - சாக்ராதி நாலவத்தையு மாயோபாதியினாலே யுண்டானது அதீதாவத்தை, சகசம்.

இதனா லான்மாவில்லையென்று சொல்வதொன் றுண்டாகையினாலே இல்லையென்றதற்குப் பிரதியோகியுள்ளதென்று ஒன்றுண்டாக வேண்டுகையால் ஆன்மாவுண்டென்றும், நானினைத்தேன் நான் பருத்தேனென்று அபேதோபசாரமாகச் சொல்லுகிறதைக் காட்டிலும் என்சரீரம் என்கால் என்கை என்கிற மமத்துவம் அதிகமாகையினாலே தேகான்யன் ஆன்மாவென்றும், பஞ்சேந்திரியங்களுடைய உபரதியான ஸ்வப்பனாவத்தையிலும் அறிவுண்டாயிருக்கையினாலும் அந்த ஸ்வப்பனத்திலே பாஹ்யேந்திரியங்களுக்கு விஷயமன்றியிலே யிருக்கையினாலும், இந்திரியங்களுக்கு அன்யன் ஆன்மாவென்றும்; சுழுத்தியிலே ஆன்மநாசம் ¶ புநருத்தானமே ஆன்மோற்பத்தியென்று சொல்லுகிறவனைக்குறித்து விழித்தபோது சுகமாக நித்திரைபண்ணினேனென்று சுழுத்தியவத்தையிலே யனுபவந் தோன்றுகையினாலும், தத்பூர்வானுபவப் பிரத்யபிஞ்ஞையுண்டாகையினாலும், பஞ்சாவத்தானுக்ராகனாகி யிருந்துள்ளவன் ஆன்மாவென்றுங் கூறப்பட்டது.

¶ புநருத்தானம் - மறுபடி யெழுந்திருத்தல்.

ததுக்தம் ஶிவஜ்ஞாநபோதே — நேதிநேதீதி ஶிஷ்டத்வாந் மமேத்யுக்தே ரக்ஷோபரதிபோதத: । ஸ்வாபேநி

ஸெஹா மொதா ஸொமெ ஸொஜ ருவாஹ ணஷ
நாஜதி||

கீழாலவத்தையில் சுழுத்தியிலே பிராணவாயு உஸ்வாச நிஸ்வாச வியாபாரமாயிருக்கவும் ஞானமில்லாம லிருக்கையினாலும் வாயுவை ஸ்தம்பித்து சமாதிகதனாயிருந்து பூத பவிஷ்ய வர்த்தமானங்களை யறிகையினாலும் சாத்ய விபர்யய வ்யாப்த விருத்த ஏது வாபாசன்.

ஸ்ரீமத் ததிவர்ஞுச்ர மாசாரியவர்ய சைவ
பரிபாலக சிவாக்ரயோகிகள் பண்ணின
சிவஞானசித்தியார் மூன்றாஞ்
சூத்திர வியாக்யானம்
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

கடகடக நியாயத்தினால் சரீரத்துக்குப் பிராணவாயுவே யான்மாவென்னுஞ் சௌளகன்ம யோகியை மறுத்துணர்த்துகின்றார்.

பிராணவாயு வடங்குதல் விடுதல்செய்தால்- (ஆல்-அசை) உச்சுவாச நிச்சுவாசங்களைப் பண்ணி,—அறிந்திடும்-அதனாலதுவே ஆன்மா,— அறிந்திடாதுடலுறக்கத்து-சரீரத் துபாதியுற்ற நித்திரையிற்சுருங்கி விரிந்து தோற்றும் பிராணவாயு உணராது,—அறிவின்மைகரணமின்மை-இந்திரிய வொழியினாலுணராதென்னிற்சொல்லில்,—அறிந்திடுமுசலியாகிலதற்குக் கரணம் போகா-பிராணவாயுவறிதற் கர்த்தாவாகில் அதுவியாத்தமாய் நிற்

கக் கருவிபோகாது. அதர்கன்னியமாகு மான்மா,—பிராணன் றன்னை-பிராணவாயுவை,—அடக்கியும் விட்டும்- சுருக்கியும் விரித்தும் தோற்றுவித்து,—அறிந்திடும் - புலப்படுத்தும்,—அதனாற் புலமாய் அறியப்படும் பொருள் அறியும் பொருட்டாகாது.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தாலே அறிவுநிகழ்க் காண்டலின் அதுவே யவ்வைந்தையுங்கொண்டறிவதாகிய உயிரெனவவையும், உறக்கத்தி லஃதியங்கினும் ஆண்டுக் கருவியின்மையான் அறியாதாயிற்றெனின்? அது பொருந்தாது. கரணமுதலி நிற்புழிக் கரணம்போதல் கூடாமையிற் கரணங்களையும் தன்னையுங்கொண் டறிவதாகியவுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலானென்பதாம்.

இவை மூன்றுசெய்யுளானும், முறையே உடல் பொறி பிராணவாயுவென்னும் மூன்றனையுங் காட்சியளவையா னறியக்கிடந்த விசேடம்பற்றி வேறெடுத் தாசங்கித்துப் பரிகரித்த, 'இந்தவுடலினுயிரெனப்படுவது வேறு' என்பது சாதிக்கப்பட்டது.

ஏனையவெல்லாம் வருஞ்சூத்திரத்தி னுண்டாண் டியைபுபற்றிக் கூறக்கிடத்தலானும், உளதாயென்னு முதற்கூற்றில்ஆசங்கைவிசேட மின்மையானும், அவற்றையீண்டு விரித்திலர்.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

மேலுட் சமயத்தில் சங்கிராந்தவாதி, நீர் சொல்லுகிற வான்மா அவிசாரியாகையால் ஆன்மா வறியாது பிராணவாயுவேயறியுமென்றுசொல்ல, அவனைமறுத் தருளிச்செய்கிறார்.

அறிந்திடும் பிராணவாயு - நீர்சொல்லுகிற வான்மா வறியாது, அதின் சன்னதியிலே பிராணவாய்வே காணுமறிவது, அதெங்ஙனே யென்னில்?—அடங்குதல் விடுதல்செய்தா லறிந்திடாதுடல்-இந்தத் தேகத்திலே ஒரு தானங்களிலே பிராணவாயுவானது தம்பித்து உச்சுவாச நிச்சுவாச மற்றுக்கிடந்தபோதும் நேராக விந்தத் தேகத்தை வாய்வுக் கைவிட்டுப்போனபோதும் இந்தக் தேசத்துக்கு ஒரு பிரஞ்ஞையுங் காணாதபடியாலே எப்பொழுதும் பிராணவாயுவே யறியாநிற்கும்.—உறக்கத்தறிவின்மை - நித்திரையான வவதரத்துப் பிராணவாயு நின்று சீவிக்க அப்பொழு தொன்றையு மறியாமற் கிடப்பானேன்?—கரணமின்மை-கரணங்களைக் கொண்டுகாணு மறிவது,கரணங்கள் கூடாதபடியாலேகாணு மறியாதிருந்தது.— அறிந்திடு முதலியாகில்- அறிகைக்குப் பிராணவாயுவே கர்த்தாவாகில்,—அதுநிற்கக் கரணம்போகா - அந்தப் பிராணவாயுநிற்கக் கரணங்கள்போகாது. பின்னை யறியும்படி யெங்ஙனேயென்னில்?—அறிந்திடும் பிராணன்றன்னை யடக்கியும்விட்டுமான்மா - ஆகையாலிந்தப் பிராணவாயுவை யடக்குவதும் விடுவதுஞ் செய்கிறது ஆன்மாவேகா ணறிவது.

அறிந்திடும் பிராணவாயு வென்றவன் சங்கிராந்தவாதி. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம். அவன்மதம். "மன்னுமான்ம சன்னதியளவிற் - காந்தபசாசத் தேய்ப்பவாய்ந்தவுயிருடலியக்குஞ் செயலுறுபூட்டைப் - பலவகையுறுட்பு மல்கியதொழில்போ - லைம்பொறிபுலன்க ளின்புறுமன்றே-யிவையவாயிலி னிசழ்தரும்பனவை - யந்தக்கரண முந்தியுணர்ந்திடு - மிவையகல்வழியைம் பொறிபுலநிகழா- துயிர்நீங்கிடி லுடல்

செயலிலதன்றே" என்றும், அவன்மறுப்பு "சன்னதியளவில் மன்னுஞ்செயலுடல்-காந்தம்போல வாய்ந்ததென்ற - நன்மையுமுணராப் புன்மையன்றே - யுயிருடலியக்கிற் றுயில்பெறுங்காலைச் - செய்தென" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது,பிராணவாயு ஒரு தானங்களிலே யடங்குதல் சரீரத்தைவிட்டு நீங்குதல் செய்தால் தேகத்துக் கறிவில்லாதது கொண்டு பிராணவாயுவே யறியுமென்ன; அவத்தையில் பிராணவாயு நிற்கச்செய்தே அறியா திருந்ததுகொண்டு பிராணவாயு வறியாது, ஆன்மாவே யறியுமென்னு முறைமை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

பிராணவாயு அடங்குதல் விடுதல்செய்தால் அறிந்திடும்-பிராணவாயு அடங்குதல் விடுதல்செய்தாலே யறிவுநிகழ்க் காண்டலின் அதுவே யவ் வைந்தையுங்கொண் டறிவதாகிய வுயிரென அமையும்.—உடலுறக்கத்துக் கரணமின்மை யறிவின்மையறிந்திடாது- உடம்பின்க ணுறக்கத்தி லஃதியங்கினும் ஆண்டுக்கருவியின்மை யறிவுநிகழ்தல் கூடாமையின் அறியாதாயிற்றெனின்? அது பொருந்தாது.—அறிந்திடு முதலியாயி னதுநிற்கக் கரணம்போகா-கரணமுதலி நிற்புழிக் கரணப்போதல் கூடாமையின்,—அறிந்திடும்பிராணன் றன்னை யடச்கியும்விட்டுமான்மா-கரணங்களையுந் தன்னையுங்கொண் டறிவதாகிய வுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான்.

இம்மூன்று செய்யுளானும் முறையே உடல்பொறி பிராணவாயுவென்னு மூன்றனையும் காட்சியளவையா னறியக்கிடந்த விசே

டம்பற்றி வேறெடுத்து ஆசங்கித்துப் பரிகரித்து, 'இந்தவுடலின் உயிரெனப்படுவது வேறு' என்பது சாதிக்கப்பட்டது.

ஏனையவெல்லாம் வருஞ்சூத்திரத்தி னுண்டாண் டியைபு பற்றிக் கூறக்கிடத்தலானும், 'உளதா' என்னுங் முதற்கூற்றிலாசங்கை விசேட மின்மையானும் அவற்றை யீண்டு விரித்திலர்.

மூன்றுஞ்சூத்திரம் முற்றிற்று.

'நந்து சதுட்டயம்'
என்றமூன்றுஞ் சூத்திரம்
நான்கு
முடிந்தது.

பாயிரமுட்பட செய்யுள்-சகா.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௪—சூத்திரம். அவத்தை இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலிச்சூத்திர மென்னுதலிற்றோ வெனின்?
மூன்றுஞ்சூத்திரத்துட் டொகுத்துப்போ
ந்த வான்மவிலக்கணத்தை விரித்
துணர்த்துகின்றார்.

இத்தலைச்செய்யு ளென்னுதலிற்றோ வெனின்? நையாயிக ரந்தக் கரண மான்மாவென்றுசொல்ல விராசாவு மந்திரியும் போலவென்று மறுத் துணர்த்துகிறார்.

உணர்வன கரணமென்னி னொன்றையொன் று
ணராவெவ்வே, றிணைதருஞ் செயல்களுன்கு மடைந்த
வை யடக்கியாக்கிப், புணருமுட் கரணமாக்கிப் புறக்க
ரு விதினும்போக்கி, யிணைதரு மிவற்றின்வேறா யா
னென தென்பதான்மா. (௧)

(இ-ள்) உணர்வன கரண மென்னின் — அந்தக்கரணங்கள் காணும் விடயங்களை யறியுமென்னில்?

ஒன்றையொன் றுணரா — அவைதா மொன்றையொன் றுணரமாட் டாது. அஃதாவது,

மனமானது புத்தியினுடைய வியாபாரத்தை யறியாது, அப்புத்தியானது மனதின் வியாபாரத்தை யறியாது, ஆங்காரஞ் சித்தத்தை யறியாது, அந்தச்சித்தமு மாங்காரத்தின் வியாபாரத்தை யறியமாட்டாது.

வெவ்வேறணை தருஞ் செயல்க ளுன்கும்	ஒன்றையொன் றறிந்து நாலுநாலாகவே தத்தத் காரியங்களைச் செய்யும்.
அறிந்தவை யடக்கி	அவையிற்றின தன்மையறிந்து சீவியா மலொடுக்கி
ஆக்கி	அவையிற்றைச் சீவித்து
புணருமுட் கரண மாக்கி	மனமுதலிய நாலையு மகத்தின்கட் சீவிக்கப்படாநின்ற வுட்கருவியாக்கி
புறக் கருவியினும் போக்கி	புறக்கருவியாகிய வாயாதிசோத்திராதிகளை நடத்தியும்,
இவைதரு மிவற்றின்வேறு யானென தென்பதான்மா.	இங்ஙனஞ் சொல்லிய வுட்கரணம் புறக்கரணமாகிய விரண்டினிற்கும் வேறு யானினைத்தேன் யானறிந்தேன் யானறுதியிட்டேன் யான்செய்தேன் என்பதுவும், எனதுசித்தம் எனதுமனம் எனதுபுத்தி எனதாங்காரம் என்பதுவுஞ்செய்து,இவையிற்றைப் பிரித்தறிகையா லிவையிற்றுக்கு வேறகா ணான்மா எ-று.

இதற்குப் பார்க்கிலை யெனவறிக. (௪)

சிவாக்ரயோகிய ருரை வருமாறு.

மேலந்தக்கரணங்க ளான்மாவென்பவ ராதியான பெயர்களுடைய மதங்களை நிராகரித்து நாற்பது விருத்தத்திலே ஆன்ம ஸ்வரூப மிதுவென் றுணர்த்துதல்.

உணர்வன கரணமென்னில்-இந்திரியத் துவாரா விஷயங்களை யறிவது மனோஹங்கார புத்தி சித்தங்களே ஆகையால், அந்தக்கரண வர்க்கமே யான்மா வென்னில்? அந்தக்கரண சமஷ்டியோவியஷ்டியோ ஆன்மா? சமஷ்டியாகில் தீபாங்சவஸ்துக்கள் பிரகாசமான வொரு கிரியையைப் பண்ணுமாப்போல க் கரணம் நாலுங்கூடி யொருகிருத்தியத்தைப் பண்ணவேணும். அப்படி யல்லாமல்,—

ஒன்றையொன்றுணரு - மனசு சம்சயத்தைப்பண்ணுகிற தொழிய நிச்சாயகமல்ல. புத்தி நிச்சாயகமொழிந்து சம்சயத்தைப் பண்ணாது. அகங்காரங் ‡ கிராஹகமொழிந்து சம்சய நிச்சயங்களைப் பண்ணாது. சித்தம் சிந்தனை பண்ணுவதொழிந்து சம்சய நிச்சய கிருஹகங்களைப் பண்ணாது. இப்படி பின்னக் கிரியைக ளாகையினாலே அந்தக்கரண சமஷ்டி ஆன்மாவல்ல,—

‡ கிராஹகம் - க்ரஹிக்கிறது.

வெவ்வே றனைதருஞ் செயல்களுன்கும் - வியஷ்டியாக நாலும் நாலுதொழில்களையே பண்ணும். வியஷ்டி யான்மாவே யென்னில்? மனது ஒரு பதார்த்தத்தைச் சம்சயித்துப்பற்ற புத்தி வேறே யொன்றை நிச்சயிக்கவேணும். புத்திநிச்சயித்த தல்லாமல் அஹங்காரம் வேறே யொன்றை நானறிந்தேனென்று கிரஹிக்க வேணும். அஹங்காரங் கிரஹித்ததல்லாமல் சித்தம்வேறே யொன்றைச் சிந்திக்கவேணும். அப்படியல்லாமல் மனது சம்சயமாகப் பற்றினதை புத்தி நிச்சயிக்க அஹங்கார மதையே நானறிந்தேனென்று கிரஹிக்க, சித்தமதனையே சிந்திக்க, இப்படிக் கிரமமாய் வருகையினாலும்; என்னுடைய புத்திக்கு இந்தவேளை யொன்றுந் தோன்றிற்றில்லையென்றும், என்னுடைய மனது கலங்கியிருக்குதென்றும் சொல்லுகையினாலே இந்நாலையுங் கரணமாகவுடையதொன்று ஆத்மாவாகவேணும்.—

அறிந்தவை யடக்கியாக்கி- அந்த நாலுகரணங்களையுந் தானறிந் திவைகளிற்றுக்களை விஷயங்களைப் பற்றவும் நிச்சயிக்கவும் கிரஹிக்கவும் சிந்திக்கவு மொட்டாம லடக்கி,தியானசமாதிகளைப் பண்ணி,—

புணரு முட்கரணமாக்கி - தனக் கந்தரங்க சம்யோக கரணமாக்கிக்கொண்டு,—

புறக்கருவியினும் போக்கி - சுரோத்திராதி பாஹ்யேந்திரிய த்வாரங்களிலும் செலுத்தி,—

இணைதரு மிவற்றின்வேறு யானென தென்பதான்மா -இந்த அந்தக்கரணங்களுக்கு அந்யராயிருந்து இவைகளுடனே கூடினதினாலே யானென்று மென்னுதென்றும் அஹங்கார மமகாரத்தைப் பண்ணிநிற்பதே ஆன்மாவென் றிதன்பொருள்.

இதனால் அந்தக்கர ணான்மவாதிக்குத் தருமிக் கராஹகப் பிரமாணம். மனசு முதலானவைகளைக்கரணமாகவே சாதிக்கையினாலே அந்தக்கரணங்களுக்கு ஞாதாருத்தவ ¶ சாதக மான்ம பாதிதமாகையால் தத்வியதிரிக்தமாக ஞாதாவுண்டு.

¶ சாதகம் - சாதிக்கிறது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——ா——

சித்தாம்ச மனசுதானே யான்மாவென்னு மூலோகாயதர்க்கு ளொருவனையும், அகங்காரான்ம வாதியாகும் வைசேடிகனையும், புத்தியான்ம வாதியாகும் நையாயிகனையும், புத்தி விருத்தியான்ம வாதியாகும் பவுத்தனையும். மறுத் துணர்த் துகின்றார்.

உணர்வனகரண மென்னில்- அறிதற் றொழிலைப் பண்ணுவது அந்தக்கரண மென்கின்றாயானால்,—ஒன் றையொன் றுணரா

ஓரந்தக்கரணத்தை ஓரந்தக்கரண முணர்ந்து ஒன்றோடொன்று கூடி ஒரந்தக்கரணத்தின் றொழிலை யோரந்தக் கரணம் பண்ணாது,—வெவ்வே றணைதருஞ் செயல்களுள்ளும் -சிந்தித்துவிகற்பித்தல் சங்கற்பித்தல் அபிமானித்தல் நிச்சயித்தல் என்கின்றநான்கு வியாபாரங்களையும் கர்த்தாவாகிய ஆன்மாவே, சிற்சத்தியாகிய கரணத்தோடு பொருந்தித் தனிதனி கரணமாய்ச் சம்பந்திக்கும். கரணங்கர்த்தாவாகாது,—அறிந்தவை யடக்கியாக்கிப் புணருமுட்கரணமாக்கிப் புறக்கருவியினும்போக்கி யிணைதருமிவற்றின் வேறு யானெனதென்பதான்மா-யாதொன்று அந்த அந்தக்கரணங்களை யறிந்து சுருக்கிவிரித்துப் பொருந்து முட்கருவியாகப் பண்ணிச் சுகதுக்கங்களை யுள்ளனுபவித்து, அச் சுகதுக்கங்களை மேன்மேல்வரும்படி பஹிரிந்திரியங்களிலே விட்டு, மாலை சந்தனம் வனிதைகளோடு பொருந்தப் பண்ணி, இந்த வந்தக் கரணங்கட் கன்னியமாய்த் தற்பொருளறிவினால் யானென்னும், புறப்பொரு ளறிவினா லெனதசித்தம் எனதுமனம் எனதகங்காரம் எனது புத்தி என்பததுவே யுயிர்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேன் மூன்று சூத்திரத்தானும் பொரு ளுண்மைக்கு அளவு கூறிய வாசிரியர், நிறுத்த முறையானே பொருளியல்புகூறுவான் றொடங்கி, மேற்கூறிப்போந்த பதிபாசபசுக்களை எதிர்நிரனிறைபாசவைத்து முதற்கட் பசுவிலக்கணங் கூறுகின்றார்.

இனி அந்தக்கரணமே யுணருமென்பார்க்கு, இவையும் ஐம்பொறிபோ லொன்றனையொன் றுணராவாகலான், உயிர் இவற்றின் வேறாகியும், யானெனதென்னுஞ் செருக்குக்கேதுவாகிய

ஆணவமலம் உடனாயிணைந்துநிற்குமாகலான் தனக்கென வறிவின்றி இவ்வந்தகரணங்களானாய நான்குதொழிலையு மிவற்றொடு கூடியறிந்து,இவற்றை யடக்கவேண்டுழி யடக்கி உட்கருவிகளாக்கியும், ஆக்கவேண்டுழியாக்கிப் புறக்கருவிகளிற் போக்கியும், வெவ்வேறவத்தைகளை யணையுமென்பதாம்.

எனவே, ஆணவ மலத்திற் பிணிப்புண்டு அவத்தையுறுதல் ஆன்மாவுக் கிலக்கண மென்றவாறாயிற்று.

இது தடத்தலக்கண மெனப்படும் பொதுவியல்பு.

உணராவாகலான் இவற்றின்வேறாசியும், யானெனதென்ப திணைதருமாகலான் அறிந்தடக்கியாக்கி ஆக்கிப்போக்கி வெவ்வேறணைதருமென வினைமுடிபு செய்க.

அடக்குதல் சொப்பனாவத்தையிற் செலுத்துதல்.

ஆக்குதல் சாக்கிராவத்தையிற் செலுத்துதல்.

இனம்பற்றி ஏனையவத்தைகளும் கொள்ளப்படும்.

அவையடக்கியாக்கிப் புணரு முட்கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கி யென்பது நிரனிறைப் பொருள்கோள்

வேறாயுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

என்பதெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

யானெனதென்பதென்னும் பெயரடை அசனுண்மை சாதித்தற்குக் குறிப்பேதுவாய்நின்றது.

இச்செய்யுள் முதனூல் நாலாஞ்சூத்திரம்போல முக்கூற்றதாமாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு

—o—

மேல் நாலாஞ்சூத்திரமும் ஆன்மப்பிரகாச முணர்த்துதனுதலிற்று.

மேல் மாயாவாதி நீர் சொல்லுகிற வான்மாவென்பதொன்றில்லை அந்தக்கரணங்கள்காணு மறிவதென்று சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிறார்.

உணர்வன கரணமென்னில் - அந்தக்கரணங்கள் நாலுங்காணு மறிவதென்று நீர்சொல்லில்,—ஒன்றையொன்றுணரா - அவைதான் மனம் புத்தியை யறியாது, புத்தி ஆங்காரத்தை யறியாது, ஆங்காரஞ் சித்தத்தையறியாது,—வெவ்வேறணைதருஞ் செயல்காணுன்கும் - ஒன்றையொன் றறிந்து செய்வதென நாலும் நாலாகவறியும். அப்படி நாலும் நாலாக வறியுமதொழிந்து நாலையுமொன்றறியமாட்டாதாகில்,—அறிந்தவை யடக்கியாக்கிப் புணருமுட்கருவியாக்கிப் புறக்கருவியினும்போக்கி—இந்த நாலுடனுங் கூடிப் பற்றியும் நிச்சயித்தும் எழுந்திருந்தும் சிந்தித்து அவையிற்றை யடக்கியும் தோற்றுவித்தும் பொருந்தப்பட்ட வுள்ளேயறிகைக்கு அந்தரங்கமான கருவிகளுமாக்கிப் புறத்தியிலறிகிற விந்திரியங்களினும்விட்டு,—இணைதருமிவற்றின்வேருய்-இப்படிப் பொருந்திவருகிற அந்தக்கரணங்களுக்கு வேறுமாய்,—யானெனதென்ப தான்மா - யானென்றும் பிறவொன்றும் என்னுதென்றும் பிறரதென்றும் நிற்கிறதுகா ணான்மா.

உணர்வனகரணம் என்றவன் மாயாவாதி. அவனைமறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "அருவினையுடற்கணவத்தைகளுணாத்தனை- யாருறுமவர்பர மகண்டிதமடங்கா- தோர்விலதுடல்சட முறுநெறியாதென - மன்னியகரண மாறுட்டத்திற் - பண்ணினமென்னி லிவையோ பரமோ - முதலியதாயி னிவைபிறழ்வெய்தா - திவையெனி லுனது மொழிபழுதளதே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்தக்கரணங்க ளறியுந்தொழிற் து ஆன்மாவென்ப தொன்றில்லை யென்னப் பலபிரகாரத்திலும் அந்தக் கரணங்க ளறியாது ஆன்மாவே யறியுமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

கரண முணர்வன வென்னின் - இனி யந்தக்கரணமே யுணருமென்பார்க்கு,—ஒன்றையொன் றுணரா-இவையு மைம்பொறிபோல வொன்றையொன் றுணராவாகலான்,— ஆன்மா அவற்றின் வேறாய்-உயிரவற்றின் வேறாகியும்,—யானென்பதினை தரும்- யானெனதென்னுஞ் செருக்குக் கேதுவாகிய ஆணவமு முடனு யிணைந்துநிற்கு மாகலான்,— நான்குசெயல்களு மறிந்து-தனக்கென அறிவின்றி யிவ்வந்தக் கரணங்களானுய நான்கு தொழிலையு மிவற்றோடு கூடி யறிந்து,— அவையடக்கி - அவற்றை யடக்கவேண்டுழிச்சொப்பனவத்தையிற் செலுத்தி,—புணருமுட்கரணமாக்கி - கூடிய வுட்கருவிகளாக்கியும்,—ஆக்கிப்புறக்கருவியினும் போக்கி - ஆக்கவேண்டுழிச் சாக்கிராவத்தையிற் செலுத்திப் புறக்கருவிகளைப்போக்கியும்,--வெவ்வேறணைதரும்- வெவ்வே றவத்தைகளை யணையுமென்பதாம்.

எனவே ஆணவமலத்திற் பிணிப்புண்டு அவத்தை யுறுத லான்மாவிற் கிலக்கண மென்றவாறுயிற்று.

இது தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பு.

இச்செய்யுண் முதனூல் நான்காஞ் சூத்திரம்போல முக்கூற்றதாமாறு கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

அந்த வுட்கரண மான்மாவைப் பொருந்திக் காரியப்படும்
பொழுது வேறற நிற்கு முறைமை யீதென்பதூஉம்
அவைகளையறிந்து நீங்குதலே தற்சொரூபத்தை
யறிந்ததென்பதூஉம் அதற்குமேற் சிவஞா
னமென்பதூஉ முணர்த்துகிறார்.

கருவியா மனமும்புத்தி யாங்காரஞ் சித்தநான்கு,
மருவியான் மாவேயென்ன வருந்தீப மெனமதித்தா
ங், கொருவி யான்மாவினுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர், தருமிது பசுஞானம்பின் சிவஞானந் தனக்குமேலாம். (௨)

(இ-ன்.) கருவியா மனமும் புத்தியாங்காரஞ்சித்தநான்கும் — மனமுதலிய வுட்கருவி நான்கு மான்ம போகத்தைப் புசிக்குமிடத்துக் கருவியாகி நிற்கும்.

மருவியான் மாவே யென்ன வரும் — அந்தக்கரண மனைச்சரைப்போலு மரைய னந்தக்கரண மான்மாவெனன வுவமிக்கையால் அவையான்மாவை வேறறப்பொருந்தினின்றவைக்கியத்தா லான்மாவென்றே யதனைச் சொல்லப்படாநிற்கும்.

தீபமென மதித்தாங் கொருவி — பதார்த்தங்களை யறிகிறத்துக்கு விளக்குக் காரண மானாற்போல வவையிற்றையு மான்மாப் போகம் புசிக்கிறபோ திவை கரண மெனக்கருதி யவையிற்றையும் விட்டுநீங்கி

ஆன்மாவினுண்மையுணர்ந்தவர் தமையுணர்ந்தோர். இப்படியந்தக் கரணமு மான்மாவும் வேறற நின்று காரியப்படுத்து முறைமையை யறிந்தவர்களே யான்மாவி னுண்மையை யறிந்தவர்கள்.

தருமிதுபசுஞானம். இப்படி யறியுமறிவு பசுஞானமெனப் பெறும்.

பின்சிவஞானந் தனக்குமேலாம். அந்தப்பசுஞானத்தைச் சிவனது சத்தியினாலே விட்டுநீங்கி யதற்குமேலாய் சிவஞானம்பொருந்தி நிற்கும் எ-று.

இதற்கு சிந்தியாகமம். (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலான்மாவுக்கு பாகிய விஷயக் கிரஹணத்துக்குக் காரணமான அந்தக்கரணங்களைத் தரிசித்து, இவைகளுக்கு அன்யமாகத் தன்னுடைய ஸ்வரூபத்தை யறிந்தவனே தன்னை யறிந்தவனென்ப துணர்த்துதல்.

கருவியாமனமும் புத்தியாங்காரஞ் சித்தநான்கு மருவியான்மாவே யென்னவரும் - அந்தக்கரணங்களாகிய மனோபுத்தி யகங்கார சித்தங்கள் நான்கும் ஆன்மாவினுடைய ஞானக்கிரியைகள் பாகிய கரணங்களிலே ப்ரவர்த்திக்கிறதற்கு த்வாரமாகப் பொருந்தி ஆன்மா விதுவே யென்னத்தக்கதாக நிற்கும்.—

தீபமெனத் தெரிந்தங்கொருவி - சட்சுசுக்கு பதார்த்த தரிசனங்களிலே தீபம் சஹகாரியானாற்போல ஆன்ம சிற்சத்திக்கு விஷயக்கிரஹணத்திலே இந்த அந்தக்கரணங்கள் சஹகாரியென்பதை யறிந்து, இவை யிற்றுக்களை நீங்கி,—

ஆன்மாவி னுண்மை யுணர்ந்தவர் தனையுணர்ந்தோர்-ஆன்ம ஸ்வரூபத்தை யறிந்தவர்கள் தன்னை யறிந்தவர்கள். தன்னை யறிந்ததே மோக்ஷமென்னில்?

தருமிது பசுஞானம் - இவ்வளவு அந்தக் கரணங்களைப் பிரித்தறியும்படி வந்தஞானம் கலாதி வித்தைகளினாலே வந்ததாகையா லிதுவும் பசுஞானமே இது மோக்ஷமல்ல.

பின் சிவஞானந் தனக்குமேலாம்- மேலிந்தக் கலாதிகளையுங் கலாதிகளுக்குக் காரணமாயிருக்கிற மாயையுநீங்கிச் சிவனுடைய பராசத்தி பதிய வதினாலே யாணவாதிகணீங்கி சாமர்த்தியத்தை யுடைத்தாகிய ஞானதிருஷ்டியினாலே சிவனையுஞ் சத்தியையுந் தன்னையுஞ் சர்வத்தையும் ஆன்மாவிலே தரிசிப்பது சிவஞானமென் றிதன்பொருள்.

ததா ச நிஶ்வாஸகாரிகாயாம் — ஶிவாகமோக்ததீ க்ஷயா வஶீக்ருத வி[illegible]। ஶிவ ஸத்ருஶாத்மஹீ ஸாக்ஷாத் ஸ்வத்ருஷ்டா தாவத்ஸிதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பாசஞானத்தை நீங்கி நின்ற இடம் பசுஞானமென்றும், பசுஞானத்தை நீங்கி நின்றவிடம் பதிஞானம் என்றும் பகர்கின்றார்.

கருவியாமனமும் புத்தியாங்காரஞ் சித்தநான்கும்-அவற்றிற்கு மந்தக் கரணங்களாய் நிற்கும் கலாதிகளும்,—மருவி- ஆன்மாவினோடு பொருந்திப் பிரிக்கப்படாது,—ஆன்மாவேயென்னவரும் - ஆன்மாவைப்போலத் தோற்றும். அவைகளை,—தீப

மெனமதித்து- தெரிந்து-சுத்தவித்தையினால் விவேகித்து விய ஞ்சகமாகக்கண்டு,—அங்கு ஒருவி-நீங்கினபோலப்பாவித்து,— ஆன்மாவினுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்-உயிரினது சின்மாத்திர லக்ஷணத்தை யறிந்தவர்கள் ஸ்வரூபத்தை யறிந்த வர்கள்.—வருமிது பசுஞானம் - ஆன்மரூபத்தை யறியும் இந்த ஞானம் பசுஞானம்.

அஃதெப்படிச் சொன்னீர்? இருதயத்திருக்கும் நாதத்திற் பிரகாசித்த சுத்தவித்தையோடு தொட்டு நின்று, மணியானது பிரபைபானாற்போல வியாபாரத்துவாரத்தால் மேலெழுந்து சுத்த விஷயமாய்ப்போய்ப் பதிஞானம் கொடுத்து நீங்குத லாற் பாசஞான மென்கின்றமனசு முதலிய பாசஞானமும் அத னால் விளங்கப்பட்ட பசுஞானமும் ஒரு பிரகாரத்தாற் பதிஞா னமென்று சொல்லப்படு மாதலானும், மனசு கூடிய சமனை நீ ங்கியவிடத்தில் உயிர் ஆன்மாவென்று சொல்லப்படும். சுத்த வித்தைக்குக் கீழ் மலம் நீங்கலால் பசுவென்று சொல்லப்படா து. ஆகையால் பாசஞானம் விளங்குதலாற் பசுவை விஷயீக ரித்தலாற் பசுஞானமென்று இருவிதத்தினாலும் சமனாதீத ஆ ன்மஞானம் பசுஞானமென்று சொல்லப்படாது. சத்தியம் நீ சாற்றியது, மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக் கீழ் மலமற்றாலு ம் மலவாசனை தாக்கி நிற்குஞ்சிற்சத்தியினால் அவ்வாசனை தாக் கிய ஆன்மாவை யறியுமறிவு கேவலம் ஆன்மஞான மானாலும் ஒரு பிரகாரம் பசுஞானமென்றுஞ் சொல்லப்படும்.

பின் சிவஞானந் தனக்குமேலாம் - சிவசத்தியால் விளங்க ப்பட்டுச் சிவசத்தி ரூபமாயிருக்கின்ற ஆன்மாவைச் சிவனாகப் பண்ணி அவனைச் சிவனோடுகூடச் சிவனாக அறியும் அறிவாதலா லும், பதிஞான மென்னுஞ்சிவஞானமும் முன்சொல்லிய ஆன்ம ஞான மூலத்து முளைந்து உபரிவிரியும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனியம்மூக்கூற்றுள், 'உணர்வனகரணமென்னி னொன்றைபொன் றுணரா' ஆகலான் ஆன்மா விவற்றின் வேறுமென்னு முதற்கூற்றை வலியுறுத்துகின்றார்.

மனமுதலிய நான்கும் ஒருவிடயத்தை யறிதற்குக் கருவியாக மருவி, இவையே கருத்தாவென்னும்படி உயிரோடு ஒற்றித்துநின்று நிகழ்வனவாம். கண்ணுக்கு விளக்குப்போல இவை யுயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து நீங்கி நின்று இவற்றைக்கொண் டறியுங் கருத்தாவினுண்மை யாதென்றாராய்ந்தார்க்கு ஆன்மசொரூபம் இனிதுவிளங்கும். அதன்பின்பு அங்ஙனமாராயுமறிவு பசுஞானமாகலான் அதனைத் தரும் பொருள் யாதெனத் தேர்வார்க்குச் சிவஞானம் அதற்கு மேலாய் விளங்குமென்பதாம்.

ஈண்டு ஆன்மாவெனறது கருத்தாவென்னுந்துணையாய் நின்றது, தனையுணர்ந்தோரென முன் வருதலின்.

இதனானே அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவென்பது தம்மையுந் தலைவனையு மறியுமாற்றின் வைத்துக் காட்டப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் இந்த அந்தக்கரணங்களை உட்கரணமென்றும் ஆன்மாவுக்கு வேறாயிருக்குமென்றும் சொல்லுவானேனென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

கருவியான மனமும்புத்தி யாங்காரஞ் சித்தநான்கும் - உட்கரணமாகிய மனம் புத்தி ஆங்காரஞ் சித்தம் என்று சொல்ல

ப்பட்டவை நாலும்,—மருவியான்மாவேயென்னவரும்-ஆன்மாவினுடனே பொருந்தி ஆன்மாவென்றே சொல்லும்படிவாராநிற்கும். அசேதனமாகிற வந்தக்கரணங்க ளசேதனமாயிருக்கிற ஆன்மாவாய் நின்ற முறைமை யெப்படியென்னில்?—தீபமெனத் தெரிந்தாங்கொருவி - அந்த அந்தக்கரணங்களைக் கண்ணுக்குக் காட்டுகிற விளக்குமாத்திரமென் றறிந்து நீங்கி,—ஆன்மாவினுண்மை யுணர்ந்தவர் தமை யுணர்ந்தோர் - ஆன்மாவி னறிவு கருவிகளுடனே கூடிஞ லொழிந்து ஜீவியாதென்று அறிந்தவர்களே தன்தரிசனம் வந்தவர்கள்.— தருமிதுபசுஞானம் - இப்படி யறிகிறது பசுஞானமாம். பின்னைச் சிவஞான மேதென்னில்?—பின்சிவஞானந் தனக்குமேலாம் - பின்பு சிவஞானம் இதற்கு மேலாயிருக்கும்.

இதனுற் சொல்லியது, அந்தக்கரணங்களும் ஆன்மாவும் தன்னில் பிரிவற்றிருக்குமென்றும், அப்படி யிருந்தாலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டுகிற மாத்திரமென்றறிந்து நீங்கிஆன்மாவினுண்மையை நீ யறிகிறது பசுஞானமென்றும்,சிவஞானம் இதற்கு மேலாயிருக்குமென்னு முறைமையும்அறிவித்தது.

இதற்குப்பிரமாணம். சிவஞானபோதம். ச-சூ,உ-வெ, "சிந்தித்தாற்சித்தந் தெளியாதா யாங்காரம்-புந்திபா யாட்ந மனமாகிப்-பந்தித்து, - வெவ்வேறுதானே துணிந்துள்ள மிவ்வேறு - மவ்வேறும் போதுபோ லாங்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மனம்புத்தி ஆங்காரஞ்சித்தம் நான்கும் கருவியாமருவி-மனம்புத்திஆங்காரஞ் சித்மென்கின்ற நான்கு மொரு விடயத்தை அறிதற்குக் கருவியாகமருவி,— ஆன்மாவே யென்னவரு

ம்-இவையே கருத்தா வென்னும்படி யுயிரோ டொற்றித்துநின்று நிகழ்வனவாம்,—தீபமெனத் தெரிந்தங்கொருவி- கண்ணுக்கு விளக்குப்போல விவை யுயிர்க்குக்கருவியாய் வேறுநிற்பன வென்றறிந்து நீங்கிநின்று,—ஆன்மாவினுண்மை யுணர்ந்தவர் தமை யுணர்ந்தோர்-இவற்றைக் கொண்டறியும் கருததாவினுண்மை யாதென் றுருய்ந்தார்க்கு ஆன்மசொருப மினிதுவிளங்கும்.— பின்பசுஞானம் - அதன்பின்பு அங்ஙனமாராயுமறிவு பசுஞான மாகலான்,—தருமிதுசிவஞானந் தனக்குமேலாம் - அதினைத்தரும்பொருள் யாதெனத் தேறுவார்க்குச் சிவஞான மதற்கு மேலாய் விளங்குமென்பதாம்.

இதனானே யந்தக்கரணங்கள் கருத்தாவல்லவென்பதுந் தம்மையுந் தலைவனையு மறியுமாற்றின்வைத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய கரணங்கட்கு மான்மா வுச்கும்
அகர முதலிய வக்கரங்களா லறிவு
விளங்கு முறைமை யுணர்த்துகிறூர்.

அவ்வுட னுவ்வுமவ்வு மனம்புத்தி யாங்காரங்கள்,
செவ்விய விந்துநாதஞ் சித்தமோ டுள்ளமாகு,மோவ்
வெனு மெழுத்தாமைந்து முணர்வுதித் தொடுங்குமா
று,பவ்வமுந் திரையும்போலும் பார்க்கிலிப் பண்புத்
தோன்றும். (ரு)

(இ-ள்.) அவ்வுட இருதயங் கண்டந் தாலு நெற்றி துவாத
னுவ்வு மவ் சாந்த மிவ்வைந்து தலத்தையு மடைந்திருக்
வு மனம்பு கிறஅகாரமாகிய வக்கரஞ் சூரியப்பிரகாசம்

த்தி யாங்காரங் கள் செவ்விய விந்துநாதஞ் சித்த மோ டுள்ளமாகும் — போன்ற மனத்தையும், உகாரக்கரஞ் சோமப் பிரகாசம்போன்ற புத்தியையும்,மகாரக்கர மக்கினிப்பிரகாசம்போன்ற வகங்காரத்தையும் விந்து தீபப் பிரகாசம்போன்ற சித்தத்தையும் நாத மாயிரகோடி யாதித்தப் பிரகாசம்போன்ற புருடனையுமாக விவ்வைந்தக்கரங்களு நிரனிறையாக வதிட்டித்து நின்று செலுத்தாநிற்கும்?

ஒவ்வெனு மெழுத்தா மைந்தும் — இங்ஙனங்கூறிய வகரமுதலிய வைந்தெழுத்தையும் பிரணவ மெனப் பெயரிட்டுச் சொல்லுவர்கள். இதனையாகமங்களிற் சூக்குமபஞ்சாக்ரமென் றோதப்படும்?

உணர் வுதித் தொடுங்கு மாறும் — மத்திம வாக்கான தக்கரங்களாகச் சொரூபிசரித்துச் செவியிற்கேளாதே யந்தக்கரணங்களிலே தனித்தனியேநின் றோசையுண்டா யதினிடமாக வான்மாக்களுடைய ஞானக்கிரியைகளைத் தோற்றுவித் ததனைச் சீவிப்பித்துப் பின்பொடுக்குவிக்கும். அதென்போல வென்னில்?

பவ்வமுந்திரையுபோலும் — சமுத்திரத்தின்கண் டரங்கந் தோன்றிக் காரியப்பட்டு ஒடுங்கிடுமென்பதுபோலறிவாயாக.

பார்க்கிலிப்பண்புத் தோன்றும். — ஆராய்ந்து விசாரித் தருளினலேகாணி லிவையிற்றின் வியாத்தியை யறியப்படும். எ-று

ஈண்டு விந்துநாதமென்றது அபரவிந்து அபரநாதத்தையெனவறிக.

இதற்குச் சுப்ரபேதத்தும் காலோத்தரத்தும் இரௌர வாகமத்துமறிக. (௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிரண்டு விருத்தங்களினாலே அந்தக்கரணங்களை சேஷ்டிப்பவர்கள் அகாராதி வர்ணத்துவாரா பிரமாதிதேவர்களென்ப துணர்த்துதல்.

அவ்வுடனுவ்வுமவ்வு மனம்புத்தி யாங்காரங்கள் செவ்விய விந்துநாதஞ் சித்தமோடுள்ளமாகும் - அகார உகார மகார விந்து நாதங்களைந்தும் நிரைநிறையே மனம் புத்தி அகங்காரம் சித்தம் விருத்திஞானமாகிய வுள்ளமென்னு மிந்த வைந்தையும் அதிஷ்டிக்குந் தேவர்களுக்குக் கரணமாம்.

ஒவ்வெனுமெழுத்தாமைந்து - இந்த வைந்தெழுத்து மோங்காரமாம். அவைதான் நாதத்திலேயிருந்து விந்துவாதி வர்ணங்களுண்டாய் × லீனமுமவ்வாறேயாம். அப்படியே பிரகிருதியிலேயிருந்து சித்தமாதி தத்துவங்க டோன்றி யொடுங்கும்.—

உணர்வுதித்தொடுங்குமாறு பவ்வமுந் திரையும்போலும்- ஆன்மசைதந்யம் கன்மவசாத் அந்தக்கரணங்கள் வழித்தாக விஷயாபிமுகமாகச் செல்லுவதுந் திரும்புவதும்,வாயுவசாத் சமுத்திரத்திலே நின்றும் அலைகளானது § விஜ்ரம்பிதமாய்க் கரையளவாகச் சென்று திரும்புவதும் போல,—

பார்க்கி லிப்பண்புந்தோன்றும் - மேற்சொல்லு முபாயத்தினாலே பார்க்கி லிதனுடைய ஸ்வரூபந்தெரியும்.

× லீநம்-ஒடுங்கினது, §விஜ்ரம்பிதம்-விருத்தியடைந்தது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சுத்த தத்துவங்கள் அந்தக்கரணங்களையும் புருடனையும் பிரேரிக்குமுறைமை யறிவிக்கின்றார்.

அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி யாங்காரங்கள்- பஞ்சப் பிரணவ கலைக்குள் வைகரிவாக்குக்கு மூலமாகும் அகாரமாகிய சுத்தவித்தை மனசைச் செலுத்தும், மத்திமை வாக்குக்கு மூலமாகும் உகாரமாகிய வீசுரம் புத்தியைச்செலுத்தும், பைசந்தி வாக்குக்கு மூலமாகும் மகாரமாகிய சாதாக்கியம் அகங்காரத்தைச் செலுத்தும்;— செவ்விய விந்துநாதஞ் சித்தமோடுள்ளமாகும்- சூக்குமை வாக்குக்கு மூலமாகும் விந்துவாகிய சத்தி சித்தத்தைச் செலுத்தும், அதிசூக்கும வாக்குக்கு மூலமாகும் நாதமாகிய சிவம் புருடனைச் செலுத்தும்;— ஒவ்வெனுமெழுத்தாமைந்தும்- பிரித்துப் பார்க்குமிடத்து ஐந்தாகும் பிரணவகலைகள்கூட்டி யுச்சரித்தா லோங்காரமாம்.— உணர்வுதித்தொடுங்குமாறு பவ்வமும் திரையும்போலும் - பிரணவத்தில் அகாரமுள் வைத் திரேசகமாய் இடையி லெழுந்த உச்சுவாசரூப மகா சகல மத்திபத் தநித்திய சகலமுண்டாய்ப் பிரணவத்தினுகாரமுள் வைத்துப் பூரகமாய்ப் பிங்கலையிற்புகுந்து நிச்சுவாசரூப மகா சகல மத்திபத் தநித்திய கேவலமா முறைமை சமுத்திரமுந் தரங்கமுமொப்பாகும்.— பார்க்கில் - யோகமார்க்கத்தினால் அந்தச் சகல கேவல மிரண்டையும் தடுத்துச் சுழுமுனை திறந்து கும்பித்துநோக்கில்,— இப்பண்புந் தோன்றும்-மகாரமொற்றுமயமாம்.

சித்தமுண்டாம் சுத்ததத்துவங்களுள் மனமுதலிய வற்றைக் கலாதித் துவாரத்தினாலே செலுத்து மென்பது காண்பிப்பாம்.

இச்சாசத்தி காரியம் ஈசுரதத்துவம், ஞானசத்தி காரியம் சுத்தவித்தியாதத்துவம், கிரியாசத்தி காரியம் சத்திதத்துவம், ஈசுரதத்துவம் இராக தததுவத்தைச் செலுத்தும், சுத்தவித்தியாதத்துவம் வித்தியாதத்துவத்தைச் செலுத்தும், சத்திதத்துவங் கலாதத்துவத்தைச் செலுத்தும், இராகதததுவம் மனதத்துவத்தைச் செலுத்தும், வித்யாதத்துவம் புத்திதத்துவத்தைச் செலுத்தும், கலாதத்துவம் அகங்கார தத்துவத்தைச்செலுத்தும், மனோபுத்தி யாங்காரங்களாற் புருஷதத்துவ வியாபாரமுண்டாம்.

காலத்தையு நியதியையுஞ் சத்திதத்துவம் செலுத்தும், வித்தையை சுத்தவித்தை செலுத்தும். இராகத்தை ஈசுரதத்துவஞ்செலுத்தும்; குணதத்துவததைச் சிவதத்துவஞ் செலுததும், புருஷ தத்துவத்ததச் சாதாக்கியதத்துவஞ் செலுத்தும் என்றுஞ் சிலவசனம்.

சிவஞான

—o—

அவை கருவியாவதூஉம் அகரமுதலிய வெழுத்துக்கள் உடனின்று செலுத்திபவழியே யாமாகலான், சமட்டியிற் பிரணவரூபமா மிவ்வைந்தெழுத்தானும் உயிரின்க ணுணர்வு மாறி மாறித் தோன்றுதல், கடலின்கண்ணே திரை புதிதுபுதிதாகத் தோன்றியு மொடுங்கியும் வருமாறுபோலாம். சவிகற்பவுணர்விற்குக் காரணம் நிவிர்த்தாதிகலையைப் பற்றி ஐந்தாய்த்திகழுல் நால்வகை வாக்குக்களென்பதனை உற்றுநோக்கின் இவ்வியபும் இனிது விளங்குமென்பதாம்.

ஒற்றுமை பற்றி எழுத்துக்களே யவையாக வுபசரித்தார்.

புருடதத்துவமும் அகனைச் செலுத்து மக்காரமும் ஈண்டொப்புமைபற்றி யுடன் கூறியவாறு.

புருடதத்துவத்தைச் செலுத்துதலாவது புருடதத்துவமாந் தன்மையை நிகழ்வித்தல்.

அகார வுகார மகங்காரம் புத்தி மகாரம் என முதனூலுட் கூறுதலானும், தகராறுபோதத்தும் அவ்வாறே கூறுதலானும், ஈண்டு அவ்வுடனுவ்வுமவ்வு மனம்புத்தி யகங்காரங்கள் என்றது எதிர்நிரனிறையெனக் கொள்க.

பிரணவமாகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறுது ஒவ்வெனக் கடைக்குறைத்துக் குறுக்கல் விகாரமாக்கிக் கூறினார்.

ஐந்தானு மென்னு மானுருபு விகாரத்தாற் றொக்கது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் தன்மையி லுணர்த்து முறைமை பகிர்ந்து பிரகாரமா யிருக்குமென்று மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கிறார்.

அவ்வுடனுவ்வுமவ்வு மனம்புத்தி யாங்காரங்கள் - நிரைநிறை மனத்தை அகாரஞ்செலுத்தும், புத்தியை உகாரஞ் செலுத்தும், ஆங்காரத்தை மகாரஞ்செலுத்தும்.—செவ்விய விந்துநாதஞ் சித்தமோடுள்ள மாகும் - சித்தத்தை விந்துசெலுத்தும், உள்ளத்தை நாதஞ்செலுத்தும்,— ஒவ்வெனுமெழுத்தாமஞ்சும் - இந்த வக்கரங்களைந்தும் பிரணவ ரூபமாயிருக்கும்.—உணர்வு இத்தொடுக்குமாறு பவ்வமுந் திரையும்போலும் - இவையித்த

டனேகூடி ஆன்மபோதங் கன்மத்துக் கிடாக விஷயங்களைப் புசித்து ஒடுங்குகிற முறைமை சமுத்திரமுந் தரங்சமும்போலும்.—பார்க்கி லிப்பண்புந்தோன்றும் - திருவருளாலே யாய்ந் தறியில் இந்தமுறைமையும் தப்பாமற் றரிசனமாம்.

கடலின் தானத்திலே மனது, நீரின் தானத்திலே யான்மா, திரையின் தானத்திலே ஆன்மபோதம், வாயுவின் தானத்திலே கன்மம், ஆகாசத்தின் தானத்திலே விஷயம், இப்படி நின்றதெனக் கொள்க. இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம்.ச-சூ,ந-வெ, "அகார உகார மாங்காரம் புத்தி - மகார மனஞ் சித்தம் விந்தப்-பகாதிவற்றை, நாதமுளம் வடிவாம் நாடிற் பிரணவமாம்-போதங் கடற்றிரையே போன்று" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, மனம் புத்தி யாங்காரம் சித்த முள்ளம் என்கிற தத்துவங்களை அகார உகார மகார விந்துநாதம் என்கிற அக்கரங்கள் செலுத்து முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அகங்காரங்கள் புந்திமனஞ் சித்மோடுள்ளம் - அகங்காரம் புத்தி மனம் சித்தம் உள்ளமென்கின்ற அவை சருவியாவதூஉம்,—அவ்வுடனுவ்வுமவ்வும் விந்துநாதமுமாகும் - அகாரவுகார மகார விந்துநாதமென்கின்ற வெழுத்துகளுடனின்று செலுத்தியவழியே யாமாகலான்,—ஒவ்வெனுமெழுத்தாமைந்தும் - சமட்டியிற் பிரணவரூபமா மிவ்வைந்தெழுத்தானும்,—உணர்வுதித்கொடுங்குமாறு-உயிரின்க ணுணர்வு மாறியாறித் தோன்றுதல்—பவ்வமுந்திரையும்போலும் - கடலின் கண்ணே திரை

புதிது புதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலாம்.—பார்க்கில் - சவிகற்ப வுணர்விற்குக் காரணம் நிவிர்த்தாதிகலை யையபற்றி நைந்தாய்த் திகழு நால்வகை வாக்குகளை யுற்று நோக்கின்,—இப்பண்புந் தோன்றும் - இவ்வியல்பு இனிதுவிளங்குமென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய வக்கரங்கட் கதிதேவதையு மவை
யிற்றைக் காரியப்படுத்து முறைமையு
முணர்த்துகிறார்.

அயனரி யரனுமீசர் சதாசிவ ரதிதெய்வங்க, ளுபவரு மவ்வோடுவ்வு மவ்விந்து நாதத்துக்குப், பயனுறு மஞ்சிலான்மா பரவிடினசித்தாம் பார்க்கிற், சயமுறும் வளியிரண்டுந் தவிர்த்துறிற் றனும்தோன்றும். (ச)

(இ-ள்.) அயனரி யரனு மீசர் - சதாசிவ ரதிதெய்வங்க ளுபவரு மவ்வொடுவ்வு மவ்விந்து நாதத்துக்கு அகாரமுதலிய வைந் தக்கரங்கட்கும் பிரமர் முதலிய தேவதைக ளைவரு மதிட்டாதாவா யிருந் தவையிற்றைக் காரிபப்படுத்துவர்கள்.

பயனுறுமஞ்சிலான்மா அகார மாங்கார தத்துவத்தை யதிட்டித்து நின்று விளக்கும், உகாரம் புத்தியை யதிட்டித்துநின்று விளக்கும், மகார

மனத்தினை யதிட்டித்து நின்று விளக்கும், விந்து சித்தத்தினை விளக்கும், நாதமுள்ளமென்று சொல்லப்பட்ட வான்மாவினிச்சாஞானக் கிரியைகளை விளக்கும். அஃதாவது, கலைமுதலிய கருவிகளினது சமூகங்களால் விளங்கிக் காரியப்பட் டான்மாப் போகங்களைப் புசிப்பன்.

பரவிடின சித்
தாம் பார்க்கில்
சயமுறு வளி
யிரண்டுந் தவிர்
த்துறிற் றானுந்
தோன்றும்.

இந்த வக்கரங்களின் முறைமையை விசாரித் தறியுமிடத்துச் சடரூபமாகி யிருக்கும். இடை பிங்கலைகளின் வழிச் செல்லாமற் சயத்தைப் பொருந்திய சுழிமுனையி னிறுத்தி யோகத்தைப் புரிவார்களாகிற் றற்சொரூபம் விளங்கும். எ-று.

இஃது பாவர்க்கெனிற் சகலர்க்கென வறிக.

தானுமென்ற வுண்மையா லதிட்டாக்களையுந் தரிசிக்கலாம் அப்பொழுதென வறிக.

இதற்கு ரௌரவாகமத்து மகுடாகமத்துமென வறிக (௪)

சிவாக்ரயோகிய ருரை வருமாறு.

உயவரு மவ்வோடுவ்வு மவ்விந்து நாதங்கட்கு அயனரி யானீசர் சதாசிவ ரதிதெய்வங்கள்— அந்தக்கரணங்களை யான்மாவுக்கு விஷய தரிசனத்திலே சஹகாரியாகப் பொருந்தவரும் அகார உகார மகார விந்து நாதங்கட்கு பிரமா விஷ்ணு ருத்திர மகேஸ்வர சதாசிவர்கள் அதிதேவதைகளாக விருந்து, மரப் பொம்மைக்குச் சூத்ரதாரியானவன் கயறுகட்டி யாட்டுவிக்குமாப்போல, இந்த அக்ஷராத்ம சத்திகளினாலே அந்தக்கரணங்களை சேஷ்டிப் பிப்பார்கள்.—

பயனுறு மஞ்சிலான்மா - இவ்வாறு அந்தக்கரணங்கள் ஞானேந்திரிய த்வாரா விஷயங்களிலே ப்ரவர்த்தித் துள்ளளவில் ஆன்மாவானவன் பஞ்சேந்திரியங்களினாலும் விஷயங்களை க்ரஹிப்பன். இவ்வா றொருவர் சேஷ்டிப்பிக்க வேண்டுவதில்லை, அந்தக்கரணங்கடானே தத்தம் வியாபாரங்களைப் பண்ணுமென்னில்?—

பரவிடலசித்தாம் - விசாரிக்குங் காலத்தில் அந்தக்கரணங்கள் ஜடமாம். அவைகளுக்கு சிற்*சம்வலன மன்றியில் வியாபாரங் கூடா தாகையால் பிரேரகாள்வேணும்.—

* சம்வலனம் - சூழ்தல்.—

சயமுறு வளிபிரண்டுந் தவிர்த்துநிற் பார்க்கிற் றுனுந்தோன்றும்- பிராணாயாமத்தினாலே சயம்பொருந்தின வாயுவினது உஸ்வாச நிஸ்வாசத்தையு மடக்கி பாகிய விஷயங்களையு மடக்கிப் பார்க்கில், அந்தக்கரணங்களுடைய ப்ரவர்த்தியும் அதனாலே ஆன்மஞானம் பிரவர்த்திக்கிறதும் நிவர்த்திக்கிறதும் அந்த ஞானசொரூபமான தன்னையும் யோகப் பிரத்தியட்சமாகக் காணலாமென் றிதன்பொருள்.

அகாராதி வர்ணங்களை யதிஷ்டித்த ப்ரமாதி தேவர்கள் அந்தக்கரணங்களை ப்ரேரிப்பர்க ளென்பதேன், தேவர்களே ப்ரேரிப்பவர்களென்னப் போகாதோ வென்னில்? வர்ணங்கள் ப்ரத்யேகந் தேவதாத்மகமாயிருக்கையாற் சொன்னது.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 — 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 [illegible]
[illegible] 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑍍𑌮𑌕𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂
𑌬𑍀𑌜𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌤𑍁 [illegible] 𑌤𑌾𑌃 ॥

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சுத்த தத்துவ மைந்துஞ் சடமாதலால் ஸ்வதந்திரமாய்ச் சேட்டியாதாகையாற் றேவதானுட்டானத்தினாலே சேட்டிக்குமென்பது தரிசிப்பிக்கின்றார்.

உயவருமவ்வோடெவ்வு மவ்விந்து நாதங்கட்கு அதிதெய்வங்கள் அயனரி யரனு மீசர் சதாசிவம் பயனுறு மஞ்சிலான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கில் - இச்சாஞானக் கிரியாபலங்களை மனுதித்துவாரத்தினாலே விளக்கும் அகாரமுதலிய வைந்தில் ஆன்மாப் பொருந்திக் காணுமிடத்துச் சடமாம்.—சயமுறு வளியிரண்டுந் தவிர்த்துறிற் றோன்றும்- இடைபிங்கலையி லெழுந்தொடுங்கும் அகார சரீர ரேசகம், உகார சரீர பூரகம் இவை யிரண்டினையும் நிறுத்தில் வாயுவை வெல்லும், கும்பக சரீர அசபாமந்திர மத்தியபீச விந்து விழுங்கிய மகாரந் தோன்றும், அப்போது சர்வபாசமுங் கழன்று சிவத்தோடு சேர்ந்து சிவத்துவத்துக் கருகமாகிய சின்மாத்திரமாச் சேஷித்து ஆன்மாச் சுவசம்வேதனைப் பிரத்தியட்சத்திற் பிரதிபாஷிப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

அவ்வெழுத்துக்களை முறையே அயன்முதலிய வைவரும் அதிதெய்வங்களா யதிட்டித்து நிற்பராகலான்,இவ்வாறு கரணமு மக்கரமு மதிதெய்வமு மென்னு மிம்முத்திறத்தைந்தொடும் ஆன்மாப் பரவியவழி யறிகற்பயனுறும், பரவாவிடிற் சடம்போ லறிவிலதாம்; இவ்வியல்பும் இருவகை வளியுமடக்கிச் செ

ய்யும் யோகப் பயிற்சி யுடையார்க்கு இனிது விளங்குமென்ப தாம்.

அசித்தோடொக்கு மென்பார் அசித்தாமென் றுபசரித்தார்.

பரவாவிடிலென்பது சொல்லெச்சம்.

இவையிரண்டுசெய்யுளானும் அவைகருவியாதற்கட்படு முறைமையும் அதனையறிதற்குபாயமுங் கூறப்பட்டன.

அற்றேல், இம்முத்திறத்தைந்துங் கூடிய கூட்டத்தினிகழ்வதே அறிவாகலின், இப்பலபொருட் கூட்டமே யவ்வறிவுக்கு முதலாதலமையும், இடையே உயிரெனவொன்று கோடல் எற்றுக்கென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

மேல் முன்சொன்ன அக்கரங்களை அதிதேவதைகள் செலுத்துமுறைமை யருளிச்செய்கிறார்.

அயனரி யரனுமீசர் சதாசிவ மதிதெய்வங்க ளுயவரு மவ்வோடுவ்வு மவ்விந்து நாதத்துக்கு - நிரைநிறை அகாரத்துக்குப் பிரமா உகாரத்துக்கு விஷ்ணு மகாரத்துக்கு உருத்திரன் விந்துவுக்கு மகேசுவரன் நாதத்துக்குச் சதாசிவம் ஆக விந்தமுறைமையிலே அக்கரங்களுக்கு அதிதெய்வங்கள் நின்ற முறைமை இப்படியென்று கண்டுகொள்க.— பயனுறு மஞ்சிலான்மா - இந்தத் தேவதைகளாலும் அக்கரங்களாலுஞ் செலுத்தப்பட்ட தத்துவங்களைந்தாலும் இன்பத்துன்பங்களை ஆன்மாப் புசியாநிற்கும். சித்தாகிய வான்மா இவையிற்றாலே யறிந்து புசிக்கையால் இவையுஞ் சித்தோவென்னில்?— பரவிடி லசித்

தாம்பார்க்கில்-மனம்புத்தி யாங்காரஞ் சித்த முள்ளம் என்னும் இவையிற்றி னுண்மையை விசாரித்துப்பார்த்துச் சொல்லில் அசேதனமா யிருக்கு மிவனுக் கிவை யசேதனமென்று தோன்றுவது எப்பொழுதென்னில்?—சபமுறு வளியிரண்டுந் தவிர்த்துறிற் றானுந்தோன்றும் - வலிமைபொருந்தி யிருக்கிற உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டையு நீக்கில் அவ்விடத்தே மநாதிசளுமடங்கி அவை யசேதனமென்றுந் தோன்றித் தற்றெரிசனமுமுண்டாம்.

இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம் ச-சூ.ச-வெ. "எண்ணிலவ் வோங்காரத் தீசர் சதாசிவமுன்,னண்ணிய விந்துவொடு நாதத்துக்-கண்ணிற், பகரயன்மாலோடு பரம னதிதெய்வ, மகரவுகரம் மகரத்தாம்,' என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது,அதிதேவதைகள் அக்கரங்களைச் செலுத்துமென்றும், அக்கரங்கள் தத்துவங்களைச் செலுத்துமென்றும், தததுவங்களை ஆன்மாப் பொருந்தி இன்பத்துன்பங்களைப் புசிக்குமென்றும், பிராணவாயு வடங்கினவிடத்து இந்தத்தத்துவங்களும் அசேதனமாகத் தோன்றிச் சேதனமாயிருக்கிற வான்மாவுந் தோன்றுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அவ்வோடுவ்வு மவ் விந்துநாதத்திற்கு-அகார உகார மகாரம் விந்து நாதமாகிய அவ்வெழுத்துக்களை,—அயனரி யரனுமீசர் சதாசிவ முபவருமதிதெய்வங்கள் - முறையே அயனு மரியு மரனு மகேசனுஞ் சதாசிவருமாகிய வைவருஞ் செலுத்து மதிதெய்வங்களா யதிஷ்டித்து நிற்பராகலான்,— அஞ்சி லான்மாப்

பரவிடில் - இவ்வாறு கரணமு மக்கரமு மதிதெய்வமு மென்னு மிம்முத்திறத் தைந்தொடு மான்மாப் பரவியவழி,—பார்க்கிற் பயனுறும்- அறிதற்பயனுறும்,—பரவிடலசித்தாம்-பரவாவிடில் ஜடம்போ லறிவிலதாம்,—சயமுறுவளியிரண்டுந் தவிர்த்துறிற் றுனுந்தோன்றும்-இவ்வியல்பும் வலிபொருந்திய இருவகை வளியுமடக்கிச் செய்யும் யோகப்பயிற்சி யுடையார்க் கினிது விளங்கும்.

இவை இரண்டு செய்யுளானும் அவை சருவியாதர்கட்படு முறைமையும் அதனை யறிதற் குபாயமும் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை

மாயாவாதிகளெல்லாம் கூடிய சமுதாயந்தானே யான்மாவென்ன, அஃதன்றென் றுணர்த்துகிறார்.

ஆன்மாவின் வடிவுதானு மநேகார்த்த கூட்டமென்னிற், பார்ப்பார்கட் கான்மாவின்றாய்ப் பலபொருளுண்மையாகுஞ், சேர்ப்பாய பலவேயுண்மை யென்றிடிற் சென்றிவற்றை, யோர்ப்பான்வே றுணர்வோர்க்கெல்லா முணர்பொருள் வேறதாமே. (௫)

(இ-ள்.) ஆன்மாவின்வடிவு தானு மநேகார்த்த கூட்டமென்னின் — அக்கரங்கடத்துவங்கள் புலவர்கள் பலவாக முன் சொல்லப்படுகையா லிவையிற்றிற்கு வேறே யோரான்மா வென்ப தில்லை, அநேகமாகக் கூடின விவைதானே யான்மாவாவசென்னில்?

பார்ப்பார்கட் கான்மாவின் — இந்த விவேகத்தை விசாரித்துப் பார்க்கி றவர்களுக்குப் பலவான பொருளை யிதுவிது

ருய் பலபொரு ளுண்மையாகும்

வென் றறிந்த போகத்தைப் புசிப்பார்க்கு வேறுன்மா வில்லையாய் விடுங்காண்.

சேர்ப்பாய பலவே யுண்மை யென்றிடின்

இப்படிக் கருவிகள் பலவானது தானே யுண்மைப் பொருளென்று சொல்லில்?

சென்றிவற்றை யோர்ப்பான்வேறு

இந்தக் கருவி கரணாதிகளைப் பொருந்தி நின் றறிகிறவ னிவையிற்றுக்கு வேறாயிருப்பா னொருவனுளன்.

உணர்வோர்க் கெல்லா முணர் பொருள் வேற தாமே.

ஆகலாற் காண்பானுங் காட்சியுமென விரண்டாய்க் காணப்படுகையா லான்மாவு மிவைகளுக்கு வேறாயிருக்கும். எ-று.

இந்த விருத்த முதல் 'எங்குந் தான்'என்னும் விருத்த மீறாகப் பதினொன்றுக்குஞ் சித்ததந்திரமென வறிக. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேற் பஞ்சஸ்கந்த சமுதாயமே ஆன்மாவென்னும் மதத்தை யனுவதித்துத் தூஷித்தல்.

ஆன்மாவின் வடிவுதானு மநேகார்த்த கூட்டமென்னில்- ஆன்ம ஸ்வரூபமானது ரூப வேதநா விஞ்ஞான சம்ஞாந சம்ஸ்காரங்களென்னும் பஞ்ச ஸ்கந்த சமஷ்டியே! அவையாவன? ஞானசந்ததி விஞ்ஞான ஸ்கந்தம், வாசநா சமூஹம் சம்ஸ்கார ஸ்கந்தம், சுகதுக்க உபேக்ஷா புத்திகளே வேதநாகந்தம், சத்தசமூஹம் சம்ஞாகந்தம், மூர்த்த பூதங்களுடைய சமூகம் ரூபஸ்கந்தம், இதனாலுண்டான ஞானேந்த்ரிய பஞ்சகம் கன்மேந்திரிய பஞ்சகம், இந்த தசேந்திரியங்களில் ஞானசமுதாயம் புத்தி, அந்த புத்திக்குக் கரணம், மனதுக்கு ஞானசமுதாய புத்தியே ஆன்மா,

[illegible]

இவ்வாறு பஞ்சஸ்கந்த சமஷ்டியே ஆன்மா. அதெப்படி யென்னில்? த்ரண குல்ம லதாவிருக்ஷாதிகள் சமஷ்டி கூடி வனமென்று பெயரானாற்போல வென்னில்?—

பார்ப்பார்கட் கான்மாவின்றாய்ப் பலபொரு ளுண்மை யாகும் - ஆன்மாநான்ம விவேகத்தைப் பண்ணு மவர்களுக்கு ஆன்மாவென்ப தொன்றில்லாமல் ஞானேந்திரிய கன்மேந்திரிய மனோபுத்திபாகிற த்வாதசா *யதனங்களும் பஞ்ச ஸ்கந்த முமே யுள்ளதாம்.—

*ஆயதனம் - இடம்

சேர்ப்பாய பசுவேயுண்மை யென்றிடில் - இந்தப் பஞ்சஸ்கந்த சமஷ்டியே ஆன்மாவென்னில்?—

சென்றிவற்றை யோர்ப்பான்வே றுணர்வோர்க் கெல்லா முணர்பொருள் வேறகாமே - நீசொன்ன ரூபாதிகளி—த்திலே சென்று பார்க்கில் சக்ஷுவும் இந்தசக்ஷுவுக்கு அன்யமாயிருந்து வஸ்துவை நிரூபிக்கிற புத்தியும், நிரூபிதமான வஸ்துவை நானறிந்தே னென்பதும் வெவ்வேருகையால்; இந்த பஞ்ச ஸ்கந்த சமஷ்டி யான்மாவல்ல; இதற்கு அன்யமாய் நித்ய சைதன்ய ஸ்வரூபி ஆன்மாவென் றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

மேற்பஞ்ச கந்தக் கொத்துக் கூட்டமே யான்மாவென்கின்ற பவுத்தன்மதம் பராகரிக்கின்ருர்.

ஆன்மாவின் வடிவுதானு மநேகார்த்த கூட்டமென்னில் - ஞானசந்ததியாகிய விஞ்ஞான கந்தம், வாசனு சமூகமாகிய சமஸ்கார கந்தம், சுகபுத்தி துக்கபுத்தி உபேட்சா புத்திகளாகிய வேதனுகந்தம், சத்த சமூகமாகிய சம்ஞாகந்தம், மூர்த்தபூத சமூகமாகிய ரூபகந்தம் என்னு மிவ்வைந்துக் கொத்திஞலும் அக்கொத்துக் கபின்னமாகிவரும்ஞானசமுதாய புத்தியே யான்மா வென்னில்?—பார்பார்கட் கான்மாவின்ருய்ப் பலபொரு ளுண்மையாகும் - பஞ்சகந்த விவேகம் ஆன்மதரிசனம் பண்ணும் பேர்க்கு உயிரென்ப தொன்றின்றிப் பஞ்சகந்த பதார்த்த மாத்திரமே வுள்ள பொருளாம். சமுதாயமென் றெருவஸ்து சமுதாயியைவிட் டொன்றில்லாத படியினுலே,—சேர்ப்பாயபலவேயுண்மை யென்றிடில் - கூட்டமென் றென்றில்லாதபடியினுலே கூடிய பலபொருளே யான்மாவென்னில்?—சென் றிவற்றை யோர்ப்பான் வேறுணர்வோர்க் கெல்லா முணர் பொருள்

வேறதாமே - அநான்ம வான்ம விவேகதரிசனம் பண்ணும் பேராகிய சகலர்க்கும் பஞ்சகந்தத்தைப் பொருந்திப் பார்ப்பவனுன்மா பின்னப்பொருள், பார்க்கப்படும் பஞ்ச கந்தமும் பின்னப் பொருளேயாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

---o---

கூட்டமெனவொருபொருள் இன்மையானும், கூடுவனவாய பலபொருள்களும் வேருபறியப்பட்டு நிற்றலானும், அறியப்படுவதுமறிவதுந் தம்முளொன்ருதல் செல்லாமையானும், இப்பகுதிகளையும் இவை கூடியவாற்றையும் அறிவதாகியவுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான், இப்பலபொருளின் கூட்டம் உயிராதல் யாண்டையதென்பதாம்.

இதனுனே அவை யுயிரின் வேருதல் வலியுறுத்தப்பட்டது.

மேலைச் சூத்திரத்தின் 'உண்மை தரியாதீதம்' என்ற இறுதிக்கூற்றைச் சவுத்திராந்திகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுக்குமாறும் இதனுனே பெறுதும்.

இவை நான்குசெய்யுளானும் அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவாமாறும், கருவியாதற்கட்படு முறைமைகளும், அவை உயிரின் வேருமாறுமுணர்த்தி முதற்கூற்றை வலியுறுத்தவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு

---o---

மேலந்தக்கரணங்களை யொழிய வோரான்மா வுண்டென்று சொல்லவேண்டுவதில்லை, கருவிகளெல்லாங் கூடின சம

யயந்தானே ஆன்மாவென்ற மாயாவாதியை மறுத் தருளிச் செய்கிறார்.

ஆன்மாவின் வடிவுதானு மனோகார்த்த கூட்டமென்னில் - ஆன்மாவினுடைய சொரூபந்தானும் இந்த மனோபுத்தி யாங்காரஞ் சித்தமென்று சொல்லுகிற கருவிகள் முதலான பல கருவிகளின் கூட்டமென்று நீசொல்லில். அப்படியாகாது. அதேதென்னில்?—பார்ப்பார்கட் கான்மாவின்றிப் பலபொருளுண்மையாகும் - விசாரித் தறிபத்தக்கவர்களுக்கு ஆன்மா யிதுவென்று சொல்லுகைக்கு ஒன்றுமற்று பல பல தத்துவ சொரூபங்களேயாயிருக்கிற இந்தப் பொருள்களே யுள்ளதாய்விடும்.— சேர்ப்பாய பலவேயுண்மையென்றிடில் - இப்படி யெல்லாப்பொருளுங் கூட்டிச்சேர்க்கப்பட்டு பலவாயிருக்கிறதுதானே யான்மாவென்று நீ சொல்லில்?—சென்றிவற்றை யோர்ப்பான்வேறு - இந்தத் தத்துவங்களெல்லாத்திலும் பொருந்திநின்று அறிகிற வான்மா விவையிற்றுக்கு வேறாயிருக்கும்.—உணர்வோர்க் கெல்லா முணர்பொருள் வேறதாமே - இயாதொரு பொருளை யாவர் சில ரறிகிறார்க ளவர்களுக் குணரப்பட்ட பொருள் வேறாயிருக்குமாப்போல, ஆன்மாவும் இப்படிதா னறியப்பட்ட தத்துவங்களுக்கு வேறாயிருக்கும்.

இதற்குப் பிரமாணம், சிவஞானபோதம். ௩-சூ,எ-வெ, "கலையாதி மண்ணந்தங் காணிலிவை மாயை, நிலையாதாந் தீபமே போல - வலையாமல், ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதனுவாங், தானத்தில் வேறாகுந் தான்." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது, எல்லா தத்துவங்களுங் கூடின சமவாயம் ஆன்மா வல்லவென்றும், அந்த தத்துவங்களுடைய

வுண்மையை விசாரிக்குமிடத்து ஆன்மாவினுடைய வுண்மை தத்துவங்களுக் குள்ளாதல்லாதபடியாலும், ஆன்மாவா லறியப் பட்ட தத்துவங்களும் அறிகிற வான்மாவும் வேருயிருக்கையி ஞலும், ஆன்மா தத்துவங்களுக்குள் ளல்ல வென்னு முறை மையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

ஆன்மாவின் வடிவுதானு மநேகார்த்த கூட்டமென்னில்-ஆன்ம சொரூபம் உடல்பொறிமுதலிய சமுதாயமாகிய பலபொருட் கூட்டமென்றிடின்,—பார்ப்பார்கட் கான்மாவின்ருய்-ஆராய்பவர்க்குக் கூட்டமென வொருபொருளின்மை யானும்,—பலபொருளுண்மையாகும்-கூடுவனவாய பலபொருள்களும் வேருயறியப்பட்டு நிற்றலானும்,— சேர்ப்பாயபலவெ யுண்மைபெ ன்றிடில் - சேரப்பட்ட கரண மக்கர மதிதெய்வ முதலியவே யான்மாவினுண்மை யென்னில்?— உணர்வோர்க் கெல்லாம்-உணர்பவர்கட் கெல்லாம்,— சென்றிவற்றை யோர்ப்பான்வேறுணர் பொருள் வேருதாமே-சென்றிவைகளை யறியப்படுவதும திவதுந் தம்முள் ஒன்ருதல்செல்லாமையானும், இப்பதினைந்தினை யுமிவைகூடியவற்றையும் அறிவதாகிய உயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான், இப்பலபொருளின் கூட்ட முயிராதல்யாண்டையு தென்பதாம்.

இதனுனே யவை யுயிரின் வேருதல் வலியுறுத்தப்பட்டது. மேலைச் சூத்திரத்தின் "உண்மை தரியாதீதம்"எனவிறுதிக்கூற்றைச் சவுத்திராந்திகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுக்குமாறு மிதனுனே பெறுதும்

இவை நான்குசெய்யுளானும் அந்தக்ரணங்கள் கருத்தா வல்லவாமாறும் கருவியாதற்கட்படுமுறைமைசளு மவையுயிரின் வேருமாறு முணர்த்தி முதற்சூற்றைவலியுறுத்தவாறு.

☞ ச - சூ, க-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

பிளவு மவனைக் குறித் துணர்த்துகின்றார்.

அறிவிச்சை செயல்களெல்லா மடைந்தனல் வெம்மையும்போற், குறியுற்றங் கநேகாநேக குணகுணி பாவமாகி, நெறியுற்று நிற்குமென்னி னிகழ்புலன் கரணமெல்லாஞ், செறிவுற்றங் கறிவுகொள்ள வேண்டுமோ சீவனார்க்கே. (சு)

(இ-ள்.) அறிவிச்சை செயல்களெல்லா மடைந்தனல் வெம்மையும் போற் குறியுற்றங் கநேகாநேக குணகுணி பாவமாகி நெறியுற்று நிற்குமென்னின்	அக்கினியானது வெம்மையே குணமாகப் பிரிவின்றி நின்றாற்போல வான்மாவும் பிரமமுமிச்சாஞானக் கிரியைகளைப் பொருந்தி யநேகவிதமாகப் பொருந்திய குணங்களு மநேகமான்மாக்களாகிய குணிகளும் இப்படியான்மாக்கடோறும் பொருந்தப்பட்ட குணங்களும் பலவாகப் பொருந்தப்பட்ட சீவான்மாவென்னுந் தன்மையைப் பொருந்தி நிற்குமென்று நீசொல்லில்?
நிகழ்புலன் கரணமெல்லாஞ்	அப்படியே யறிவுடைத்தாயிருக்கிற சீவான்மா வாதலா லிந்திரியாதிகளையு மந்தக்கர

செறிவுற்றங் கறி ணங்களையும் பொருந்தி யறிவுண்டாக்கிக்
வ் கொள்ள வே கொள்ள வேணுமோ! தானே யுண்டாகா
ண்டுமோ சீவஞ தோள - று.
ர்க்கே

ஓகாரம் எதிர்மறை. (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சிவாத் வைதி.

அறிவிச்சை செயல்களெல்லாமடைந் தகல் வெம்மையும் போற் குறியுற்றங் கேகாநேக குணகுணி பாவமாகி நெறியுற்று நிற்குமென்னில் - சிவாத் வைதவாதி ஞானேச்சாக் கிரியைகள் அக்நிக்கு உஷ்ணம்போல் பரமான்மாவுக்கு பேதமற வெக்காலமும் பொருந்திநின்று ஒன்றேயென்னும் லக்ஷண † லக்ஷிதனாகி சிவனொருவனே யநேகங் குணங்களுக்குக் குணிபாவத்தை யடைந்து ஷடத்வாவிலும் பொருந்தி யநேக ஜீவான்மாவாக நிற்பனென்னில்?—

நிகழ்புலன் கரணமெல்லாஞ் செறிவுற்றங் கறிவுகொள்ள வேணுமோ சீவனுர்க்கே - இவ்வாறுடைய ஜீவான்மாவுக்கு விஷயங்களை அறிகிறதற்கு அந்தக்கரணங்களையும், ஞானேந்திரியங்களையும் பொருந்தி யறியவேணுமோ! ஆகலால் சிவனே ஜீவான்மாக்களாகானென் றிதன்பொருள்.

† லக்ஷிதன் - குறிக்கப்பட்டவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சிவாத்துவைதி மதந் தரிசிப்பித்துத் திரஸ்கரிக்கின்றார்.

அறிவிச்சை செயல்களெல்லா மடைந்தனல் வெம்மையும்
போல்- அக்கினி யேகமாயிருந்து அநேகமா யங்கங் குட்டண
துணதகைப் பொருந்திநின்றாற் போலச் சிவன் ஒன்றே யநேக
மாய் ஞானேச்சாக்கிரியைகளை யங்கங்குப்பொருந்தி,— குறியு
ற்று- அடையாளமுடைத்தாய்'— அநேகாநேக குணகுணிபா
வமாகி- அனந்த குணத்தன்மை யநந்தகுணித் தன்மையாகி,—
நெறியுற்று நிற்கு மென்னில்- விஷயமார்க்கத்தைப் பொருந்திநி
ற்குமென்னில்.— சிவனுர்க்கே - பேரறிவாகுஞ் சிவமாகு மு
யிர்க்குத்தானே,— நிகழ்புலன் கரணமெல்லாஞ் செறிவுற்றங்
கறிவுகொள்ள வேண்டுமோ- விளங்காநிற்கும் விடயேந்திரியங்
கள் முதலியவற்றைப் பொருந்திச் சிற்றறிவைச் செறியவே
ண்டுமோ.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இனி, இருபத்தாறுசெய்யுளான் பரமதங்களை யெடுத்தோ
தெப் பரீக்ஷித்து, ஆன்மாவிற்கு இலக்கணங்கூறுமுகத்தால் 'யா
னெனதென்பதிலைகரும்' என்ற இரண்டாங்கூற்றை வலியுறுத்
துவான்றொடங்கினார்.

சிவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமா
கத் தோன்றி அறிவிச்சைசெயல்களை யடைந்து தீயுஞ்சூடும்
போலப் பேதாபேதமாகிய குணகுணித் தன்மையுற்றுப் ப
லவேறுவகைப்பட்டு நிற்குமெனப் பரிணாமவாதிகள் கூறுவர்;அ

ருவிகளையன்றி யறியமாட்டாத சிவான்மா அவ்வாருதல் யா ன்டையதென்பதாம்.

எல்லா மங்ஙனங் குறியுற் றறிவிச்சைசெயல்களடைந் தனல் வெம்மையும்போ லேகாநேக குணகுணி பாவமாகி நெறியுற்று நிற்கு மெனக் கொண்டுகூட்டியுரைக்க.

ஏகாநேகம் - பேதா பேதம்.

ஆர்விருதி இழித்தற் குறிப்பின் வந்தது.

இதனுனே மேலைச்சூத்திரத்தின் ஆறுங்கூற்றை வலியுறுத்தவாறு மாயிற்று.

நிரம்பவழகியருளா வருமாறு.

இப்படி நீர் சொல்லுகிற வான்மாவென்ப தொன்றில்லை, அக்னியும் உஷ்ணமும்போலப் பிரபஞ்சமெல்லாம் தானாய் நின்றிகிறது பிரமங்காணுமென்ற மாயாவாதியை நோக்கி மீளவு மறுத் தருளிச்செய்கிருர்.

அறிவிச்சை செயல்களெல்லா மடைந் தனல் வெம்மையும் போற் குறியுற்று - அச்னியு முஷ்ணமும் போன்ற அடையாளத்தையொக்க ஜீவான்மாவி னிடத்திலே இச்சாஞானக் கிரியைகள்பொருந்தி,—அங்கனேகானேகக் குணகுணிபாவமாகி நெறியுற்று நிற்குமென்னில்- அவனிடத்திலே ஒருகுணிக்கு அனேக குணமுண்டா யிருக்கிறுப்போல எப்பொழுதுஞ் சர்வமும் பிரமந்தாண முறைமையிலே பொருந்தி நிற்குமென்று நீ சொல்வில்?—நிகழ்புலன் கரணமெல்லாஞ் செறிவுற்றங் கறிவுகொள்ள வேணுமோ சிவனுர்க்கே - ஜீவான்மாவுக்கு விளங்காநின்.

ற விந்திரியங்களையும் அந்தக்கரணங்களையும் பொருந்தி நின்று அறியவேண்டாம்; எப்பொழுது மப்படி யறிவாய் நிற்கின்.

இதனாற் சொல்லியது, அந்தப் பரப்பிரமந்தானே ஜீவான்மாவாய் இச்சாஞானக் கிரியைகளைப் பொருந்தி குணகுணி பாவமா மெல்லாத்தையு மறியுமென்றும், அப்படி யறியில் பிரமத்துக்குக் கருவிகளைக்கொண்டு அறியவேண்டுவ தில்லையாகையால் கருவிகளைக்கொண்டு பிரமமறியாது கருவிகளைக் கொண் டறிகிறது ஆன்மாவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

எல்லாம்-ஜீவான்மாக்க ளெல்லாம்,—அங்கேகுறியுற்று-பிரமப்பொருளின் பரிணாமமாய்த் தோன்றி,— அறிவிச்சை செயல்களை யடைந்து - அறிவிச்சை செயல்களை யடைந்து,— அனல்வெம்மையும்போல் -தீயுஞ்சூடும்போல,—ஏகாநேக குணகுணி பாவமாகி நெற்றியுற்று நிற்குமென்னின்- பேதாபேதமாகிய குணகுணித் தன்மையுற்று பலவேறுவகைப்பட்டு நிற்குமெனப் பரிணாமவாதிகள் கூறுவரெனின்?—நிகழ்புலன் கரணமெல்லாஞ் செறிவுற்றங் கறிவுகொள்ள வேண்டுமோ ஜீவனார்க்கு-நிகழ்கின்ற பொறி கரண முதலியகருவிகளை யன்றி யறியமாட்டாத ஜீவான்மா அவ்வாறுதல் யாண்டையது. எ-து.

இதனானே மேலைச் சூத்திரத்தி னொருங்கூற்றை வலியுறுத்தவாறு மாயிற்று.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

குணங்களை யின்றியொன்றுங் குறியுடைத் தான்மா வென்னி, னிணங்கிடா விச்சாஞானக் கிரியைக ளிவை யுடற்கட், பிணங்கிடுஞ் சந்நிதிக்கண் ணெனிற்பிணத் துறக்கத்தின்று, முணங்கிடுங் கரணமென்னிற் சந்நிதி யொழிந்ததன்றே. (எ)

(இ-ள்.) குணங்களை யின்றியொன்றுங் குறியுடைத் தான்மாவென்னின்	அந்த மனுதிதத்துவங்கள் குணங்களுடனேகூடி யறியப்பட்டிருக்குமாகில் அக்குணமில்லையாய் அதனைவிட்டுப் பிரியாமலொன்றுயிருக்கிற குணியே யான்மாவா யிருக்குமென்னில்?
இணங்கிடா விச்சாஞானக்கிரியைகள்	அப்பொழு திந்த வான்மாவுக் கிச்சாஞானக் கிரியைகளுண்டாய்ச் சீவிக்கமாட்டா.
இவை யுடற்கட் பிணங்கிடுஞ் சந்நிதிக்கணெனில்	சந்நிதிமாத்திரத்திலே ஞானக்கிரியைகளுடலிடமாக நின்று சீவிக்குமென்று நீ சொல்லில்?
பிணத்துறக்கத்தின்றும்	அந்தச் சரீரம் பிணமானபோது முறக்கத் தவத்தையின் கண்ணு மஃதெங்கே போய்த்து, அப்பொழுது சீவியாதிருக்கக் கண்டோமே!
உணங்கிடுங் கரணமென்னில்	அப்பொழுது சீவியாதிருந்தது கரணங்களி னுடுக்கங்காணுமென்று நீ சொல்லில்?

சந்நிதி யொழி — நீர் சன்னிதிமாத்திரத்திலே ஜீவிக்கு மெ
ந்ததன்றே. — ன்று முன் சொன்ன பிரதிக்கினை கெட்ட
தாம். எ-று. (எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிரண்டு விருத்தத்தினாலே சாங்கியமதத்தை யனுவதி
த்து நிராகரித்தல்.

குணங்களையின்றி யொன்றுங் குறியுடைத் தான்மாவென்
னில் - ஞானேச்சாப் பிரயத்நாதி குணங்களின்றி ஞானைக
ஸ்வரூபன் ஆன்மா வென்னில்?—இணங்கிடா திச்சாஞானக்
கிரியைகள் - † ஞாநாதி இச்சா ப்ரத்யத்னென என்கிற க்ரம
த்துக்கு ஞானேச்சாப் பிரயத்ன குணங்க ளில்லை யாகையா
ல் போகமே கூடாது.—இவை யுடற்கட் பிணங்கிடுஞ் சன்னி
திக்கண்ணெனில் - இந்த ஞானேச்சாப் பிரயத்னங்கள் ஆன்
மாவினுடைய சன்னிதிமாத்திரத்திலே தேகத்தின் கண்ணே யு
ண்டாய்க் கலஹித்துக்கொண்டு நிற்கு மென்னில்?—பிணத்து
றக்கத்தின்றும் - தேகம் பிரேதமானபொழுதும் ஆன்மா சுழு
த்தியை யடைந்தபொழுதும் ஞானேச்சாப் பிரயத்தினங்க ளி
ல்லாம லிருப்பானேன்?—உணங்கிடுங் கரணமென்னில் - ஞா
னம் புத்தியினாலும் இச்சை மனத்தினாலும் பிரயத்னம் அக
ங்காரத்தினாலும் ஜீவிப்பது இதற்குக்காரணங்களாகிய மனோ
புத்தி யகங்காரங்கள் மூன்றும் ¶ சுப்தமாகையினாலே ஞா
னாதிகளில்லையான தென்னில்?

சன்னிதி யொழிந்ததன்றே - நீ முன் னான்மாவினுடைய
சன்னிதியிலே தேகத்தின்கண்ணே ஜீவிக்குமென்று சொல்லி,
இவ்விடத்து அது கூடாதென்கையால் பிரதிஞ்ஞா பங்கம்.

† ஞாஞுதி யிச்சா ப்ரயத்நேன - அறிந்திச்சித்துச் செய்கிறது. ¶ சுப்தம்-உறங்கினது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சாங்கியன் மதம் தழுவித் தள்ளுகின்றார்.

குணங்களையின்றி ஒன்றாங்குறியுடைத்து ஆன்மாவென்னில்- ஞானேச்சாக்கிரியா சத்திகளாகிய குணங்களைத்தவிர வேக சின்மாத்திர முயிரென்று நீ சொல்லில்?— இணங்கிடா விச்சாஞானக்கிரியைகள்- சுவசம்வேதனப்பிரத்தியக்ஷ சித்தமாகிய இச்சாஞானக்கிரியாகாரியம் சத்திகாரணமன்றிப்பொருந்தா!— இவையுடற்கட்பிணங்கிடுஞ் சன்னிதிக்கணெனில் - இந்தஞானேச்சாப் பிரயத்தினங்கள் ஆன்ம சன்னிதான மாத்திரத்தில்,—உடற்கண் - சூக்குமதேகமாயிருக்கும் புத்திமனோகரணங்கள் பொருந்திய தூலதேகத்தி லுண்டாமென்னில்?—பிணத்துறக்கத்தின்றும்-சவமானகாலத்தும் சரீரமிருந்தபடியிருக்கவும் ஞானமுதலிய கரணங்காணாது.— உணங்கிடுங் கரணமென்னில் - மனோபுத்தி யகங்காரங்கள் வாடும்,அதனாற் காணாதென்னில்?— சந்நிதி யொழிந்த தன்றே - ஆன்மாவினது சந்நிதானம் விபுவாகையா லற்றதில்லையே! அதனாற் பிரதிஞ்ஞாபங்கமென்னும் நிக்கிரகத்தான வரும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனிச் சாங்கியர் குணகுணித்தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்றல் உயிரியல்பென்றும், அவ்வுயிரின்

சந்நிதியின் உடம்பின்கண்ணே நின்று கரணங்கள் செயற்படும் என்றும், அகரூற் றொழிலறிவிச்சைகள் அவ்வுடம்பின்கணிகழு மென்றுங் கூறுவர். பிணத்துமுறக்கத்துஞ் சந்நிதிக்குக்கேடின் றாகவும் உடம்பின்கண் அவைநிகழக்காணாமையின் சந்நிதிமாத் திரையான் அவைநிகழ்தல் யாண்டையதென்பதாம்.

இன்றென்னு மொருமை அப்பண்பின்மேனின்றது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிக் குணங்களுடனே கூடியிருந்தாலும் குணங்களுக்கு வேறாய்த் தானொரு தன்மையாயிருக்கும் பிரமமென்று சொல்ல, மீளவுமறுத் தருளிச்செய்கிறார்.

குணங்களையின்றி யொன்றுங்குறியுடைத் தான்மாவென்னில் - எண்ணிறந்த குணங்களுந் தானாயிருக்கச் செய்தே தனக்கொரு குணங்களு மில்லையாய் ஒன்றாயிருக்கத்தக்க குறியே யாயிருக்கும் அந்தப் பரமான்மாவென்று நீசொல்லில்?—இணங்கிடா திச்சாஞானக் கிரியைகள் - அந்தப் பிரமத்துக்கு இச்சாஞானக் கிரியைகள் பொருந்தாது. இவை பிரமத்துக் கில்லைகாணும், அதின் சன்னிதியிலேயுடலுக் குண்டென்னில்?—இவையுடற்கட் பிணங்கிடுஞ் சன்னிதிக்கண் - இந்த விச்சாஞானக் கிரியைகள் அதின் சன்னிதி மாத்திரத்திலே தேகத்திலே மாறி மாறிக் காரிபப்பட்டுவாராநிற்கும்,—உன்னில் - என்று நீ சொல்லில்,—பிணத்துறக்கத்தின்றும் - சன்னிதியெங்குமுண்டாயிருக்க இந்தத் தேகஞ் சவமானபொழுது மவத்தைப்பட்டபொழுதும் இவை காரியப்பட்டதில்லை. ஆகையாலிதுஆன்மாவாகாது.—உணங்கிடுங்கரணமென்னில்-அப்பொழுது அந்தக்கரணம்

ஜீவியாதபடியாலே இவையுஞ் ஜீவித்ததில்லையென்று நீ சொல்லில்,—சன்னிதியொழிந்ததன்றே - பிரமமெவ்விடத்திலும் பரிபூரணமென்று நீ சொன்னது இல்லையாய் விட்டது.

இதனாற் சொல்லியது, மாயாவாதி பிரமமெப்பொழுது மொருதன்மையா யிருக்குமென்றும், அதன் சன்னிதியிலே யுடல்சாரிப்படுமென்றுஞ்சொல்ல,உடல்சவமானபோதுமவத்தைப்பட்ட விடத்திலுங் காரியப்படாம லிருப்பானேனென்று கேட்க, அந்தக்கரணங்கள் போனபடியாலேயென்று மீளவு மவன்சொல்ல, பிரமத்தின் சன்னிதி யெங்கு முண்டென்று நீ சொன்னதுமில்லை யானது. ஆகையா லது அர்த்தமல்லவென்று முறைமை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

குணங்களையின்றி யொன்றுங் குறியுடைத்தான்மா வென்னில் - இனிச்சாங்கியர் குணகுணித் தன்மையின்றிக் கேவல மறிவு மாத்திரையாய் நிற்ற லுயிரியல்பென்றும்,— சந்நிதிக்கண்ணணி லிணங்கிடா-அவ்உயிரின்சந்நிதியி னுடம்பின்கண்ணே நின்று கரணங்கள் செயற்படு மென்றும்,—இச்சாஞானகிரியைகளிவையுடற்கட்பிணங்கிடும்,—அதனாற் றெருழிலறிவிச்சைக ளவ்வுடம்பின்க ணிகழுமென்றுங் கூறுவர்.— பிணத்துறக்கத்து சந்நிதி யொழிந்ததன்றே - பிணத்துமுறக்கத்துஞ் சந்நிதிச்சுக் கேடின்ருகவும்,— உணங்கிடுங் கரணமென்னி னின்றும்-உடம்பின்க ணவை நிகழக் காணுமையிற் சந்நிதிமாத்திரையால் அவைநிகழ்தல் யாண்டையதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இதுவுமது.

சன்னிதி குணமதாகுந் தானென்போலென்னிற் காந்த, முன்னிரும் பென்றுயிர்க்கு முறைமையுண் டகற்றலின்று, முன்னுத லொடுங்கலோட லிருத்தலே கிடத்தனிற்ற, லென்னுமித் தொழில்கண்மற் றுமியற்று வதான்மாவென்னே. (அ)

(இ-ள்.) சன்னிதி குணமதாகும்	சன்னிதியொழிந்ததென்று நீர்சொல்லுகிறீராயின் அந்தவான்மாவின் சன்னிதிக்குண்டாய சுபாவந்தான்காணு மிக்காரணங்களை யொருக்காலொடுக்கி வைக்கிறது,
தானென்போலென்னில்?	அதுதானெப்படியென்னில்?
காந்த முன்னிரும் பென்றுய்	காந்தக்கல்லின்முன்னே யிரும்பைக் காட்ட வதனை வலித்துக் கொண்டாற்போலவென்று நீ சொல்லில்?
ஈர்க்கு முறைமையுண் டகற்றலின்றும்	அந்தக்காந்த மூசியை வலித்துக்கொள்ளுமதொழிந் ததனைவிடத்தக்க சாமர்த்தியமில்லைகாண். அதுசரீரத்தின் வியாபாரங்காணும் ஆன்மா வல்லவென்னில்?
உன்னுத லொடுங்கலோட லிருத்தலே கிடத்தனிற்றல்	அப்பொழுது நினைத்தன்முதலிய தொழில்களு மில்லாதே போகவேணும். ஆதலாலே
என்னுமித் தொழில்கண் மற்றுமியற்றுவதான்மாவென்னே.	இங்ஙனங்கூறிபதொழில்களு மற்றுமுண்டான செயல்களெல்லா மான்மாவேசெய்யுமென் றறிவாயாக எ-று. (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலிதுவுமது.

சன்னிதி குணமதாருந் தானென்போலென்னிற் காந்த மூன்னிரும்பென்றாய் -ஆன்மாவினுடைய சன்னிதியிலே குணவியத்தமான பிரகிருதியிலே நின்றும் சர்வமுமுண்டாகி சேஷ்டைகளை யுடைத்தாம். அதென்போல வென்னில்? காந்தக் கல்லினுடைய சன்னிதியிலே யிருப்பூசி சேஷ்டிக்குமாப்போல வென்று நீ முதலிலே சொன்னாய்,— ஈர்க்குமுறைமையுண் டகற்றலின்றும்-காந்தத்துக்கு ஊசியை வலிக்குந்தன்மை யொழிந்து நீக்குந்தன்மையில்லை, ஊசிக்குங் காந்தத்தின் சன்னிதியிலே சேஷ்டிக்குந் தன்மையொழிந்து நிச்சேஷ்டையான தன்மையில்லை, ஆகையால் சுழுத்தியவத்தைகளுங் கூடாது. இவையிற்றுக்களை நீங்கி மோக்ஷமடைய வேணுமென்கிறதுங் கூடாது. இஃதன்றியும்,—உன்னுதலொடுங்கலோட லிருத்தலே கிடத்தல்நிற்ற லென்னுமித் தொழிலு மற்று மியற்றுவ தான்மா வென்னே-மனதினுடனேகூடி யொன்றை நினைக்கிறதும் அந்த மனதை நிறுத்துகிறதும் பாதத்தைப்பொருந்தி வாயுவசத்தினாலே ஓடல் நடத்தல் செய்வதும் சுகாசனமா யிருப்பதும் நிற்பதும் சயநிப்பதும் இவைமுதலான கன்மேந்திரிய கிருத்தியங்களையும் ஞானேந்திரியங்களைப் பொருந்தி விஷயங்களை க்ரஹிப்பதும், அகங்காரத்தைப்பொருந்தி *சுக்யஹம் ‡ துக்யஹம் என்று நிற்பதும் புத்தியைப்பொருந்தி +யகம் ஞாதா என்று நிற்பதும் ஆன்மாவென்றறிவாயாக வென்றிதன்பொருள்.

* சுக்யஹம்-நான்சுகி, ‡ துக்யஹம்-நான்துக்கி, + யஹம் ஞாதா-நானறிவேன்.

இதனால் சாங்கியர் ஆன்மா சாக்ஷி சைதந்யமாய் கர்த்தாவுமல்லாமல் போக்தாவுமல்லாமல் தான் ப்ரகிருதி விகி

ருதியுமாகாமல் * அசங்† கோதாசீனனாகிநிற்கத் தச்சன்னதியி லே அயஸ்காந்த சன்னிதியிலே அயசானதுபோல ‡ பிரவர்த்த மானதா யனுதியுமாய் மஹதாதியான § ப்ரகிருதி விகிருதிக ளேழுக்கும் மனது ஞானேந்திரிய கன்மேந்திரிய மஹாபூதங்க ளாகப் பதினாறுக்கும் பரமபரா காரணமுமாயிருக்கிற ப்ரகிரு தியிலே சாத்விகாதி குணங்களுந் ¶ ததநுவர்த்தியாயிருக்கிற புத்தியாதி ப்ருதிவி யந்தமான தத்வங்களும் * ஸ்வஸ்வ காரி யங்களைப் பண்ணும் கர்த்ருத்தவ போக்த்ருத்துவங்கள் புத்திக்கே. இந்த புத்திக்குத் தான் அந்யமென்று அறிந்து பிறி யாதபடியாலே சம்சாரியாய்ப் புண்ணியத்தினாலே யூர்த்வ புவனங்களையும் பாபத்தினாலே அதோபுவனங்களையு மடையும். ப்ரகிருதி புருடவிவேசத்தைப் பண்ணிப் ப்ரகிருதிக்கு அந்யமாகத் தன்னை யறிந்து நிற்பதே மோக்ஷமென்று சொல்லுமவனை மறுத்தல்

* அசங்க - பற்றில்லாத, † உதாசினன் - பொதுவாயானவன், ‡ பிரவர்த்தமான - பிரவர்த்திக்கிறது, § பிரகிருதிவிகிருதிகள்-பிரகிருதியினுடைய விகாரங்கள், ¶ ததநுவர்த்தி-அதையநுசரிக்கிற. * ஸ்வஸ்வ-தங்கள்தங்கள்.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌪𑌿𑌲𑍇𑌯𑍇 — 𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌵𑌿𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌕𑍃𑌤𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 । 𑌷𑍋𑌡𑌶𑌕𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 ॥ [illegible] ॥ 𑌇𑌤𑌿.

ப்ரகிருதி பரமகாரணமாகாது, அசுத்தமாயா ஜந்யமே. இதன்றியும் ஜடத்துக்கு * சித்வலனமல்லாமல் சன்னிதிமா

த்திரத்திலே சேஷ்டை கூடாது. கூடுமென்னில்? கட்குட்டியாதிகளுக்கும் சேஷ்டையுண்டாகவேணும். ஜடத்துக்குக் கர்த்ருத்வ போக்த்ருத்வங் கூடாது. சுத்தசைதந்யமா யிருக்கிற வஸ்துவுக்கு அவிவேகத்தினாலே சம்சாரமும் விவேகத்தினாலே மோக்ஷமுமென்னில்? விவேகிக்கு ஒரு * உபாதியன்றியில் அவிவேகித்வங் கூடாது. அந்தவுபாதியும் ஆதியாமாகில் முத்தி யந்தரமும் சம்சாரம்வரும். அநாதியே யென்னில்? ஆன்மஞான திரோதானமென்று நாம்சொன்ன வாணவமேயாம். மாயாகாரியமாகி ப்ரகிருதியை பரமகாரணமென்று புத்திபண்ணுகிறது சாங்கிய மதத்துக்குப் பிரதமதூஷணம்.

* சித்வலனம்-சித்தின் சம்பந்தம். † உபாதி - நிமித்தம்.

மேலும் போக்தாவாயிருக்கிற புருஷனுக்கு போகத்துக்கிருப்பிடமாயிருக்கிற தேகத்தினாலும் * போகசாதநமா யிருக்கிற விந்திரியங்களாலும் போக்தவ்யங்களாயிருக்கிற சத்தாதிகளினாலும் சுகதுக்கான்மகமா யிருக்கிற போகத்தினாலும் பிரயோசன மில்லாதபடியாலே அகர்த்ருத்வமே நிச்சிதம். கர்த்ருத்துவ மில்லாத போதே புருஷனுக்கு போக்த்ருத்வமுங் கூடாது, அசேதனமாயிருக்கிற ‡ பிரதானமும் சித்பிரேரணையில்லாமல் § காரிய காரணமாகப் பிரவர்த்திக்க மாட்டாது. ஆகையினாலே சாங்கியனாலே சொல்லப்பட்ட போகதச்சாதநம் மோக்ஷ தச்சாதனங்கள் பிராந்தி கற்பிதமே.

* போக்தவ்யம்-புசிக்கத்தக்கது, † பிரதாநம்-பிரகிருதி, ‡ காரியகாரணம் - காரியத்துக்குக் காரணம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

மேலிதுவுமது.

சன்னிதிகுணமதாகும்- சன்னிதான முண்டாயிருக்கவுங் காரியங்காணுமென்று நீர்சொல்லிய துண்மைதானே! ஒருவஸ்துவுக்கு ஒருவஸ்து இருக்குமிடத் துள்ளமை மாத்திரம் இவ்விடத்துச் சன்னிதி யென்று சற்பாவத்தோடு காரிய சாமர்த்திய சத்தி சம்பந்திபா யிருத்தல். அது,—தானென்போ லென்னில் காந்தமுன்னிரும்பென்ருய்- காந்தசத்தி இரும்பு சம்பந்தம் போலென்று சொன்னுய்,— ஈர்க்கு முறைமையுண்டு- அந்தக் காந்தத்திற்கு இரும்பை யிழுக்குஞ் சத்தியுண்டு,—அகற்றலின்ரும்-விடுஞ்சத்தி இல்லை.ஆகிலும், அதனுற் கர்த்திருத்துவங் காந்தத்துக்குச் சாணப்பட்டது, காந்தத்துக்கு நீர் சொல்லியகர்த்திருத்துவமில்லை, இருவருக்குஞ் சம்மதமான சத்திமாத்திரமே. இரும்புக்கே யசைதற்சிரியாவேசமாகிய கர்த்திருத்துவம் அப்படி யான்மாவுக்குச் சத்திமாத்திரமே. அப்படிச்சரீரத்துக்கே கர்த்திருத்துவம் சரீரமே ஞானேச்சாக்கிரியா காரியங்களைத் தனது தொழில்களாகத்தானே பண்ணும், அது நன்றன்று.சிற்பதார்த்தங்கட்கு அசிற்பதார்த்தங்களினது அசைதற்கிரியா கன்மகாரியத்தைப் பண்ணும், இச்சாஞானக் கிரியாத்தொழில்களைத் தனதாக ஸ்வசம்வேதனமாகப் பண்ணும் சிற்சத்தியே கர்த்திருத்துவம். ஆகையால் சித்துக்கே கர்த்திருத்துவம்,ஜடத்துக்குக் கன்மத்துவமன்றிக் கர்த்திருத்துவமில்லை. ஆகிற் காந்தத்துக்குக் கர்த்திருத்துவ மெப்படிச் சொன்னீர்? உள்ளது- சித்தாகிய கர்த்தாவினுடையவுஞ் சிற்சத்தியாகிய கரணத்தினுடையவும் சம்பந்தத்தினுலே சடத்துக்குக் கர்த்திருத்துவமும்

காணத்தவமுஞ் செயற்கையாக உபசரிக்கப்படும் கன்மத்து வ மாத்திர மியற்கையாய் வாஸ்தவமாயிருக்கும். ஆதலால்,— உன்னுத லொடுங்க லோட லிருத்தலே கிடத்தல் நிற்றல் எ ன்னுமித்தொழில்கண் மற்றும் - இவைமுதலாஞ் சரீரத்தினது அசைதற்கிரியைகளை,—இயற்றுவ தான்மாவென்னே- தனது சி ற்சத்தியினது ஞானேச்சாக் கிரியா சங்கற்பேச்சைகளி னாலே பண்ணுவதுயிரே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வியாபாகமாய் நிற்கப்பெறுதன் மாத்திரையே சந்நிதிய ன்று, மற்றுக் காந்தமுன் னிரும்புபோல உயிர்முன் உடம்பு தொ ழிற் படுதற்கு ஏதுவாயதொரு குணவிசேடஞ் சந்நிதியெனக் சொண்டாமாகலின்,அக்குற்றம் ஈண்டைக்கெய்தா தெனின்? அங்ஙனமாயினும் ஒருகுண மொருதொழிலன்றித் தம்முண்மா றுபட்ட பலதொழில் செய்யுமாறு யாண்டையதென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மீளவுங் காந்தத்தின் சன்னிதியி லிரும்புபோலப் பிரமத் தின் சன்னிதியிலே பிரபஞ்சங் காரியப்படுமென்று அவன்சொ ல்ல, மேலு மறுத் தருளிச் செய்கிறார்.

சன்னதி குணமதாகும் - பிரமத்தின் சன்னிதியிலே பிர பஞ்சங் காரியப்படு மென்கிறது சுபாவங்காணும்,— தானெ ன்போ லென்னில் - அதுதா னென்போல வென்று நீர் கே ட்கில்? காந்தத்தின்முன் இரும்பைப்போல வாம்.—காந்தமு

ன்னிரும்பென்ருய் - காந்தம் விகாரமற நிற்க வதின் சன்னிதி யிலே யிரும்பு காரியப்படு முறைமைபோல, பிரமத்தின் சன்னி தியிலே பிரபஞ்சங் காரியப்படுகிற முறைமையுமென்று சொன் ருய்,—ஈர்க்குமுறைமையுண் டகற்றலின்ரும் - அந்தக் காந்த த்துக்கு ஊசியை வலித்துக்கொள்ளுந் தன்மையொழிந்து அந் த ஊசியை யகற்றுமுறைமையில்லை. ஆகையாலது திருஷ்டாந் தமன்று.—உன்னுத லொடுங்கலோடலிருத்தலே கிடத்தல்நிற்ற லென்னுமித் தொழில்கள் மற்று மியற்றுவதான்மா வென்னே- ஒன்றை நினைத்தல் ஒன்றை மறத்தல் ஓடுதல் இருத்தல் கிடத் தல் நிற்றல் என்னுமிந்தத் தொழில்களும், இதுவுமன்றிமற்றுள் ளபலதொழில்களுஞ் செய்வது ஆன்மாவென்றே சொல்.

இதனுற் சொல்லியது காந்தத்தின் சன்னிதியிலே இருப் பு காரியப்பட்டாற்போலப் பரப்பிரமத்தின் சன்னிதியிலே பி ரபஞ்சந் தொழிற்படுமென்னில்? காந்த மூசியை வலித்துக் கொள்ளுந் தன்மை யொழிந்து அகற்றமாட்டாது; பிரபஞ்சம் பலபிரகாரமாகத் தொழிற்படுகையால் அது திட்டாந்தமாகா து என்னுமுறைமை யறிவித்தது.

'ஆன்மாவின்' 'அறிவிச்சை' 'குணங்கள்' 'சன்னதி' 'இவை நாலு திருவிருத்தமும் மாயாவாதி. இவை யிற்றுக்குப் பிரமா ணம். சங்கற்பநிராகரணம் அவன்மறுப்பு. "மன்னயக்காந்த மெனவுடல்பிரம - சன்னதியளவிற் சலித்திடுமாயி-னகண்டமு ஞ்சன்னிதி யலதிலதெவையு -நடந்திடவேண்டுங் கிடந்திடப்பெ ருவே - காந்தத்திரும்பு காட்டுநேர்ப்பெறி லயஞ்-சேர்ந்திடு நீக் குஞ் செயலதற்கிலதே" என்றும், பரபட்சம் அவன்மறுப்பு. கச-செ. "எங்குநின்றிடி லவத்தையின்றிடு மிசைந்திடுங்கரண மென்னில் நீ, யங்குநின்றபர மெங்கோளித்ததிது நின்றதேல வை யடங்கிடா, விங்குநின்றதொரு காந்தமானக விருப்புசன்

னதியியங்குநோர், தங்கிநின்றதெனி லிங்குமீளும்வகை தந்திடா துனுனா தப்படதே." என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சந்நிதிதா னென்போலென்னிற் குணமதாகும்- வியாபகமாய்நிற்சப் பெறுதன்மாத்திரையே சந்நிதியன்று, மற்றுக் காந்தமுன்னிரும்புபோல உயிர்முன் னுடம்பு தொழிற்படுதற்கு ஏதுவாயதொரு குணவிசேடம் சந்நிதியெனக் கொண்டாமாகலினக்குற்ற மீண்டைக் கெய்தாதெனின்? காந்தமுன்னிரும் பென்று யிர்க்கு முறைமையுண் டகற்றலின்றும் - அங்ஙனமாயினும் காந்தமிரும்பை யிர்த்தலாகியகுண மொருதொழிலன்றி யகற்றலாகிய மாறுபட்டதன்மை யின்றாகலின்,—உன்னுதலொடுங்கலோட விருத்தலே கிடத்த னிற்றலென்னு மித்தொழில்கள் மற்றுமான்மா வியற்றுவதென்னே- நினைத்தன் மறைத்தலோட விருத்தல் கிடத்த னிற்றலென்னு மாறுபட்ட தொழில்க ளான்மாச் செய்யுமாறு யாண்டையது.

மறைஞானதேசிகர் உரை

இப்படிச் சொல்லிய வான்மா வொருவடிவாயி ருக்குமென்று பாஞ்சராத்திரி சொல்ல மறுத் துணர்த்துகின்றார்.

உருவுயிரென்னி னிந்த வுடலினுட் காணவேண்டும், வருவது பரிணமத்தாய் நித்தமாம் பூதமாகுங், கருவினி னுழையுமாறுங் காட்டிட வேண்டுங்கண்ணின்,

மருவிடா தென்னினுன்றன் வாயினு லுருவன்றென்
னே. (கூ)

(இ-ள்.) உருவுயி ரென்னின்	ஆன்மா ரூபீகரித்திருக்குமென்று நீசொல் லில்?
இந்தவுடலினு ட் காண வேண் டும்	அப்போ திந்தச் சரீரம்போல வுருவாய்க் காணவேண்டுமே!
வருவதுபரிணா மத்தாய் நித்த மாய் பூதமாகும்	இப்படி யோருருவத்தை யெடுக்கிற் பரிணமிக்கப்பட்ட நித்தியமுமாய் மகாபூதங்களின் விகாரமாய்விடும்.
கருவினினு ழையுமாறுங் கா ட்டிட வேண்டும்	மாதாபிதாக்கள் சுக்கில சுரோணிதத்துடனே கூடிக் கருப்பக் குவளையி லான்மாப் பதிகிறபொழுது நம்முடைய கண்ணுக்குப் புலப்படக் காணவும் வேண்டும்.
கண்ணின் மரு விடாதென்னின்	அந்தவுருவங் கண்ணுக்குச் சூக்குமமாயிருக்குங்காணு மென்னில்?
உன்றன் வாயி னு லுருவன் றெ ன்னே.	ஆதலா லுன்னுடைய வாக்காலேதானே யான்மா வுருவல்ல வென்று சொல்லுவாயாக எ-று. (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிரண்டு விருத்தத்தினாலே ஆன்மா ரூபமென்னும் பௌராணிக மதத்தை நிராகரித்தல்.

உருவுயிரென்னி லிந்த வுடலினுட்காணவேணும்- ஆன்மாரூபமென்னில் இந்தத் தேகத்துக்குள்ளே யொருதேகமாயிருக்கி

றதைக் காணவேணும்.—வருவது பரிணமத்தாய் நித்தமாம் பூதமாகும் - ரூபமானபொழுதே பால்ய கௌமார யௌவந வார்த்தகாலஸ்தா பரிணமத்தை யடைந்து அநித்திய ஸ்வரூபமாம்.—கருவினுளுமையுமாறுங் காட்டிடவேணும் - கர்ப்பத்திலே பதிசிறபொழுது மாதாபிதாக்களினாலே காணப்படவேணும்.—கண்ணின்மருவிடா தென்னினுன்றன் வாயினா லுருவன்றென்னே - அந்தருபங் கண்ணினாற் காணப்படாதென்னில் காணப்பட்டதற்கே யுருவமென்று பெயர். காணப்படா தென்கையால் ரூபமென்று சொன்னவுன் வாயாலே தானே ரூபமல்லவென்று சொல்லு. அப்படியல்ல, சூக்ஷுமமேயாகையால் கண்ணினாற் காணப்படாதென்பதற்கு மேலுத்தரம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

உயி ருருவாயிருக்குமென்னும் பௌராணிகமதம் படித்துப் பராகரிக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இனிப் பௌராணிகர் உயி ருருவப்பொருளென்பர். பரிணமித்தழிதலுங் காட்சிப்புலனாதலு மில்லாத பொருள் அவ்வியல்புடைய பூதங்களோடொப்ப உருவாமாறு யாண்டையதென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சொல்லப்பட்ட வான்மா ஒருவடிவா யிருக்கு மென்ற பாஞ்சராத்திரியை நோக்கி யருளிச்செய்கிறார்.

உருவுயிரொன்னினிந்த வுடலினுட் காணவேண்டும்-ஆன்மா வுருவாயிருக்குமென்று நீ சொல்லில்? இந்தத் தேகத்துக் குள்ளே ஒருதேகமாகக் காணவேண்டும், அப்படிக் காணப்படாது. அஃது தொழிந்தும்,— வருவது பரிணாமத்தாய் நித்தமாய் பூதமாகும் - இப்படி வருகிற வான்மாவுக்கு ஒருபரிணாமவழிகளுமுண்டா யனித்திபமு மல்லவாய்ப் பூதங்களிலே பொன்ருய் விடுவன். இதுவன்றியும்,—கருவினு ணுழையுமாறுங் காட்டிடவேண்டும் - கர்ப்பத்திலே பதிகிற முறைமையும் என்கண்ணுக்குத் தெரிய விதுவென்று காட்டவும் வேண்டும்,—கண்ணின் மருவிடாதென்னில் - உருவாயிருந்தாலுங் கண்ணுக்குத் தெரியாதென்று சொல்லுகிருயாகில்?— உன்றன் வாயினு லுருவன் றென்னே - உன்னுடைய வாக்குத் தன்னாலே வுருவ மல்லவென்று சொல்.

இதனாற் சொல்லியது ஆன்மா வுருவமென்றவனே நோக்கிப் பலபிரகாரத்தாலு முருவமல்லவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயிருருவென்னில் - இனிப் பவுராணிக ருயிருருவப் பொருள் என்பரொனின்?—இந்தவுடலினுட் காணவேண்டும் - அங்ஙனமாயி னுடம்பினுள்ளே வேறொரு வடிவங் காணவேண்டும்.—வ

ருவதுபரிணமத்தாய் நித்தமாய்ப் பூதமாகும் - அங்ஙனமன்றி யுருவப்பொருளாய் வருவது பரிணமித்து அறியவெய்து பூதத்தோ டொன்றுதல்வேண்டும்.—கருவினினுழையுமாறுங் காட்டிடவேண்டும் - அதுவன்றிக் கருப்பத்திற் புகுமாறுந் தெரித்தல் வேண்டும்.—கண்ணின் மருவிடாதென்னில்-உருவடிவாயினுங்கட்புலனுகா தென்னின்? - உன்றன்வாயினு லுருவன்றென்னே - உன்வாயா லுருவனறென மொழிதலே யமையுமாதலின், பரிணமித் தழிதலுங் காட்சிப்புலனுதலு மில்லாதபொரு ளவ்வியல்புடைய பூதங்களோ டொப்ப வுருவாமாறு யாண்டையதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இதவுமது.

சூக்கும வுருவதென்னிற் றூலகா ரணமதாகு,மாக்கிய மநாதிதன்மாத் திரைவடி வசேதனம்பின், னீக்கிய சூக்குமத்தே நிற்பதோ ருருவுண்டென்னி, னுக்கிடு முருவமெல்லா மசித்துமா யநித்தமாமே. (௧௦)

(இ-ள்.) சூக்கும வுருவதென்னில்	ஆன்மாவின் ரூபஞ் சூக்குமமா யிருக்குமென்று நீ சொல்லில்?
தூலகாரணமதாகும்	அந்தச் சூக்கும வுருவானது தூலமான சரீரத்துக்குக் காரணமாயிருக்கும்.
ஆக்கிய மநாதி தன் மாத்திரை வடிவசேதனம்	நீ சொல்லப்படு மந்தக்கரணமுந் தன்மாத்திரை, இவைகளா லுண்டாகிய புரியட்டகவடிவு மசேதனமாயிருக்கும்.

பின்னீக்கிய சூக்குமத்தே நிற்பதோ ருருவுண் டென்னில்

வத்துக்குப் பின் னீயான்மாவென்று முன்னே சொல்லிப் பின்கழிக்கப்பட்ட வந்தச்சூக்கும தேகத்திலே வேறேபொரு வடிவாக வான்மாக் காணப்படுங்காணு மென்னில்?

ஆக்கிடு முருவமெல்லா மசித்துமா யநித்தமாமே.

அந்தச் சூக்குமதேகமு மதனாலுண்டாக்குந் தூலதேகமு மிவைக ளெல்லா மழிந்து போவதுமாய்ச் சடமுமாய் விடுங்காணும். எ-று. (௪௦)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

சூக்கும வுருவதென்னிற் றூலகாரணம தாகு மாக்கிய மனுதிதன்மாத் திரைவடி வசேதனம் - ஆன்மா சூக்கும ரூபமாகையாற் காணப்படாதென்னில்? அந்தச் சூக்கும ரூபமென்றது ஸ்தூல ரூபத்தை யுண்டாக்குவதற்குக் காரணமுமாய் மனோபுத்தி யகங்கார பஞ்ச தன்மாத்திரைகள் ஜடமு மநேகமுமாகையால் உற்பத்தி நாசத்தையுடையது.—பின்னீக்கியசூக்குமத்தே நிற்பதோருரு வுண்டென்னில்-முதலான்மாவல்லவென்று நிராகரித்த சூக்கும ரூபத்திலே சுசூக்கும ரூபமாகநிற்பது ஆன்மாவென்னில்?— ஆக்கிடுமுருவமெல்லா மசித்துமா யநித்தமாமே - நீசூக்கும ரூபத்திலே நிற்குமென்ற ரூபம் கலாதிபஞ்ச தத்துவங்களினாலே யுண்டான புருஷத்வம். ரூபமானதெல்லா மொருத்தராலுண்டாக்கப்பட்டதே யாகையால், ரூபங்களெல்லாஞ்ஜடமுமா யழிவதுமாம். இதனால் நீசொன்ன சுசூக்கும ரூபமு மான்மஸ்வரூப மல்லவென் றிதன்பொருள்.

*"அங்குஷ்டமாத்ரம் புருஷ†நிசகர்ஷ‡யமோபலாத்" என்னும் ஸ்ருதிடனுசாரமான புராணவசனத்துக்குக் கதியேதென்னி

ல்? இருதயகமல மத்யத்தில் ஆகாசம் அவர்களவர்களங்குஷ்ட மாத்திரமே! ததவச்சிந்நனு யிருக்கிறஅவசரத்தை உபாதிவசாத் புருஷனையும் அங்குஷ்டமாத்திரமென்றதன்றி வாஸ்தவமல்ல.

* அங்குஷ்டமாத்திரம் புருஷம் - அங்குஷ்ட ப்ரமாண முள்ள ஜீவனை. † நிசகர்ஷ - இழுத்தான். ‡ யமோபலாத்-யம ன்வலிமையாக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பரமாணு முதற் பதார்த்தம் போலச் சூக்கும வுருவாய் நேத்திரத்திற் றோன்றுதிருச்குமென்ன, மறுத் துணர்த்துகின் றார்.

சூக்கும வுருவதென்னில் - சூக்குமசரீரந்தானே யான் மாவென்னில்? முன்சொல்லிய சிலவாசிரியர் மதத்தினல்,— தூலகாரணமதாகும்-தூலசரீரத்துக்கு முதற்காரணமாம்,— ஆக்கிய மனுதி தன்மாத்திரைவடி வசேதனம் - சூக்கும தேகமாகப் பண்ணப்பட்ட கலைமுதற் பிருதிவி முடிவாகிய தத்துவங்களைத் தங்களுள் வைத்த அந்தக் கரணங்கள் தன்மாத்திரைகள் சடம், ஆன்மாவாகாது.—பின்னிச்குமிச்சூக்குமத்தே நிற்பதோ ருருவுண்டென்னில் - அடுத்ததாற்போ லான்மா வல்லவென்று தள்ளிய சூக்குமசரீரத்துக்குள் ளிருக்குமொரு வடிவுண்டு, அதுவே ஆன்மாவென்று நீ சொல்லில்? அதுவிசாரிக்குமிடத்தில்,— ஆக்கிடு முருவும் - சிவத்துவ பஞ்சகரூப பரதேகமாம்.— அதெல்லாமசித்துமா யநித்தமாமே - சிவதத்துவமுற்றும் சடமாய் நாசமாமே!— ஆன்மசத்தத்துக்கு விபு நித்திடசித்தென்று பொருளாதலாற் பரதேக மெப்படி யான்மாவாம், ஆகாது தானே!

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பூதம்போலக் காட்சிப் புலனாதற்குரிய தூல வுருவாதலின்றிச் சூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின்? அது தூலவுருவைத் தோற்றுவிக்குஞ் சடமாகிய புரியட்டகவுடம்பே யாகலானும், அப்புரியட்டக தேகத்துள் அதிசூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின்? அது கலையாதி மண்ணந்தமாயுள்ள பரவுடம்பாகலானும், அவ்வுருவங்களனைத்தும் அசித்தாதலு மசத்தாதலு மொருதலையாகலானும், அவ்வியல் பில்லாதவுயிர் உருவப்பொருளாமாறு யாண்டையதென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்னே நான் சொல்லப்பட்டவுருவம் சூக்குமமாய்க் காணாமிருப்பது என்றுசொல்ல, மீளவு மவனைமறுத் தருளிச் செய்கிறார்.

சூக்குமவுருவதென்னிற் றூலசாரணமதாகும் - ஆன்மாச் சூக்குமதேகமா யிருக்குமென்று நீ சொல்லில், தூலகாரணமா யிருக்கிற தேகத்துக்கு அது உபாதானமா யிருக்கும். அத்தன்மையை யொழிந்து,— ஆக்கியமனாதிதன்மாத்திரைவடி வசேதனம் - நீ சூக்குமமென்று சொல்லப்பட்ட விது மனம் புத்தியாங்காரமும் சத்த பரிச ரூப ரச கந்தமும் ஆக இந்த எட்டுங்கூடின புரியட்டக தேகமுமா யவை யசேதனமுமா யிருக்கும்.— பின்நீக்கிய சூக்குமத்தே நிற்பதோ ருருவுண்டென்னில் - ஆன்மாவல்லவென்று நீர் சொல்லப்பட்ட சூக்கும தேகத்திலே ஒரு வடிவாய் நிற்குமென்று சொல்லில்,— ஆக்கிடு முருவமெல்லா

மசித்துமாயநித்தமாமே-அப்படிச் சொல்லில் உண்டென்றுசொல்லப்பட்ட வடிவுகளெல்லாம் அசேதனமுமா யழிந்துபோம்.

இதனாற் சொல்லியது, ஆன்மா சூக்கமமாயிருக்குமென்றவனைப் பல பிரகாரத்தாலுஞ் சூக்குமமென்று சொல்லப்படாதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சூக்கும வுருவதென்னில்- பூதம்போலக் காட்சிப்புலனாதற் குரிய தூலவுருவாதலின்றிச் சூக்கும வுயிராய்நிற்ப துயிரெனின்?— தூலகாரணமதாகும்-அது தூலவுருவைத் தோற்றுவிக்கும்,— அசேதன மனாதி தன்மாத்திரை யாக்கியவடிவு- சடமாகிய மனாதி தன்மாத்திரையா னாக்கப்பட்ட புரியட்டக வுடம்பேயாகலான்,—பின்னிச்கிய சூக்குமத்தே நிற்பதோ ருருவுண்டென்னில்-பின்னிக்கப்பட்ட புரியட்டசதேகத்து ளதிசூக்கும வுருவாய்நிற்ப துயிரெனின்?—ஆக்கிடுமுருவமெல்லாம்-அஃதாக்கப்பட்டகலையாதி மண்ணந்தமாயுள்ள பரவுடம்பாகலானும வ்வுருவங்களனைத்தும்,— அசித்துமா யநித்தமாமே- அசித்தாதலு மசத்தாதலு மொருதலையாகலானு மவ்வியல்பில்லாத வுயிருருவப்பொருளாமாறு யாண்டையதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மீளவும் ரூபாரூப மென்பானைமறுத் தணர்த்துகின்றார்.

அருவுரு வென்னிலான்மா வருவுரு வாவதின்று,
முருவுரு வாகாதாகுமொருபொருட் கிரண்டுதன்மை

வருவது மில்லைகாட்ட வன்னிபோன் மருவுமென்னி, னுருவமுங் காணவேண்டு முண்மையு மழிந்து போமே. (கக)

(இ-ள்.) அருவுருவென்னிலான்மா — ஆன்மாவருவமாயு முருவமாயு மிருக்குங் காணு மென்றுசொல்லில்?

அருவுரு வாவதின்றும் — அரூபத்தி லுரூபமானதுண்டாகாது.

உருவரு வாகாதாகும் — உருவத்திலே யருவமுண்டாக மாட்டாது?

ஒருபொருட்கிரண்டு தன்மைவருவது மில்லை — பசுபதார்த்த மொன்றாயிருக்க விந்தவான்மாவுக் கிரண்டுதன்மை யுண்டாகாது.

காட்டவன்னி போன்மருவுமென்னின்? — உருவாகிய மரத்திலே யருவமான வன்னியான துண்டானாற்போல, உருவமான சரீரத்தி விடத்திலே யருவமாகிய வான்மாத் தோன்றுமென்று நீ சொல்லில்?

உருவமுங் காணவேண்டு முண்மையு மழிந்துபோமே. — விறகிற்றீயானது பிரேரித்தவிடத்திற் கண்ணிற் கண்டாற்போல வான்மாவையுந் தேகத்திற் கண்ணாற் காணவேணும். காணப்படு மென்பையாகிற் சத்தியமாயுள்ள பதார்த்தங் காணப்பட்டழிந்துபோம்.எ-று (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு

மேலிரண்டு விருத்தத்தினாலே ஆன்மாவே அரூபமாயிருந்து ஸ்தூல ரூபமாகப் பரிணமித்து மீளவும் ரூபமாக உபசங்கார

த்தை யடையுமாதலால் ஆன்மா ரூபாரூபமென்னும் கௌளிக
னை நிராகரித்தல்.

அருவுருவென்னிலான்மா-ரூபாரூப மான்மாவென்னில்?—
அருவுருவாவதின்று முருவருவாகாதாகு மொருபொருட் கிரண்
டுதன்மை வருவதுமில்லை - அரூபமான வஸ்து வொருக்காலும்
ரூபமாகாது, ரூபமானது அரூபமாகாது, அஃதென்போலவென்
னில்? ஆகாசம் ரூபமும் பிருதிவு அரூபமு மாகாததுபோல ரூபா
ரூப மிச்சிரமா யிருக்குமென்னில்? விருத்த தரும த்வயாச்ரய
மாக வொருவஸ்துவு மில்லை.—காட்ட வன்னிபோன் மருவுமெ
ன்னி லுருவமுங் காணவேணு முண்மையு மொழிந்துபோமே -
அப்படியேன் சொல்லுகிறீர், காணப்பட்ட காஷ்டத்திலே கா
ணப்படாமல் அக்னி நின்றதுபோல ஆன்மாவும் ரூபாரூபமாய்
நிற்குமென்னில்? காஷ்டமே அக்னியல்ல, அக்னியே காஷ்டம
ல்ல. அதன்றியும் அக்னியும் ரூபவத் திரவ்யமே! காஷ்டத்திலே த
ன்னுடைய அபிவியத்தியானதே யுள்ளுவது; இது உபமாபாசம்.
இதன்றியும் காஷ்டத்தினுடைய ரூபத்தைக்காணப்பட்டதுபோ
ல ஆன்மாவினுடைய ரூபத்தையும் காணவேணும், காணில் ஆன்
மா நித்தியமென்கிற தல்லாமல் அழிந்துபோய்விடுமென்றிதன்
பொருள்.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

—o—

உயிரருவுருவென்று கௌளகன்சொல்ல மறுத் துணர்த்து
கின்றார்.

அருவுருவென்னிலான்மா- உயிரருவமாயு முருவமாயு மிரு
க்குமென்று நீசொல்லில்?— அருவுருவாவதின்றும்- நிஷ்களமா

ருக்கின்ற பொருள்தானே தற்காலத்துச் சொருபத்திலேலே
களமாகாது. அப்படி,— உருவருவாகாதாகும் - சகள நிஷ்க
மாகாது,விருத்ததன்மமாகையால்,—ஒருபொருட் கிரண்டு த
மை வருவது மில்லை- எக்காலத்து மொருபொருட்கு விருத்
தன்மங்கள் இரண்டுண்டாகா.—அப்படியாகிற் சிவனுக்குச் ச
ள நிஷ்களத்துவ மெப்படிச் சொல்லப்படும்? உள்ளது, நிஷ்
ளத்தைக் குறித்துச் சகளமென்றும் சகளத்தைக்குறித்து நிஷ்
ளமென்றும உத்தியுத்தசிவத்தி லுரைக்கப்பட்டது, உதாசீன
த்த சிவத்தில் இருக்கும்நிஷ்களத்துவமும் பிரவிர்த்தசிவத்தி
இருக்கும் சகளத்துவமும் தற்காலத்திருக்குமென்று பொரு
ன்று. பிரவிர்த்த சிவத்திலும் அட்டத்திரிம்சத் சத்திசலாசா
த்திய மாத்திரத்தைக்குறித்துப் பரமார்த்தமா யிருக்கும் நிஷ்
ளத்துவம்,—காட்டவன்னிபோன் மருவு மென்னில்-காட்டமு
வன்னியும் ஏகபதார்த்தமன்று,அப்படி அங்கீசரித்தாலும்,—
ருவமுங்காணவேண்டு முண்மையு மழிந்துபோமே-காட்டப்ப
நப்புக் கண்ணாற் காணப்படுவதுபோல் உயிரினது உருவப் ப
நப்புத் திருட்டிக்குத் தரிசனப்படவேண்டும், அநித்தியமாயும்
டும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனிக் கவுளர் அருவுருவப்பொரு ளாயிறென்பர். ஒன்று
றிதொன் றாகாமையானும், மறுதலைப்பட்ட இரண்டு தன்மை
ஒருபொருட் கின்மையானும், காட்டமும் வன்னியுந் தம்முள்
வேறுதலின் ஈண்டைக்கு எடுத்துக்காட்டாதல் செல்லாமை
யானும், அது பொருந்தா தென்பதாம்.

நிரம்பவழகியருணை வருமாறு.

---o---

மேலான்மா அருவுருவாயிருக்குமென்றவனை நோக்கி அப்படி யிராதென் றருளிச்செய்கிறார்.

அருவுரு வென்னிலான்மா வருவுரு வாவதின்றும்-ஆன்மா வருவமுமா யுருவமுமா யிருக்குமென்று சொல்லில்? அருவாயிருப்பது உருவமாகாது,—உருவருவாகாதாரும்-உருவமாயிருக்கிறது பின்னை யருவமுமாகமாட்டாது. அதுவன்றியும்,— ஒருபொருட் கிரண்டுதன்மை வருவதுமில்லை - ஒருபொருளாயிருக்கத்தக்க வான்மாவுக்கு இரண்டுதன்மை யுண்டாகமாட்டாது. அப்படியேன் சொல்லுகிறீர். ஒருபொருளுக் கிரண்டுதன்மையுண்டாம். அதெப்படி யென்னில்?—காட்ட வன்னிபோல் மருவுமென்னில் - விறகி லக்னிபோலப் பொருந்துமென்று நீ சொல்லில்,— உருவமுங்காணவேணு முண்மையுமொழிந்துபோமே - ஆன்மாவுக் கொருவடிவு முண்டாய்க் காணப்படவேணு மாகையால், காணப்பட்டவை யெல்லா மழிகிற முறைமைபோல இவனுடைய வுண்மைக்கும் அழிவுண்டாகா நிற்கும்.

இதனாற் சொல்லியது, ஆன்மா வருவமுமா யுருவமுமா யிராதென்றும், ஒருபொருளுக் கிரண்டுதன்மை யுண்டாகாதென்றும், காஷ்டத்தி லக்னிபோல வென்னில்? ஆன்மாவுங் காணப்பட்ட வடிவுகள்போல வழிந்துபோமாகையால் இப்படிச் சொல்லப்பட்டது ஆன்மாவினுண்மை யல்லவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

அருவுருவான்மா வென்னில்-இனிக் கௌளரருவுருவப்பொ
ன் உயிர் என்பரொனின்?—அருவுரு வாவதின்றும் உருவருவா
தாகும் - அருவுருவு முருவருவுமாக வொன்று பிறிதொன் ருகா
மையானும் இரண்டு தன்மை யொருபொருட்கு வருவதுமில்
,—மறுதலைப்பட்ட விரண்டு தன்மை யொருபொருட் குண்
ாதலின்மையானும்,—காட்டவன்னிபோன் மருவுமென்னின்-
ட்டமும் வன்னியும்போ லருவுருவப் பொருளென்னின் ?—உ
வமும் காணவேண்டு முண்மையு மொழிந்துபோமே- அவ்விர
டுங் தம்முள்வேறுதலி னிண்டைக் கெடுத்துக் காட்டாதல்
சல்லாமையானு மது பொருந்தா தென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

' மீளவு மவ னருவுருவென்று சொல்ல
மறுத் துணர்த்துகிறார்.

சந்திரன் வடிவுபோலத் தானருவுருவமென்னி
ர், வந்துநங் கண்ணிற்றோன்றும் வடிவுள தாமுயிர்க்
, மிந்தவு னுருவந்தானு மெழுவது முயிரேயென்னி
, பந்தமா யசித்தாயான்மாப் பௌதிக மாகுமன்
றே. (கஉ)

இ-ள்.) சந்திர எப்படிச் சந்திரனுடைய வடிவமான த
ன் வடிவு ருவமு முருவமுமாய்த்து, அதுபோல வந்த
போலத்தா வானமா வருவமாயு முருவமாயு மிருப்பனெ
ருவுருவமெ ன்னில்?
ன்னில்

வந்துநங்கண் ணிற்றோன்றும் வடிவுளதாமுயி ர்க்கு — அந்தச்சந்திரனைக் கண்டாற்போல வி
பொழுதெல்லாரும் பிரத்தியட்சமாகக் க
ணத்தக்க வடிவுண்டாகவேணும்.

இந்த வூனுருவந்தானு ரெழுவது முயிரேயென் னில் — அஃதன்றி யிந்தத் தூலதேகமா யெழப்
ட்ட சரீரந்தன்னையு முயிரென்று நீ சொ
லில்?

பந்தமா யசித் தாயான்மாப் பௌதிக மாகும ன்றே. — இப்படியான்மாவைச் சொல்லிற் கலாதி
களாற் பெத்தனுமாய்ச் சடமுமாய்ப் பூதப
ணுமமுமாய் விடுங்காண், ஆதலாற் கூடாது
எ-று.

சந்திர னுருவமென்பது பூரணை, அருவமென்பது அமாவா
சையி லொருகலையின்கண் மற்றக் கலைகள் சூக்குமித் தடங்கி
ற்பதனையெனவறிக. (௬௨

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சந்திரன்வடிவுபோலத் தானருவுருவமென்னில் வந்துநங்
கண்ணிற்றோன்றும் வடிவுளதாமுயிர்க்கு - சந்திரன் அமாவா
சைநாள் காணப்படாமலிருந்து மேல் தினமொருகலையாய் *வ
த்தித்து பூரணசந்திரனானதுபோல † த்ரிஸ்யா திரிஸ்யமென்
னில்? ஆன்மாவுக்கு நம்முடைய கண்ணிலே காண்பதா யொரு
ரூப முண்டாகவேணும், அப்படிக் காணப்படா தாகையால் ரூ
பா ரூபமென்பது கூடாது.—இந்தவூனுருவந்தானு ரெழுவதுயி
ரோயென்னிற் பந்தமா யசித்தா யான்மாப் பவுதிகமாகுமன்
றே-ஆன்மாவின் ரூபமெனக் காணப்படாது, மாதாவி ‡ னுக

திலே அரூபமாகப் பதிந்து தினந்தோறும் விருத்தியை யடை
து ரூபமாய்ப் பிறந்து இந்த மாம்சாதி மயமாய் விருத்தியா
க் காணப்பட்ட ரூபம் ஆன்மாவென்னில்? இந்த ஸ்தூலதேக
ானது பூதகாரியமுமாய் ஜடமுமாய் ஆன்மாவைப் பந்திக்கி
துமா மொழிந்து ஆன்மாவல்ல. இந்தத் தேகான்மவாதம் பூர்
மே நன்முக நிராகரிக்கப்பட்டது. ஆகையால் ரூபாரூபமென்
ம் ¶ வ்ருத்த தரும § த்வயாஸ்ரயத்வம் + அநைகாந்திக
தாஷமென் றிதன்பொருள்.

* வர்த்தித்தல் - வளருதல், † த்ருஸ்யம் - காணத்தக்க
, ‡ உதரம் - வயிறு. ¶ வ்ருத்த - வேறுபட்ட, § த்வயா
ரயம் -இரண்டுக்கிடம். + அநைகாந்திகம் - ஓர்நியமமில்லா
து.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

வேறுதாரண மெடுத்துரைக்க மறுத் துணர்த்துகின்றார்.

சந்திரன் வடிவம்போலத் தானருவுருவ மென்னில்- அமா
ாசை பூர்ணைகளிலே சந்திரன்வடிவு போல உயிர் அருவுருவ
மென்று நீசொல்லில்? பூர்ணைகளிலே சந்திரனுக்குப் போல,—
ந்து நங்கண்ணிற் றேன்றும் வடிவுளதா முயிர்க்கும் இந்த ஆ
ருவங்காறு மெழுவது முயிரே யென்னில்- இப்போது காண
படுஞ் சடகாரியமாய்ப் பரிணமிப்பது அருவாகிய ஆன்மாவா
லால் உயிர் அருவுருவென்று நீ சொல்லில்?—பந்தமா யசித்
ா யான்மாப் பவுதிக மாகுமன்றே- கட்டப்பட்ட உயிர் கட்
ாய்ச் சடமாய்ப் பூதோற்பத்திமத்தாமே.

சிவஞானயோகிபருரை வருமாறு.

——o——

தலையுவாவின் அருவாய்நின்றேபின் முறைமுறையான்வளர்ந்து பூரணையிற் றாலவுருவாய் விளங்குதன் மதியின்கட் கண்டாமன்றே! அதுபோல உயிரும் அருவாய்நின்றே கருவுட்பதிந்து முறைமுறையான் வளர்ந்து இவ்வுடம்புருவாய்த் தோன்றுமாற்றான் அருவுருவெனவமையுமெனின்? சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்குவதாகியவுயிர், அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய உடம் புருவமாமாறு யாண்டையதென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

மேல் சந்திரனுடைய வடிவுபோல அருவமுமா யுருவமுமாயிருக்கு மான்மாவென்றுசொல்ல, அதுவுமல்லவென்று மறுத் தருளிச்செய்கிறார்.

சந்திரன் வடிவுபோலத் தானருவுருவு மென்னில்- சந்திரன் தேய்பிறையானபோது அருவமுமாய்ப் பூரணச் சந்திரனானபோது உருவமுமா யிருந்ததன்மைபோல, ஆன்மாவு மருவமுமா யுருவமுமாயிருக்குமென்று நீ சொல்லில்?—வந்துநங் கண்ணிற்றோன்றும் வடிவுளதாமுயிர்க்கு- எல்லாருடைய நயனத்துக்கும் விடயமான தொருவடிவு ஆன்மாவுக் குண்டாகவேணும்.—இந்த வூனுருவந் தானுயெழுவது முயிரோ வென்னில் - இந்த மாங்கிச பிண்டந் தானாய் வளருகிறதும் இந்தான்மாவேயென்று நீ சொல்லில்,—பந்தமா யசித்தா யான்மாப் பவுதிகமாகுமன்றே - ஆன்மா வொரு வடிவுபோலக் கட்டுப்படுவது

மாய்ச் சேதனமுமாய்ப் பவுதிகமாகிய பூதகாரியமு மாகா நிற்கும்.

இதனாற் சொல்லியது, ஆன்மா சந்திரனுடையவடிவுபோல அருவுருவல்லவென்றும் கண்ணுக்குக் காணப்பட்டிராதென்றும் சரீரமாக வளராதென்றும் அப்படிவளரி லசேதனமாயழிந்துபோமென்றும், இப்படி சொல்லப்பட்டவையல்ல ஆன்மாவி னுண்மையென்னு முறைமை யறிவித்தது.

'உருவுயிர்' 'சூக்கவுரு' 'அருவுரு' 'சந்திரன்' ஆக நாலு திருவிருத்தமும் பாஞ்சராத்திரி. இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் அவன் மதம். எ-செ. மாயையாயுயிராய்மாயா காரியமாகிமன்னி, மாயையாற் பந்தஞ்செய்து வாங்கிடு மவனாலன்றி,மாயை போகாதென்றெண்ணி மாயனைவணங்கப்பின்னை, மாயைபோம் போனால்மாயன் வைகுண்டம் வைப்பனன்றே" என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

தானரு வுருவமென்னின் வந்துநங் கண்ணிற்றோன்றும் வடிவுளதாம் சந்திரன்வடிவுபோல - தலை யுவாவினருவாய் நின்றே பின் முறைமுறையான் வளர்ந்து பூரணையிற் றூலவுருவாய் விளங்குதன் மதியின்கட் கண்டாமன்றே,அதுபோல,—உயிர்க்கு மிந்த வூனுருவந் தானேயெழுவது முயிரோ யென்னில் - உயிருமருவாய்நின்றே கருவுட்பட்டுப் பதிந்து முறைமுறையான் வளர்ந்து இவ்வுடம்புருவாய்த் தோன்றுமாற்று னருவுருவென அமையுமெனில்?—ஆன்மா அசித்தாய்ப் பவுதிகமாய்ப் பந்தமாகுமன்றே - சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்கு

வதாகிய வுயிர் அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய வுடம் புருவமாமாறு யாண்டைய தென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை

ஒரு விகாரமுமன்றி யருவமேயா யிருப்பதோ
ரான்மாவென்று பரிணாமவாதி சொல்ல
மறுத்துணர்த்துகின்றார்.

அருவவி காரியான்மா வாகாயம் போலவென்னி, னுருவினைக் கட்டியாட்டி யோட்டிமீட் டுலாவப்பண்ணி, மருவிநிற் பித்திருத்திக் கிடத்திமண் புரட்டிமற்றும், பெருவிகா ரங்களெல்லாந் தருவதென் பேசிடாயே. (கரு)

(இ-ள்.) அருவவி காரி யான் மாவாகாயம்போல வென்னில் — ஆகாசம்போல வான்மா வரூபியுமாய் விகாரியுமாயிருப்பனென்று நீசொல்லில்?

உருவினைக் கட்டியாட்டி யோட்டிமீட் டுலாவப்பண்ணி மருவிநிற்பித் திருத்திக் கிடத்திமண்புரட்டி மற்றும் பெரு விகாரங்களெல்லாந் தருவதென் பேசிடாயே — இந்தச்சரீரத்திலே பந்தப்பட்டுக் கொண்டாட்டியு மீளவுமோட்டியு மிதுமுதலிய பெரியவிகாரங்களையெல்லா முண்டாக்குவானேன்? ஆதலால் அருவல்லவென்று சொல்லாய், பேதாய்! எ-று.

உருவென்பது முதலிலத் தீபகம். (கக

சிவாக்ரயோகியருரை வருமாறு

———o———

மேல்மேசுவர் சாங்கியர் ஆன்மா ஆகாசம்போல அருபியாகையால் × அக்ரியனுமா யொன்றோடும் பற்றற்று நிற்பனென்பதை மறுத்தல்.

× அக்ரியன் - தொழிலற்றவன்.

அருவவிகாரி யான்மா வாகாசம்போல வென்னில் - ஆன்மா அவிகாரி * "பவிதுர்மஹதி † அருபத்வாத் ஆகாசவத்" என்னில்? இந்த அநுமானத்துக்கு விகாரித்வம் பிரத்யட்சமாகையால் ‡ காலாத் யாபதிஷ்டஹ. அதென்போல வென்னில்?— உருவினைக் கட்டியாட்டி யோட்டி மீண்டுலாவப்பண்ணி மருவி நிற்பித் திருத்திக் கிடத்தி மண்புரட்டி மற்றும் பெருவிகாரங்களெல்லாந் தருவதென் பேசிடாயே. - தேகத்தை வேறறப்பொருந்திக்கொண்டு அநேகம் அபிநயங்களைப் பண்ணுவித்துப் போக்குவரவு சஞ்சாரம் நித்தலிருத்தல் கிடத்தல் புறளல் இதுமுதலான வசநாதிக் கிரியைகளையெல்லா மிகவுஞ் செய்விக்கிறவன் விகாரவான். அல்லாவிட்டால் எவ்வாறுண்டாஞ் சொல்வாயாக. இதன்றியும் ஆகாசவத் என்கிற திட்டாந்தமும் § விஷமம். அதெவ்வாறென்னில்?ஆகாசஞ் ஜடமாகையால் அவிகாரத்வம் கூடும். ஆன்மா ஞானக்கிரியா ரூபியாகையா லது கூடாது. ஆகையா லான்மா அருபியாகியும் விகாரவானென் றிதன் பொருள்.

இந்த விருத்தத்தில் விகாரமென்றது கிரியையென வறிக

* பவிதுர்மஹதி - இருக்கக்கூடும். † அருபத்வாத்-ரூபமில்லாதபடியாலே. ‡ காலாத்யாபா திஷ்டன்-ஒரு ஏது வாபாசம், அதாவது வேறு பிரமாணத்தினுலே பாதிக்கப்பட்ட சாத்யமுள்ள ஏது. § விஷமம்-சரியல்லாதது.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

சேசுவர சாங்கியன் மதம் பாஷித்துப் பராகரிக்கின்றார்.

அருவவிகாரி யான்மா வாகாயம் போலவென்னில் - ஆகாயம்போ லுயி ருருவிலி திருவிலியென்று நீ சொல்லில்?

சரீரத்தின்கண் பெருவிகாரமென்றுகூட்டுக.

மற்றவை வெளிப்பொருள்.

இதனது தாற்பரியம். சிற்சத்தியினனுசங்கற்ப ரூபமாய்த் திரிவற்ற அசைவற்ற விகாரத்தினாலே திரிவுற்ற வசைவுற்ற கட்டுத லாடுதல் ஓடுதன் முதலிய விவகாரங்களைச் சரீரத்திற் பண்ணுமென்பதே.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

இனிப் பாதஞ்சலர் ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிரென்பர். அதுபொருந்தாமை காட்சியளவையான் உடம்பின்கணிகழு நிகழ்ச்சிபற்றி யறியப்படுமென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

அருவமா யொருவிகாரமுமற் றிருப்பது ஆன்மாவென்று பரிணாமவாதி சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிறார்.

அருவவிகாரியான்மா வாகாயம் போலவென்னில் - ஆகாயம்போல ஆன்மா அரூபியுமாய் அவிகாரியுமா யிருப்பனென்று நீ சொல்லில்,—உருவினைக் கட்டியாட்டி யோட்டிமீட் டுலாவப்பண்ணி மருவி நிற்பித்திருத்திக் கிடத்திமண் புரட்டிமற்றும் பெருவிகாரங்களெல்லாந் தருவதென் பேசிடாயே - ஒருதேசத்

தை யெடுத்துக்கொண்டு நடிப்பித்தும் ஓடவும் மீளவும் உலாவ
வும் பண்ணிவித்துப் பொருந்த நிற்பித்து மிருப்பித்துங் கிடப்பி
த்து மண்ணிலும் புரட்டுவித்து முன்சொன்னவை யொழிந்து
மற்றும் வேறு விகாரங்களை யெல்லா முண்டாக்குவா னெனச்
சொல்லாய், ஆகையால் அவிகாரியல்ல.

இதனாற் சொல்லியது ஆன்மா அவிகாரியென்று சொல்ல
ஒரு தேகத்தை யெடுத்துக்கொண்டுப் பல தொழில்களையுஞ் செ
ய்கையால் அவிகாரி யல்லவென்னு முறைமைய றிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆகாயம்போல அருவவிகாரி யான்மாவென்னின்- இனி
ப்பாதஞ்சலர் ஆகாயம்போ லருவா ய விகாரியாய் நிற்ப துயிரெ
ன்பரெனின்? அதுபொருந்தாது,— உருவினைக்கட்டியாட்டி-த
னுவைப்பொருத்தி யதன்கண்ணே நடித்து,— ஓட்டிமீட்டுலா
வப்பண்ணி - போக்குவரவுசெய்து,— மருவிநிற்பித்திருத்திக்
கிடத்தி மண்புரட்டி மற்றும் - பொருந்தி நிற்ற லிருத்தல் கிட
த்தல் மண்ணிற்புரளுதல்முதலிய மற்றுள்ளனவு மாகிய,—பெ
ருவிகாரங்க ளெல்லாம் தருவதென்பேசிடாயே-இப்பெரிய வி
காரங்களெல்லாம் தருவதென்னை சொல்லுக

மறைஞானதேசிகர் உரை.

மீளவு மவனான்மாவுக் கறிவில்லை யசேதனமே
ன்று சொல்ல,மறுத் துணர்த்துகின் றது.

அசித்தெனி னுணராதான்மா வசித்துச்சித் தா
குமென்னி, லசித்துச்சித் தாகாதாகுஞ் சித்தசித் தா

வதில்லை, யசித்தொரு புறமாயொன்றிச் சித்தொரு புறமாய்நில்லா, தசித்துஞ் சித்தேயென்னி லசித்த டைந் தறிவதின்ரும். (கச)

(இ-ள்,) அசித் தெனினுணராதான்மா	ஆன்மா வசித்தென்று நீசொல்லில்? ஒன்றையு மறியமாட்டாது.
அசித்துச் சித்தாகு மென்னில்	அந்தவசேதனந் தானே யோரவதரத்திலே சேதனமாயிருக்கு மென்னில்?
அசித்துச் சித்தாகா தாகும்	அசேதனமாகிய கடபடாதிகள் சேதனமாகாமையி னுக்கக் காரியப் படமாட்டாது.
சித்தசித்தாவதில்லை	சேதனமாகிய வான்மா வசேதனமாகாதுகாண்.
அசித் தொரு புறமாய் யொன்றிச் சித்தொரு புறமாய் நில்லாது	பிறிக்கப்படாத வொரு பொருளானே யொருபுறம் சித்தாயு மற்றொருபுறஞ் சேதனமாயு நில்லாதுகாண்.
அசித்துச் சித்தேயென்னில்	அசேதனமென்கிறது கூடாது சேதனமாயே யிருக்குமென்னில்?
அசித் தடைந் தறிவ தின்ரும்.	அசித்தாகிய விந்திரியாதிகளையு மந்தக்கரணங்களையுங்கூடி யான்மா வறியவேண்டாங்காண் எ-று. (கச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் மீமாம்சகன் ஆன்மா அசித்த ஞானாஶ்ரயமா யிருக்கு மென்பவனையும், சைவைகதேசி ஆன்மா சித்தோடே கூடின

பொழுது சித்தும் அசித்தோடே கூடினபொழுது அசித்து மா தலால் சிதசித்தென்று சொல்லு மவனையும், சுத்தசித்தென்று சொல்லும் சத்யத்துவைத வாதியையும் நிராகரித்தல்.

அசித்தெனி னுணராதான்மா - ஆன்மா சித்துருப னல்ல * சிதாஶ்ரயனென்னில்? ஒன்றையு மறியமாட்டான் † கட்டுட்டியங்களைப்போல் ஜடமாம்.—அசித்துச் சித்தாகு மென்னில் - ஆன்மா வாணவத்தைப் பிறிவற நின்றபொழுது அசித்து, ஈஸ்வர சிற்சத்தி ‡ யோகமானபொழுது சித்துமா யிருக்குமென்னில்?—அசித்துச்சித் தாகாதாகுஞ் சித்தசித்தாவதில்லை யசித் தொருபுறமாயொன்றிச் சித்தொருபுறமாய்நில்லா - ஜடமானது ஒருக்காலும் ஞானஸ்வருப மாகாது, ஞானஸ்வருபமானது ஒருக்காலும் ஜடமாகாது, ஆகையா லர்த்தநா ரீஸ்வரன் போல சிதசித்துருப மென்னில்? § அமூர்தத் திரவியமுமாய் விபுவுமாகையால் ஆன்மா சித்தொருபுறமும் அசித்தொருபுறமு மாகாது.—அசித்துரு சித்தேயென்னி லசித்தடைந் திடுவதின்றாம்.- ஆன்மா அஞ்ஞானத்தைப் பொருந்தாத சுத்த சைதந்யமே யென்னில்? அசித்தாகிய கலாதிகளைப் பொருந்தி யறியாமற் றானே யறியவேண்டுமென் றிதன்பொருள்.

* சிதாஶ்ரயன் - சித்துக்கிடம், † குட்டியம் - சுவர் ‡ யோகம் - கூடுதல், § அமூர்த்த - ருபமில்லாத.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆன்மா அசித்தாய்ச் சித்தாச்சிரயமா யிருப்பனென்னு நையாயிக மீமாம்சமதம் நிதரிசித்து நிராகரிக்கின்றார்.

சித்தெனில்- சிவனைப்போல நிருமலசித்தென்னில்?—அசித்தறிந்தடைவதின்ரும்- புறக்கரண முட்கரணங்களைப் பொருந்தினின் றுணர்வதின்ரும்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

சடப்பொருள் சித்தாதலுஞ் சித்துப்பொருள் சடமாதலும் உலகத்தின்மையால் உயிர் சடமென்றும், அது பின் மனத்தோடுங்கூடிச் சித்தாயறியுமென்றுங் கூறும் வைசேடிகர் முதலியோர் மதமும், மாறுபட்ட விரண்டு தன்மை ஒருங்கு நில்லாமையால் உயிர் சித்தசித்தென்னுஞ் சைவரிலொருசாரார் மதமும், அசித்தாகிய கருவியையின்றிஅறிதல் செல்லாமையால் உயிர் சித்தேயாமென்னும் பட்டாசாரியர் மதமும் அடாவென்பதாம்.

உருதவென்னும் பெயரொச்சத் தீறு விகாரத்தாற் ருெக்கது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

ஆன்மாவுக்கு அறிவில்லை யசேதனமாயிருக்குமென்று மீளவும் பரிணமவாதி சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிருர்.

அசித்தெனி லுணரா தான்மா- ஆன்மாவை யசேதனமென்று நீ சொல்லில்? இந்த ஆன்மா வொன்றையு மறியமாட்டாது,—அசித்துச்சித்தாகுமென்னில் - அசேதனந் தானே யோரவசரத்திலே சேதனத்துடனே கூடிச் சேதன மாமென்று நீ சொல்லில்?—அசித்துச்சித்தாகாதாகும் - அசேதனஞ் சேதன

கமாட்டாது.—சித்தசித்தாவதில்லை - சேதனந்தானொருகா
ந்திலும் அசேதனமுமாகாது, அசித்தொருபுறமுஞ் சித்தொரு
ுமுமாய் நிற்குமென்னில் ?—அசித்தொருபுறமா யொன்றிற்
ந்தொருபுறமாய் நில்லாது - ஒருபொருள் சேதனமொருபுற
ம் அசேதனமொருபுறமுமாய் நில்லாது,அப்படியல்ல,—அசி
தருச் சித்தேயென்னில் -அசேதனமென்கிறது பொருந்தாது,
ேதனமாயே யிருக்குமென்று நீ சொல்லில்?—அசித்தடைந்த
வதின்றும் - அசுத்தமாயையிலுள்ள இந்திரியாதி யந்தக்கர
ங்களைக் கூடி யறியவேண்டாம்.

'அருவவிகாரி' 'அசித்தெனிலுணரா' ஆக இரண்டுதிருவிருத்தி
ம் பரிணாமவாதி இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம்
ிணாமவாதி மறுப்பு. "சித்தான்ற வசித்தைமற்றீனு - வசி
தில்தென்னில் வசித்ததென்னுலகி-னுலகாயதனும் பூதக்கூட்
ஞ் - சலமேற்கொப்புட் டகுமெனச்சாற்றினன் - றீபகருமச்
ளர்சாவகர்பிறர் -ஞேயமில்லென நிகழ்த்தினரிலரோ - காண்
ல்விரோத நிற்பிறர்கதித்தில- ரீண்டுனதுரைக்குமற் றியார்க
ுடலுஞ்-சித்தோசித்தின் சேர்வாற் சித்தெனில்-கடபடாதி
முடற்கட் சிதைவென"என்றும், "அறிவொன்றில்லோர்க் கி
றயருளுதவுதல் - பிறிவறிவறியச் செறியிருளிடத்தோ - ரந்த
ர்காண வந்தோரெம்மை - நீவிருங்காண வேணுமென்றுங் -
கடுத்தொருதீபங் கொடுத்ததையொக்கும்" என்னுமதுங் கண்
கொள்க.

இதனாற் சொல்லியது,ஆன்மாவை யசித்தென்றும், அசித்
மாய்ச் சித்தமாயிருக்குமென்றும், அசித்தொருபுறமுஞ் சித்
தாருபுறமுமா யிருக்குமென்றும், சித்துத் தானாயிருக்குமென்
ய் சொல்ல; இவையெல்லாம் அர்த்தமாகாதென்னு முறைமை
மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அசித்துச் சித்தாகாதாகும் சித்தசித்தாவதில்லை-சடப்பொருள் சித்தாதலும் சித்துப்பொருள் சடமாதலு முலகத் தின்மையால்,— ஆன்மாவுணரா சித்தெனில் சித்துச்சித்தாகுமென்னைன் - உயிரறிவில்லாத சடமென்று மதுபின் மனத்தோடுங் கூடிச் சித்தாயறியுமென்றுங் கூறும்வைசேடிகர் முதலியோர் மதமும்,—அசித்தொருபுறமா யொன்றிச் சித்தொரு புறமாய் நில்லாது-மாறுபட்ட விரண்டுதன்மை யொருங்கு நில்லாமையா லுயிர் சித்தசித்தென்னுஞ் சைவரிலொருசாரார் மதமும்,— அசித்தாருச் சித்தேயென்னி னசித்தடைந் தறிவதின்றாம் - அசித்தாகியகருவியையின்றி யறிதல் செல்லாமையா லுயிர் சித்தே யாமென்னும் பாட்டாசாரியார் மதமு மடாதென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

—o—

ஆசீவகன் இப்படிப் பலவாகச் சொல்லிய வான்ம வணுவும் பூதவணுக்களுு மிவைதம்மிற்கூடிக் காரியப்படுமென்று சொல்ல, அவனை மறுத் துணர்த்துகிருர்.

உயிரினை யணுவதென்னி லுடல்பல துவாரமோடும், பயில்வுறக் கட்டுணாது பாரமும் பரித்துச்செல்லா தயர்வுறு மசித்தாய்ப்பூத வணுக்களி னொன்றதாகும், இயல்வுறு மவயவத்தா லணுவுரு விறக்குமன்றே. (கரு)

(இ-ள்) உயிரினை ஆன்மா வணுவுருவு மாத்திரமா யிருக்கு யணுவதே மென்று நீ சொல்லின்? நவத்துவாரத்தை

ன்னி லுட	யுடைய சரீரமாகையினாலே யவையிற்றாலே
பல துவார மாடும்	புறப்பட்டுப் போகாநிற்கும்,
பயில்வுறக் க டுணாது	சர்வாங்கமு நெருங்கப் பந்திக்கப்படா து,
பாரமும் பரி துச் செல்லா	நன்றாகக் கட்டுப்படாத வோடமான தா ற்றைக் கடப்பிக்க மாட்டாத வாறுபோலப் பாரங்களைச் சுமந்து நடக்கமாட்டாது,
அயர்வுறு மசி தாய்ப் பூதவ டிக்களி னொன் தாகும்	அறியாமையையுடைய வசேதனமுமாய்ப் பிரிதிவி முதலிய நாலுபூதங்களி லொன் றாய்விடும்,
இயல்வுறு மவ வத்தா லணுவு வி றக்கு மன் ற.	அடையவே யவயவத்தாற் காணப்படு மென்றால் அந்த வணுவுருவமு மழிந்துபோ காநிற்குங்காண் எ-று. (கடு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிரண்டு விருத்தத்திலே பாஞ்சராத்திரி ஆன்மா அணு பமாய் சரீலாகதேசத்திலே யிருக்குமென்பதை நிராகரித்தல்.

உயிரினை யணுவதென்னில் - ஆன்மா வணுமாத்திரமென்று வதாதிகளில் சொல்லுகையினாலே அணுபரிமாணமே ஆன்மா வன்னில்? வேதாதி சொன்னது, ஆன்மா அந்தக்கரண *வச் ங்நனாகி இருதயத்திலே நின்று சக்ஷுராதி த்வார விஷயங் ளை க்ரஹிக்கும்பொழுது நெல்லின்வாலி னூற்றி லொருபங்கா ருக்கிற நாடிவழித்தாகச் சொல்லுகையால், அந்த உபாதியினா

லே அந்த அவஸ்தையிலே ஆன்மாவை யணுவென்றதே யொழிய † வாஸ்தவமல்ல. இதன்றியும்,—உடல்பல துவாரமோடும் பயி ல்வுறக்கட்டுணு து பாரமுந்தரித் துச்செல்லாது- தேகத்திலே ந வத்வார முண்டாயிருக்கையா லொருத்தர் தேகத்தை பந்த காதி பாதைகளைப் பண்ணும்பொழுதும் பாரமான சுமைகளை யெடுக்கும்பொழுதும் அந்த த்வாரங்களினாலே புறப்பட்டுப் போகலாய் விடும். இதன்றியும்,—அயர்வுறு மசித்தாய்ப் பூதவ ணுக்களினொன்றதாகும்-நாசத்தை யடையுஞ் ஜடமுமாய்ப் பி ருதிவ்யாதி பூதாணுக்களோடே ஆன்மாவும் ஒரு அணுவென்று சொல்லும் பௌத்தனாய் விடுவாய்.—இயல்புறு மவயவத்தா லணுவுரு விறக்குமன்றே - அணுரூபம் அவயவத்தாகிய வியல்பைய டைத்தாகையால் சாவயவமெல்லாம் நாசத்தை யடையுமென் றிதன்பொருள்.

* அவச்சின்னம் - கூடினது. † வாஸ்தவம் - உண்மை.
× சாவயவம். அவயவத்தோடேகூடியது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

உயி ரணுரூப மென்னும் பாஞ்சராத்திரமதம் பாஷித்துத் தூஷிக்கின்றார்.

உயிரினை யணுவதென்னி னுடல்பல துவாரமோடும்- ஆன் மா அணுரூபியென்று நீ சொல்லில்? சரீரங்களில் நவத்துவார ங்கள் ஒன்றில்நின்றும் புறம்பே புறப்பட்டுப் போம்,— பயில் வுறக் கட்டுணாது-கிலேசசம்சாரம் பண்ணத் தங்கி நில்லாது,— பாரமும் பரித்துச் செல்லாது- சரீரத்திற் சர்வாங்கமும் கலந் து நிற்றல் கூடாமையாற் சுமை தரித்துச் சரியாது,— அயர்

றுமசித்தாய்-அஞ்ஞானம் பொருந்திய சடமாய்,— பூதவணு
களினென்றதாகும் - பிருதிவிபரமாணு அப்புப்பரமாணு அக்
கினிபரமாணு வாயு பரமாணுக்களிலே யாதாமொன்றும்,—
ணுவுரு-அந்த அணுரூபிவத்து,— இயல்புறு மவயவத்தால்-மூ
த்தத் தன்மையாலெனும் ஏதுவாற் சித்தித் தியற்கை பொரு
திய சாம்சத் தன்மையாற் காண்பிக்கப்பட்ட காரியத்தன்மை
ால்,—இறக்கு மன்றே - கெட்டுப்போந்தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி உடம்பகத்துப் பரமாணுவளவிற்றாய் நிற்பது உயி
ரன்னும் பாஞ்சராத்திரிகண் மதமுமடாது. என்னை? அணு
ாயின் ஒருதுவாரத்தா லோடிப்போவதன்றி, உடம்பிற் க
-டுண்டற்கும் பாரந்தாங்சற்கு முடம்படா தென்பதுமுதலிய
ற்றக் தங்குமாகலா னென்பதாம்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் ஆசீவகன், இப்படிச் சொல்லப்பட்டு வருகிற வான்
வணுவும் பூதவணுக்கள் நாலும் இவை தன்னிற்கூட்டி காரி
ப்பட்டு வருமென்று சொல்ல ; அவனை மறுத் தருளிச்செய்
ிறார்.

உயிரினை யணுவதென்னி னுடல்பல துவாரமோடும் - ஆன்
ா வணுமாத்திரமா யிருக்குமென்று நீ சொல்லில்? தேகம் பல
துவாரங்களையு முடைத்தா இருக்கையாலே அவையிற்றாலே
புறப்பட்டுப் போகாநிற்கும்.— பயில்வுறக் கட்டுணது - ஒரு

தேகத்திலே செறிவு பொருந்தக் கட்டுப்பட்டு நில்லாது,—பா. முந்தரித்துச் செல்லாது - ஒரு சுமைகளையும் பொறுக்க மாட்டாது,—அயர்வுறுமசித்தாய்ப்பூத வணுக்களிலொன்றதாகும் பிரஞ்ஞையில்லாத வசேதனமுமாய்ப் பூதவணுக்களிலே யொன்றாகா நிற்கும்,—இயல்புறு மவயவத்தா லணுவுருவிறக்குமல்றே - அணுவுக்கு முறைமையான அவையவங்க ளுண்டாயிருக்கையினாலே யந்த வணுவுருவ மழிந்துபோகா நிற்கும்.

ஆன்மாவை அணுவென்று சொன்னவன் ஆசீவகன். இதற்குப் பிரமாணம் பரபக்ஷம். அவன்மதம் உ-செ, "வரம்பிலா வறிவனுதி வைத்த நூற் பொருள்கடானும், நிரம்பவே யணுக்களைந்து நிலம்புனலனல்கால் சீவன், பரந்திவை நின்றபான்மை பாரதகடினஞ்சீதந்,தரும்புனல் சுடுந்தீவாயுச் சலித்திடு முயிர் போதத்தாம்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஆன்மா வணுவல்லவென்றும் அணுவாகுற் சரீரத்திலுண்டான துவாரங்களூடே போய்விடுமென்றும் தேகத்திலே கட்டுப்பட்டு நின்று ஒரு பாரங்களைத் தரியாதென்றும் அசேதனமாயிருக்கிற பூதவணுக்களி லொன்றாய்விடு மென்றும் ஆகையால் ஆன்மா வணுவல்லவென்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயிரினை யணுவதென்னின் - இனி உடம்பகத்துப் பரமாணுவளவிற்றாய் நிற்பதுயிரென்னும் பாஞ்சராத்திரிகண் மதமும் அடாது. என்னை?—உடல் பலதுவாரமோடும்-அணுவாகிற் பலதுவாரத்தி லொரு துவாரத்தாலோடிப் போவதன்றி,— ப

றக்கட்டுணாது-பயிற்சி பொருந்தக் கட்டுப்படற்கும்,— பா
றந்தரித்துச் செல்லாது-பாரந்தாங்கிச் செல்லுதற்கு முடம்ப
து.—அயர்வுறுமசித்தாய் - அழிவெய்துஞ் சடமாதலும்.—
தவணுக்களினொன்றதாகும் - பூதபரமாணுக்களோ டொன்று
லுமாம்,— இயல்புறு மவயவத்தால் -இயல்புபொருந்திய அவ
பகுப்புண்மையான்,—அணுவுருவிறக்குமன்றே-அணுவடிவா
ன் அழிவெய்தலாகிய குற்றந் தங்குமாகலான்.

மறைஞானதேசிகர் உரை.

மீளவு மவனுடலினு ளேகதேச வியாபியென்று
சொல்ல மறுத் துணர்த்துகிறார்.

உடலினி லேகதேசி யுயிரெனி லுருவாய்மாயும்,
டர்வுறு மறிவின்றெங்குஞ் சுடரொளிப் பண்பதென்
றிற், சுடர்தொடிற் சுடுவதெங்குந் தொட்டிடி லறிவு
டாகு, மடர்புல னிடத்துமொக்க வறிவெழ வே
ர்டுமன்றே. (கரு)

(இ-ள்.) உடலினிலேகதேசியுயிரெனி லுருவாய் மாயும்: ஆன்மாச் சரீரத்திலே பொருபிரதேசத்திலே யிருப்பனென்று நீசொல்லில்? உருவமுண்டாய் கடபடாதிகளைப்போ னாசமுண்டாம்.

படர்வுறு மறிவின்றெங்கும்: ஆன்மாவு மொருதானத்திலே யிருந்தானாயி னப்பொழுது எவ்விடத்தும் பரம்பின வறிவில்லையாம்.

சுட ரொளிப் பண்ப தென்னி: விளக் கோரிடத்திலே யிருக்கப் பிரகாசமெங்குமானாற்போல, ஓரிடத்திலே நின்றெவ்விடத்தினு முள்ளகாரியங்களை யான்மா வறிவன்காணு மென்னில்?

சுடர் தொடிற் சுடுவது — விளக்கின்வடிவைத் தொட்டா லொழி து சுடாதாகையால், இவனிருந்த விடத் லவ்விடயத்தைக் கிருகிக்கிறதொழிந்து ம றவிடத்திலுள்ள விடயங்க ளொன்றுந் தெரியாது.

எங்குந்தொட்டிடி லறிவுண்டாகும் — அப்படியன்றி யெங்கு மறியுமென்றவ சாமானியம். எங்கு மறியுமாகில் அக்கினிவ த்தொட்டாற் சுடுமாறுபோலத் தொட் விடங்களெல்லாம் அறியவேணும். அஃதன்

அடர்புலனிடத்து மொக்க வறிவெழ வேண்டுமன்றே. — ஆசை நெருங்கின பஞ்ச விடயங்க னு மொக்க வொருகாலத்திலறியு மறிவு டாகவேண்டும், அஃதுண்டாகக் கண்டே மில்லையே! ஆகையா லதுகூடா தெனவறி -எ-று. (கஎ

சிவாக்ரயோகியருளை வருமாறு.

—o—

மேலிதவுமது.

உடலினி லேகதேசி யுயிரொளி யுருவாய்மாயும்-‡தேகை தேசத்திலே யிருக்கும் ஆன்மாவென்னில்? ரூபமுமாய் நாச தையடையுமென்று நாமுன்சொன்ன தூஷணமே,—படர்வு மறிவின்றெங்கும்-+அப்பஞ்சஞுதியிலே சிரசுக்குச் சுகமு முள்ளுத் தைக்கையிலே பாதத்துக்கு வேதனையுமென்று ஏ காலத்திலே வியாபித் தறியக் கூடாது.—சுடரொளிப் பண் தென்னில்-க்ரஹத்திலே தீப மொருவிடத்திலே யிருக்க வதி டைய பிரகாசம் க்ரஹமெல்லாம் நிறைந்ததுபோல், ஆன்ம தேகைக தேசத்திலேயிருக்க ஆன்மதருமமான ஞானசரீரமெ லாம் வியாபித்தறியு மென்னில்?—சுடர்தொடிற்சுடுவது - ஆ

தீபத்தைத் தொட்டாலேசுடும், அப்படியே ஆன்மாவிலேஸ்
சித்த விஷயத்தை பொழிய நின்றவைகளை யறியாது.
ப்படியேன் —எங்குந் தொட்டிட மறிவுண்டாகும் - ஆன்ம
நுமமாகிய ஞானம் பகுத்துவாரங்களையுடைத்தாகிய குடத்
க்குள் தீபப்பிரகாசமானது த்வாரங்கடோறும் புறப்படு
துபோல், ஆன்மஞானமானது இந்திரிய துவாரங்களினாலே
றப்பட்டு விஷயங்களை யறியுமென்னில்?— அடர்புலனிடத்
மொக்க வறிவெழுவேணுமன்றே -குடத்தில் த்வாரங்களிலே
யல்லா மேககாலத்திலே தீபப்பிரகாசம் புறப்படுமாப்போ
, எல்லா விந்திரியங்களினு மேககாலத்திலே ஞானம் பிர
சித்து எல்லாவிஷயங்களையு மேககாலத்திலே யறியவே
டும். அது கூடாதாகையால் பிரத்தியட்ச விரோதம். இஃது
றியும் ஆன்மா வணுவாய் ஏகதேசத்திலே யிருக்க* தத்க
மமான ஞானம் வியாபிக்கு மென்பது கூடாது, தர்மியைவி
டு தர்மம் வியாபிக்குமென்பது † சர்வசித்தம், தீபமும் தத்
ரகாசமும்போலென்றதற்குப் பிரகாசம் திரவியாந்தரமாகை
யால் அணுபரிமாணவாதம் நிரஸ்தமேஎன் றிதன்பொருள்.

‡ தேகைகதேசம், தேகஏகதேசம் - தேகத்திலோரிடத்
ல். + அப்யஞ்சனம் - எண்ணெயிட்டுக் கொள்ளுதல். * த
தருமம்-அதன் தருமம், † சர்வசித்தம் - எல்லாராலும் தள்
ப்பட்டது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பின்னுமவன் கருத்துரைத்து நிராகரிக்கின்றார்.
வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இனி மிருதிநூலார் உயிராவது உடம்பகத்துப் புன்னுனித் துளிபோல் ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப, அவ்வுயிரினறிவு விளக்கொளிபோல யாங்கணும் வியாபிக்குமென்பதும் அடாது. என்னை? உயிரேகதேசமாயின் மேல் உருவுயிரென்றார்க்கு ஓதிய குற்றமனைத்தும் எய்துமாகலானும், குணங் குணியவிவினன்றி மேற்செல்லாமையானும், விளக்கினொளியாவது விளக்கினது சூக்குமவடிவேயன்றிக் குணமன்றாகலான் அஃது ஈண்டைக்குவமை யாகாமையானும், ஆமெனவே கொள்ளினும் அதனோடு தனிடை வேற்றுமை பெரிதாகலானு மென்பதாம்.

உயிரினை யணுவென்பார்க்கு மிஃதொக்கும்.

———

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

பஞ்சராத்திரி ஆன்மா சரீரத்திலே ஒருதானத்திலே நிற்பனென்று சொல்ல அவனைமறுத் தருளிச்செய்கிறார்.

உடலினி லேகதேசி யுயிரொனி லுருவாய்மாயும்-தேகத்திலே யோரிடத்திலே ஆன்மா யிருப்பானே னென்னில்? உருவமுமா யழிவுமுண்டாம். அதுவன்றியும்,—படர்வுறு மறிவின்றெங்கும்-ஒருதானத்திலே யிருந்து மற்றுள்ள விடங்களில் விடயங்களையு மறியமாட்டாது.—சுடரொளிப் பண்பதென்னில் - விளக்கு ஓரிடத்திலே யிருக்கப் பிரகாச மெங்குமானாப்போல ஓரிடத்திலே நின்று மற்றுள்ள விடங்களில் காரியங்களை யறியவனென்று நீ சொல்லில்?—சுடர்தொடிர்சுடுவது - விளக்கைத் தெ

ட்டாலொழிந்து சுடாது. ஆகையாலே இவனிருந்த விடத்தின் விஷயமொழிந்து மற்றுள்ள தானங்களின் விஷயமொன்றுந் தெரியாது. —எங்குந்தொட்டிட மறிவுண்டாகும் - அப்படிய ன்றியே தொட்ட விடமெல்லா மிவனுக் கறிவுண்டாகா நிற்கு ம். அதுவன்றியும்,—அடர்புலனிடத்து மொக்க வறிவெழவேண் டு மன்றே- நெருங்கின பஞ்ச விஷயங்களினு மொக்க வறிவுண் டாக வேண்டும்.

இதனாற் சொல்லியது ஆன்மா சரீரத்திலே ஒரு தானத்தி லே யிருப்பனென்னில்? வடிவா யழிந்துபோமென்றும் எவ்வி டத்து மறியமாட்டானென்றும், விளக்குப்போ லோரிடத்தி லே யிருந்து எல்லாத்தையு மறிவனென்னில்? அது திட்டாந்த மல்லவென்று மாகையால்; இங்ஙனஞ் சொல்லப்பட்டவை யர் த்தமாகாதபடியாலே, ஆன்மா வேகதேசி யல்லவென்னு முறை மையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயிர் உடலினின் ஏகதேசியெனின் - இனி மிருதி நூலார் யிராவது உடம்பகத்துப் புன்னுனித்துளிபோ லேகதேசமா ப் இருதயத்தானத்து நிற்ப அவ்வுயிரினறிவு விளக்கொளிபோ ல யாங்கணும் வியாபிக்குமென்பது மடாது. என்னை,—உருவா ம்மாயும்-உயி ரேகதேசமாயின் மே லுருவுயி ரென்முர்க் கோதி ப குற்றமனைத்து மெய்திய வெய்துமாகலானும்,— எங்கும் ப டர்வுறுமறிவின்று - குணங்குணி யளவினன்றி மேற்செல்லா மையான், எவ்விடத்தும் வியாபரித்தல் செல்லாமையானும்,— சுடரொளிப் பண்பதென்னில் - விளக்கினொளியாவது விளக்

கின் சூக்குமவடிவேயன்றிக் குணமன்றாகலான், அஃதின்னடைக் குவமையாகாமையானும், ஆமெனவேகொள்ளினும்,— சுடர்தொடிற்சுடுவது - விளக்கின் சுடர்தொடினன்றிச் சுடாதாகையால், இருந்தவிடத்தறிந்து மற்றுள்ளவிடத்துப்பரிசத்தானு மறியமாட்டாது.— எங்குந்தொட்டிட மறிவுண்டாகும் - எவ்விடத்தும் பரிசித்தாலு மறிதலானும்,— அடர்புலனிடத்து மொக்க வறிவெழ வேண்டுமன்றே - விளக் கோரிடத்திருந்து மற்றுள்ள விடங்களையும் விளக்குதல்போ லுயிரி னறிவு நெருங்கிய வைம்புலனிடத்து மொருங்கே யறிதல்வேண்டும். அவ்வாறின்மையி னதனோ டிதனிடை வேற்றுமை பெரிதாகலானு மென்பது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் சமணரி னிகண்டவாதி யான்மாச் சரீர
மெங்கும் வியாபித்து நின்றறியுமென்ன,
அவனை நோக்கி யுணர்த்துகிறார்.

உருவினி னிறைந்துநின்றங் குணர்த்திடு முயிர
தென்னின், மருவிடா துறக்கம்வாயி லறிவொக்க வெ
ழுங்கவேண்டும், பெருகிடுஞ் சுருங்கும்போதம் பெரு
டற் சிற்றுடற்கண், வருமுடற் குறைக்கவொக்கக் கு
றைந்துபின் மாயுமன்றே. (கஎ)

(இ-ள்.) உருவினி னிறைந்துநின்றங் குணர்த்திடு முயிரதென்னின் ஆன்மாவுடன் முழுது நிறைந்துநின் றறிந்திடுமென்று நீ சொல்லின்?

மருவிடாதற கம் — அப்பொழு தான்மாவுக் கவத்தைகள் வந்து பொருந்தமாட்டா.

வாயிலறி வொக்க வழங்க வேண்டும் — பஞ்சேந்திரியங்களு மொவ்வொன்று யறியாமற் சேர வொருகாலத்திலே தானே கூடச் சீவிக்கவேணும்.

பெருகிடுஞ் சுருங்கும்போதம் பெருடற் சிற்றுடற்கண் — அப்பொழு தறிவானது பெரிய சரீரத்திலே பேறறிவாகவேணும், சிறிய சரீரத்திலே யற்பவறிவாக விப்படிப் பேதித்துக் காணவேணும்.

வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்து பின் மாயுமன்றே. — இப்படிச் சிறுத்தும் பெருத்துமுண்டாய், சரீரத்தைச் சிறுகப் பெருகக் குறைந்தா லான்மாவுஞ் சிறுகப் பெருகக் குறைக்கப்பட்டுப் பின்பந்தவான்மாவு மோரிடத்திலே யவஸ்தை யடைந்து போய்விடுங்காண். எ-று.

போத மென்பது நடுநிலைத் தீபகம். (கஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சரீர பரிமாணம் ஆன்மாவென்னும் ஜைநமத நிராகரணம்.

ஆன்மாவானவன் தேகபரிமாணமாக நிறைந்து நின்று விஷயங்களை யறிவனென்னில்? சுஷுப்தியாதி யவத்தைகள் பொருந்தாதாகவேணும். அந்த அவத்தைகள் ஒன்றினாலே ஞானம் பிரதிபந்தமாக வதனாலுண்டான தென்னில்? ஞானம் பிரதிபந்த மில்லாத சாக்கிராவத்தையிலேதான் பஞ்சேந்திரியங்களும் ஏககாலத்திலே சமமாகவே விஷயங்களை க்ரஹிக்கவேண்டும். இஃதன்றியில் பெரியதேகத்தனுக்குப் பெரியவறிவும்

சிறிய தேகத்துக்குச் சிறியவறிவுமாகவேண்டும். தேகத்திலே யோ ரங்கங்குறையி லறிவுங் குறைந்து, தேகசமானமாக* சங்கோச † விகாசவா னுகையாலே தேகத்துக்கு நாசம் வருகிற பொழுது ஆன்மாவுக்கும் நாசம் வரவேண்டும், ஆகையால் ஜைநாத்மவாதம் நிரஸ்தமன்றென் றிதன்பொருள்.

* சங்கோசம் - சுருங்குதல், † விகாசம்-விரிதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சங்கோச விகாசதன்மி யான்மாவென்னு மருகன்மத மிசைத் தசைக்கின்றார்.

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிரதென்னில் - சரீரத்துள் ளுயிரிருந்து சரீரமெங்கும் பூரித் தறியுமென்று நீ சொல்லில்?— மருவிடாதுறக்கம் - அறிவற் றதீதமாயிருக்கின்ற நித்திரையைப் பொருந்தாது. அதுவன்றியும்,—வாயிலறிவொக்க வழங்கவேண்டும் - பஞ்சேந்திரியங்களுங் கிரமத்தி லுண்டாஞ் சத்தஞானம் பரிசஞானம் உருவஞானம் இரசஞானம் கந்தஞானம் ஐந்தையும், ஒருமிக்க உண்டாக்கவேண்டும். முறுக்குப் பணியாரம் புசிக்கு மிடத்து வேறிடத்துப் பிஞ்சுபிஞ்சு வருமைந்தறிவுகளும் புஞ்சமாய் வருவது கண்டோமென்னில்? அங்கும் முறைமையி லறிகுனே நூறு தாமரை யிதழூசியாற் குத்தினே னென்பது போலப் பகுத்தறித லரிதாதலால் ஒருமிக்கப்போலே தோன்றினது. அதுவன்றியும், —பேருடற் சிற்றுடற்கண் பெருகிடுஞ் சுருங்கும் போதம் -பெரிய காயத்தி லறிவு மலரும், சிறிய காயத்தில் அறிவு குவியும், அப்படி யாகட்டுமென்னில்? சிலவிடத்திற் பேருட லுடையா

க்குச் சிற்றறிவும், சிற்றுடலுடையானுக்குப் பேரறிவு சா
ரப்படுதலால், சங்கோச விகாசஞ் சொல்லும் சமணமதம்
ர மற்றதாதலால், அப்படிச் சாற்றப்படாது. அதுவன்றியு
,—வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்து பின்மாயுமன்
ற - தான்வந்து பொருந்துஞ் சரீரத்தைச் சிறிது சேதிக்க, அ
ந்தச் சரீரத்தோடு தானுஞ் சிறிது குறைந்து, முற்றுஞ் சேதிக்
த் தானும் முற்றுங்குறைந்து நாசமாமே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனிச் சமணர் உடம்பளவினிறைந்து நின்று உணர்வது உ
ரென்பர். அவர் உறக்கமுறுதலும் ஐம்பொறியினும் ஒருங்கே
றிவு நிகழாமையும், அவ் வுடம்பளவிற்குத் தக்க வறிவாத
ன்மையும், குறைப்பக் குறையாமையுமாகிய இன்னோரன்
வற்றை நோக்கிலராகலால்; அவர் மதமும் அடாதென்ப
ரம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேலமணரில் நிகண்டவாதி ஆன்மாச் சரீரமெங்கு நிறை
துநின் றறியுமென்று சொல்ல, அவனைமறுத் தருளிச் செய்கிறார்.

உருவினினிறைந்த தின் றங் குணர்ந்திடு முயிரதென்னில் -
தகமெல்லாம் வியாத்தமாநின்று ஆன்மா வறிவனென்று நீ
சால்லில்?—மருவிடா துறக்கம் - இவனுக் கவத்தைகள் பொரு
தாது. அதுவன்றியும்,—வாயிலறிவொக்க வழங்கவேண்டும் -
ஞ்சவிந்திரியங்களும் ஓரவதரத்திலே சீவிக்கவேண்டும்;— பெ

ருகிடுஞ் சுருங்கும் போதம் பேருடற்சிற்றுடற்கண் - பெரியவுட லுக்கு மகத்தான வறிவும், சிறியவுட லுக் கற்பமான வறிவுமாக வேண்டும்.—வருமுடற் குறைக்கவொக்கக் குறைந்துபின் மாயு மன்றே - உண்டாக்கப்பட்ட தேகத்தைச் சேதித்தால் ஆன் மாவுமொக்கச் சேதப்பட்டுப் பின்பு ஆன்மாவு மொக்கவழிந்து போகவேண்டும்; இங்ஙனஞ் சொன்ன முறைமைக ளில்லாதப டியாலே ஆன்மா சரீரமெங்கு நிறைந்து நில்லாது.

உருவினினிறைந்துநின்றங் குணர்ந்திடு முயிரது என்றது நிகண்டவாதி. இதற்குப் பிரமாணம் பரபக்ஷம் அவன்மதம்-௬ செ, "நிற்றலோடுதலே போதலன்மையை நிகழ்த்துநீடுவெதி ரேசமு, முற்றதாமவை கணத்திலேமருவி யுள்ளவாபிரியு மாறுதா ன்,சுற்றகாலமள வெட்டிவாழுமுயிர் காயமேவிநிறை வானதே பெற்றுவேறுவரு தன்மைநேரறிவு பெற்றதாகியுள பேசிலே" என்றும், அவன் மறுப்பு. எ-செ. "நிறைந்துகாய மொடுசீவ னின்ற தாகி லிவ்வுடல், குறைந்தபோது தானுமித்தொ டொக்கவே குறைந்திடு, மிறந்துபோகுமிக்கட மிறந்தபோது நீர்குடத், து றைந்துடைந்திடக்குட முலர்ந்தவாற தொக்குமே" என்னும துங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சரீரமெங்கும் ஆன்மா நிறைந்து நிற்கில் அவத்தை யுண்டாகாதென்றும் எல்லா விஷயங்களையு மொக்க வறியவேண்டுமென்றும் பெரிய வுடலுக்குப் பேரறிவும் சின்னவுடலுக்குச் சிற்றறிவுமா யிருக்கவேண்டுமென்றும் சரீரங் குறைந்தபோது ஆன்மாவு மொக்கக் குறைந்து கெட்டுப்போக வேண்டுமென்றும், இங்ஙனஞ் சொன்ன முறைமைக ளில்லாத படியாலே ஆன்மாச் சரீரமெங்கு நிறைந்துநின் றறியாதென் னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உருவினி னிறைந்துநின் றங் குணர்ந்திடு முயிரதென்னின்-
இனிச் சமணர் உடம்பளவி னிறைந்துநின்று உணர்வது உயி
ரன்ப ரெனின்?— உறக்கமருவிடாது வாயி லறிவொக்க வழங்
வேண்டும் - உறக்குமுறைமையும் ஐம்பொறியினு மொருங்கே
றிவுநிகழ்தலும் வேண்டும். அவ்வாறு இன்மையானும்,—
பெருடற் சிற்றுடற்கட் பெரிகிடும் சுருங்கும்போதம் - பேரு
டம்பிற் பேரளவுஞ் சிற்றுடம்பிற் சிற்றறிவுமா யவ்வுடம்பள
விற்குத்தக்க அறிவாத லின்மையும்,— வருமுடற்குறைக்க - வ
நகின்ற வுடம் பிருப்பினைக்குறைப்ப,— ஒக்கக் குறைந்து பின்
மாயுமன்றே - கூடக்குறைதலும் பின்மாய்தலு மின்மையாகி
ப இன்னோரன்னவற்றை நோக்கிலராகலா லவர்மதமு மடா
தென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற் பட்டாசாரிய னெவ்விடத்து மான்மா வியா
பித்துநின் றறிவனென்று சொல்ல, அவனைக்கு
றித்து மறுத் துணர்த்துகின்றார்.

எங்குந்தான் வியாபியாய்நின் றுணருமிவ் வான்
மாவென்னிற், றங்கிடு மவத்தைபோக்கு வரவுகள் சா
ற்றவேண்டும், பங்கமார் புலனென்னென்றாய்ப் பார்
த்திடல் பகர்தல்வேண்டும்,மிங்கெலா மொழிந்தானிற்
ப தெங்ஙன மியம்பல்வேண்டும். (கஅ)

(இ-ள்.) எங்குந் தான்வியாபியாய் நின்றுணரு மிவ்வான்மாவென்னில் — ஆன்மா வெவ்விடத்தும் வியாத்தனாய் நின் றறிவனென்று நீ சொல்லில்?

தங்கிடு மவத்தை போக்குவரவுகள் சாற்றவேண்டும் — இந்தச் சரீரத்தின்கண் வந்து பொருந்தப் பட்ட வவத்தையிற் போக்கு வரவுக ளுடைத்தாயிருக்கிறதுக்கு வகையெனக்குச் சொல்லவேணும்.

பங்கமார் புலனொன் றொன்றாய்ப் பாத்திடல் பகர்தல் வேண்டும் — இவனிடத்திற் செறியப்பட்ட விடயங்களை யொவ்வொன்றாய்நின் றறிகிற முறையு மெனக்கு விளங்கச் சொல்லவேணும்.

இங்கெலா மொழிந்தா னிற்ப தெங்ஙன மியம்பல்வேண்டும். — சங்காரகாலத்திலான்மா வறிவின்றி மலத்தான் மறைப்புண் டிருக்கைடாலே யறிவாயிருக்கிற வான்மா வெக்காலத்திலு மறிவாயிருக்க வேண்டாமோ, அது கண்டோமில்லையே! ஆதலா லிப்பொழு தெப்படியிருப்பன், அதற்கு வகைசொல்லவேண்டும். எ-று. (சஅ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிரண்டு விருத்தத்திலே பட்டபாஸ்கரர் லக்ஷணத்தை நிராகரித்தல்.

இவ்வான்மா வெங்குந் தான் வியாபியாய்நின் றுணருமென்னில் — மத்யலோகவர்த்தியா யிருக்கிற ஆன்மாவானவ

ஞன் சர்வவியாபியாய் நின்று சர்வத்தையு மறியு மென்னி
ஒக்கும்.—போக்கு வரவுகள் சாற்றவேண்டும் - சர்வவியா
சுவர்க்கநரக பூலோகாதிகளிலே தேகாந்தர பரிக்கிரகம் ப
ணி போக்கு வரவுகள் செய்கிரதற்குக் காரணமேது சொல்
காண்?—பங்கமார் புலனொன்றொன்றாய் பார்த்திடல் தங்கி
வத்தை பகரவேண்டும் - சர்வஞ்ஞன் பரிச்சின்னமான இந்தி
ங்களிலே யொவ்வொன்றிலே பிரவேசித்து ஒவ்வொரு விஷ
ங்களாக வறிந்து கிஞ்சிஞ்ஞனாகைக்கும் சுழுத்திபவத்தையி
அஞ்ஞனாகைக்குங் காரணஞ்சொல்லவேணும். மேனுமிதை
ப த்ருடம்பண்ணுகிறது,—இங்கெலா மொழிந்தா நிற்பகெங்
னென் றியம்பவேண்டும் - சர்வமூர்த்தத் திரவிய சம்யோகித்
ம் வியாபித்வம்,எக்காலத்திலே யெப்பொருளையும் யதார்த்தாக
றிவது சர்வஞ்ஞத்துவம். கீழ்சொன்ன அவத்தையும் போ
நவரவும் ஒவ்வோ ரிந்திரியங்களாகப்பற்றி யறிவதுமாகிற
பாழுதே யோரிடத்திலே யுண்டாகிறபொழுது நினறவிடங்
ளிலே யெல்லாம் வியாப்தி யொழிந்ததாம். ஆகையால் சர்வ
யாபியும் சர்வஞ்ஞனுமா யிருக்கிறவன் ஏகதேசியும் கிஞ்சிஞ்ஞ
கியும் நிற்கைக்குக் காரணஞ் சொல்லவேண்டும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பட்டபாஸ்கரன்மதம் பராகரிக்கின்றார்.

இவ்வான்மா-இந்தவுயிர்,—எங்குந்தான் விபாபியாய் நின்
ணருமென்னில் - எவ்விடத்தும் விபுவாய் மறைப்பற்று விரிந்
விளங்கிய அறிவுடையவனுகி யறிவனென்னில்?— தங்கிடும
த்தை போக்கு வரவுகள் சாற்றவேண்டும் - அறிவு குன்றிக் கு
றிப் போய் மறையுஞ் சாக்கிர முதலிய பஞ்சாவத்தைப் ப

டுவானேன்? சொல்லவேண்டும்.—ஓரிடத்தே இருந்தறியுந் தன்மை பண்ணுந் தன்மை யிருக்கப் போதல் வருதல்கள் புரிவானேன் சொல்லவேண்டும்.— பங்கமார் புலனென் ருென்ருய்ப் பார்த்திடல் பகர்தல்வேண்டும் - கேடுநிறைந்த சத்த பரிச ரூப ரசகந்தங்களை பொருமிக்க அறியாமல் ஒவ்வொன்ருய்க் காண்பது கழறவேண்டும்,— இங்கெலா மொழிந்தானிற்பதெங்ஙனமியம்ப வேண்டும் - இவ்வுலகத்துச் சரீமுதலிய சம்சார முற்றும் நீங்கினல் நிற்குமிடம் நிகழ்த்தல் வேண்டும்.

சர்வசங்காரத்துப் பிரளய கேவலியா யிருப்ப தின்றித் தீட்சாதி சாதனங்களைச் சாராது முத்தனுய் விடுவனென்பது தாற்பரியம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி ஐக்கியவாதிகள், முதல்வன்போல் எங்கணும் வியாபியாய் நின்று அறிவ ஞன்மாவென்பர். அங்ஙனம் கூறுவார்க்கு, அவத்தை போக்குவரவுக ளுறுதலும் ஐம்புலனு மொருங்கே யறியாமையும், எல்லாமாய் வியாபித்தலொழிந்தானுகி உடம்பினு ளேகதேசமாய் நிற்றலும் எவ்வாறு கூடுமென்பதாம்.

ஒழிந்தா னென்றது முற்றெச்சம்.

எல்லாமென்றது வியாபகமுணரநின்றது.

ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

ஒழிந்தாலெனப் பாடமோதி சங்காரகாலத்தின் எல்லாப் பொருளு மழிந்தவழி நிற்ப தெங்ஙனமென் றுரைத்து, மூர்த்தப்பொரு ளனைத்தினுஞ் சையோக மாதலே வியாபகமெனவும், அவை யனைத்தினையு மறிதலே முற்றுணர் வெனவும் கொ

டு, அங்ஙனங் கூறுவார் மதத்தை அவர் மதமேபற்றி மறுத் ரெனினு மமையும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் பட்டாசாரியன் எவ்விடத்து மான்மா வியாத்தமாய் ன்றறியுமென்று சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிறார்.

எங்குந்தான் வியாபியாய்நின் றுணரு மிவ்வான்மாவென் ல்-ஆன்மா எவ்விடத்தும் வியர்த்தனாய்நின் றறிவனென்றநீ சால்லில்,—தங்கிடு மவத்தைபோக்கு வரவுகள் சாத்தவேண் ம்-பொருந்தப்பட்ட வவத்தைகளிலே இறங்குதல் ஏறுதல் சார்க்க நரகங்களிலே போக்கு மீளப் பூலோகத்திலே வருவ ற்கு வழிசொல்லவேண்டும். இதுவன்றியும்,—பங்கமார் புல னுன்றென்றுப் பார்த்திடல் பகரவேண்டும்-குற்றத்தையு டய விஷயங்களை யொவ்வொன்றாகநின் றறிகிறவழியுஞ் சொ லவேண்டும்,—இங்கெலாமழிந்தால் நிற்ப தெங்கன மியம்ப வண்டும்-இந்தத் தேகாதிப் பிரபஞ்சமெல்லா மழிந்தால் எங் க நிற்குமென்றுஞ் சொல்லவேண்டும்.

எங்குந் தான் வியாபி என்றவன் பட்டாசாரியன். இதற் ப் பிரமாணம் பரபக்ஷம் அவன்மதம்-கூ-செ. "நித்தமாயெ குமாண்டாய் நீடுபிரறிவுதானே, புத்திகாணுதியாய கருவியி புறத்ததாகிச், சுத்தமாயருவமாகித் தொல்லைவல் வினையின் ன்மைக், கொத்ததோ ருருவம்பற்றிப் புலன்வழி யுணராநிற் ம்"என்றார், அவன் மறுப்பு-அ-செ. "நிறைவெங்குமாகிலுயிர் நறிநின்றுபோய்வருத லிணைவின்றதாமுடலிலே, குறைவின் றலாமுமுள குடகந்தமாகிலவை விடநின்ற வாறுகுறியா, வு றகின்றமாதவர்க ளுடலின்று போய்வறிதொ ருடல்கொண்

டுமீள்வ துணராய், மறைதந்த வாய்மையதி நிறைவின்றியேயு
கின் மலேகின்றதாலு னுறையே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, ஆன்மா வவத்தைப்படுகையாலு
சொர்க்க நரகங்களிலே போக்குவர வுடைத்தா யிருக்கையாலு
ம் எல்லா விஷயங்களேயுஞ்சேர ஒருக்காலே யறியாதபடியாலு
ம் எங்கும் வியாத்தமாய்நின் றறியாது என்னு முறைமையு ம
வித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

எங்குந்தான் வியாபியாய்நின் றுணருமிவ் வான்மாவெ
னில் - இனி ஐக்கியவாதிகள் முதல்வன்போ லெங்கணும் விய
பியாய்நின் றறிவ ஞன்மாவெனனின்?—அவத்தைதங்கிடும் போ
க்குவரவுகள் சாற்றவேண்டும் - அங்ஙனங் கூறுவார்க்கு அவ
தைப் போக்குவரவுகள் உறுதலு மியம்பவேண்டும்,— பங்கம
ர் புலனென்றென்றுய்ப் பார்த்திடல்பகரவேண்டும் - குற்ற
பொருந்திய ஐம்புலனு மொருங்கேயறியாமையுங் கூறவேண்
ம்,—இங்கெலா மொழிந்தா னிற்பதெங்ஙன மியம்பவேண்டும்
இங்ஙனமெல்லாமாய் வியாபித்த லொழிந்தானுகி லுடம்பிலு
ளேகதேசமாய் நிற்றலு மெவ்வாறு கூடுமென்பதனைச் சொல்
வேண்டு மென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலைக்கியவாதி யான்ம சத்தியை மாயைகா
ணு மறைத்ததென்று சொல்ல, அவனைக்
குறித் துணர்த்துகின்றார்.

சுத்தமா மான்மசித்தைத் துசளுடன் மறைத்த
தென்னின், வைத்திடா துடற்சண்வாயில் கரணங்கள்
ழியான்ஞான, மொத்துறு மலமற்றாலு முறுமலம்
டுமின்றும், பெத்தமு மடையான்முத்த ஞய்ப்பிர
சனுமே. (கக)

(இ-ள்.) சுத்தமா மான்ம சித்தைத் துளுடன் மறைத்தென்னில் — அநாதியே சுத்தமாயிருக்கப்பட்ட வான்மாவினுடைய சைதன்னியத்தை மாயாகாரியமாகப் பொருந்திய தனுவே மறைத்ததென்று நீ சொல்லில்?

வைத்திடா துடற்கண் வாயில் கரணங்கள் ழியான் ஞானம் — ஆனுலுடலிடமாக விந்திரியங்களுர், அத்தக்கரணங்களிவைகளைக் கூடிநின்றான்மாவுக்கு ஞானமுண்டாக்க மாட்டாது.

ஒத்துறு மலமற்றாலு முறுமல — அநாதிசுத்தனுனவனைப் பொருந்தின மலம் போனுலும் பின்னையும் மலம்வந்து பொருந்தா நிற்கும், அது வணுக்களுக்குச் சுபாவங்காணு மென்னில்?

வீடு மின்றும் பெத்தமு மடையான் முத்தனுய்ப் பிரகாச னுமே. — மோட்சத்தை யடைந்தானென்பதுவும் பொய்யாய் விடுங்காண், அநாதியே சுத்தனுனவன் சேதன வியாபியானவன் பின்னைப் பந்தத்துவம் பொருந்துவது மில்லையாவன், முத்தனுயே பிரகாசியா நிற்பன். எ-று.

இதற்குக் கிரணத்தும் சுவாயம்புவ மிருகேந்திரத்துமறிக.

"எங்கு நிறையினுயி ரீசனைப்போ லாவிதொறுங் - தங்கு
மா சிவனி து தான்."

இஃது ஆன்மாச் சேதனவியாபி யென்பானை மறுத்த தாயிற்று. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதற்கு வாதிவசனம்.

சுத்தமா மான்மசித்தைத் தநுவுடன் மறைத்ததென்னில் - நின்மலமான ஆன்மஞானத்தை சமலமான தேக மாவரித்தது, அந்த வுபாதியினால் அவஸ்தாதிக ளுண்டாமென்னில்? அப்பொழுது தேகவிநாசமே மோக்ஷமாகவேண்டும், ஆகில் உலோகாயதனுக்கு முமக்கும் பேதமில்லை. இதன்றியும்,—வைத்திடாது டற்கண்வாயில் கரணங்கள் வழிபால்ஞானம் - தேகம் ஞானாவாரசமாகில் இந்தத்தேகத்தில் ஞானேந்திரியங்களினாலும் அந்தக்கரணங்களினாலும் விஷய * கோசர ஞானம் பொருந்தல் செய்யாது. மேலும்,—ஒத்துறு மலமற்றாலு முறுமலம் வீடுமின்றும் - பொருந்தலுறுந் தேகமாகிய மலம் நீங்கினால் அதனால் முத்தனாகான். அதேதென்னில்? அநாதி நின்மல ஞானஸ்வரூபமாகிய ஆன்மாவை † ஆகந்துகமாகிய தேக மாவரிக்குமென்பதனால் மோக்ஷா நந்தரமும் பந்தமுண்டாம். ஆதலால்,—பெத்தமு மடையான் முத்தனாய்ப் பிரகாசனுமே - அநாதிநித்திய சுத்த சித்ரூப ஸ்வபாவனாகில் ஆன்மா பந்தத்தை பொருந்தாலு மடையான். நித்தியமுத்தனுமாய் ஸ்வயம்பிரகாசனுமாகியே யிருப்பன். இந்த லக்ஷணஞ் சிவனுக்கே! ஜீவான்மாவுக்கு அசம்பவம்.

ஜீவான்மாவென்ற வொருமை ஜாதியொருமை.

* கோசரம் - விஷயீகரிக்கிறது, † ஆகந்துகம் - நடுவில்வந்தது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

நீர் சொல்லு மல மறைப்பில்லா திருந்தாலும் மறைப்பு
டு, அதனால் அவத்தை முதலியன வருமென் றுரைக்க மறுத்
ரைக்கின்றார்.

சுத்தமா மான்மசித்தைத் தகளுடன் மறைத்த தென்
ல் - நின்மலமாகிய உயிரினது சிற்சத்தியை அழுச்சுறுமாக்
க மூடிற்றென்று நீ சொல்லில்?—வைத்தரு தடற்கண் வா
ல் கரணங்கள் வழிபான் ஞானம் - புறக் கரண முட்கரண
ார்க்கத்தினால் சரீரத்திற் பிரகாசிக்கக் கண்டிருக்கிற ஞான
பிரகாசியாமலே போம்.— ஒத்தரு மலமற்றாலு முறுமலம்
மின்றும் - ஆன்மாவுடன் அநாதி சித்தமல்லாத வுடன்மல
முத்தியின் பொருட்டுப் போனாலும், திரும்பவந்து பொருக்
ம். முன் நின்மலனிடத்து நிருகேதுகமாய் வந்தபடியினாலே
னை குளித்தல் போலத் திரும்பத்திரும்ப அழுக்குவரும், ஆக
ால் முத்தியில்லையாம். உடன்மலம்திரும்பவுறுமெனில்?—பெ
தமுடையான் முத்தனாய்ப் பிரகாசனுமே-அப்போது அநா
நின்மலனாகிய ஆன்மா வொருக்காலும் பந்த முடையனல்ல
ும்; முத்தி வியத்திமானவன் றனே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உயிர் எங்கும் வியாபகமாய்நின்று அறிவதாயினும் மாயா
ாரியம் அவ்வறிவைத் தடைசெய்து நிற்றலின், உறக்கமுதலி
னவுற்று ஏகதேசப் படுவதாயிற் றெனை விடுப்பின், அது பரி
ாரமன்று. அறிவுவிளங்குதற்கு ஏதுவாய மாயாகாரியம் அத

ற்கு மறுதலையாய்த் தடைசெய்தல் கூடாமையானும், முன் சு
த்தமாயிருந்தவுயிரை அது பந்தித்ததெனின் வீடுபெற்றவழியு
ம் உறுமெனப்பட்டு முத்தியென்பது இன்றாய்முடியுமாகலானு
ம், வீடுபெற்றபின் னுறாதெனின் அநாதிநிலையோடு இதனிடை
வேற்றுமையின்மையான் அநாதியே பந்தமுறுதலின்றி முத்த
னாய் விளங்குதல் வேண்டுமாகலானுமென்பதாம்.

"அறிவிச்சை செயல்கள்"என்னுஞ் செய்யுண்முதல் இத்துணை
யும் உயிருண்மை கொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத
சமயிகள், தத்த மதத்துக்கேற்பக் கூறு முயிரிலக்கணங்களும் அ
வை பொருந்தாமையுங் காட்டப்பட்டன.

இன்னுமவ்வமதத்தால் வேறுபடக்கூறு முயிரிலக்கணங்க
ளெல்லாம் இங்ஙனங் கூறியவற்றுள் வைத்துக் கண்டுகொ
ள்க.

அற்றேல், மற்றென்னையோ வுயிருக்கு இலக்கணமாவதெ
ன்னு மவ் வைக்கியவாத சைவரை நோக்கிச் சித்தாந்தங் கூறு
முகத்தால் 'யானென தென்ப தில்லைதரு மாற்றைச்' சாதித்தற்
செழுந்தது வருஞ் செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலயிக்கவாதி முன்சொல்லப்பட்ட ஆன்மா அநாதியே
சுத்தனாயிருப்பன், அந்த வான்மாவை மாயை மறைத்ததென்று
சொல்ல, அவனை மறுத் தருளிச்செய்கிறார்.

சுத்தமா மான்மசித்தைத் தகளுடல் மறைத்ததென்னில்.
அநாதியே சுத்தமாயிருக்கத்தக்க வான்ம சைதந்யத்தைக் கு
ற்றத்தைப் பொருந்தின மாயாதேக மறைத்ததென்று நீ சொ
லில்?—வைத்துரு துடற்கண்வாயில் கரணங்கள் வழியால்ஞா

ம் - உடலினிடத்து இந்திரியாதி கரணங்கள் வழிபா லான்
வுக்கு ஞானமுண்டாக மாட்டாது. இதுவன்றியும்,—ஒத்து
மலமற்றுறு முறுமலம்- ஆன்மாவைப் பொருந்தியிருக்கிற மா
மல மறைக்குமென்றும்,அது ஒரு அவதாரத்திலே போனாலும்
ன்னேயுமந்த மலம்வந்து பொருந்தா நிற்கும்.—வீடுமின்றும் -
ப்படி யாகையால் ஒருக்காலு மோக்ஷமுமில்லையாம். ஆன்மா
ாதியே நித்தமுத்த சுத்தனுயிருப்ப னென்னில்?—பெத்த
மடையான் முத்தனுய்ப் பிரகாசனுமே - அநாதியே பெத்
த் தன்மையுமுண்டாகாமல் முத்தான்மாவுமாய் மகாப் பிர
சனு மாவன்.

சுத்தமாமான்ம சித்தைத் தகளுடல் மறைக்குமென்றவ
, ஐக்கவாதி. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம்அவ
மதம். "உலகத்-தாயவ னுயிர்க்கு மாயையி னருளா-லிருவி
த் தொகையி லுருவினைத் தருமார்-கருமுகி லடர விரிதருக
ர் போன்-றறிவா முயிரிற் பிரியாதேயும்"என்றும்,அவன்மறுப்
"சுத்த-வறிவனெனிற் பாசஞ் செறியாமாயை- உருவிருவினை
ால் வருமிரு வினையு-முருவா லவனறி மருவா திவற்றின்-முந்தி
தேதோ வந்தணை வதற்கோ-ரேதுவேண்டுந் தானியல் பென்
ன்-வீடுற்றவரினுங் கூடக்கூடும்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, ஆன்மா வநாதியில் சுத்தனல்ல
வன்றும் மாயாகருவிக ளறிவைக் கொடுக்கையா லவை மறை
தென்றும் ஒருகாலத்திலே வந்து மாயைமறைக்கில் பெத்
முத்திரண்டு முண்டாகாது என்னுமுறைமையு மறிவித்தது.

'ஆன்மாவின் வடிவு'என்ற திருவிருத்த முதல் 'சுத்தமாமா
ம சித்து'என்ற திருவிருத்த மீறுகப் பதினைந்து திருவிருத்த
ம் ஆன்மா வில்லையென்ற சமையிகள் மதமுமறுப்பு.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

சுத்தமா மான்மசித்தைத் துகளுடன் மறைத்ததென்னின் - உயிரெங்கணும் வியாபகமாய்நின் றறிவதாயினு மாயாகாரிய மவ்வறிவைத் தடைசெய்து நிற்றலின் உறக்கமுதலியனவுற் றேகதேசப் படுவதாயிற்றென விடுப்பின் அது பரிகாரமன்று.—ஞானமொத்துறும் வாயில் கரணங்கள் வழியா னுடற்கண் வைத்தருது - அறிவுவிளங்குதற் கேதுவாகிய புலன் கரணங்களாகிய மாயாகாரியமு மதற்கு மறுதலையாய்த் தடைசெய்தல் கூடாமையானும்,—மலமற்றுறு மலமுறு விடுமின்றும் - முன் சுத்தமா யிருந்தவுயிரை யது பந்தித்ததெனின் வீடுபெற்றவழியு முறுமெனப்பட்டு முதியென்ப தின்றாய் முடியுமாகலானும்,—பெத்தமுமுடையான் முத்தனாய்ப் பிராகாசனுமே- வீடுபெற்றபி னுருதெனின்? அநாதிகலையோ டிதனிடை வேற்றுமை யின்மையான் அநாதியே பந்தமுறுதலின்றி முத்தனாய் விளங்குதல் வேண்டுமாகலானு மென்பதாம்.

'அறிவிச்சை செயல்கள்'என்னுஞ் செய்யுண்முதலித்துணையு முயிருண்மைகொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத சமயிகளைத் தத்தமதத்திற் சேற்பக் கூறுமுயிரிலக்கணங்களு மவை பொருந்தாமையுங் கூறப்பட்டன. இன்னு மவ்வம்மதத்தார் வேறுபடக்கூறு முயிரிலக்கணங்க ளெல்லா மிங்ஙனங் கூறியவற்றுள் வைத்துக் கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

ஆணவமுடைய கொள்கையாகிய வான்மலக்கணம் யாதென்றுவினவ வுணர்த்துகிறார்.

அசித்தரு வியாபகம்போல் வியாபக மருவமின் றாய், வசித்திட வரும்வியாபி யெனும்வழக் குடைய றாகி, நசித்திடா ஞானச்செய்தி யநாதியே மறைத்துநி ற்கும், பசுத்துவ முடையனுகிப் பசுவென நிற்குமா ன்மா. (உ௦)

(இ-ள்.) அசித்தரு வியாபகம் போல் வியாபக மருவமின்றாய் — ஜடமாகி மூர்த்தமுமாகிய மலமாயையினது வியாபகம்போல வருபசுருபமான வியாபகத்தையு முடையது மல்லவாய்,

வசித்திட வரும்வியாபி யெனும்வழக் குடையனாகி — இப்படி யல்லாத வான்மா விபுவாகையிலுலே தானொரு தேசத்திலே யிருக்கையிலே யவன் புசிக்கத்தக்கபலம் வேறோர் வேறோர் தேசத்திலே யிருந்தாலு மந்தப்பொருளை வசீகரித் தவ்விடத்துவந் திவனுக்குப் பாகமாகையால் வியாபியென்னும் வழக்கை யுடையன். யாதார்யாதோர் விடத்திலே வியஞ்சக முண்டாம், அவ்விடத்திலே சரீரமுமுண்டாம்,அவ்விடத்திலே போகமு முண்டாம்,அதனாலும் வியாபித்துவமுண்டெனப்பெறும். இப்படியாயினும்,

நசித்திடா ஞானச்செய்தி யநாதியே மறைத்து நிற்கும் பசுத்துவ முடையனுகிப் பசுவென நிற்குமான்மா. — ஆன்மாவினிடத் தெப்பொழுதுங் கெடாதிருக்கிற விச்சாஞானக் கிரியைகளை யநாதியே மறைத்துக்கொண் டிருக்கப்பட்ட பசுத்துவமென்னும் பெயரையுடைய வாணவ மலத்தைப்பொருந்தி யம்மலத்தின் பேராகிப் பசுவென்னுங் காரணத்தா லப்பெயரைப் பெற்று நிற்கும். (உ௦)

அருபமான வியாபக மன்றெனவே யறிவே ஸ்வரூபமான வியாபியா யந்தவறிவை மலமறைத்திருக்கு மென்றபடி.

இதற்குப் பார்க்கியையினு மதங்கத்தும் பௌட்கரத்து மறிக. (௨௦

சிவாக்ரயோகியருரை வருமாறு

———o———

இவ்வா றுன்மலக்ஷணம் ரூபம் அருபம் ரூபாரூபம் அசித்து சித்து சித்தசித்து கிஞ்சிஞ்ஞன் ஏகதேசி அணுபரிமாணம் மத்யபரிமாணம். *அவிகாரி †அகர்த்தா ‡ அபோக்தா சுத்த சைதந்யம் என்பவர் முதலான பூர்வபக்ஷங்களை யெல்லாம் நிராகரித்து, மேல் வைசேஷிக ரான்மலட்சண § நிராகரண பூர்வமாக சிஷ்யனுக்குச் சித்தாந்தங் கூறுகின்றது.

அசித்தரு வியாயகம்போல் வியாபக மருவமன்றாய் - வைசேஷிகன் காலம் திக்கு ஆகாசங்களைப்போல ஜடமும் அருபமும் விபுவுமென்ப தல்லவாய், பின்னை எப்படி யென்னில்?—

வசித்திடவரும்வியாபி யெனும்வழக் குடையனாகி - முத்திபரியந்தந் தன்னை வஜீசரித்துக்கொண்டு வருஞ் சிவனைப்போலே வியாபியென்னு முறைமை யுள்ளதாய், சிவனைப்போலே யென்கையால் சித்ரூப வியாபி யென்கையால் மூர்த்தத் திரவியத்துக்கு வியாபகத்துவங் கூடாதபடியாலே அருபம். இவ்வாறு சிவனைப்போலே நித்திய வியாபக சித்ரூபமாய் ஆன்மலக்ஷணமென அபிப்பிராயம்.

தது³க்தம் ஶ்ரீம்ருகே³ந்த்³ரே — ஸர்வோ நாஸ்த வ
யஸ்ய ஸோதவா விமோக்ஷணாத் ।

பௌஷ்கரே ச — வ்யாபகஶ்சைகஸ்ஸூக்ஷ்ம: ஶிவ
ஸம்வ்யவஸ்தித: ।

ஆகில் சர்வஞ்ஞ சர்வ வ்யாபித்வங்கள் சர்வான்மாக்க ளுக்கு முண்டாகவேணும், அது காணுகபடியாலே பிரத்தியக்ஷ விரோதமென்னில்? அஃதல்ல. உபாதி + வசாத் அவையிற்றுள் சர்வஞ்ஞத்துவம் அப்பிரகாச மென்பதாக.—

நசித்திடா ஞானச்செய்தி யநாதியே மறைத்துநிற்கும் பசுத்தவ முடையனுகிப் பசுவெனநிற்கு மான்மா- நித்தியமாகிய ஆன்மஞானக் கிரியைகளை அநாதியே தடுத்துநிற்கு மாணவமல சத்தியை யுடைத்தாகையால் பசுவென்னும் பெயரையுடைத்தாய்நிற்கும் இந்த பசுத்தவ மீஸ்வரானுக்கிரகத்திஞலே நீங்கிலல்லது சர்வஞ்ஞத்துவாதிகள் பிரகாசியாது.

தத்ரோக்தம் ஸ்ரீமந்மதங்கே — கதந்த்ரஸ்திரணோ நித்ய
ஞானவிஜ்ஞானவர்ஜிதஃ । தத்ஸஞ்ஜ்ஞதயா ஸோऽத்ர
நாஸாத்ய நிரனுக்ரஹோ ஹிதி ॥

ஆன்மா பசுவென்று பெயராஞனென்றது ஆன்மசத்தத் துக்கு × வியுத்பத்தி ஞானரூபமாகையிஞலும், பசுசத்தத்துக்கு அர்த்தம் அஞ்ஞான மாகையிஞலு மெனவறிக.

இதற்குச்சிலர் ஆன்மாவுக்கு ÷அசாதாரண ஸ்வரூபமில்லை, கூடினதின் றன்மையென்று சொல்லுவார்கள், அது அநேகாந்த வாதம்; அருகமதம்.

* அவிகாரி - விகாரமில்லாதவன், † அகர்த்த-செய்யாதவன், ‡ அபோக்தா - புசிக்காதவன், § நிராகரணபூர்வம் - நிராகரித்தலை முன்னிட்டு. + வசாத் - வசத்தாலே, × வியுத் பத்தி - அர்த்தம், ÷ அசாதாரண - சொந்தமான.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆறு லும்முடையவுயிரி னிலக்கணக் கொள்கை யெப்படி யெனக் கூறுகின்றார்.

அசித்தரு வியாபகம்போல் வியாபக மருவமின்றாய் - சடமா முருவில் விபுப்பொருளொப்ப விபு வுருவிலியன்றி,— வசித்திடவரும் வியாபி யெனும்வழக் குடையனாகி - முத்தியில் சித்தருவியாபக வஸ்துவையுள்ளடக்கி அதற்குள்ளுமாய், வசீகரணம்பண்ணிப் பிரேரிக்க விரியும் விபுவென்னும் நீதிமானாய், பெத்தத்தின்மலம் மூடாமற் றன்வசமாகமாத்திரம் பண்ணப்பட்டு முத்தியிலே விரியும் விபுவென்னும் நீதிமானாய்,— நசித்திடா ஞானச்செய்தி யநாதியே மறைத்து நிற்கும் பசுத்துவமுடையனாகிப் பசுவென நிற்குமான்மா - கெடா தநாதிசித்தமாயிருக்கின்ற சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவத்துவத்தை யறியாமை பண்ணுமையென்னும் பசுத்துவமாக்கும், பசுத்துவமென்னும் நாமத்தையுடைய மலசம்பந்திபாகி சிவனாயிருப்பவனானாலும் பசுவென்னும் பெயர்பெற்று நிற்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஒருவாற்றானும் அசித்தாத லரிய வியாபகப்பொருள்போல ஔபச்சிலேடிக வியாபகமாதலும், அதுபற்றி அதிசூக்குமசித்தாதலுமின்றி அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாதலும், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கும் இச்சாஞானக் கிரியைகளையுடைத்தாய்ப் பசுவெனப்படுந் துலசித்தாதலுமுடையது உயிரென்பதாம்.

"உறற்பால - தீண்டா விடுத லரிது" என்றாற்போல அ
நமை ஏண் டின்மை குறித்து நின்றது.

அருவமென்றது, "இல்லா வருவாகி நின்றானை" என்றாற்
போல, அதிசூக்குமமாதலையுணர்த்தி ஆகுபெயராய் நின்றது.

இதற்குப் பிறரெல்லாம் இயைபறவுரைத்தார்.

இதனானே உயிருக்கு அநாதிநிலையாகிய தன்னுண்மை கூ
றப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன முறைமைகளெல்லாம் ஆன்மாவி னுண்மை
யல்ல வென்னில்? ஆன்மாவினுண்மை யெப்படியென்ற மாணாக்
கனை நோக்கி அருளிச்செய்கிறார்.

அசித்தருவியாபகம்போல் வியாபக மருவமன்றாய் - அசே
தனமான வாகாசம்போல வருபமல்லவாய் எங்கும் வியாத்த
முமல்லவாய், ஆனால் ஏகதேசியா யிருக்குமோ வென்னில்?—
பசித்திட வரும்வியாபி யெனும்வழக் குடைத்தாய் - ஒரு தத்
துவத்தைப் பொருந்தினால் அதிலேவியாபித்தறியத்தக்க முறை
மையினை யுடைத்தாகி,—மற்றும் - இதுவன்றி வேறும் வசித்
திடமெல்லாம் வியாபித்திருக்கத் தக்கவனாய்,— நசித்திடா
ஞானச்செய்தி யநாதியே மறைத்துநிற்கும் பசுத்துவ முடைய
னாகிப் பசுவென நிற்குமான்மா - கெடாத விச்சாஞானக் கிரி
யைகளை அநாதியே யாணவமல மறைத்து நிற்கத்தக்க அசுர
பசுத்துவத்தையுமுடைய பசுவென்கிற பேரைப்பெற்று நிற்பன்
ஆன்மா.

இதனாற் சொல்லியது, ஆன்மா வாகாசம்போல வருபமும
ல்லவாய் வியாத்தமு மல்லவாய் இடாதொன்றிலே சென்று வ

சித்தால் அதுக்குள்ள வியாத்தமெல்லாம் தனக்குண்டாய் ஒரு காலத்திலு மழிவில்லாத தனது இச்சாஞானக் கிரியைகளை மறைத்து நிற்கிற ஆணவமலந் தானேயாய், பசுவென்கிற பெயரைப் பெற்று நிற்பனென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அசித்தரு வியாபகம்போல் வியாபகம் - ஒருவாற்ருனு மசித்தாதல் அரியவியாபகப் பொருள்போல ஔபச்சிலேடிக வியாபகமாதலும்,—அருவமின்ருய்-அதுபற்றி யதுக்குமசித்தாதலு மின்றி,—வசித்திட வரும் வியாபி யெனும் வழக்குடையனுகி-அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாதலும்,—அநாதியே பசுத்துவ மறைத்துநிற்கும் - அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கும்,—நசித்திடாஞானச்செய்தி யுடையனுகி - அழியா விச்சாஞானக் கிரிபைகளையுடைத்தாய்,—பசுவென நிற்குமான்மா- பசுவெனப்படுந் தூலசித்தாதலுமுடையது உயிர்.

இதனுனே உயிர்க் கநாதி நிலையாகிய தன்னுண்மை கூறப்பப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யான்மா விபுவாயிருக்கினு மாயை மலத்தினுலே மறைப்புண்டு சிறிது ஞானக் கிரியைகள்
சீவிக்கு முறைமை யுணர்த்துகின்ருர்.

மாயையின் வயிற்றுண்மன்னி வருஞ்செயன்
ஞானமிச்சை, யேயுமக் கலாதிமூன்று லேகதேச சத்தி
னேய்ந்திங், காயுமுக் குணங்களந்தக் கரணங்க ளாதி
யெல்லாம், காயபந் தங்களாகக் கலந்துட னிற்குமான்
மா. (உக)

(இ-ள்.) மாயையின் வயிற்றுண்மன்னி வருஞ்செயன் ஞானமிச்சையேயுமக் கலாதிமூன்று லேகதேசத்தி னேய்ந்து இதனை, (மாயையின் வயிற்றுண்மன்னி வருமக்கலாதி மூன்று லேயுஞ் செயல் ஞானமிச்சை யேகதேசத்தி னேய்ந்துஎனப் பதமாறுக.) மாயையினிடத்திலே நிலைபெற்று வருமுன்சொல்லிய கலைவித்தை யிராக மிவைமூன்றினாலு முண்டாகாநின்ற விச்சாஞானக் கிரியைகளை யான்மா வேகதேசத்திலே பெற்று விடயாதிக ளெல்லாத்தையும் புத்தியாதி தத்துவங்களைக்கொண் டொருக்காலே யறியுந்தன்மை யில்லாதபடியாலே கிஞ்சிஞ் ஞெனப்பட்டான். இப்படி யான்மாவுக்குப் பரியாயப்பெயர் பலவுள, ஆண்டாண்டு வந்துழிக் காண்க.

இங்காயுமுக்குணங்களந்தக் கரணங்களாதி யெல்லாங் காயபந்தங்களாகக் கலந்துட னிற்குமான்மா. இவ்விடத் தான்மாவினது வியாபாரத்தை யாராய்ந்தறியு மிடத்து முக்குணங்களந்தக் கரணங்கள் முதற் பூதமீறானவைக ளெல்லா மிவையிற்றைக் கலந்து தேகத்திலே பந்திக்கப்பட் டதுவது வாகவே நின்று சீவியா நிற்கும். எ-று.

ஈண்டுக் கலைமுதலிய மூன்றையுங் கூறவே பஞ்ச கஞ்சுகமுங் கூறியதாயிற்று.

குணங்க ளளவிலாத படியாலே யாயுமுக் குணமெனச் சி றப்பித்தார்.

பந்தங்களென்று பன்மைகூறியது, தூலசூக்குமங்க ளாகிய வைங்கோசங்க ளாற் சரீரங்களாகாநிற்கையாலெனவறிக.

இதற்குச் சித்த தந்திரத்தும் பார்க்கியையிலும் பௌட்கரத்துமறிக. (உக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— ၁ ——

ஆன்மாவுக்கு அசர்வஞ்ஞதைக்கு உபாதி சொல்லி, மேல் அவ்யாபித் வத்துக்கும் கிஞ்சிஞ்ஞதைக்கும் உபாதியும் ஏதுவுங் கூறுகின்றது.

மாயையின் வயிற்றுண்மன்னி- பிரளயகாலத்திலே மாயா மண்டல மத்யத்திலே கேவலாவஸ்தனு யிருந்து சிருஷ்டிகாலத்திலே,—

வருஞ்செயல் ஞானமிச்சை யேயுமக் கலாதி மூன்று லேக தேசத்தினேய்ந்து - ஆன்மா சிற்சத்தி ரூபமாகி யுண்டாகிற ஞானேச்சாக் கிரியைகளுக்கு சகாய பூதமாகிய கலாவித்தியாராகங்களினுலே ஏகதேசத்தைப் பொருந்திநிற்கும்.

ஏகதேசமென்றது ஆன்மாவையல்ல, ஆன்ம ஞானப்பிரகாசம்.

ஏகதேசமாகையால் தருமைக தேசத்தினுலே தருமியையும் ஏகதேசியமென்று உபசாரமாகச் சொன்னதே.

ஆன்மா விபுவாய் ஞானஸ்வரூபியாயிருக்க ஆன்ம ஞானப்பிரகாசந்தா னேகதேசமாவானே னென்னில்? ஞானப்பிரகாச மாணவத்தினுலே தடுக்கப்பட்டதென்று முதலே சொன்னேம், அந்தத் தடையை மாயாகாரியமாகிய கலை சிறிது நீக்குகையினுலே யேகதேசப் பிரகாச மென்றது.

மாயைக தேசத்திலே ஆன்மாவென்றதும் கடத்துக் குள்
நம் புறம்பு மாகாசம் வியாபியா யிருக்கவும் கடாகாச மெ
றதுபோல, விபு ஞான ரூபியாயிருக்கிற ஆன்மாவுக்கு ஞான
மகதேசத்திலே பிரகாசிப்ப தெவ்வா றென்னில்? விருக்ஷ
மல்லாம் வியாபித்திருக்கிற அக்னி அந்த விருக்ஷத்திலே சல
வற்றி *சுஷ்கமாயிருக்கிற ஏகதேசத்திலே †மதநம் பண்
ணுகிறபொழுது பிரகாசிக்கு மாப்போல, ஆணவமல சத்தி நீங்
ன பிரதேசத்திலே ஞானம் பிரகாசிக்கும்.

* சுஷ்கம்-உலர்ந்தது, † மதநம்-கடைதல்.

தஉ—ஞூ கிமெண — ஸவ-ூமொவி யமா வௗக்ஷா
—க்ஷாஉ-ஞூ-ூ ஙிவீஸ்ஸிதஜதி.

கீழ்ச்சொன்ன அசுத்தமாயா ‡யோனி §பரிணதமான
ங்கக் கலாதிகள், ஆன்மாவுக்கு பிரதமபந்த காரணம். இ
த ¶லீலாவிபூதி மோகினியென்னும் பெயரை யுடைய மாயை
த்தி நிபாததிலே நீங்கப்படுவது. நீங்கின காலத்தி லான்
ா சிவனைப்போலே யாவன்.—

‡ யோநி-காரணம். § பரிணதம்-பரிணமித்தது. ¶ லீ
ாவிபூதி-லீலாமகிமை.

தஉ—ஞூ தமெதௌவ — மெயம வஙிணதி மெய-ூா
நஃ வஸஞநாஂ ஸுயகாமணழ। விஹஞதி ஜெ-ூா
நிநீஜீஊ தஉதீதஸ்ரீமெவா யமெயதி.

இங்காயு முக்குணங்க ளந்தக்கரணங்களாதியெல்லாங் கா
பந்தங்களாகி -இங்கென்றது சகலர்க்கு × அவஸ்தாந மாகிய
ரகிருதி மண்டலத்தை.இதல் மூன்று குணங்களோடே—கூடித்த
நகுணமான ○ஊகவிசார நிச்சயங்களைப் பண்ணும் புத்தியா

தியந்தக்கரணங்கள் சூக்குமகாயமாக ஆன்மாவுக்கு இரண்டா ம்பந்தமும், புத்தியாதியான பௌதிக தேகேந்திரியங்கள் மூ ன்றும் பந்தமுமாகையால் பந்தங்களென்றது பஹுவசனம். இவை பந்தித்தது, ஆன்மாவை ஆவரித்ததோ ÷ பரிச்சேதித்த தோ வென்னில்? விபுவாகையினு லாவரணங் கூடாது, பரிச் சேதமே! பரிச்சேத மெவ்வாறென்னில் ?—

× அவஸ்தாநம் - இருப்பிடம், ○ ஊகம் - உட்பொருள் உ ணர்த்தல் ÷ பரிச்சேதம்- அளவு, ஏகதேசம்.

கலந்துட னிற்குமான்மா - பொருந்தின தத்துவங்களு டைய வியாப்தி யெவ்வளவு, அவ்வளவே தன்னுடைய ஞானே ச்சாக் கிரியைகள் வியாப்தியாக ஆன்மா நிற்பன்; இதுவே பரி ச்சேதம். மடாகாச மத்யே கடாகாசம்போலவென் றிதன் பொருள்.

இவ்வாறு ஏகதேசத்துக்குங் கிஞ்சிஞ்ஞதைக்கும் ஏதுவா ன கலாதி தத்துவம் பொருந்தி யுள்ளளவில் ஆன்மா விபுவா யும் மாயாகாரியங்களினுலே பரிச்சேதிக்கப்படுகிறுன், சர்வஞ் ஞனுயு மொருத்தராலே யறிவிக்கப்படுகிறுன், ஞானக்கிரியா சுதந்சர சத்தியை யுடைத்தாயிருந்தும், அறிகிறத்திலும் செய் கிறத்திலும் கலாதி தத்துவங்களை சகாயமாக அபேக்ஷிக்கிறு ன், தனக்கு ஜநநாதிகளன்றியிலே இருந்து மொருத்தராலேஜ நநாதிக ளுண்டாக்கப்படுகிறுன், சுதந்தரனுகியும் வியாபாரத்தி லே + பரதந்திரனுகிறுன், நிர்விகார ஞானஸ்வரூபியாயும் ஞா னேந்திரியங்களுக்கு விஷய தரிசனத்தைப் பண்ணுவிக்கிறுன், தானுமந்த இந்திரியங்களினுலே விஷயங்களை யறிவிக்கப்படுகி றுன், சிந்திக்கிறதற்கு அவ்விஷயமாயிருக்கிற மஹிமையையும் புதுமை பொருந்தின குணராசியையும் லோக ¶ விலட்சணமு

ராய் ஆணவமல பரிபாகத்திஞலே சிவஞலே × நிர்வாண சிவ த § சாம்ராஜ்யாபிஷேகத்தைப் பண்ணப்படுமவனுமாம்.

+ பரதந்த்ரன் - ஒருவனுக்கு வசப்பட்டவன். ¶ விலக்ஷணம்-வேறுலக்ஷணம், × நிர்வாணம்-மோக்ஷம். § சாம்ராஜ்யாபிஷேகம் - ராஜ்யபட்டாபிஷேகம்.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌮𑌿𑌕𑍇 — 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑌾𑌕𑌲𑌶𑍍𑌚 | 𑌸𑌹𑌾𑌯𑌸𑍍𑌸𑌹𑌾𑌯𑍀 𑌚 𑌸𑌾𑌯𑌕𑌲𑌾𑌰𑍂𑌢𑌸𑍍𑌵𑌯𑌃 || 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌸𑌾𑌦𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌚𑌾𑌹𑌂𑌸𑌃 | 𑌵𑌿𑌨𑌾𑌶𑍍𑌯𑌂𑌤𑌯𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌂 𑌚𑍇𑌤𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 | 𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌕𑌰𑌸𑌂𑌭𑍃𑌤𑌃 | 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣 𑌪𑌦 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 || 𑌇𑌤𑌿.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

விஞ்ஞானப் பிரளய கேவலங்களில் அசர்வஞ்ஞத்துவம் சர்வகர்த்திருத்துவம் இரண்டிச்கு முபாதியுரைத்து சகலத்து கிஞ்சிஞ்ஞத்துவம் கிஞ்சித்கர்த்திருத்துவ மிரண்டிச்கு முபா யுரைக்கின்ருர்.

மாயையின் வயிற்றுண்மன்னி - சர்வவியாபியா யிருந்தாரும் மலமறைத்த அறிவு தொழிலுடையனுய்ச் சூக்குமதேக திஞற் சிற்றறிவு தொழில் விளங்கலாற் சூக்கும தேகோபா யிஞலே மாயோதரத்தில் வசித்து,— வருஞ்செயல் ஞான ச்சை யேயுமக் கலாதி மூன்று லேகதேசத்தினேய்ந்து- தன் ஞடு பொருந்திய கலை வித்தை யிராகங்களிஞல் முறைமை

யிற் றொழிலறிவு விருப்பங்களை அந்தகாரத்திற் றீபத்தினாற் கண் ணொளியைப்போல் ஒருபிரதேசத்திற் பொருந்தி.

இங்கு ஆயுமுக்குணங்கள் என்பது முதலியன வெளிப் பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனம் பசுத்துவமாத்திரையாற் கேவலப்பட்டு நின் றவான்மா, அதன்பின் அசுத்தமாயையில் அனந்ததேவராற் கலக்குண்டபாகமாகிய காரணசரீரத்தைப்பொருந்தி, அவ்வறிவிச்சைசெயல்கள் பொதுவகையாற் சமட்டிரூபமாய் விளங்கப் பெறும். அதன்பின் அம்மாயாதத்துவத்தினின்றுந் தோன்று ங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப்பொருந்தி, அவை வியட் டிரூபமாய்ப் பிரிந்துதோன்றிச் சிறப்புவகையான்விளங்கப்பெ றும். அதன்பின் அந்தக்கரணமுதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அவ் வறிவிச்சைசெயல்கள் முன்னர்க் கூறப்படும் இருசரீரங்களிடமாக வரும்விடயங்களின் வியாபரிக்கப்பெறு மென்பதாம்.

இங்ஙனம் பரசரீரம் மூவகைப்படுமெனக் கொள்க.

மாயையிற்கலக்குண்டபாகத்தை வயிறாக உருவகஞ்செய்தார்.

மேலே மாயாடன்வயிற்றென்றதும் து.

அதுவே அசுத்தமாயா தத்துவமெனத் தத்துவங்களிடை வைத் தெண்ணப்படுவதூஉமென்க.

மன்னிவருமென்னும் வினையெச்சமுடிபு காரணகாரியப் பொருட்டாய் நின்றது.

'ஏகதேசத்தினேய்ந்து' என முன்வருதலின் ஈண்டுவருமென்பதற்கு அது பொருளாதலறிக.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்" என்றாற்போல, எல்லாவற்றானுமென்னுஞ் சாரியையும் உருபும் விகாரத்தாற்றொக்கன.

காயம் ஆகுபெயர்.

ஆகிக்கலந்து நிற்குமென ஒற்றுமைபற்றிக் குணவினை குணிமேலேற்றப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலிந்த ஆன்மா மலத்துடனேகூடி மலமாய்நின்ற தன்மைபோல, மாயையிலுண்டான தத்துவங்களுடனேகூடி யதுவதுவாய் நிற்கு முறைமை யருளிச்செய்கிறார்.

மாயையின் வயிற்றுண்மன்னி - அதோமாயையி னுதரத்திலே நிலைபெற்று,—வருஞ்செயல் ஞானமிச்சை யேயுமக்கலாதி மூன்று லேகதேசத்தினேய்ந்து- உண்டாக்கப்பட்ட இச்சாஞானக் கிரியைகளைப் பொருந்தி நிற்கிற அந்தக் கலாதிகளைந்தென்று சொல்லப்பட்ட மூன்றினாலும் புருடனாகிய வொன்றாய்ப் பொருந்தி,—இங்காயுமுக்குணங்க ளந்தக்கரணங்க ளாதியெல்லாங் காயபந்தங்களாகி- இந்தப் புருடனுக்குப் பின்பாக இவ்விடத்தில் ஆராய்ந் தறியத்தக்க முக்குணங்களும் மனம்புத்தியாங்காரஞ் சித்தம் என்று சொல்லப்பட்டவையெல்லாம் வெகுவிதமான தேகங்களுமாய்,—கலந்துட நிற்குமான்மா - ஆன்மா வினையிற்றுடனே பொருந்தி யதுவதுவாய் நிற்பன்.

இதனாற் சொல்லியது, ஆன்மா மலத்துடனே கூடி மலமாயதன்மைபோல, மாயாகாரியமாகிய தனுகரண புவனபோகங்

களுடனே கூடி அது வதுவாய் நிற்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

ஆன்மா - அங்ஙனம் பசுத்துவ மாத்திரையாற் கேவலப்பட்டு நின்ற ஆன்மா,— மாயையின் வயிற்றுண்மன்னி - அதன்பின் அசுத்தமாயையில் அநந்ததேவராற் கலக்குண்டபாகமாகிய காரணசரீரத்தைப் பொருந்தி,—ஞானமிச்சை செயல்வரும்-அவ் வறிவிச்சை செயல்கள் பொதுவகையாற் சமட்டிரூபமாய் விளங்கப்பெறும்.—அக்கலாதிமூன்று லேகதேசத்தி னேய்ந்திங்சேயும்-அதன்பின் னம்மாயாதத்துவத்தி னின்றுந் தோன்றுங்கலாதிகளாகியகஞ்சுக சரீரத்தைப் பொருந்தி யவை வியட்டிரூபமாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்புவகையான் விளங்கப்பெறும்.—அந்தக்கரணங்களாதி யெல்லாம்-அதன்பின் னந்தக்கரண முதலியவற்றை,—ஆயுமுக்குணங்கள் காயபந்தங்களாகிக் கலந்துடனிற்கும் - தம்முளாடக்கி நிற்கு முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி யவ்வறிவிச்சை செயல்கண் முன்னுசக் கூறப்படு மிருசரீரங்க ளிடமாக வரும் விடயங்களின் வியாபரிக்கப்பெறும்.

இங்ஙனம் பரசரீரம் மூவகைப்படுமெனக் கொள்க.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் கூறிய விருவிதமான சரீரத்தைப்பொருந்தி யான்மா போகங்கொள்ளு முறைமையைத் தொகுத்துணர்த்துகின்றார்.

சூக்கும தேகியாகித் தூலதே கத்தின்மன்னிச்,
சாக்கிர முதலாயுள்ள வவத்தையுட் டங்கியெங்கும்,
போக்கொடு வரவுமெல்லாம் புரிந்துபுண் ணியங்கள்
பாவ, மாக்கியும் பலன்களெல்லா மருந்தியு நிற்குமா
ன்மா. (உஉ)

(இ-ள்.) சூக்கும தேகி யாகித் தூலதேகத்தின் மன்னி — ஆன்மாச் சூக்கும சரீரத்துடன் பொருந்தியதன் காரியமயமாகிய தூலதேகத்தைப் பொருந்தி நின்று,

சாக்கிர முதலாயுள்ள வவத்தையுட் டங்கி — சாக்கிரமுதலான பஞ்சாவத்தையிலடைவே யடைந்து,

எங்கும் போக்கொடு வரவுமெல்லாம் புரிந்து — எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களிலதற் கதற்கேற்ற சரீரங்களை யெடுத்து,

புண்ணியங்கள் பாவ மாக்கியும் — அந்தந்த ஜநநங்கடோறு மிருவினைகளை யார்ஜ்ஜித்து,

பலன்க ளெல்லா மருந்தியு நிற்குமான்மா. — இவையிற்றின் பிரயோசனங்களை யந்தந்தச் சரீரத்லே யந்தந்தப் புவனங்கடோறுங் கன்மத்துக் கிடாகப் பொருந்திப் போகங்களைப் புசியாநிற்கு மான்மா. எ-று.

ஆன்மா வென்பது கடைநிலைத் தீபகம்.

இதற்குச் சித்தசுந்திரமென வறிக. (உஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு

—o—

மேல் சூக்கும தேகத்தோடே ஜநந மரணங்களைப் பொருந்தி வரும்படி யுணர்த்துதல்.

ஆன்மா சூக்கும தேகியாகித் தூலதேகத்தை மன்னிச் சாக்கிரமுதலாயுள்ள வவத்தையுட் டங்கி - ஆன்மாவானவன் சூக்கும தேகியாகி யதனாலே ஸ்தூலதேகத்தைப் பொருந்தி சாக்கிரமுதலான வவத்தையு மடைந்து,—எங்கும் போக்கொடுவரவுமெல்லாம் புரிந்து புண்ணியங்கள்பாவ மாக்கியும் பலங்களெல்லா மருந்தியுநிற்கும் - புண்ணிய பாவங்களைப் பண்ணித் தன் பலமாகிய சுகதுக்கங்களைப் புசிப்பதாக வெவ்விடத்தும் சநநமரணங்களையும் பொருந்தி, இவ்வாறு கன்ம வசனாகி நிற்பனென வறிகவென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இப்படித் தூலசூக்கும தேகங்களோடு கூடிப் போகம்புசிக்குமுறைமை புகல்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அம்மூன்றையும் முறையா னெய்தியபின், சூக்குமதேகத்தைப் பொருந்திப் போக்குவரவு செய்து சூக்குமவினைப்பயன்களை ஈட்டியு நுகர்ந்தும், தூலசரீரத்தைப் பொருந்திப் போக்குவரவு செய்து தூலவினைப்பயன்களை ஈட்டியு நுகர்ந்தும், இவ்வாறு அதீதமுத லஞ்சவத்தைப்பட்டு நிற்குமென்பதாம்.

சாக்கிரமுதலென்றது ஒடுங்குமுறைபற்றிக் கூறியதென வறிக.

நிரம்பவழகியருரை வருமாறு.

ஆன்மாக் கன்மத்துக்கிடாக மாயையிலுண்டான தத்து வங்களுடனேகூடி யதுவதுவாய் நிற்குமென்ற தெப்படியென்ற மாணக்கனைநோக்கி மேலு மருளிச்செய்கிறார்.

சூக்கும தேகியாகித் தூலரூபத்தின் மன்னி - சூக்குமசரீரி யாய்த் தூலசரீரத்திலே நிலைபெற்று விஸ்வ வியாபாரத்தையு மறிந் தனுபவித்துநின்று மது வொழிந்தும்,—சாக்கர முதலாயு ள்ள வவத்தையிற்றங்கி - சாக்கிர முதலாயுள்ள பஞ்சாவத் தைகளிலேபட்டு மீளவு மவையிற்றைவிட்டுத் தூலதேகத்திலே வந்து,— எங்கும் போக்கொடு வரவுமெல்லாம் புரிந்து - எவ்வி டத்திலும் போக்கு வரவுக ளெல்லாத்தையும் பொருந்தி,—பு ண்ணியங்கள் பாவ மாக்கியும் - தன்மா தன்மங்களைச் செய்து ம்,—பலங்களெல்லா மருந்தியு நிற்குமான்மா - இவையிற்றின் பிரயோசனமாகிய சுகதுக்கங்களைப் பொருந்திநிற்கு மான்மா.

இதனாற் சொல்லியது, சூக்கும தேகியாய்த் தூலதேகத் தையும் பொருந்திநின்று விஸ்வ வியாபாரத்தை யறிந்து மீள வும் சூக்கும தேகத்தாலே யவத்தைப்பட்டும் சொர்க்க நரக பூலோக மென்றும் சொல்லப்பட்ட வெல்லா விடங்களிலும் போவது வருவதாயும் கன்மங்களைச் செய்து மந்தக் கன்மங்க ளைப் புசித்தும், இப்படிநிற்கு மான்மாவென்னு முறைமை யறி வித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

ஆன்மா - அங்ஙனம் பரசரீர மூன்றையும் முறையானே ப்திய ஆனமா,— சூக்குமதேகியாகி - பின்சூக்குமதேகத்தைப்

பொருந்தி எங்கும் போக்கு வரவுசெய்து புண்ணியங்கடன் பாவப்பலன்க ளெல்லா மாக்கியு மருந்தியும் சூக்குமமாகியவிரு வினைப்பலன்களை யீட்டியு நுகர்ந்தும்,— தூலரூபத்தின்மன் னி-பின்றூல சரீரத்தைப் பொருந்தி,— எங்கும் போக்கொடு வரவுமெல்லாம்புரிந்து - எவ்விடத்தும் போக்குவரவு செய்து,—புண்ணியங்கள் பாவப்பலன்க ளெல்லாமாக்கியு மருத்தியும்-தூலமாகிய வினைப்பயன்களை யீட்டியு நுகர்ந்தும்,—சாக்கிர முதலாயுள்ள அவத்தையுட் டங்கிநிற்கும்-இவ்வா றதீதமுத லந்தவத்தைப்பட்டு நிற்கும்.

மறைஞானதேசிகர் உரை.

உலோகாயதன் முதலாயின ராநந்தகோச முதலிய
வொவ்வொரு கோச மான்மா வென்ன,
அன்றென் றுணர்த்துகின்றார்.

மருவாநந்தம் விஞ்ஞான மனோபிராண னன்னமய, மூருவாந்தன்மையுண்டாய்முன் னென்றுக்கொன்று சூக்குமமாய், வருமாமன்ன மயம்பற்றி மாயைமுதற்கா ரணமாகு, மருவாமான்மா வைங்கோசத் தார்ப்புண்டவற்றி னகம்புறமாம். (உரு)

(இ-ள்.) மருவாநந்தம்	வேதாந்திக ளாநந்தமயமே யான்மா வென்பர்கள்.
விஞ்ஞானம்	பௌத்தன் விசிட்டமான வறிவைப்பொருந்தி யிருக்கிற விஞ்ஞானமயமே யான்மா வென்பன்.
மனோபிராண னன்னமயம்	அகங்காரவாதி மனோமய மான்மாவென்பன். அருகன் பிராணவாயுதானே யான்

மாவென்பன். உலோகாயத னன்னமயமா யிருக்கிற சரீரத்தை யான்மாவென்பன்.

உருவாந் தன்மையுண்டாய்முன் — அன்னமயம் பிராணமய மனோமயம் விஞ்ஞானமய மாநந்தமயமென முதற்கண் வடிவைப் பெற்று, இவைகளின் முறைமையை விசாரிக்கு மிடத்து

ஒன்றுக் கொன்று சூக்குமமாய் — முற்கூறிய வன்னமயத்தைப்பற்றப் பிராணமயஞ் சூக்குமமாய்வரும், அதனைப் பற்ற மனோமயஞ் சூக்குமமாய்வரும், அதனிலும் விஞ்ஞானமயஞ் சூக்குமமாய்வரும், அதனைப்பற்ற வாநந்தமயஞ் சூக்குமா யொன்றுக்கொன் றதிகமாக வியாபித்து நிற்கும்.

வருமா மன்னமயம் பற்றி — அந்த வன்னமயத்தைப் பற்றியே நின்ற நாலு கோசமு முண்டாகா நிற்கும். ஆனால் இவைக ளெல்லாத்திற்கு மிதுவே பரமகாரண மாமோ வென்னில்? இஃதன்று.

மாயை முதற் காரணமாகும் — இந்த வன்னமயத்திற்கு முதற்காரண மாயையா யிருக்குமென வறிக. முதற்காரணமெனவே அன்னமயந் துணைக்காரணமென வறிக.

அருவா மான்மா வைங்கோசத் தார்ப்புண்டு — அருபமே ஸ்வரூபமாயிருக்கிற வான்மாவானவ னிங்ஙனங் கூறிய பஞ்ச கோசங்களாலே பந்திக்கப்பட்டுக்கொண்டு,

அவற்றி னகம் புறமாம். — இவையிற்றுக் குள்ளும் புறம்புமாய் வியாபித்துநின் றறியா நிற்பன். எ-று.

மயமென்பதனையுங் கோசமென்பதனையு முற்றுங் கூட்டுக.

இதற்குச் சிந்தியத்தஞ் சர்வசித்தாந்த சங்கிரகத்துமறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் பஞ்சகோச ஸ்வரூப முணர்த்துதல்.

மருவானந்தம் விஞ்ஞாந மனோபிராண னன்னமய முருவாந்தன்மை யுண்டாய்முன் - முன்னே பொருந்தப்பட்ட வானந்தமயம் விஞ்ஞாநமயம் மநோமயம் பிராணமயம் அன்னமயமென்னு மிவ்வைந்தையு மூன்றுவகையான் ரூபமாக வுடையதாம்.—ஒன்றுக்கொன்று சூக்குமமாய் வருமாமன்ன மபம்பற்றி- அன்னமய முதலாக வொன்றுக்கொன்று சூக்குமமாகிவரும்,— மாயை முதற்காரணமாகும் - இவையிற்றுக்கு மூலகாரணஞ்சுத்தாசுத்த மாயைகளாகும். அன்னமயம் பிராணமயமாகிய ஸ்தூல தேகத்துக்கும் மநோமயமாகிய சூக்கும தேகத்துக்கும் அசுத்தமாயை காரணமாம். விஞ்ஞாநானந்த மயமாகிய காரண சரீரத்துக்குச் சுத்தமாயை காரணமாம். இவ்வாறு,—அருவா மான்மா வைங்கோசத் தார்ப்புண் டவற்றி னகம்புறமாம்- வடிவறுதியான ஆன்மா விந்த பஞ்சகோசத்தினாலுங் கட்டுப்பட்டுக்கொண் டவற்றினுக் குள்ளும் புறம்புமாம்.

உள்ளும் புறம்புமாம்படி; அன்னமயமாகிய ஸ்தூல சரீரத்தில் நிற்கும்பொழுது அதற்குள்ளாயும், மநப் பிராணனைக் கூடியிருந்து ஸ்தூல சரீரத்தை யறியும்பொழுது மநோமயத்துக் குள்ளும் அன்னமயத்துக்குப் புறம்புமாம். விஞ்ஞாந மயத்தினின்று மநோமயத்தை யறியும்பொழுது விஞ்ஞாநமயத்துக் குள்ளு மநோமயத்துக்குப் புறம்புமாம். சிவஞானத்தால் விஞ்ஞாநந்த மயத்தை யறியும்பொழுது அதற்குப்புறம்புமாம். சிவா *பிவியத்தியானபொழுது சர்வவியாபி யாகையால் இவையிற்றுக்குள்ளும் புறம்புமா யிருக்குமென் றிதன்பொருள்.

* அபிவியத்தி - தோற்றம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பஞ்சகோசங்களி லொவ்வொருகோச மான்மா வென்பவர்களை மறுத் துணர்த்துகின்றார்.

வேதாந்திகள், காரணசரீர மென்னு மவித்தையாகிய ஆனந்தமயகோசமய ஞன்மா வென்பர்கள். புத்தர், விஞ்ஞானமய கோசமய ஞன்மா வென்பர்கள். அகங்கார வாதிகள், மனோமய கோசமய ஞன்மா வென்பர்கள். அருகர், பிராணமய கோச மயஞன்மா வென்பர்கள். உலோகாயதர், அன்னமய கோசமய ஞன்மா வென்பர்கள். நமக்குப் பஞ்சகோசமும் மாயோபாதானமா யிருக்கும் தூலசரீரத்தும் சூக்குமசரீரத்து மடங்கும்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

காரணசரீரமுதலிய வவ்வைந்தும், அவ்வாறு மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்கு வடிவாய், முறையே ஆனந்தமய கோச முதலிய ஐவகைப்பெயர் பெற்று ஒன்றற்கொன்று தூலமாய் நிற்க, கேவலத்தி லொன்றுமின்றி மலமாத்திரையாய் நின்றவான்மா; இவ் வைங்கோசங்களில் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய்ப் போக்குவரவு செய்து நிற்குமென்பதாம்.

கேவலத்திலொன்றுமின்றி நின்றவான்மா, மாயையி லங்ஙனங் கலக்குண்ட பாகத்தை முதற்கட்பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுமையா னவ்வளவு விளங்கப்பெற்ற மாத்திரையே அம்மயக்கறிவா லோரானந்த முண்டாகப் பெறுதலின் அஃதானந்த மயகோசமெனப்பட்டது.

ஏனையவுங் காரணக்குறியாமாறு உய்த்துணர்ந்துகொள்க.

இவ்வைங்கோசங்கட்கு வேறுவேறு பொருள் கூறுவார் மதங்களையெல்லாம் மறுத்தற்பொருட்டு, இவ்வாறெடுத்தோதி, மாயை முதற்காரண மாகுமென்றுங் கூறினர்.

ஆன்மா வித்தரைசீழ்மேலுங் கொள்ளிவட்டங் கறங்கென நிமிடத்தின்க ணலமரும்படி கொண்டு திரிதரல்பற்றி, இவ்வைங்கோசங்களை ஐந்துபரவையாகவும், அவற்றுளொரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலிய வுறுப்புக்களாகவும் வேதத்து ளுருவகஞ்செய் துணர்த்திய வாறென்க.

ஆன்மாவினுண்மை யுணர்தற்கு இவற்றை யிங்ஙனம் பகுத்தறிதலு மொருசாதன மெனக்கொள்க.

இவை மூன்று செய்யுளானும், பசுத்துவவுபாதியான் மறைப்புண்டுநின்ற வவ்வறிவிச்சை செயல்கள்,பின் ஒருபுடை விளங்கி அவத்தை போக்குவரவுமுதலிய வுறுதற்குரிய உபாதி கூறுமுகத்தால் வசித்திட வருமாறு தெரித் துணர்த்தப்பட்டது.

இன்னும் ஆன்மாச் சார்ந்ததின் வண்ணமாய் வசித்திடவருமாற்றிற்குச் சருவஞானோத்தரத்தில் அவ்வச்சார்பு விசேடம்பற்றிப் பூசான்மாமுத லறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்து மோதியதூஉம் ஈண்டுய்த்துணர்ந்துகொள்க.

நிரம்பவழகியருணா வருமாறு.

———o———

மேல் மாயையிலே நின்று முண்டாக்கப்பட்ட தூல சூக்குமமென்று சொல்லுகிற வடிவு பலபிரகாரமா யிருக்குமென்று அருளிச் செய்கிறார்.

மருவானந்தம் - பொருந்தப்பட்ட ஆனந்தமயம்,—விஞ்ஞானம் - விஞ்ஞானமயம்,—மனோபிராண னன்னமயம்-மனோமயம் பிராணமயம் அன்னமயம்,—உருவாந்தன்மையுண்டாய் - இவை யிற்றாலே தேகமாகத்தக்க முறைமையினை யுடைத்தாய்,—முன்னொன்றுக்கொன்று சூக்குமமாய் - அநாதியே அன்னமய முதலாக வொன்றுக்கொன்று சூக்குமமாய்,—வருமாமன்னமயம்பற்றி- அன்னமய கோசத்தைப் பற்றி நின்ற நாலு கோசமும் உண்டாகாநிற்கும். இவையிற்றுக்குக் காரணமேதென்னில்?—மாயை முதற்காரணமாகும்-இப்படிச் சொல்லப்பட்ட கோசமைந்துக்கும் அசுத்தமாயை முதலுபாதானமா யிருக்கும்.—அருவா மான்மா வைங்கோசத் தார்ப்புண்டவற்றி னகம்புறமாம் - அருவமாயிருக்கிற வான்மா இந்தப் பஞ்சகோசத்தாலும் பந்திக்கப்பட்டு அவையிற்றுக்கு உள்ளும்புறமுமா யிருக்கும்.

இதனாற் சொல்லியது, மாயையிலேநின்று முண்டாகப்பட்ட அன்னமய முதலான கோசங்களாலே பந்திக்கப்பட்டு அருவமாய்நிற்கிற வான்மா உருவமாய்.இவையிற்றுக்கு உள்ளும் புறம்புமாய் நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மாயைமுதற் காரணமாகு முருவாந்தன்மை யுண்டாய் - காரண சரீரமுதலிய வவ்வைந்து மவ்வாறு மாயையினின்றுந் தோன்றி யான்மாவுக்கு வடிவாய்,—மருவாநந்த விஞ்ஞான மனோபிராணன்னமயம் - முறையே பொருந்திய ஆனந்தமய கோசமும் விஞ்ஞானமயகோசமும் மனோமயகோசமும் பிரா

ணமய கோசமும் அன்னமய கோசமுமாகிய வைவகைப் பெயர் பெற்று,—முன் ஞென்றுச்சொன்று சூக்குமமாய் வருமாமன் னமயம்பற்றி - அன்னமயமுத லொன்றுக்கொன்று சூக்குமமா யன்னமயந் தூலமாய் நிற்க,—அருவா யான்மா - கேவலத்தி லொன்று மின்றி மலமாத்திரையாய் நின்றவான்மா,— ஐங் கோசத்தார்ப்புண் டவற்றி னகம்புறமாம் - இவ் வைங்கோ சங்களி லது வதுவாய் வசிப்புண் டேகதேசியாய்ப் போக்குவ ரவு செய்துநிற்கும்.

இவை மூன்று செய்யுளானும் பசுத்துவ வுபாதியான் ம றைப்புண்டு நின்ற அவ்வறிவிச்சை செயல்கள் பின்ஞெருபுடை விளங்கி, யவத்தை போக்குவரவு முதலிய வுறுதற்குரிய உபா தி கூறுமுகத்தான் வசித்திட வருமாறு தெரித்துணர்த்தப்பட் டது.

மறைஞானதேசிகர் உரை.

இந்தப் பஞ்சகோச மயமாயிருக்கிறசரீரத்தை யான்மாப் பொருந்தி யதற்குவேருய் நின்று நடத்து முறைமை யுணர்த்துகிருர்.

தோற்பாவை கூத்துந்தொல்லை மரப்பாவை யிய க்கமுஞ்சேர்த். தேர்ப்பாரிற் செலவும்வேருய்ச் செலுத் துவோர் செய்திதானும், பார்ப்பாய வேடங்கட்டி யா டுவோர் பரிசும்போலும், மார்ப்பாய காயந்தன்னை யா ன்மாவின் ருட்டுமாறே. (உச)

(இ - ள்.) தோற் கூத்தாடி யானவன் ருேலினுற்செய்த யி

பாவை கூ ராவணன் முதலிய கூத்தைக்கட்டி நடிப்பி த்தும் ப்பதும்,

தொல்லை மரப் பாவையியக்க மும்	பழைமைதாய்த் தொன்றுதொட்டு மரப் பாச்சியைக் கயிற்றின்வழியே யாட்டுவிக்கு முறைமையும்,
சீர்த்தேர்ப்பா லிற்செலவும்	சிற்ப சாத்திரத்தின்படி சிறப்பினையுடைய அக்ஷமுதலிய தெரிந்து போக்குவரவு புரிகையும்,
வேறாய்ச் செலுத்துவோர் செய்திதானும்	சிற்பாசாரியானவ னிவையிற்றைச் செய்யினு மவையிற்றுக்குத் தான்வேறாய் நின்று செலுத்து முறைமைபோலவும்,
பார்ப்பாயவேடங்கட்டி யாடுவோர் பரிசும் போலும்	வெகுரூபமருவிப் பிராமணர் முதலாயின கூத்துக்களைக் கட்டி நடிக்கிறவர்கள் முறைமைபோலவும்,
ஆர்ப்பாய காயந்தன்னை யான்மா நின்றூட்டுமாறே.	ஆன்மாவு மிந்தப் பந்திக்கப்பட்ட சரீரத்தைக் கன்மானுகுணமாக வெடுத்துக்கொண்டதற்குவேறா யிந்திரியங்களைக் கொண்டே சேட்டிக்கு முறைமையு மப்படி. எ-று.

சிகரமுதலிய தேர் பத்துவித முண்டாகையாற் சீர்த்தேரெனச் சிறப்பித்தார்.

இதற்குச் சிந்தியமுங் காந்தபுராணமு மெனவறிக, (உ௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் தேகமானது யந்திரமும் தேகியானவன் யந்திரியு மென்ப துணர்த்துதல்.

தோற்பாவைக் கூத்துந் தொல்லைமரப்பாவை யியக்கமுஞ் சீர்த்தேர்ப்பாலிற் செலவும் வேறாய்ச் செலுத்துவோர்

செய்திதானும் - ஆன்மாவானது தேகத்தைச் சேட்டிக்கும்படி யெப்படி யென்னில்? தோலினால் மரத்தினால் பண்ணப்பட்ட ரூபங்களை × சூத்திரிகனானவன் ஆட்டுவிக்கிறாப் போலும் தேரானதை யந்திரிக னடத்தினாற் போலுவும் ஆன்மாவானவன் இந்த தேகத்திலே நின்று சேட்டிப்பன்.— பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசுபோலு மார்ப்பாய காயந்தன்னை யாண்மாநின் றாட்டுமாறே - பலபலவேடங்கட்டி யாடுகிற கூத்தாடிகளைப்போல்ஆன்மாவுங் கன்மத்துக் கீடாகத் தன்னைப் பந்திக்கப்பட்ட வெண்ணிறந்த சரீரங்களிலு மதுவதுவாய்நின்று நடிக்குமென் றிதன்பொருள்.

× சூத்திரிகன் - ஆட்டுகிறவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

பஞ்சகோசத்துக்கு ஆன்மா அன்னியனாய்ப் பஞ்சகோசத்தைப் பிரேரிப்பனென்பது படிக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அன்னமயகோசமுதலிய வைந்தினும் ஆன்ம வேற்றுமையின்றி நின்று செலுத்துமாறு, முறையே தேர்ப்பாரிற் செலவும் மரப்பாவை யியக்கமுந் தோற்பாவைக் கூத்தும் வேறுப்ச் செலுத்துவோர் செய்தியும் வேடங்கட்டி யாடுவோர் பரிசும் போலுமென்பதாம்.

வேறுப்ச் செலுத்துவோர் செய்தியென்றது பரகாயப்பிரவேசத்தை.

இனவமூன்றையே முறையே ஒன்றற்கொன் றந்தரங்கமாய் அவ்வைவங்கோசங்களினு மான்மா நின்று செய்யுமாற்றிற்கு உவமையாமாறு தெரிந்துணர்ந்துகொள்க.

செய்யுளாகலின் முறை பிறழவைத்தார்.

காயம் சாதியொருமை.

இதனானே ஆன்மா அங்ஙனம் வசித்திடவரினும், அவ்வேகதேசப்பொருள்கட்கு வேருய் வியாபியெனும் வழக்குடையனுதல் அவற்றைச் செலுத்துமாற்றின்வைத் துணர்த்தப் பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொல்லப்பட்ட வான்மா, இந்தத் தேகத்திற்கு உள்ளும் புறம்புமாய் நின்று இந்தத் தேகத்தைக் காரியப்படுத்து முறைமை மேலருளிச் செய்கிறுர்.

தோற்பாவைக்கூத்தும்-தோற்பாவையினது கூத்தாட்டும்,—தொல்லைமரப்பாவையியக்கமும் - பழையதாய் வருகிற மரப்பாவையினது சஞ்சரிப்பும்,—சீர்த்தேர்ப்பாரிற் செலவுட்- அழகிய தேரின் பகுதியிலுள்ள போக்கும்,—வேருய்ச் செலுத்துவோர் செய்திதானும் - இங்ஙனஞ் சொல்லப்பட்ட விவையிற்றுக்கு வேருயிருந்து இவையிற்றைச் செலுத்துகிறவர்கள் முறைமையுட், இவையன்றியும்,—பார்ப்பாய வேடங்கட்டி யாடுவோர் பரிசுபோலும்-பிராமணிய முதலாயுள்ள பலவேடங்களைக்கட்டி யாடுகிற கூத்தாடி முறைமையும்போலும்,—ஆர்ப்பாயகாயந்தன்னை யான்மாநின் ருட்டுமாறே - கன்மத்துக் கிடா

கப் பந்திக்கப்பட்ட தேகத்தை ஆன்மாக் கூட்டிநின்று ஆட்டு கிற முறைமையும் இத்தன்மைத்து.

இதனாற் சொல்லியது, தோற்பாவையையு மரப்பாவையை யும் தேரினையும் இவையிற்றை யியற்றுகிறவன் வேறாய்நின்று யி யற்றுகிற முறைமைபோலவும், பல கோலங்களைச் சமைந்து அந்தந்தக் கோலந் தானாய் நின்று ஆடுகிற கூத்தாடி முறைமை போலவும், பந்திக்கப்பட்ட காயத்தை ஆன்மாநின் றூட்டுகிற தன்மையும் என்னு முறைமையு மறிவித்தது.

'அசித்தருவியாபகம்' 'மாயையின்' 'சூக்கமதேகி' 'மருவா னந்தம்' 'தோற்பாவை' ஆக ஐந்து திருவிருத்தமும் சேஷன்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆர்ப்பாய காயந்தன்னை யான்மா நின்று ஆட்டுமாறு - பந்திக்கப்பட்ட அன்னமய கோசமுதலிய வைந்தினு மான்மா வேற்றுமையின்றி நின்று செலுத்துமாறு,— தேர்ப்பாரிற் செல்லும் - இவைமுறையே யன்னமயகோசத்திற் சிறப்புடை யதேரைப் பாரிற் செலுத்துவோர் போலும்,— தொல்லைமரப் பாவை யியக்கமும்-பிராணமய கோசத்திற் பழய மரப்பாவை யினை யியக்குவோர் போலும்,—தோற்பாவை கூத்தும்-மனோ மய கோசத்தின் தோற்பாவையை யாட்டுகிறவர் போலும், — வேறாய்ச்செலுத்துவோர் செய்திதானும்-விஞ்ஞானமயகோச த்திற் பரகாயப் பிரவேசஞ் செய்வோர் போலும்,— பார்ப் பாய வேடங்கட்டி யாடுவோர் பரிசுபோலும் - ஆனந்தமயகோ சத்திற் பலவேடங்கட்டி யாடுவோர் பரிசுபோலுமாம்.

இவைமூன்றையே யொன்றற்கொன்று அந்தரங்கமான அவ்வைங்கோசங்களினு மான்மாநின்று செய்யுமாற்றிற் குவமையாமாறு தெரிந்துணர்ந்து கொள்க. ஆன்மா வங்ஙனம் வசித்திட வரினு மவ்வேகதேசப் பொருள்கட்குவேருய் வியாபியெனும் வழக்குடையனுதல் அவற்றைச் செலுத்துமாற்றினைத் துணர்த்தப் பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மே லிச்சரீரத்துக் கான்மா வேறென்
றுணர்த்துகின்ருர்.

என்னுடல் பொறிபிராணன் கரணமென் னுணர்
வென்றக்காற், றன்னின்வே றுகுநீயென் றன்மனையெ
ன்றவெல்லா, நின்னின்வே றுகுமென்னி னீங்கிடா வி
வைபிங்கென்னி, லுன்னின வாகிநீயா முகிர்மயி ருகவு
ங்காண்டி. (உரு)

(இ-ள்.) என்னுடல் பொறி பிராணன் கரணமென் னுணர்வென்றக் காற் றன்னின் வேருகும் — தற்கிழமையாகச் சொல்லப்பட்ட வென்னுடைய சரீர மிந்திரியம் வாயு கரண மறிவென் றொருவன் சொன்ன விடத் தவைக ளெல்லா மவனுக்கு வேரு யிருக்கும். இஃதன்றி,

நீயென்றன் மனையென்ற வெல்லா நின்னின்வேருகும் — பிறிதின் கிழமையாக வரப்பட்ட வெனது நிதியெனவு மெனது வீடெனவு நீ பிரித்துச் சொல்லப்பட்ட விவைகளெல்லாத்தையும் விசாரித்தறியி லவையுனக்கு வேருகும்;

என்னி னீங்கி டாவிவையிங் கென்னின்	அப்பொழு திவைகளெல்லா மென்னைவி ட்டுநீங்காதுகாணுமென்று நீ சொல்லில்?
உன்னினவாகி நீயாம்	கருதப்பட்ட தனுகரணங்களெல்லா நீயா மாகில்
உகிர்மயி ருரவு ங்காண்டி.	என்னுடையதென் றபிமானம் பண்ணப் பட்ட நகங்கள் விழுந்தபோதும் மயிரை வ பனம்பண்ணித் தள்ளினபோது மதனைத்தி

ண்டி ஞற் கை சழுவவென் ருசாரங் காண்கையால் இவையெ ல்லாநீ யல்லகாண். எ-று.

எல்லா மென்பதனு லென்னுடைய கிராம மெனது பசு மாடு முதலாயின வெனவறிக.

இந்த விருத்த முதலாக 'அறிவுடல்'என்ப தீருக வைந்து க்குஞ் சிந்தியாகமம். (உநி)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிந்த தேகாதி ஆன்மாவுக் கன்னியமென் றுணர்த்து தல்.

என்னுடையதேகம் என்னுடைய ஞானேந்திரியம் என்னுடை ய பிராணவாயு என்னுடைய மனோபுத்தி யகங்கார சித்தங்க ள் என்னுடைய வறிவென்று சொல்லுகையால் உனக்கிவை வே றும். அதெவ்வா றென்னில்? நீ என்மனை என்மாடு என்பிள்ளை என்று சொன்ன தெல்லா முனக்கு வேறானதுபோல அப்படி யே இந்த தேகமெனக்கு வேறாக நீங்கக்காணேனே என்னில்? தேகமே நீயென்றாயே! தேகத்திலே ஏகதேசமான நகமும் மயிரும் பல்லும் சழலக் காண்கையா லிந்த தேகமு மவ்வாறே

சழலும். உன்னுடைய மாதாபிதாக்கள் மரிக்க, அந்த தேகமிருக்க, அந்ததேகத்தைக் கட்டிக்கிடந்து மாதா பிதாக்கள் செத்துப் போனார்களென்று துக்கப்பட் டந்த தேகத்தைச் சாம்பலாகச் சுடுதலுஞ் செய்தாயே! ஆதலா லிந்ததேகம் ஆன்மாவல்லவென் றறிவாயாகவென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பின்னும் பஞ்சகோசங்க ளான்மாவுக் குடைமைப் பொருளாகப் படுத்தப்படு மாதலாற் பின்னைப் பொருள்களொன்று பேசுகின்றார்.

இவை - சரீராதிகள்,— உன்னினவாகுநீயாம் - உன்னுடையதாகிய நீ நானென் றபிமானித்ததாகும்,—உகவும் - நீங்கவும்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

தன் மனைமுதலியவற்றோ டொப்ப எனதென்று வழங்கப் பட்டுச் சில நீங்குதலுங் காணப்படுதலால், இதனானும் ஆன்மா வவற்றிற்கு வேறென்பது அறியப்படுமென்பதாம்.

உன்னினவென்பது இன் சாரியை பெற்ற வகரவீற்றுப் பலவறிசொல்.

அற்றேல் உடல்பொறி முதலியவற்றை எனதென்பது, தன்மனை முலியவற்றை எனதென்றதுபோலன்றி இராகுவினதுதலையென்றாற்போல அபேதம்பற்றிக் கூறும் கருத்தேயாகவி

ன், உரைப்போர் குறிப்பொடுபடுத்துக் காணுங்கால் அவ்விரு வகை வழக்கிற்குந் தம்முள் வேறுபாடுண்மையின், அவைதம்மு ளொக்குமாறு யாங்ஙன மென்பாரை நோக்கி வே றுவமையெ டுத்துக்காட்டி யுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலுலோகாயதன் இந்தச் சரீரத்துக்கு வேருயிருப்ப தொ ரு ஆன்மா வில்லையென்று சொல்ல,அவனை மறுத் தருளிச்செய் கிருர்.

என்னுடல் பொறிபிராணன் கரணமென் னுணர்வென்றக் காற் றன்னில்வேருகும் - என்னுடையதேகம் என்னுடைய விந் திரியம் என்னுடையவாயு என்னுடைய கரணம் என்னுடைய வ றிவு என்று சொன்னபொழுது இவையெல்லா மப்படிச் சொல் லுகிறவனுக்கு வேருயிருக்கும்,—நீயென் றன்மனை யென்ற வெல் லாம் நின்னில்வேருகும் என்னில் - நீயென் வீடு என்மாடு என்ன டிமை என்கிற விவையெல்லா மப்படியே யுனக்கும் வேருயிருக் கும் என்னில்?—நீங்கிடா விவையிங்கென்னில் - அவைபோல விவையெல்லாம் என்னைவிட்டு நீங்காதென்று நீ சொல்லில்?— உன்னினவாகி நீயா முகிர்மயிருகவுங்காண்டி-உன்னுடைய கா யமுநீயாயிருக்கிற வுகிரு மயிரு முதிர்ந்து போகவுங் காண்கிரு யாகலால் இவையெல்லாம் நீயல்லவென் றறிவாயாக.

இதனுற் சொல்லியது, சரீரத்துக்கு வேருயிருப்ப தொரு ஆன்மா வில்லையென்று சொல்ல, பலபிரகாரத்தாலும் சரீரத்து க்கு வேருயிருப்பதொரு ஆன்மா வுண்டென்று முறைமை யு றிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நீ என்றன் மனையென்றவெல்லா நின்னின் வேருகும்- என்பதி என்மனைவி என அபேதமாய்வழங்கி வந்தனவெல்லாம் உனக்குவேருதல் கண்டாற்போல,—என்னுடல் பொறி பிராணன் கரண மென்னுணர்வென்றக்கா னீதன்னின் வேருகும்-உனதன்ருகிய உடல்பொறி பிராணன் கரணங்களைத் தனித்தனி யெனதென்று மங்ஙன முணர்ந்த பாசவுணர்வை யென்னுணர் வென்றும் அபேதமாகக் கூறிக்கொண்டு நீயவைகளின் வேருய் நிற்றிகாண்,—இவையிங்கென்னி னீங்கிடா வென்னின் - பதி மனைவி முதலியபுறப் பொருள்களை யென்னின் வேருதல்கூடும், உடல் பொருள் முதலியவை யென்னின் விட்டுநீங்குவதின்றென்னின்?— உன்னின்வேருகுநீயா முகிர்மயி ருகவுங்காண்டி - உன்னுடையனவாகிய பேதமாய் எனதென்று வழங்கப்பட்டு நகமயிர்முதலிய சில நீங்கப்படுதலா னிதனுனு மான்மா அவற்றிற்கு வேறென்பது அறியப்படும்.

மறைஞானதேசிகர் உரை.

இதவுமது.

பொன்னணி யாடைமாலை போதுமே லானபோதிங், கென்னணி யானென்றுன்னி யிருந்தனை பிரித்தபோது, நின்னணி நீயுமல்லை யாயின காயநின்னி, னன்னிய மாகுமுன்னை யறிந்துநீ பிரிந்துபாரே. (உசூ)

(இ-ள்.) பொன் பொன்னாற் செய்யப்பட்ட வாபரணமுமணியாம், அஃதெழுதப்பட்ட வாடையும் நல்லமா

டை மாலை போது மேலான போது	லையினையும் மணம்பொருந்திய பூவினையுந் தரித்திருந்தபொழுது,
இங்கென்னணி யானென்றுன்னி யிருந்தனை	இவ்விடத்திலுன்தரித்த தென்னுடைய வாபரணமென்று மதனானென்றுநினைத்து நீதானே வேறொன்றையும் விசாரித்தா யில்லை காண்.
பிரித்தபோது நின்னணி நீயுமல்லை யாயினை	நீயணியப்பட்ட விவைகளெல்லாத்தையும் வாங்கிக் கடக்கவைத்தபோது நீயந்தவணியல்லவாய் விட்டா யாகையா லுவமித்துச் சொல்லியது.
காயநின்னி லன்னியமாகும்	அதுபோல உன்னுடைய தேகமு முனக்கு வேறாயிருக்குங்காண்.
உன்னையறிந்து நீ பிரிந்துபாரே.	இப்படியாயிருந்ததென் றுன்னுடைய வுண்மையையறிந் திந்த தேகத்துக்கு வேறாக வோரான்மா வுண்டென்று தரிசனப் படுவாயாக எ-று. (உசு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேலு மதற்கே யுதாரணம்.

பொன்னாற் சமைக்கப்பட்ட வாபரணங்கள் பட்டுமுதலாகிய வாடைகள் சந்தனம் பூமாலை இவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பொழுது என்னுடைய வாபரணாதிகளென்றும் யானிதற் குடையனென்று மிருந்தாயே! அதை யொருவர் கொண்டுபோக வது வுன்னுடைய உடைமையு மல்லாமல் நீ யதற்குடையவனுமல்ல வானாயே! அவ்வாறு தேகம் நீயல்ல உனக்கன்னி

யமாகுமென்பதை யறிந்து,தேகேந்திரியாதிகளைப் பிரிந்து நின்னுடைய வுண்மைகளை யறிவாயாக வென்றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இதுவுமது.

சுவசம்வேதனப் பிரத்திபக்ஷத்தினால் உன்னைச் சித்ருபனாயறிந்து பிறிந்து சரீரத்தை சடரூபமாகப்பாரே.

மற்றவைவெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

உடல்பொறி முதலியவற்றை எனதென்றல், இராகுவினதலை யென்றாற்போலச் சிறுபான்மை வழக்கமாதலின்றிப் பெரும்பாலும் யாண்டும் யாரும் வழங்கக்காண்டலின், அவற்றை யபேதம்பற்றிபகருத்தாலெனதென்றன் மெய்ப்படுத்த அணிகல முதலியவற்றை யவ்வாறெனதென்றல்போல அறிந்து பிறிந்து பாராத மடமையே பிறிதன்றென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

மீளவு முடல்வேறு நீ வேறு யென்னு முறைமையை விசாரித்துப் பார்த்து அறியென்று அருளிச்செய்கிறார்.

பொன்னணியாடைமாலை போதுமேலானபோது-பொன்னாலே செய்யப்பட்ட ஆபரணமும் புடைவையும் மாலையும் பூக்களும்

நீயணியப்பட்டபோது,—நீ யிங்கென்னணி யானென்றுன்னியி ருந்தனை- இவ்விடத்திலே என்னுடைய வாபரணமென்றும் யா னென்றும் நினைத்திருந்தாய்,—பிரிந்தபோது நின்னணி நீயு மல்லவாயின - அவையிற்றை வாங்கினபோது நீ யணியப்பட்ட வாபரண முதலானவை யெல்லா நீ யல்லவாய் விட்டது. அது போல,—காயநின்னி லந்நியமாகும் - தேகமும் உனக்கு வேறா யிருக்கும்.—உன்னையறிந்து நீபிரிந்துபாரே - ஆகையா லுன்னு டைய வுண்மையை யறிந்து இவையிற்றை நீங்கி நின்று காண் பாயாக.

முன்னின்ற திருவிருத்தமும் இதுவும் உலகாயதன். இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் ௩-சூ, ௨-வெ, "எனதென்ற மாட் டி லெனதலா தென்றும், தனதலா தன்கைகா லாக்கை - யென தென்று, மென்னறிவதென்று முறைத்துநீ நிற்றிகா, ணுன்னி லவை வேறாமுணர்" என்றும், பரபக்ஷம் அவன் மதம். ௧௧-செ, "காயத்தின் குணமதன்றிக் கண்டதான்மா வுண்டாயின், மா யத்திற் சொல்லிடாதே மனமுத லாறினுக்கும், நேயத்த தாக வேண்டு மன்றியே நிகழ்த்துமுண்மை, தேயத்தின் முயற்கெம் பெல்லை செப்புவோர் செப்தியாமே" என்றும், அவன்மறுப்பு- ௧௰-செ. "அறிவுபூதம தென்னில்வேறு புறத்தறிந்தமை கண்டி லஞ் - செறிவுதானுட லத்தெனிற்சவ மானபோதுடல் சேறு மோ - குறிகொளா துடல் வாயுவானது கூடிடாமையி னென்னி ல்நீ-பிறிதராதுயிர் நிற்கஞான முறக்கமென்பிற வாததே" என் னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பொன்னாலே செய்யப்பட்ட வா பரண முதலானவையிற்றைத் தன்னுடைய சரீரத்திலே தரித் துக்கொண்டிருந்தது அவை தானாயிருந்தும் அவையிற்றைக் கழ ற்றினபோது அவை தனக்கு வேறாயிருக்குந் தன்மைபோலச் சரீ

ரத்தையுந் தன்னையும் விசாரித்துப் பார்த்தவிடத்துச் சரீரமுந் தனக்கு வேறு யிருக்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

பொன்னணி யாடைமாலை போதுமேலானபோது-பொனலுற் செய்யப்பட்ட ஆபரணங்க ளாடைகண் மாலைகள் பூக்கள் முதலிய புறப்பொருள்களை யணிந்தபோது,—இங்கென்னணியானென்றுன்னியிருந்தனை - இவ்விடத் தென்னணி யானென் றபேதம்பற்றிய கருத்தா னினைந்திருந்த நீ,—நின்னணி நின்னின் பிரிந்தபோது நீயுமல்லவா யினை-நின்னா லணியப்பட்ட புறப்பொருள்களாகிய வணிகள் முதலாயின நீங்கியபோது உனக்கு அன்னியமாய் நீயல்லவாயினாற் போல,—காயநின்னி னன்னியமாகும் - உடல்பொறி முதலியவனைத்து மன்னியமாயிருக்கின்ற,—உன்னையறிந்து நீ பிரிந்து பாரே-உன்னுண்மையை யறிந்து நீயிவற்றை நீங்கிநின் றறிவாயாக.

மறைஞானதேசிகர் உரை.

மேலதனை வற்புறுத்தி யுணர்த்துகின்றார்.

உடலியா னல்லேனிந்த வுணர்வியா னல்லவான,
கடனியா தென்னின்வேறு கண்டுணர் வென்னதென்கை,
யிடரிலா வென்றனன்மா வென்றபோ தான்மா
வேறே, கிடனதா வுயிரைவேறு கண்டிடார் செப்பு
லேகாண். (உஎ)

(இ-ள்.) உடலி — இந்தச்சரீர நானல்லவென்றதொக்கும், யானல்லேல நானறிகிற வறிவுகள் நானல்லவென்று நீர்

ணிந்தவுணர்வியானல்லவான கடனியாதென்னின் — சொல்லிய தெக்காரணத்தா லென்று கேட்கிறு யாகில்?

வேறு கண்டுணர்வென்ன தென்கை — என்னுடைய வறிவென்று நீ திடமாக வெப்படிச் சொல்லுகிறுய்? வேறென்றறிவாயாக.

இடரிலா வென்ற ஞன்மா வென்றபோ தான்மா வேரு — குற்றமில்லாதவனே வாராய், இப்பொழு தொருத்த னென்னுடைய வான்மா வென்றுல் ஆன்மா வேறு சொன்னவன் வேறுஅல்லவேகாண்.

திடனதாவுயிரைவேறு கண்டிடார் செப்பலேகாண். — அப்படி யென்னுடைய வான்மா வென்று சொல்லுகிறவர்கள் ஞானசாரியனுலே ஞானதீக்ஷை செய்யப்பட் டான்ம தரிசனப்படாத பேதைகள் சொல்லுகிற தொழிந் தான்மாவி னுண்மையை நன்ருக வறிந்தவர்க ளொன்ஞன்மாவென்று சொல்லார்கள் காண் எ-று.

ஓகாரம் எதிர்மறை. (உ௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—/—o——

மேல் தேகேந்திரியம் அந்தக் கரணங்களைப் பிரிந்து பார்த்திவைக டானல்லவென்றும், இவைகளை யறியப்பட்ட விஞ்ஞானமே யான்மாவென்ன; விஞ்ஞானமு மான்மா வல்லவென்ப துணர்த்துதல்.

உடலியானல்லே ணிந்தவுணர்வியா னல்லவான கடனியாதென்னில் - இந்த தேகேந்திரியங்கள் நானல்ல வென்ப தறிந்

தேன், இப்படியறியப்பட்ட அறிவே நான், இதை நானல்லவான முறைமை யெவ்வாறென்னில்?—வேறு கண்டுணர் வென்னதென்கை-அந்தக்கரணாதிகளை யெல்லாங் கண்டதென்னறிவென்கையால், உன்னுதென்ற துனக்குவேரும்.—இடரிலா யென்றஞன்மா வென்றபோதான்மாவேரே - மகாத்மாவே! என்னுடைய ஆன்மா வென்றபொழுது ஆன்மா வேறேயாமோ வென்னில்?—திடனதா யுயிரைவேறு கண்டிடார் செப்பலேகாண் - சாக்ஷாத்காரமாக ஆன்ம தரிசனப்படாதபேர்கா ணிவ்வாறு சொல்வது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

மேலவையே வற்புறுத்தி யுணர்த்துகின்றார்.

உடலியானல்லேன் - நீர் சொல்லிய முறைமையிற் சரீரேந்திரியங்கள் நானன்று,—

இந்த உணர்வு யானல்லவான கடனியாதென்னில்- அறிவு இருவிதம், நிருவிகற்ப மென்றும் சவிகற்ப மென்றும். அவற்றுள்:—

நிருவிகற்பம், ஆன்ம சிற்சத்தியின தறிதற்றொழிலாய்ப் பின்னமின்றியிருப்ப தீதொன்று. நிருவிகற்பமுள் வைத்த புத்தி விருத்தி பின்னமின்றி யிருப்பதீதொன்று. புத்திவிருத்தி ஞானஞ் சித்சத்தி விருத்திபிற் பிரிந்து நானல்லாதிருந்தாலும் சிற்சத்தி விருத்தியாகிய ஞானம் நானல்லவாகியமுறைமை யேதென்று நீசொல்லில்?

வேறுகண்டு- உடைமை யுடையன் என்னும் பிரிவு கருதி,—

உணர்வென்ன தென்கை - அறி வென்னதென்பது, ஆதலால் அறிவு நானென்பது கூடாது. சத்தி, சத்திமத்தொழிற்

பேதம் பிரிப்பின்றி யுள்ளுண்டென்று சான்றோர் சாற்றுதலால், இப்படி நீர் சொல்லில்?

இடரிலா வென்றனுன்மா வென்றபோ தான்மாவேறே- வேறன்று. அதுபோல் அறிவு வேறன்று. சத்தியம், நீ சாற்றியது வேறல்லவென்பது?

திடனதா யுயிரை வேறு கண்டிடார் செப்பலே காண் - நிச்சிதமாய்த் தற்பொரு ளறிவாய்த் தன்மியாகிய ஆன்மாவைப் பிறப்பொரு ளறிவாய்த் தன்மமாகிய சிற்சத்தியி னின்றும் பிரிவின்றிப் பிரித்தறியாதார் அபேதமாய்ப் பேசுவதேகாண்.

என்றன் என்பதற்குப் பொருள், பிறப்பொரு ளறிவாகிய சிற்சத்திரூப தன்மமாகில், ஆன்மா என்பதற்குப் பொருள் தற்பொருளறிவாகிய சத்திமத்துரூப தன்மி.

என்றன் என்பதற்குப் பொருள் தன்மி லக்ஷியமாகில், ஆன்மா வென்பதற்குப் பொருள் தன்ம லக்ஷணம்.

தற்பொருளறிவாகிய தன்மியும், பிறப்பொரு ளறிவாகிய தன்மமும், ஒன்றுக்கொன்று அது தானே யிதுதானுயும், இது தானே யதுதானுயும் இருத்தலாற் புறம்பிற் பிரிக்கும் பேதமில்லாம லிருந்தாலும், உள்ளே பிரியாமற் பிரிக்கும் பேத முண்டென்று பெரியோர் பேசுவார்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மாவை யெனதென்றல் வேருகக் காணுங் கருத்தின்றி இராகுவினது தலையென்முற்போல ஒருசாரார் கூறுஞ் சிறுபான்மை வழக்காகலின், அபேதபேதம்பற்றிய வழக்கெனவமையும்; விஞ்ஞானமய கோச மானந்தமய கோசங்களை யெனதென்றல் ஏனைக்கோசங்கள் போல வேருகக்காணுங் கருத்தால்

எல்லாரானும் வழங்கப்படும் பெரும்பான்மை வழக்காதலின், அஃதுதுபோல் அபேதம் பற்றிய வழக்கென வமையாமையின், அவையுமேனையபோல உயிரின் வேறேயாமென்பதாம்.

விஞ்ஞானமயகோசம் உயிரின் வேருதல் கூறவே, இனம் பற்றி ஆனந்தமயகோச முயிரின் வேருதலு மதனுற் கொள்ளப் படும்.

உணர்வென்னதென்கை வேறுகண் டாகலான் இந்தவுண ர்வு யானல்லவான கடனெனக் கூட்டுக.

கண்டிடாரென்பது முற்றெச்சம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்தச் சரீரம் நானல்லவென்பது மன்றிச் சரீரத்திலே நி ன்று அறிகிறவறிவு நானல்லவென்ற தெப்படி யென்றவனை மறு த்து அருளிச்செய்கிறார்.

உடலியானல்லே னிந்த வுணர்வுயானல்லவான கடனியா தென்னில்-இந்தத் தேகந்தான் நானல்ல, இந்தத் தேகத்திலே நின்று அறிகிறவறிவும் நானல்லவான முறைமையை யெப்படி யென்னில்?—வேறு கண் டுணர் வென்னு தென்கை - என்னு டைய வறிவென்று நீவேருக வனுபவித்துச் கண்டு சொல்லுகை யாலே,—இடரிலா யென்றனுன்மா வென்றபோ தான்மாவே று - துயரமில்லாதவனே! என்னுடைய வான்மா வென்றபோ து நானென்றும் ஆன்மாவென்றும் வேறுண்டோ! எல்லா மந் த வான்மா தன்னைக் காணும் இந்தமயக்கம்,— திடனதாவு யிரைவேறு கண்டிடார் செப்பலேகாண்- உண்மையாக வான் மாவைப் பிரித்துக் காணமாட்டாதவர்கள் சொல்லுகிற வார் த்தைகாண் நீ சொல்லுகிறது.

இதனாற் சொல்லியது, சரீர மான்மாவல்லவாயின் இந்த வறிவு மான்மா வல்லவோ வென்ன, என்னறிவு என்கையால் அறிவு மான்மாவல்ல வென்றும், என்னான்மாவென்றால் அது கொண் டிவனுக்கு வேறாவென்று நீசொன்னது ஆன்மாவினு ண்மை தரிசனப்படாதவர்கள் சொல்லுகிற வார்த்தைகாண் எ ன்னுமுறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இடரிலா வென்றனான்மா வென்றபோ தான்மா வேறா- ஆன்மாவைக் குற்றமில்லாத வென்னுடைய ஆன்மா வென்ற போது யான்வேறு ஆன்மாவேறு அன்றாகவு மெனதென்றல்,— திடனதா யுயிரைவேறு கண்டிடார் செப்பலேகாண் - உறுதி யாக வுயிரைவேறாக்காணும் கருத்தின்றி யிராகுவினது தலை யென்றாற்போல ஒருசாரார் கூறும் சிறுபான்மை வழக்காக லின், அஃதபேதம் பற்றிய வழக்கென அமையும்,—இந்தவுணர் வுபானல்லவான கடனியா தென்னின் - இந்தவிஞ்ஞான மய கோசம் ஆனந்தமயகோசங்களை யானல்லேனாகிய முறைமை யாதென்னின்?— உணர்வென்ன தென்கை வேறுகண்டு - இவ் விருவகைக் கோசங்களை யெனதென்றல் ஏனைக்கோசங்கள் போல வேறாகக் காணும் கருத்தால் எல்லாரானும் வழங்கப்படு ம் பெரும்பான்மை வழக்காகலின் அஃதுபோல பேதம்பற்றி ய வழக்கென அமையாமையின் அவையும்,—உடலியானல்லேன் வேறு-உடல்பொறி முதலியனபோல உயிரின்வேறேயா மென் பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலுமவனைப்பார்த் துன்மட்டல்லகாண், அறிவில்லாதார் சிலரிப்படியுஞ் சொல்லுவார்களென்று மோசக் கொண்டாட்ட முணர்த்துகிறார்.

புந்தியை மனமதென்று மனமது புந்தியென்றுஞ், சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச்சிந்தையென்று, புந்தனை யான்மாவென்று மான்மாவை புந்தனென்றும், வந்திடு மென்றனுன்மா வென்றது மற்றொன்றைக்காண். (௨௮)

(இ-ள்) புந்தியை மனமதென்றும்	ஓரிடத்திலே புந்தியைமனமென்றும் மனமது புந்தியென்றும், அம்மனத்தை யோரிடத்திலே புத்தியென்றும்
சிந்தையைச் சீவனென்றும்	ஓரிடத்திலே சித்தத்தை யான்மாவென்றும்
சீவனைச் சிந்தையென்றும்	ஓரிடத்திலே யவ்வான்மாவைச் சித்தமென்றும்.
புந்தனை யான்மா வென்றும்	காரணங்களுக் கொல்லாம் பரமகாரணனாகிய சிவனை யோரிடத்திலே யான்மாவென்றும்.
ஆன்மாவைபுந்தனென்றும்	அவ்வான்மாவை யோரிடத்திலே சிவனென்றும்.
வந்திடும்	இப்படியோர வசரங்களிலே யுபசாரமாகவுஞ் சொல்லப் படுங்காண்.
என்றனுன்மா,	என்னுடைய வான்மாவென்று நீ மூற்கூறி

வென்றது மற் யதுமதிபேதத்தால்வேறேயொருபொருளை ரூென்றைக் கா க்காண் எ-று.
ண.

இஃதன்றிப் பாரதத்து மவதரப்பெயர்க ளாகச் சொல்லும். அஃதாவது. தற்காலோசித மானபொருளைக் கிருகிக்கிற ஞானம் புத்தியெனப்பெறும், மேல்வரப்பெற்ற பொருள்களை யறிகிறவறிவு மதியெனப்பெறும், யாதாமொருவன் முன்சொன்ன காரியங்களையறியுமறிவு மிருதியெனப் பெறும், முற்காலத்தி லுண்டாய வியாபாரத்தை யறியாநிற்கிற வறிவு பிரஞ்ஞை யெனப் பெறும், இந்தப்பிரஞ்ஞைதானே முக்காலத்து மறிவு மிகுந்திருந்தால லந்த வறிவு பிரதிபை யெனப்பெறு மெனவறிக. (உ௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

என்னறிவென்று சொன்னது விஞ்ஞானத்தைக்காண். என்னுன்மா வென்றது தன்னைச் சொன்னதன்று, பரமான்மாவை யென்பது மேலுணர்த்துதல்.

புந்தியை மனமதென்றும் - இது காரணலக்ஷணை. அஃதாவது? காரியகாரண பேதோபசாரத்தினாலே காரியத்தைக் காரணமாகக் கூறினது,—மனமது புந்தியென்றும் - இது காரியலக்ஷணை. அஃதாவது? காரணத்தைக் காரியமாகக் கூறியது,— சிந்தையைச் சீவனென்றும் - இது சமீபலக்ஷணை. அஃதாவது? கங்கைக்கரையிலே யிருக்கிற பேரைக் கங்கையிலே யிருக்கிறார் களென்று சொல்லுவதுபோல,— சீவனைச் சிந்தையென்றும் - இது * தர்மானுகிருதி லக்ஷணை. அஃதாவது ஆணவத்தைச் செலுத்துகையினாலாதிசத்தியைப் பாசமென்றது போ

ல.—முந்தனையான்மாவென்றும் - இது அங்காங்கி லக்ஷணை,— ஆன்மாவை முந்தனென்றும்-இது ஆதாரலக்ஷணை. அஃதாவது † மஞ்சா ‡ குரோசந்தி யென்றதுபோல,—வந்திடும்-ஆகையா லிவைகள் முக்யார்த்தமுமல்ல கௌணார்த்தமுமல்ல, § லா க்ஷணி கார்த்தமாக விவ்வாறு வரும்.

तद्धर्मं धर्मिधर्मेत्र — श्रूयाणे कारणे का र्ये वस्तुन्येवोपचारके । यत्रात्मा न कृ तस्मिन्वक्ति लक्षणां स्वरयोजनः ॥ इति.

அங்காங்கி யென்றது அதிபத சத்தியால் கூறப்பட்டது. என்றனான்மாவென்றது மற்றொன்றைக்காண்-என்னுடை ய ஆன்மாவென்றது ஏகனாகி யநேகான்மாக்களுக்கும் பிராண னாய் நின்ற பரமான்மாவைக் காண். இருதயத்தைத் தொட்டு நானென்கிறபொழு தந்த இருதயவாசியாயிருக்கிற சீவான்மா வானதுபோல வென்னுடைய ஆன்மாவென்றது சீவான்மாவி லே அந்தர்யாமியாய் நின்று பரமான்மாவையே என்றிதன் பொருள்.

* தர்மாநுகிருதி-தருமத்தை பொக்குதல், †மஞ்சா-கட் டில், ‡ குரோசந்தி - கூப்பிடுகிறது § லாக்ஷணிகம்-லக்ஷ ணையால் வந்தது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அதுவன்றியு மவ்விடத் தான்மா வென்றது இலக்கணையி னாலே பின்னப்பொருளு மாமென்று பேசுகின்றார்.

புந்தியை மனமதென்றும் - காரியலக்கணையினாலே புத்தி யை மனமென்றும்,— மனமது புந்தி யெனறும் - காரணலக்க

ணையினாலே மனத்தைப் புத்தியென்றும்,— சிந்தையைச் சீவ னென்றும் - உபகார லக்கணையினாலே சித்தத்தை யான்மா வென்றும்,— சீவனைச் சிந்தையென்றும் - சமீப லக்கணையினா லே ஆன்மாவைச் சித்தமென்றும்,— முந்தனை யான்மா வென் றும் - உபகாரலக்கணையினாலே சிவனைச் சீவனென்றும்,— ஆ ன்மாவை முந்தனென்றும் - தன்மானுகிருதி லக்சணையினாலே சீவனைச் சிவனென்றும்,— வந்திடும் - இலக்கணைகளினாலே பொருளுரைக்கப்படும். ஆதலால்,— என்ற ஞான்மாவென்றது மற்றொன்றைக்காண் - ஆன்மோபகாரகராயிருக்கின்ற சிவனை க்காண்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அல்லதூஉம், உள்ளவாறு நோக்குவார்க்கு என்றனான்மா வென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன்மேருடியையுடைய பிறிதொன்றின்மேல் ஆகுபெயராய் நிற்குமாகலான், அவ்வழ க்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை யென்பதாம்.

ஆகலானவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை யென்பது குறிப்பெச்சம்.

அவ்வா றாகுபெயராய்ஆண்டாண்டு வருதலை யெடுத்துக்கா ட்டுவார், புந்தியை மனமதென்று மனமது புந்தியென்றுஞ் சிந் தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தையென்று முந்தனையா ன்மாவென்று மான்மாவை முந்தனென்றும் வந்திடுமென்றார்.

ஏனைமூவகைக்கோச மாத்திரையே வேறெனக் கொண்டு விஞ்ஞானமயகோச மானந்தமயகோச மிரண்டும் முறையே சீ வான்மாவும் பரமான்வு மாமென்பார் மதத்தை மறுத்தற்பொ ருட்டு, அவற்றை யிங்ஙனம் வேறெடுத்தோதி வலியுறுத்தவாறு

இவைநான்கு செய்யுளானும் உலகவழக்கின்வைத் துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி யென்னுடைய வான்மாவென்றது யானல்ல வென்றதெப்படியென்று கேட்டவனுக்கு, இப்படியென் றருளிச்செய்கிறார்.

புந்தியைமனமதென்றும் - புத்தியை மனமென்றும்,—மனமது புந்தியென்றும் - மனத்தைப் புத்தியென்றும்,—சிந்தையைச் சீவனென்றும் - சித்தத்தை யான்மாவென்றும்,—சீவனைச்சிந்தையென்றும் - ஆன்மாவைச் சித்தமென்றும்,— முந்தனையான்மாவென்றும் - பரமேஶ்வர ஞன்மாவென்றும்,— ஆன்மாவை முந்தனென்றும் - ஆன்மாவைப் பரமேஶ்வரனென்றும்,—வந்திடும் - ஓரோரவதரத்திலே இப்படிச் சொல்லப்படும்.—என்றனான்மா வென்றது மற்றொன்றைக் காண் - என்னுடைய ஆன்மாவென்று நீசொல்லுகிறது வேறேயுனக்குப் பிராணனாயிருக்கிற பொருளைக் காண்.

இதனாற் சொல்லியது, அந்தக்கரணங்களையு மவையிற்றுக்குப் பிராணனாய்நிற்கிற வான்மாவையும் ஆன்மாவுக்குப் பிராணனாய் நிற்கிற பரமேஶ்வரனையும் ஓரோ ரவதரங்களிலே ஒன்றை யொன்றாகச் சொல்லப்படுமென்னு முறைமை யறிவித்தது.

'என்னுடல்' 'பொன்னணி' 'உடலியான்' 'புந்திபை' ஆக நாலு திருவிருத்தமும் உலகாயதன்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

புந்தியை மனமதென்றும் மனமது புந்தியென்றும் - ஒவ்வோரிடங்களிற் புந்தியை மனமென்றும் மனத்தைப் புத்தியென்றும்.—சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தையென்றும் - சித்தத்தை யான்மாவென்றும் ஆன்மாவைச் சித்தமென்றும்,—முந்தனையான்மாவென்றும் ஆன்மாவை முந்தனென்றும் வந்திடும் - காரணங்கட் கெல்லாம் பரமகாரணனாகிய சிவனை யான்மாவென்றும் ஆன்மாவைச் சிவனென்றும் இங்ஙன மொவ்வோர்வசரங்களினு முபசாரமாகக் கூறப்படும்.—என்றனுன் மாவென்றது மற்றொன்றைக் காண் - அல்லதூஉ முள்ளவாறு நோக்குவார்க் கென்றனுன்மாவென்னும் வழக்கில், ஆன்மாவென்றது தன்னோ டியைபுடைய பிறிதொன்றன்மே லாகுபெயராய் நிற்குமாகலான் வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறு இல்லையென்பதாம்.

ஏனை மூன்றுவகைக் கோசமாத்திரையே வேறெனக்கொண்டு விஞ்ஞானமயகோச மாநந்தமயகோச மிரண்டு முறையே சீவான்மாவும் பரமான்மாவு மென்பார் மதத்தை மறுத்தற் பொருட் டவற்றையிங்ஙனம் வேறெடுத்தோதி வலியுறுத்தவாறு

இவை நான்குசெய்யுளானு முலகவழக்கின்மைத் துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய புத்தியாதி, ஆன்மாவைப் பொருந்திக்
காரியப் படுத்துகையா லான்மாவென்பதற்
கு திட்டாந்தமிட் டுணர்த்துகிறுர்.

அறிவுடல் சிந்தையான்மா வணைதலா லான்மா
வென்ப, வெறிசுடர் விளக்கிருக்கு மிடத்தையும் விள
க்கென்றற்போல், பொறிபுலன் கரணமெல்லாம் புல
ப்படும் பேதமாகிப், பிறிதரா தறிவதான்மா வறிபொ
ருள் பின்னமாமே. (உகூ)

(இ-ள்.) அறிவுடல் சிந்தையான்மா வணைதலா லான்மாவென்பர் — இந்திரியங்கள் சரீரங்கள் அந்தக்கரணங்கள் இவைபொருந்திக் காரியப்படுத்துமதொழிந்து இவைகளுக் கான்மா வென்னும் பெயரெப்படிப் பொருந்துமென்று சொல்லின்? அவைகளைக் கலந்து நின்ற வைக்கியத்தினலே ஆன்மாவென்று சொல்லுவர்கள் காண். அவைதென்போல வென்னில்?

எறிசுடர் விளக்கிருக்கு மிடத்தையும் விளக்கென்றற்போல் — பிரகாசம்விட்டு விளங்காநின்ற விளக்கிற் காதாரமாகிய தானத்தையும் விளக்கென்றுபசாரத்தாற் கூறுவதுபோல. ஆயி னவ்விரண்டு மொன்ருமோ வென்னில்? அன்று.

பொறிபுலன் கரணமெல்லாம் புலப்படும் பேதமாகி — இந்திரிய விஷய மந்தக்கரண முதலானவைகளெல்லா மான்மாவுக்கு வேருய் நின்று காரியப்படும். ஆனலிவைகளுக்குப் பின்னமாய் நின்று காரியப்படுத்துமோ வென்னில்?

பிறிதரா தறிவதான்மா — ஆன்மா விவைகளைப் பிரியாமனின்று பிரயோசனங்களைக் கொள்ளுவன். அறிவானு மறியப்படும் பொருளு மொன்ருேவென்னில்?

அறிபொருள் பின்னமாமோ. — இவனு லறியப்பட்ட பொருள்களெல்லா மிவனுக் கன்னியமா யிருக்குங்காண். எ-று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலும் தேகாதி விஞ்ஞானபரியந்த மான்மா பொருந்தி நிற்கையால் ஐக்கியத்தினு லிவைகளை யான்மாவென்ப தொழிந்து அவைக ளான்மா வல்லவென்ப துணர்த்துதல்.

அறிவுடல்சிந்தையான்மா வணைதலா லான்மாவென்பரொ றிசுடர் விளக்கிருக்கு மிடத்தையும் விளக்கென்றுற்போல் - விஞ்ஞானாநந்த மயமாகிய காரண சரீரத்தையும் மனோமயமாகிய சூக்கும சரீரத்தையும் அன்னமயம் பிராணமயமாகிய ஸ்தூல சரீரத்தையும் ஆன்மா பொருந்தி யிருக்கையால் அவைகளையும் ஆன்மாவென்று சொல்லுவார்கள். அதெவ்வாறென்னில்? மிகுந்த பிரகாசத்தை யுடைய விளக் கிருக்குந் தகளியை விளக்கென்றுற்போல்.—பொறிபுலன் கரணமெல்லாம் புலப்படும் பேதமாகி யறிபொருள் பின்னமாமே - (பேதமாகி யென்றபதம் நடுநிலைத் தீபம்) விஷயங்களும் ஞானேந்திரியங்களும் அந்தக்கரணங்களும், எல்லாமென்னவே விஞ்ஞானேச்சாப் பிரயத்தினங்களும், ஆன்மாவுக் கன்யமாகவே விஷயீகரிக்கப்படும். அன்யமாக வறிந்த பொருளெல்லாம் ஆன்மாவுக் கன்யமே யொழிய ஸ்வரூபமல்ல. ஆகில் சிவன் * ஞேயமும், ஆன்மா †ஞாதாவும்என்னும் பொழுது, சிவனுக்கு மான்மாவுக்கும் சாக்ஷாத் அன்யமே யென்னில்?—பிறிதரா தறிவதான்மா - ஆன்மா சிவனைப் பிறிவறவே யறியும். அதெவ்வாறென்னில்? ஜிஂவையான து தன்னிடத்திலுள்ள ரசத்தைத் தானன்யமாகவே யநுபவிக்கு மாப்போல.

* ஞேயம் - அறியத்தக்கது, † ஞாதா-அறிகிறவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

திரும்ப உபகாரியோபகாரகாசே யாதார விலக்கணைகளி ஞலே அறிவுமுதலாகியவை யான்மாவென்று சொல்லப்படுமெ ன்று சொல்லுகின்றார்.

அறிவு- இந்திரியம், புத்தி விர்த்திப் பிரகாசமுமாம்.—உட ல்-தூலசரீரம்,—சிந்தை-சித்தம், அதனாற் காண்பிக்கப்படு மக ங்காராதிகளுமாம். இவைகளை,—ஆன்மா அணைதலால்- பொரு ந்துதலால், அவைகளை ஆதாரலக்கணையினாலே,—ஆன்மாவென் பர் - அதென்போலென்னில்?—எறிசுடர் விளக்கிருக்கு மிடத் தையும்-தகளியையும்,—விளக்கென்றாற்போல்,— பொறிபுலன் கரணமெல்லாம்-புறக்கரணமாகிய விந்திரியங்கள்,சன்மமாகிய சத்தாதிவிடயங்கள், அந்தக்கரணமாகிய மனம் புத்தி யகங்கா ரங்கள் முதல் முற்றும்,—புலப்படும்பேதமாகி-ஆன்மாவுக் கன் யமாயும் ஒன்றுக்கொன்று வேறுயுமறியப்படும்.—பிறிதராதறிவ தான்மா-வியாபித்துஅறியப்படும் பொருளைக்காண்பதுஉயிர்.— அறிபொருள் பின்னமாமே - அறியப்படும் பொறி முதலியன கன்ம மாதலால் வித்தை கரணமாக அறியுங் கர்த்தாவுக்கு வேறுதானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

ஆன்மாவின் வேறுகிய வவ்வைங்கோசங்களை ஆன்மாவெ ன வுபநிடதங்களிற் கூறியதூஉம் விளக்குத் தகழியை விளக்கெ ன்றாற்போலத் தா னிபாகு பெயராதற் குரிய விபைபுபற்றியே யன்றிப் பிறிதில்லை யாகலால், அவை யெல்லாவற்றின் கண்ணு

ம் அபேதமாய்ப் பிறிதலின்றி யறிவதாகிய வான்மா அவற்றி ற்கு வேறென்பதாம்.

அறிவுடல் சிந்தையென்றதும் பொறிபுலன் கரணமென்ற தும் உபலக்கணம்.

எல்லாவற்றின்கண் ணென்னும் ஏழாவதும் அறிபொருட் கென்னும் நான்காவதும் விகாரத்தாற் ருெக்கன.

அபேதமாகிப் பிறிதராதென்றது "ஞான திரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றல்" என்ருற்போலக் கொள்க.

இதனுனே ஐங்கோசங்களை யான்மாவென்னு முபநிடத த்திற்குத் தாற்பரியங்கூறி மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலசேதனமாயிருக்கிற வந்தக்கரணங்களைச் சேதனமா யிருக்கிற வான்மாவாமென்று சொன்ன தெப்படியென்ற மா ணுக்கனை நோக்கி அருளிச்செய்கிருர்.

அறிவுடல் சிந்தையான்மா வணைதலா லான்மாவென்பர்- ஞேந்திரிய வந்தக்கரணங்களை ஆன்மா பொருந்தி நிற்கையா லே அவையிற்றையும் ஆன்மாவென்று பெரியோர் சொல்லுவார் கள். அதென்போலவென்னில்?--எறிசுடர் விளக்கிருக்கு மிடத் தையும் விளக்கென்ருற்போல் - விட்டு விளங்காநின்ற பிரகாச த்தையுடைய தீபமிருக்கிற விடத்தையும் தீபமென்று சொல்லு கிருப்போல. ஆனுலான்மாவும் தத்துவங்களும் தன்னிலொன்று பட்டிருக்குமோ வென்னில்?—பொறிபுலன் கரணமெல்லாம் பு லப்படும் பேதமாகி - இந்திரியங்கள் விஷயங்கள் அந்தக்கரண ங்கள் இவையெல்லாம் ஆன்மா ஒருவிஷயத்தை யறியுமிடத்

து வேறறநின் றறிவிடத்தும் வேருய்நிற்கும்,— பிறிதராதறிவ தான்மா - இவையிற்றைப் பிறியாமல் நின்று எல்லாத்தையு மறிகிறதான்மா,— அறிபொருள் பின்னமாமே- இவனாலறியப்பட்டபொருள்களெல்லாம் இவனுக் கன்னியமா யிருக்கும்.

இதனாற் சொல்லியது, அசேதனமாயிருக்கிற தத்துவங்களும் சேதனமாயிருக்கிற வான்மாவுடனே பொருந்திஞல் அதுவுஞ் சேதனமா மென்பர்களென்றும்,தண்டு தகளி திரி நெய்யைக்கூட்டி அதிலே தீபத்தைக் கொளுத்த அவையெல்லாம தீபமென்றாற் போலத் தத்துவங்களுடனே ஆன்மா கூடி யதுவதுவாய் நின்று அறிந்தாலும், அறியப்பட்ட விஷயங்களும் ஆன்மாவும் தன்னில் வேருயிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆன்மா வறிவுடல் சிந்தையனைதலால் ஆன்மாவென்பர்-ஆன்மாவின்வேருகிய அவ்வைங்கோசங்களே, யான்மாவென வுபநிடதங்கள் கூறியதும்,—எறிசுடர் விளக்கிருக்கு மிடத்தையுமிடமென்ருற்போல் - விளக்குத் தகளியை விளக்கென்ருற்போலத் தா னியாகுபெயராதற்குரிய வியைபுபற்றியே யன்றிப் பிறிதில்லை யாகலான்,—பொறிபுலன் கரணமெல்லாம் புலப்படும் பேதமாகி - பொறிபுலன் கரணமுதலிய வெல்லாவற்றின்கண்ணு மறியப்படு மபேதமாய்,— பிறிதராதறிவதான்மா - பிறிதலின்றி யறிவதாகிய ஆன்மா,—அறிபொருள் பின்னமாமே-அறியப்படும்பொருட்கு வேறென்பதாம்.

இதனனே ஐங்கோசங்களே யான்மாவென்னு முபநிடதங்களுக்குத் தாற்பரியம்கூறி மேலது வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இந்த வான்மா தானே யுணரவற்றோ வெனில்? தனக்கெனச் செயலிலாமையாற் கர்த்தாநின் றுணர்த்த வுணர்வனெனத் தொகுத் துணர்த்துகின்றார்.

கண்டுணர் புருடன்வேறு கனவுகண் டொடுங்கிக் காய, முண்டியும் வினையுமின்றிக் கிடந்துயிர்த் திடவுணர்ந்து, கண்டிடுங் கனவுஞ்சொல்லி யொடுக்கமுங் கருதிவேறா, யுண்டியும் வினையுமுற்றிங் குணர்த்திட வுணராநிற்கும். (௩0)

(இ-ள்.) கண்டுணர் புருடன் வேறு	இந்திரியாதிகளினாலே யெல்லாத்தையுங் கண்டறிகிற வான்மா சரீரத்துக்குப் பின்னனம். அஃதெவ்வண்ண மென்னில்?
கனவுகண்டொடுங்கி	நனவுக்கு வேறாகிய கனவின்கண் ஞானையேறவு மாலைசூடவுங்கண் டப்பாலு மூலாதாரமளவு மொடுங்கி,
காய முண்டியும்வினையுமின்றிக் கிடந்துயிர்த்திட	அப்பொழுது சரீரமானது போகத்திற் புசிப்பாகிய விருவினைகளி லுச்சாகமின்றிக் கிடந்து மூச்செறிய
உணர்ந்து	சிவன் கருவிகரணாதிகளைக் கூட்டிப் பிரேரிக்க வுணர்ந்த பின்பு சாக்கிராதீதனாய்,
கண்டிடுங் கனவுஞ் சொல்லி	சொப்பனத்திற் முன் காணப்பட்ட வியாபாரங்களெல்லாம் நனவின்கட் பிறர்க்குச்சொல்லி

ஒடுக்கமுங்கருதி	பின்பந்தக் கனவுங்காணுமலொடுங்கின முறைமையிணையுங் குறித்து,
வேறாய்	பின் பதற்கு வேறாகிய சாக்கிராவத்தையைப் பொருந்தி
உண்டியும் விணையுமுற்று	போகத்திணைப் புசிப்பதற்குச் சாக்கிரத்தையு முடையனாய்;
இங்குணர்த்திட வுணராநிற்கும்	இவ்விடத் தான்மாவைச் சிவனுணர்த்திட வவனு மிந்தச் சரீரத்துக் கன்னியனா யுணரா நிற்பன்.

இது முதல் மூன்று விருத்தத்துக்குச் சுப்பிரபேதமெனவறிக. (௬௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் பஞ்சாவஸ் *தாநுச்யூத ஞன்மாவென்ப துணர்த்துதல்,

கண்டுணர்புருடன் - சகலாவஸ்தையிலே ஞானேந்திரியங்களினாலே சத்தாதி விஷயங்களைக் கண்டு இது இவ்வாறென்றறிந்த புருஷனே,—வேறுகனவுகண்டு- இந்தச் இந்திரியங்களை வேறாகச் சொற்பனாவஸ்தையிலே பஞ்சவிஷயங்களையு மனுபவித்து,—ஒடுங்கியுயிர்த்துக் காயங்கிடந்திட -இந்தச் சொற்பனாவஸ்தா கருவிகளெல்லா மூபாதியாகச் சுழுத்தி யவஸ்தையையடைந்து பிராணவாயு உச்வாச நிச்வாசத்தைப் பண்ண,—உண்டியும் விணையுமின்றி - தேகமானது பிரேதம்போலே கிடக்க ஞானேந்திரியங்களுக்கும் பிராணவாயுவுக்கும் போகமும் தேகத்துக்குச் சேஷ்டையுமற்றுக் கிடக்கும். ஆதலாற் றேகே

ந்திரியப் பிராணவாயுக்க ளான்மாவல்ல ஆன்மா வேறேயென்ன, இதற்குவாதி சுழுத்தியென்பது ஆன்மநாசமே, † புநருத்தான மென்றது ஆத்மாந்தரோபத்தியே! பஞ்சாவஸ்தாநுச்யூதனுகி நித்தியனுக வோரான்மா வில்லையென்னில்?— இங்குணர்ந்து கண்டிடுங் கனவுஞ்சொல்லி யொடுக்கமுங்கருதி வேறு யுண்டியும்வினையுமுற்று - இவ்விடத்து விழித் தெழுந்திருந்து சொற்பனுவஸ்தையிலே தான் கண்டதெல்லாஞ் சொல்லிச் சுழுத்தியிலே சுகமாக நித்திரை பண்ணினேனென்று சொல்லிப் போகத்தையும் புசித்துச் சரீரசேஷ்டைகளையும் பண்ணுகையினுல் பஞ்சாவஸ்தாநுச்யூதனுன்மா. ஆகில் ‡ அதீதாவஸ்தையை யடைந்து ஞானக்கிரியைக ளற்றிருந்த ஆன்மாவுக்கு புநருத்தான மெவ்வாறென்னில்? --உணர்த்திட வுணர்ாநிற்கும் - சகலாவஸ்தையிலே ஈஶ்வர சிற்சத்தியானது கன்மாநு குணமான சுகதுக்கங்களை யெல்லாம் புசிப்பித்துச்சொற்பனு வஸ்தையிலே சூக்குமதேக போகத்தையும் புசிப்பித்துத் தூலசூக்கும தேகபோக ஏதுவான கன்மம் பரிபாகமல்லாம லிருக்கையால் சுழுத்தியை யடைவித்து மேல் தூலசூக்கும தேகபோக ஏதுவான கன்மபரிபாகாநு குணமாக ஆன்மஞானத்தைப் பிரகாசிப்பிக்க; ஆன்மஞானமானது கரணேந்திரிய த்வாரா விஷயங்களை யறியுமென் றிதன்பொருள்.

இதற்குச் சம்மதி சிவஞானபோதவசனம்-ந - சூத்திரத்திலே யெழுதப்பட்டதே!

*அநுச்யூதன்-கலந்தவன், † புநருத்தானம் - மறுபடியெழுதல். ‡ அதீதம் - கடந்த.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பெத்தான்மா முத்தான்மாவாக, முந்திக் கருவிகளைக்கொண்டு சிவன் காண்பிக்கக் காண்பனென்று சாதிக்கின்றார்.

கண்டுணர்புருடன் - சாக்கிராவத்தையிற் சத்தாதிபுலன்களையு முள்ளபடியறிந்த ஆன்மா,—வேறுகனவுகண்டு - சொப்பனாவத்தையில் நித்திராவசத்தினாலே அதுவென்றறியும் பொருளிதுவென்று தோற்ற, அப்படிமயங்கி யறிந்து,— ஒடுங்கி-சுழுத்தியவத்தையிற் புறப்பொரு ளறிவின்றி ஆந்தர தேகமாத்திர வறிவாய்,—காயமுண்டியும் வினையுமின்றிக் கிடந்துஉயிர்த்திட- துரியாவத்தையிற் பிராணவாயுமாத்திர மியங்கிடச் சரீரம் புசிப்புத் தொழில்களின்றித் துயின்று சூக்கும வறிவாயும்,—உணர்ந்து - திரும்ப சாக்கிரத்திற் சுகமாய் நான் நித்திரைபண்ணினேன் என்று துரியாதீதத்திற் சுகானுபவ ரூப வதிசூக்கும வறிவைச் சூசிப்பித்து அறிந்து,—கண்டிடுங் கனவுஞ்சொல்லி- சொப்பனத்திற் றோற்றிய நடப்பைப் பிறர்க்குப்போதித்து,— ஒடுக்கமுங்கருதி - புறவினையொன்று மின்றிச் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று சுழுத்தி துரியந் துரியாதீதங்களைத் தூலசூக்கும சூக்கும தமப்பிரகாரத்தினாலே சூசிப்பித்து,—வேறுயுண்டியும்வினையுமுற்று - சொப்பனத்திற் றோற்றிய புசிப்புத்தொழில்களுக் கன்னியமாய்ப் புசிப்புத்தொழில்களைப் பெற்று,—இங்குணர்த்திட வுணராநிற்கும் - சாக்கிரத்திற் சிவன் தத்துவாதீத தேவதாத் துவாரத்தினாலே தத்துவங்களைச் சேட்டித் தறிவிக்க வறியாநிற்பன்.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

அன்னமயகோச முதலிய நான்கனையும் ஒரோவொன்றாக விட்டுவிட்டு அஞ்சவத்தைப்பட்டு விழித்தபின் அவை கூடிநின் றறிவிக்க, முறையே சொல்லியுங் கருதியு முண்டிவினையுறுதலாகிய மறுதலையின் வைத்தும், அங்ஙன மவத்தைப்பட்ட வாற்றை அறியாதிற்கு மாகலால்; இதனாலும் உயிரவற்றின் வேறெனத் தெளியப்படு மென்பதாம்.

அவை கூடியபின்னன்றி அறிவு நிகழாமையால் அறிதற்கு அவை யேதுவாதல் பெறப்பட்டது.

ஒடுக்கமென்றது சுழுத்தியை; அது கனவுபோற் சொல்ல வாராமையிற் கருதி யுணர்தற்பாலதாயிற்று.

சித்தமுஞ் செல்லாத வேனையிரண்டுங் கருதவும் வாராமையின் மறுதலையின்வைத் துணர்த்தற்பால வாயின.

உணர்ந்தபி னென்றது உணர்ந்தெனத் திரிந்து நின்றது.

உணர்தல் ஈண்டுத் துயிலெழுதன் மேற்று.

இதனானே அவத்தைப்படு மியல்பின்வைத் துணர்த்தி மேலது வலியுறுத்தப் பட்டது.

'தோற்பாவை' என்பதுமுதல் இத்துணையுங் கூறியவாற்றான் மேலைச் சூத்திரத்தின் 'உற்றுச் செயிருறும்' என்பது முதலிய நாற்கூற்றுப் பொருளையும் வலியுறுத்தவாறு மாயிற்று.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மாயாவாதி பரப்பிரமத்தின் சன்னதியிலே யுடல் காரியப்படுமதொழிந்து வேறொரு ஆன்மாவென்பதொன்றில்லையென்ன; மேலவனை மறுத் தருளிச்செய்கிறார்.

கண்டுணர் புருடன் - எல்லாத்தையுங் கண்டறிகிற வான்மா,—வேறுகனவு நண்டொடுங்கி - நனவுக்கு வேருன கனவுங்கண்டு அப்பாலேபோ யொடுங்கி,நீசொன்ன பரப்பிரமத்தின் சன்னதி யெங்குமுண்டாயிருக்கவும்,—காயமுண்டியும் வினையுமின்றிக் கிடந்துயிர்த்திட - தேகமானது புசிப்பும் உற்சாகமுமின்றிக் கிடந்து உஸ்வாச நிஸ்வாசஞ்செய்ய, அத்தன்மையுமன்றி,—உணர்ந்து - மீளவுஞ் சாக்கிரத்தனுய்,—கண்டிடுங் கனவுஞ்சொல்லி - காணப்பட்ட சொப்பனத்திலுண்டாகிய வின்பதுன்பங்களையுஞ் சொல்லி,—ஒடுக்கமுங்கருதி - காணப்பட்டவவத்தையும் நினைத்து,—வேருய்-இவைவிற்றையும்விட்டு,—உண்டியும் வினையுமுற்று - புசிப்பையு முற்சாகத்தையும் பொருந்தி,—இங்குணர்த்திடவுணராநிற்கும் - இவ்விடத்துண்டாகிய சுகதுக்கங்களையுங் கர்த்தாவறிந்து கூட்டப் புசியாநிற்பன்.

இவ்வனஞ்சொல்லி வந்த முறைமைகளினுலே இந்தவுடலையும் பரப்பிரமத்தையுமன்றி ஓ ரான்மா வுண்டென்னுமதுங் கண்டுகொள்க.

இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம் மாயாவாதி மறுப்பு "மன்னயக்காந்த மெனவுடல்பிரம - சன்னதியளவிற் சலித்திடுமாயி - னகண்டிதஞ்சன்னதி யலதிலதெவையு - நடந்திடவேண்டுங் கிடந்திடப்பெருவே-காந்தத்திரும்பு காட்டுணர்ப்பெறி லயஞ்-சேர்ந்திடநீக்குஞ் செயலதற்கிலதே." என்றும், சிவஞானபோதம் ந-சூ,ரு-வெ. "கண்டறியு மிவ்வுடலே காட்டொடுக்கங்காணுதே-யுண்டி வினையின்றி யுயிர்த்தலால் - கண்டறியு,முள்ளம்வே ருன்றா மொடுங்கா துடனண்ணி, லுள்ளதா முண்டிவினை யூண்." என்னுமதுங் கண்டுகொள்க.

இனுற் சொல்லியது, பரப்பிரமத்தின் சன்னதியிலே யுடல் காரியப்படுமதொழிந்து ஆன்மா வில்லை யென்றவனை அனு

போகத்தாலே மறுத்து; ஆன்மா வுண்டென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

கனவுகண் டொடுங்கிக் காய முண்டியும் வினையுமின்றிக் கிடந்துயிர்த்திட வுணர்ந்து - அன்னமய கோசமுதலிய நான்கனையு மோரோவொன்றாக விட்டுவிட் டடைந்தவத்தைப்பட்டு விழித்தபின்,—கண்டிடுங் கனவுஞ்சொல்லி - அவை கூடிநின் றறிவிக்க முறையே கண்டிடுங் கனவைச் சொல்லியும்,—ஒடுக்கமுங் கருதி - சுழுத்தியி னொடுக்கத்தினைக் கருதியுணர்ந்தும்,—வேறாயுண்டியும் வினையுமற்று - துரியந் துரியாதீதத்தி லுண்டி வினையுறுதலாகிய,—இங்குணர்த்திட வுணராநிற்கும்-இவ்விடத்தின் மறுதலையின்வைத் தங்ஙன மவத்தைப்பட்ட வாற்றை யறியாநிற்கு மாகலால்,—கண்டுணர் புருடன்வேறு - இதனானுங் கண்டறியப்பட்ட வுயி ரவற்றின் வேறெனத் தெளியப்படும்.

இதனானே யவத்தைப்படு மியல்பின்வைத் துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது.

'தோற்பாவை' என்பதுமுத லித்துணையுங் கூறியவாற்றான் மேலைச்சூத்திரத்தின் 'உற்றுச் செயருறும்' என்பது முதலியநாற்கூற்றுப் பொருளையும் வலியுறுத்தவாறு.

மறைஞானதேசிகர் உரை.

ஆன்மாவுக் கொருத்த றறிவிக்க வேண்டுவதில்லை தானேயறியுமென் றவிகாரவாதி சொல்ல; அவன் முனாக வறியானென் றுணர்த்துகிறார்.

புருடனே யறிவனாகிற் பொறிபுல னாதிபோதந்,
தருவதென் னறிவுமாயா தனுகர ணாதிபற்றி, வருவதி
ங்கனாதியாக மலத்தினின் மறைந்துநிற்ப, னருவனா யி
வற்றோடாரு மமைச்சரோடரையன்போல்வன். (ருக)

(இ-ள்)புருடனே யறிவனாகில்	அந்த வான்மா தானே யெல்லாத்தை யு மறிவான்காரண மென்று நீ சொல்லில்?
பொறிபுல னாதிபோதந் தருவ தென்	இந்திரிய விஷயங்களா லான்மாவுக் கறிவுண்டாவ தென்? சொல்லாய்.
அறிவு மாயா தனுகரணாதி பற்றிவருவது	ஆன்மாக்கட்கு மாயாகாரியமாகிய தனுகரணாதிகளைப் பற்றி யறிவுண்டாவ தியல்புகாணுமென்று நீசொல்லில்? அதற்குக் காரணம் யாஞ் சொல்வாங் கேட்பாயாக.
இங்கனாதியாக மலத்தினின் மறைந்து நிற்ப னருவனாய்	இவ்விடத் தான்மாவானவ னநாதியே மலத்தினாலே மறைப்புண்டு நிற்கையால் இந்திரியாதிகளைக்கொண் டறிய வேண்டிற்றுக் காண். ஆயி னிந்திரியாதிகளு மான்மாவு மொன்றோவெனி்ல்? அஃதன்று. அஃதென் போலவெனில்?
இவற்றோடாரு மமைச்சரோ டரையன்போல் வன்.	இவையிற்றுடனே யான்மாப் பொருந்தியிருந்தானே யாயினும் இராஜாவானவனெப்படிப் படையுடனு மமைச்சருடனுங் கூடியிருக்கவுந் தானே தலைமைபெற்றான் அது போல. எ-று. (ருக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இதற்குமேல் ஆன்மா சித்ரூபி யாகையால் தானே யறிவனென்பவனை நிராகரித்தல்.

(ஆன்மா சித்ரூபனாகையால் தானே யறிவன். ஈஸ்வர சிற்சத்தி யறிவிக்குமென்று சொல்லவேண்டா வென்னில்?) புருடனை யறிவனாகிற் பொறிபுல னறிபோதக் கருவசேதன — ஆன்மா தானே யறிவனாகிற் பஞ்சேந்திரியங்களு மான்மாவுக்கு விஷய தரிசனத்தைப் பண்ணுவிப்பானேன்? ஆகில் நீர்தான் முதலிலே ஆன்மா சித்ரூபனென்று சாதித்த தெங்ஙனமென்னில்?— அருவமா யநாதியாக மலத்தினின் மறைந்துநிற்பன் — நித்தியவியாபகன் சித்ரூபமாகினு மநாதியே தனது ஞானக்கிரியைகளை யாணவமல சத்தியினால் தடுக்கப்பட்டு நிற்பன். அதனால்,— மாயா தநுகரணாதியற்றி யறிவிக்கவருவது — மாயையினுண்டாகிய தேகம், புறக்கரண முட்கரண மாதியென்ற தனுக் கலையாதித் தத்துவங்களையும் பொருந்தி யிருந்த அசுத்தாத்துவ வாசிகளுக்கு விஷயஞான முண்டாக வேண்டியது. ஆதலால்,— இவற்றோடாரு மமைச்சரு மரசும்போலவன் — இந்த தேசேந்திரியாந்தக் கரணங்களோடேகூடி விஷயங்களை கிரகிக்கிறதினாலே தானரசனாகவும், இந்தக் கரணங்கள் மந்திரிகளைப்போலவும் நிற்குமென்று சொல்லப்பட்டது. இந்தக் கரணங்கள் ஜடமாகையால் இவைகளைக் கூட்டுதற் கொருகர்த்தா வேண்டும், அது ஈஸ்வர சிற்சத்தியென வறியாயாக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

புருடன் றானே யறிவன், அறிவிக்க வேண்டுவதில்லை யென்றுவிகாரவாதிபேச; நிராகரிக்கின்றார்.

புருடனை யறிவனாகில் - ஆன்மாவே சுதந்திர வறிவனா யறியப்படும் பொருளை யறிவனென்று நீ சொல்லில்,— பொறிபுல

ளுதிபோதந் தருவதென் - இந்திரியங்கள் சத்த பரிச ரூப ரச கந்த முதற்பொருள்களினது ஞானத்தை யுண்டாக்குவ தேது? அதற்கொரு காரணம்வேண்டும், சொல்லுவீராங் கேட்பாயாக. அந்தப்புருடன்,— அநாதியாக மலத்திலின் மறைந்துநிற்ப வருவனும்- உருவிலியாய்த் தொன்றுதொட்டு ஆணவத்தினு லறியா திருப்பன். அதனுல் அவனுக்கு,—அறிவு - ஞானம்,—இங்கு - பெத்தனுயிருக்கு மிடத்து,—மயாதனுகரணுதியத்திலருவது-மாயையினின்றும் சிவனுண்டாக்கிக் கூட்டிய தூலசரீர சூக்குமசரீரங்களோடு பொருந்திவிளங்கும். முத்தனுமவசர மாத்திரத்திற் சிவசத்தி மாத்திரத்தோடு பொருந்தி விளங்கி, எங்கும் விரிந்து வியஞ்சகத்தைத் திருப்பவிரும்பாமல் இருக்கும். அப்போது இப்போது,— இவற்றோடாணு மரைச்சருமரசம்போல்வன்-இந்தப் பொறி முதலிய வற்றோடு மச்திரிவு மிராசாவு மொப்பப் பொருந்தி வாழ்வன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மா முதல்வன் போலச் சுத்தசித்தேயாகின் மாயா காரியங்களைப்பற்றி நின்றறிதல் வேண்டா! அவ்வாறன்றி அரைச்சருமரசம்போல ஒடனின்று மாயாகருவியைப் பற்றி யறிதலுண்மையால், அநாதியே யாணவமலத்தின் மறைந்து அருவனாய் நிற்றல் பெறப்படு மென்பதாம்.

தேற் றேகாரத்தை அறிவனென்பதனோடுங் கூட்டி யுரைக்க.

என்னென்பது ஈண்டு வேண்டாமை குறித்துநின்றது.

போல்வ னென்பது முற்றெச்சம்.

பின்வரு மனுமானத்தை வலியுறுத்தற்பொருட்டுப் புரு
டனே யறிவனுகிற் பொறிபுல னுதிபோதந் தருவதென்னை
னெனத் தருக்கமெடுத் தோதினுர்.

இதனுனே ஞானச்செய்தி யநாதியே மறைத்துநிற்கும் ப
சுத்துவ முடையனுதல் காரியானு மானத்தின்வைத் துணர்த்தி
வலியுறுத்தப்பட்டது.

'அறிவிச்சை செயல்கள்' எனபது முதல் இத்துணையும் பரம
தங்களைப் பரிகரித்து ஆன்மாவுக் கிலக்கணங் கூறுமுகத்தால்
இரண்டாங் கூற்றை வலியுறுத்தவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படிக் கர்த்தா வுணர்த்த வேண்டுவதில்லை; ஆன்மாதா
னறி வல்லவோ! இவன் தானேயறிவ னென்று அவிகாரவாதி
சொல்ல; அவனைமறுத் தருளிச் செய்கிருர்.

புருடனே யறிவனுகிற் பொறிபுலனுதி போதந் தருவதெ
ன்-ஆன்மா வெல்லாத்தையு மறிவனுகி லிந்திரியங்கள் விஷய
ங்கள்முதலான தத்துவங்களு மிவனுக் கறிவைக் கொடுக்க அ
வானேன்? இவையிற்றைக் கொண் டிப்படி யறிகையினு லிவனு
க்குத் தனக்கென வறிவில்லை. ஆனு லிதுவன்றியு மதெங்ஙனே
யென்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிருர். அறிவு மாய
தனுகரணுதிபற்றிவருவது-ஆன்மாவினுடைய வறிவானது கன்
பலன்களைப் புசிக்கைப் பொருட்டு மாயாகாரியமான தனுகரண
புவன போகங்களைப் பொருந்தி வாராநிற்கும். இப்படிச் சே
னுயிருக்கிற வான்மாவுக்கு அசேதனமாயிருக்கிற மாயாகரு
களறிவைக் கொடுக்க வேண்டுவானே னென்னில்?—இங் கரு

தியாகமலத்தினில் மறைந்துநிற்ப னருவனாய்-ஆன்மாவானவ
னநாதியே யாணவ மலத்தாலே மறைப்புண்டு இவ்விடத்துத்
தோன்றாமனிற்பன். ஆனாலிந்த மாயா கருவிகளுடனே யிவனை
க்கூடிநின்று அறிகிற முறைமை யெங்ஙனே யென்னில்?—இவற்
றோடாளு மமைச்சரு மரசும் போல்வன்-இவையிற்றுடனே ஆ
ன்மா பொருந்திநின்றறிகிற முறைமை யிராச்சியம் பண்ணுகிற வி
ராசாவையு மந்திரியையும் படையையும் போல.

இதற்குப் பிரமாணம் சிவஞான போதம். ச-சூ, ரு-வெ.
"மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணாதே, லாயாதா மொ
ன்றை யதுவதுவாய் - வீயாது, வன்னிதனைத் தன்னுள் மறை
த்தொன்றுங் காட்டம்போற், றன்னைமல மன்றணைத றன்"
என்னுமது கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது தத்துவங்களுடனே கூடினவிட
த்து ஆன்மபோதஞ் சீவிக்கும தொழிந்து ஆன்மாத் தானாக வ
றியாதென்றும்,இந்தத் தத்துவங்களைக்கூடி யான்மா வறியவே
ண்டினது அநாதியே மலசம்பந்த னாகையாலென்றும்,தத்துவங்
களு மான்மாகூடி யறியுமுறைமை யிராசாவையு மந்திரியையும்
படையையும் போலவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

புருடனே யறிவனாகில் - ஆன்மா முதல்வன்போலச் சுத்
த சித்தேயாகின்,— பொறிபுல னாதிபோதந் தருவதென் - மா
யாகாரியங்களைப் பற்றிநின் றறிதல் வேண்டா,—இவற்றோடா
ளுமமைச்சரு மரசும் போல்வன் - அவ்வாறன்றி யானாகின்ற அ
மைச்சரு மரசும்போ லுடனின்று,—மாயாதனு கரணாதி பற்றி
யறிவுவருவது-மாயா கருவிகளைப் பற்றி யறிதலுண்மையால்;—

இங்கநாதியாக - இவ்விடத் தநாதியே,— மலத்தின்மறைந்து அருவனாய் நிற்பன் - ஆணவமலத்தின் மறைந்து அருவனாய்நிற்றல் பெறப்படும்.

இதனுனே ஞானச்செய்தி அநாதியே மறைத்து நிற்கும் பசுத்துவ முடையனாதல் காரியானுமானத்தின்வைத் துணர்த்தி வலியுறுத்தப் பட்டது.

☞ ச-சூ, உ-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

மலத்தான் மறைப்புண் டவத்தைப்படுமிடத் தான்
மாவே பிரதான மென்பதூஉம் கருவிக ளப்
பிரதான மென்பதூஉ முணர்த்து கின்றார்.

படைகொடு பவனிபோதும் பார்மன்னன் புகும்போதில்லிற், கடைதொறும் விட்டுவிட்டுக் காவலு மிட்டுப்பின்னை, படைதருந் தனியேயந்தப் புறத்தினி லதுபோலான்மா, வுடலினு ளவத்தைதலைந்து முறு முயிர் காவலாக. (சுஉ)

(இ-ள்.) படைகொடு பவனிபோதும் பார்மன்னன் புகும்போதில்லிற் கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டுப்பி — சதுரங்க பலத்துடனே பவனிபோந்த விராசாவானவன் றனதுமாளிகையிற் புகும்பொழுதுவாய்தல்தோறுமடைவேயனுப்பும் பெயரையதித் தங்கங்கேயனுப்பிக் காவற்காரரையும் வைத்து, தானே யந்தப்புரத்திலே பிரவேசித்து நித்திரைசெய்யாநிற்பன்;

...ன்னை யடைந்து
...ந் தனிமையெய்தப்
...புரத்தினில்
அதுபோல்
ஆன்மாவுடனி
...லவத்தை யை
...க்கு முன்னுயிர்
காவலாக.

அந்தமுறைமைபோல,
இந்தவான்மாவுஞ் சாக்கிரமுதலிய பஞ்
சாவத்தைகட்குந் தானமாகிய நெற்றிமுதல்
மூலாதார மீறாகிய தானங்களோறுந் தன
க்குப் பரிவாரமாகிய இந்திரியமுதலிய கரு
விகளை வாய்தல்களோறுங் காவலாக நிறு
த்திப் பின்பு துரியத் தானத்திலே பிராணவாயு வுயிர்த்தோழ
னுகவா ஸம்ஹிதான்றயுங் காவலாக வைத்துத் தானே யதீதமா
கிய நித்திரையைச் செய்வன். எ-று. (௯௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு

—o—

மேலவத்தைக் குதாரணம்.

ராசாவானவன் +ரத †கஜ ×துரக ¶ பதாதிகளுடனே
பவனிவந்து தன்னுடைய க்ரஹத்தில் புகும்பொழுது அந்தந்த
வாசல்களிலே யனுப்புவர்களை யந்தந்த வாசல்களிலே யனுப்
பிக் காவலாகப் ‡ பாரிகாரரையும் வைத்து, அந்தப்புரத்திலே
அந்ய ரில்லாமற் றானும் தன் ஸ்திரீயுமே தனித் திருப்பதுபோல: ஆ
ன்மாவானவன் மனதை ரதமாகவும் பிராணாதிவாயுக்களை ரத
த்திற் பரியாகவும் புத்தியை மந்திரியாகவும் ஆங்காரத்தைச்சா
ரதியாகவும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை பதாதிகளாக
வும் கூட்டிக்கொண்டு பஞ்சேந்திரியங்களிற் சென்று மீண்டு
*புருவமத்தியம் கண்டம் இருதயம் நாபியென்னும் ஸ்தானங்களோ
றும் நிற்குந்தத்துவங்களை நீக்கித் தேகத்துக்கு பிராணவாயுக்

காவலாகி நிற்க சூக்ஷ்மஸ்தானமாகிய +ஸ்வாதிஷ்டானத்திலே மாயையுடனே அதீதாவஸ்தையை யடைவனென் றிதன்பொருள்.

+ ரதம்-தேர் † கஜம்-யானை × துரகம்-குதிரை ¶ பதாதி-காலாள். ‡ பாரிகாரர் - இராக்ஷகர்வற்காரர் * புருமத்வம்-புருஷத்வம் +. ஸ்வாதிஷ்டானம்-தன்னிடம்.

𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 - [illegible] 𑌇𑌤𑌿.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அப்படியிருந்தாலும் புருடனுக்கே முதன்மை யென்பது போதிக்கின்றார்.

உயிர்காவலாக - பிராணவாயு சரீரக்காப்பாக.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இனி, ஒன்பதுசெய்யுளான் மூன்றாங்கூற்றைத் தெரித்துக் கூறுகின்றார்.

புருடன் அவற்றோ டமைச்சருமரசும் போறலின் அரசன் போலவற்றை விட்டுவிட்டுச் சென்று ஐவகையவத்தை யுறுமெனபதாம்.

இதனானே வெவ்வேறவத்தை அணைதருமாறு மேற்கூறிய வுவமையோடு படுத்து வகுத்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருளை வருமாறு.

இப்படி முன்சொன்னத் தத்துவ முப்பத்தாறோடுங் கூடியான்மா விசவ வியாபாரத்தை யறியுமிடத்து அவத்தைப்படி முறைமை ஒருதிட்டாந்தமிட் டருளிச்செய்கிறார்.

படைகொடு பவனிபோதும் பார்மன்னன் புகும்போதில்லில் - பரிகலத்துடனே பவனிவந்த பூபதியானவன் றன்னுடைய மனையிலே புகும்பொழுது,—கடைதொறும் விட்டுவிட்டு-வாசல்கடோறும் விடைகொடுக்கும் பெயர்க்கு விடைகொடுத்து,—காவலுமிட்டு-அதற்கதற்குக் காவற்பெயற்களையும் நிறுத்தி,—பின்னையடைதருந் தனியே யந்தப் புரத்தினில்-பின்புதானேபோய் தனக்கேகாந்தமாயிருக்கிற அந்தப்புரத்திலே புகுதாநிற்பன்.—அதுபோல்-அந்தமுறைமைபோல,—ஆன்மா,—வுடலினிலஞ்சவத்தையுறு முயிர்காவலாக-ஆன்மாவும் தேகத்திலே யந்தந்தத் தானங்களிலே நிற்கத்தக்க கருவிகள் நிற்க அஞ்சவத்தைப் படாநிற்பன்; பிராணவாயு காவலாக.

இதனாற் சொல்லியது, தந்தரங்களுடனேகூடி பவனிவந்த விராசா வானவன் றன்னுடைய மனையிலே புகுதமிடத்து அதற்குண்டான வாசல்கடோறும் நிறுத்தும்பெயர்களை நிறுத்தித் தானே யுள்ளேபுகுந்த முறைமைபோல், ஆன்மாவுஞ் சரீரத்திலே அந்தந்தத் தானங்களிலே நிற்கதக்க கருவிகள்நிற்க வஞ்சவத்தைப் படுவன்; பிராணவாயுகாவலாக வென்னுமுறைமையை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

ஆன்மா - புருடன், — படைகொடு டவனிபோதும் பார்மன்னன் - அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அவனிமன்னன். — இல்லிற்புகும்போது - மீளவில்லின்கண் புகும்போது, — கடைதோறும் விடுவிட்டுக் காவலுமிட்டு - வாயில்கடோறு மவரவர்க்கு விடைகொடுத்து நிறுத்திக் காவலும்வைத்து, — பின்னை ரந்தப்புரத்திற் றனியே யடைதரு மதுபோல் - பின் அந்தப் புரத்திற் றனியேசெல்லுமாறுபோல, — உடலி லுயிர் காவலாக - இவ்வுடம்பின்கண் முறையே கருவிகளி னீங்கிப் பிராணவாயுவைக் காவலாகநிறுத்தி, — அஞ்சவத்தை யுறும் - ஐவகையவத்தை யுறும்.

இதனானே வெவ்வே றவத்தை யடைதருமாறு மேற்கூறிய வுவமையோடு படுத்து வகுத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

பஞ்சாவத்தைகளினது பெயரு மவற்றுக் கிடமு மவ்விடந்
தோறுநிற்குங் கருவிகளுந் தொகுத்துணர்த்துகின்றார்.

சாக்கிர முப்பத்தைந்து நுதலினிற் கனவு தன்
னி, லாக்கிய விருபத்தைந்து களத்தினிற் சுழுனை மூ
ன்று, நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி,
நோக்கிய துரியாதீத நுவலின் மூலத்தி லொன்றே. (கக)

(இ-ள்.) சாக்கிர — ஆன்மாவானவன் சாக்கிரத் தானமாகி
முப்பத்தை — ய புருவ மத்தியத்தைப் பொருந்தும்போது
ந்து நுதலி — கருவிகள் முப்பத்தைந்து. அவையாவன?
னில் — *"இந்திரிய மீரைந்து மீரைந்து மாத்திரை

யு, மந்தமாய்நின்ற மாருதமீரைந்து, பந்தக்கரணங்க ளொன்று மவற்றுடன், சந்தித்த சாக்கிர பாலனு மாமே" என்றுஞ் சாக்கிர பாலனென்ப தான்மாவையென வறிக.

* இதுமுதலிய திருமந்திரம்-அ-வது சூத்திரத்திற் காண்க.

கனவு தன்னி லாக்கிய விருபத் தைந்து களத்தி னில்

நெற்றி தொடுத்துக் கண்டமீறாக விக்கத்தானத்தினின்று சொப்பனாவத்தையையுறும்பொழுது கருவிக ளிருபத்தைந்து. அவை யாவன? "மனவசத்தேவரு மாத்திரையைந்து, மனவசத்தேவரும் வாயுவீரைந்து, மனவசத்தாய காரணங்க ளொன்றுங், கனவகத்தேயு மிருபத்தஞ்சாமே."

சுழுனை மூன் று நீக்கிய விதய ந் தன்னில்

கண்டந் தொடங்கி யிருதயமளவாகச் சுழுத்தி யவத்தையுறும் பொழுது கருவிகள் மூன்று. அவையாவன? "சுழுனையிற் சேர்ந்து ள மூன்றன காட்சி, செழுமிய சித்தம் பிராணனற்சீவ, னெழுமக் கமலத்தி னுள்ளே யிருந்து, விழுமப்பொருளுடன் மேவிநின்றானே."

துரியத்தி லிர ண்டோடி

இதயந்தொடுத்து நாபியீறாகத் துரியாவத்தை யுறுதற்குத் தானங் கருவிகளிரண்டு. அவையாவன? "கருவரம்பாகிய காயத் துரிய, மிருவருங் கண்டிடிற் பிறப்பிறப் பற்றவர், குருவரம் பெற்றவர் கூடியபின்னை, யிருவருமின்றியொன் றாகிநின்றானே."

கேக்கிய துரி யாதீத றுவலி ன் மூலத்திலொ ன்றே.

நாபிமுதன் மூலாதார மீறாகத் துரியாதீதவத்தை யுறும்பொழுது கருவி புருடனொன் றுமென்று சொல்லப்படும். எ-று.

அது வருமாறு:—முதற் றிருமந்திரத்தில் "ஒன்றாகி நின்றானே" என்பதனை யீண்டுக் கூட்டுக. "கலாதிகள்போக மூணுங்கா

லைக் கருவி,கலாதிகளைச் சாக்கிரத்திற் காணுங்—கலாதிகளை,யி ன்றியும்போக முயிருக் கிலங்குமோ, தூன்றுபுகழாய்ச் சூழ்ந்து சொல்” “கலாதிகளாவிக் கொருவர்க்கஞ்சு மாகையாற்,கலாதிகலைக் கட்டுரையார்கற்றோர்—மலாரியுரை, வந்தனஞரிய னென்யரவன் றன்வடிவிற்,பந்தனைசொல் லாரிதுபோற் பரர்,, என வறிக.

இதற்குச் சிந்தியாகமம்.

இவற்றுள் சாக்கிரத்தினீங்கின கருவி சோத்திராதிகளும் வாக்காதிகளு மாகப்பத்து.

சொப்பனத்திற் சத்தாதியும் வசனாதியும், அபானாதியெ ன்பது மனோபுத்தி யகங்காரங்களுமாக நீங்கின கருவிக ளிருபத்திரண்டும்.

சுழுனையி னீங்கினகருவி சித்தமொன்றும்.

துரியத்தி னீங்கின கருவி பிராணவாயு வொன்று.

துரியாதீதத்திற்கருவி புருடனொன்றுமேநிற்குமெனவறிக.

வேதாந்தி சாக்கிரத்திற் கருவிபதினாலும் காலும் இரண்டும் ஒன்றும் என்று சொல்லில், அப்போது சொப்பனத்திற் கரணகானமொழிய வுயிரானந்த முதலிய கருவிகள் கூடிச்சீவிக்கையாற் கூடாதெனவறிக. (௫௫)

சிவாக்ரயோகியருளா வருமாறு.

—o—

மேல் சாக்கிராதி பஞ்சாவத்தைகளுக்குங் கருவிகளும் ஸ்தானங்களும் கூறுதல்.

சாக்கிர முப்பத்தைந்து நுதலினில் -நாதாதி ப்ருத்வி பரியந்தமாக முப்பத்தாறு தத்வங்களுடனுந் தாத்விகங்களுடனுங்கூடி சகல விஷயங்களையு மனுபவித்து நிற்பது ¶சப்பிரதியா

சாக்ரம். விஷயபோச திருஷ்டா பாவத்தினாலே¶ †பிரேரகாண்டமாகிய சுத்த தத்துவங்களைந்தும் §போசயித்ரு காண்டமாகிய கலாதியேழும் மகா பூதங்களைந்தும் ஆகப்பதினேழுமுபாதியாகச் சுரோத்ராதிகளைந்தும் சத்தாதிகளைந்தும் வாசாதிகளைந்தும் தாத்வீகமாகிய வசனாதிகளைந்தும் பிராணாதி வாயுக்கள் பத்தும் தத்துவங்களாகிய மனோபுத்தி யகங்கார சித்தங்களாலும் ஆக முப்பத்தினாலுடனும் க்ஷேத்திரஞ்ஞனென்கிற ஆன்மாவும் ஒருவனாக முப்பத்தைந்தாய் முகத்திலேநிற்க, பிரேர காண்டமும் போசயித்ரு காண்டமும் நிர்வியாபாரமாகையா லாணவமேலிட்டதனால் விழித்திருச்சையிலும் கண்டுங்காணமற் கேட்டுங் கேளாமல் மயங்கி யிருக்கு மவசரம் அப்பிரதிபாசாகிரம்.

¶ சட்பிரதிபா-தோற்றத்தோடுகூடியது † பிரேரகம்-ஏவுகிறது §போசயித்ரு-புசிப்பிக்கிறது.

ததுக்தம் - ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷுஷீ ஜிஹ்வா க்ராணம் பஞ்சமமுச்யதே | ஶப்தஃ ஸ்பர்ஶஶ்ச ரூபஞ்ச ரஸோ கந்தஶ்ச பஞ்சமஃ || வாக் பாணி பாத பாயூபஸ்தாஶ்ச பஞ்சமமுச்யதே | வசநாதாநகமநவிஸர்காநந்தபஞ்சமஃ || ப்ராணோபாநஸ்ததா வ்யாந உதாநஶ்ச ஸமாநகஃ | நாகஃ கூர்மோऽத க்ருகரோ தேவதத்தோ தநஞ்ஜயஃ || மநோ புத்திரஹங்காரஶ் சித்தம் க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச | பஞ்சவிம்ஶகமேவாத்ர ஜாக்ரத்தத்த்வ விநிர்திஶேதிதி ||

சனவுதன்னி லாக்கிய விருபத்தைந்து களத்தினில் -சூக்குமதேகத்தில் போகத்தை யசக்கிய சொர்ப்பனவத்தையிலே சத்தாதிகளைந்தும் வசனாதிகளைந்தும் பிராணாதிவாயுக்கள் பத்தும் மனோபுத்தியகங்கார சித்தங்களாலும் ஆன்மாவுமாக விரு

பத்தைந்தும் கண்டத்திலே நின்று வ்யவஹாரிக விஷயபோக வாசனையையும் ‡ தாத்காலிக விஷய * பிரதியாசமாத்திரத்தையும் அனுபவிப்பது சொற்பனாவஸ்தை.

‡ தாத்காலிக - அந்தகாலத்திலுண்டான * பிரதியாசம் - தோற்றம்.

ததுக்தம் — [illegible] ||

சுழுனைமூன்று நீக்கிய இதயந்தன்னில் - ஸ்தூலசூக்கும தேகயோகத்தை யொழித்த சுழுத்தி யவத்தை இருதயஸ்தானத்திலே சித்தத்துடனும் பிராணவாயு வுடனும் ஆன்மா கூடி நிற்பது.

துரியத்தி லிரண்டு நாபி - துரியாவஸ்தை நாபிஸ்தானத்திலே பிராணவாயுவுடனே ஆன்மா கூடிநிற்பது.

நோக்கிய துரியாதீத நுவலின் மூலத்தி லொன்றே - அதோமுகமாகிய துரியாதீதம் தத்துவதாத்துவிகங்கள் சர்வத்தையு நீக்கி மூலமலமாகிய வாணவத்துடனே யான்மாவொருத்தனுமா யிருப்பது.

ததுக்தம் - [illegible] | ‡

ப்ரளயாந்தஸ்தாயியாயிருக்கிற தத்துவங்க ளிருக்கையிலே தத்கிரியைக ளில்லாமலிருப்பானேனென்னில்? அயசுடனே அக்னி கூடினபொழுது தாஹாதிக் கிரியைக ளுண்டாய் அக்னி நீங்கினபொழுது இல்லாததுபோல, ஆன்மசத்தியை கன்மானுகுணமாக ஈஸ்வர சத்தியானது தத்துவங்களுடனே கூட்டினபொழுது தத்தத்கிரியைக ளுண்டாம். பிரித்த பொழுது தத்தத்கிரியைக ளில்லையாம்.

த்ருஷ்டாந்தம் — ஸமலாவஸ்தாயா §

ஸ்வாநாதா³ந தே³ஹ்ய பக்ஷ்யா பக்ஷஸ்யாவஸ்யாத் ஸமவர்த்தி॥

‡ §ஸ்லோகம் பிரதியில் விட்டிருக்கிறது.

இது சமலாவஸ்தை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இராசா தனது பரிசார சனங்களைப்போல வான்மா தத்துவதாத்துவிகங்களை நிறுத்துந்தான முணர்த்துகின்றார்.

இதற்கு வகை சூத்திர முடிவி லவத்தை விஸ்தாரத்தி லறியப் பண்ணுகிறோம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மா அரசன்போல விட்டுவிட்டுச் சேறற்கட்படு மவத்தையாவன? சாக்கிரமுதலியனவாம். அவ்விடங்களாவன? இலாடமுதலியனவாம். ஆண்டாண்டு நிற்குங் கருவிகளாவன? முறையே முப்பத்தைந்து மிருபத்தைந்து மூன்று மிரண்டு மொன்றுமா மென்பதாம்.

அசிந்திய விசுவசாதாக்கியத்தில் அவத்தைக்கு நிற்குங் கருவிகளிற் கலாதிகளையு முடன்கூட்டி யெண்ணி நாற்பத்தொன்று முதலியனவாகத் தொகைகூறுதலானும், கலாதிகளுளவாகவே சுத்தத்தத்துவங்களின் றொழிற்பாடும் ஆண்டுளதென்பது பெறப்படுதலானும், கலாதிக ளில்வழிப் புருடதத்துவ மொன்றனைத் தெண்ணப்படுதல் செல்லாமையானும், ஈண்டு முப்பத்தைந்து முதலியனவாகத் தொகைகூறியது மலைவாம்போலுமெனின்? ஆகாது. சடைதோறும் விட்டுவிட்டென்ற வுவ

மைக்கேற்ப விடப்படுதன் மாலைபவாய் நிற்குங் கருவிகண்மாத் திரைக்கே ஈண்டுத் தொகைகூறப் புகுந்தாராகலானும், அதுப ற்றிக் கலாதிகளின ஐபஞ் செல்லாமைப்பொருட்டு அவற்றைப் புருடதத்துவத் து ளடக்கி அதனையு முடன்வைத் தெண்ணினா ராகலானுமென்க.

துரியாதீதத்திற் காரணசரீர மாத்திரையேயன்றிக் கஞ் சுகசரீர மில்லையென்றது, ஆண்டுக் கலாதிகள் வேறு நில்லாது அதனோ டொற்றித்து நிற்குமென்னுங் கருத்தே! பிறிதில்லை யெ னக்கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படிச் சொல்லப்பட்ட வஞ்சவத்தைப்படுகிற தானங் களு மதற்கதற் குண்டான கருவிகள் நின்ற முறைமைக ளெ ப்படியென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

சாக்கிர முப்பத்தைஞ்சு நுதலினில்-இலாடத் தானத்திலே சோத்திராதியும் வாக்காதியுஞ் சத்தாதியும் வசனாதியும் வாயு க்களு மந்தக்கரணங்களுமாக முப்பத்தைந்தும் சாக்கிரத்தி ல வத்தை.—கனவுதன்னி லாக்கிய விருபதைந்து களத்தினில்- கண்டத்தானத்தில் சத்தாதியும் வசனாதியும் வாயுக்கள் பத்தும் அந்தக்கரணங்களும் சேத்திரஞ்ஞனு மாக விருபத்தைந்தோடு ங்கூடிநின்ற வவதரஞ் சொப்பனம்.—சுழுனைமூன்று நீக்கியவி தயந்தன்னில்- இதயத்தானத்திலே சித்தமும் பிராணவாயுவும் சேத்திரஞ்ஞனுமாக மூன்றுங்கூடி நின்ற அவதரஞ் சுழுத்தி.— துரியத்திலிரண்டு நாபி-நாபித்தானத்திலே பிராணவாயுவுஞ் சே த்திரஞ்ஞனு மாகவிரண்டுங் கூடிநின்ற அவதரம் துரியம்.— நோக்கிய துரியாதீத நுவலின் மூலத்திலொன்றே-ஆன்மாவைய

காதியே தோன்றாமல் மறைக்கிற வாணவமல மொன்றுமொழி ய வேறொரு கருவியுமில்லாமல் மூலாதாரத்திலே சேத்ரஞ்ஞன் மாத்திரந் தனித்து நின்ற அவதரந் துரியாதீதமென்றுசொல்ல ப்படும்.

சாக்கிராவத்தைக்குக் கருவிகள் முப்பத்தைந்தென்றது;மு ப்பத்தாறேடுங்கூடி யான்மா விசுவவ்யாபாரத்தைபுரிந்து நி ற்கச்செய்தே யவத்தைப்படு மிடத்துப் பூதங்களைந்துங் கலாதி களேழுஞ் சிவதத்துவ மைந்தும் ஆகப் பதினேழு நீங்க நின்ற பத்தொன்பதும் தொண்ணூற்றாறு வகையில் வாயுக்கள் பத்து ம் வசனுதிகளைந்தும் சேத்திரஞ்ஞனுமாக முப்பத் தைந்துமெ னக்கொள்க.

இதற்குப்பிரமாணம் திருமந்திரம். "இந்திரிய மீரைந் து மீரைந்து மாத்திரையு,மந்திரமாய் நின்ற மாருத மீரைந்து, அ ந்தக்கரணங்க ளொன்றுமவற்றுடன், சந்தித்த சாக்கிரப் பாலனு மாமே" என்னுமதுங் கண்டுகொள்க.

சொப்பனுவத்தைக்குக் கருவி யிருபத்தஞ் சென்ற தற்கு ப் பிரமாணம் திருமந்திரம். "மனவகத்தேவரு மாத்திரை பத்து, மனவகத் தேவரும் வாயுவீரைந்து, மனவகத்தாய கர ணங்க ளொன்றும், கனவகத்தேயிரு பத்தைஞ்சதாமே"

சுழுத்தி யவத்தைக்குக் கருவி மூன்று என்றதற்குப்பிர மாணம். திருமந்திரம், "சுழுனையிற் சேர்ந்தன மூன்றுள கா ட்சி, கெழுமிய சித்தம் பிராணனற் சீவன், எழுமக்கமலத்தி னு ள்ளேயிருந்து, விழுமப் பொருளுடன் மேவிநின்றானே"என்னு மதுங் கண்டுகொள்க.

துரியாவத்தைக்குக்கருவி இரண்டென்றதற்கும் துரியா தீதத்திற்கருவி யொன்றென்றதற்கும் பிரமாணம் திருமந்திரம்

“சருவரம்பாகிய காயத்துரிய, மிருவருஞ்சண்டீர் பிறப்பிற்ப்புற்றவர், குருவரம்பெற்றவர் கூடியபின்னை, யிருவருமின்றி யொன்றாகிநின்றானே” எனுமதுங் கண்டுகொள்க.

இந்தத் தானங்களைந்தினு மான்மாவு மிந்தக்கருவிகளோ டொன்றாய் வந்ததற்குப் பிரமாணம் திருமந்திரம், “முப்பதோ டைந்தாய் முதல்விட்டங் கையைந்தாய்ச், செப்பினில்மூன்றாய்த் திகழ்ந்திரண் டொன்றதா, யிப்பதநின்ற வியல்பையறிந்திடிற், செப்பரியான்கழல் சேரலுமாமே” என்றும், சிவஞானபோதம், ௪-சூ, ௬-வெ, “ஒன்றனையாமூலத் துயிரனையுநாபியினிற், சென்றனையுஞ் சித்த மிதயத்து-மன்றவே, யைமைபந்தாய் நன்னுதலிற் கண்டத்து வாக்காதி, மெய்யாதி விட்டகன்று வேறு”

இதனாற்சொல்லியது கேவலத்தில் காரியாவத்தையிலதீதத்தி லான்மா வாணவமலமே வடிவாய் நிற்கையால், ஆன்மா கூடினதின் றன்மையாய் நின்றமுறைமையும், இந்த அவத்தைத் தானங்கடோறுங் கருவிகளின்னின்ற முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நுதலினிற் சாக்கிர முப்பத்தைந்து- ஆன்மா அரசன்போல விட்டுவிட்டுச்சேரற்க லிலாடத்தான மாகிய சாக்கிராவத்தையின் முப்பத்தைந்துகருவிகளும்,— களத்தினிற் கனவுதன்னி லாக்கியவிருபத்தைந்து - கண்டத்தானமாகிய சொப்பனாவத்தையில் ஆக்கப்பட்ட இருபத்தைந்துகருவிகளும்,— நீக்கிடவிதயந்தன்னிற் சுழுனைமூன்றும்-நீக்கப்பட்ட இதயத்தானமாகியசுழுத்தியவத்தையின் மூன்றுகருவிகளும்,— நாபிதுரி

யத்திலிரண்டு-நாபித்தானமாகிய துரியாவத்தையி லிரண்டு கருவிகளும்,— நுவலின் - சொல்லுமிடத்து,— மூலத்திலொக்கிய துரியாதீத மொன்றே - மூலாதாரமாகிய பார்க்கப்பட்ட துரியாதீதாவத்தையி லொரு கருவியுமாம்.

மறைஞானதேசிகர் உரை.

—o—

இங்ஙனஞ் சொல்லிப்போந்த கீழாலவத்தை, சாக்கிராதியைந்திற்குங் கருவிக்கொத்துக்களை முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற் றொகுத் துணர்த்துகின்றார்.

ஐந்துசாக் கிரத்தி னான்கு கனவினிற் சுழுனைமூ
ன்று, வந்திடுந் துரியந்தன்னி லிரண்டொன்று துரி
யாதீதம், தந்திடுஞ் சாக்கிராதி யவத்தைக டானந்
தோறு, முந்திடுங் கரணந்தன்னிற் செயற்று முணர்
ந்துகொள்ளே. (௩௪)

(இ-ள்) ஐந்துசாக்கிரத்தின் — முற்கூறிய சாக்கிரத்துக்குக் கருவிக்கொத்தைஞ்சு. அவையாவன? இருவகை யிந்திரியக்கொத்து (௧) இருவகை மாத்திரைக்கொத்து (௧) வாயுக்கொத்து (௧) அந்தக்கரணக்கொத்து (௧) புருடன்கொத்து (௧) ஆகக் கொத்து - ௫, எனவறிக.

நான்குகனவில் — சொப்பனத்துக்குக் கருவிக்கொத்து நான்கு. அவை தன்மாத்திராதி (௧) பிராணவாயுவாதி (௧) கரணம் (௧) புருடன் (௧) ஆ - ௪.

சுழுனை மூன்று — பிராணவாயுக் கொத்து (௧) அகங்காரக் கொத்து (௧) புருடக்கொத்து (௧) ஆ - ௩-ம், சுழுனையிற் பொருந்தும்.

வந்திடுந் துரியந்தன்னி லிரண்டு	வாயுவும் புருடனும் ஆக - உ, துரியத்திற் பொருந்தும்.
ஒன்று துரியாதீதந் தந்திடும்	துரியாதீதத்திற் புருடன் (௧) மே பொருந்திடும்.
சாக்கிராதி யவத்தைக டானந்தோறு முந்திடும்	இந்தமுறையே சாக்கிரமுதலிய தானங்கடோறுஞ் சென்றிழியா நிற்கும்.
கரணந்தன்னிற் செயற்றெருமுணர்ந்து கொள்ளே.	ஆன்மாவுக் கிவைகள் சாதன மெனக் கருதியிப்படிச் சொல்லு முறைமையினை யறிவாயாக எ-று.

இஃதெழுவகை மதத்தினுட் டாஅநாட்ட லென்னு மதத்தைப் பற்றி யெனது குரவர் கூறியதெனவறிக.

இதனைச் சுத்தாவத்தையென்று மயக்கத்தாற் சிலர்சொல்லுவார்கள், அதன்றனைப் பின்னர்க் கூறுகின்ற ராதலாற் கூடாதெனவறிக. (௩௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் நின்மல சாக்கிராதி லக்ஷணங் கூறுதல்.

ஐந்து சாக்கிரத்தின்-நின்மல சாக்கிர ஸ்தானமாகிய இருதயத்திலே சிவசத்திகளினதுயோகத்தினாலே சிவபூதமாய் அகார உகார மகார விந்து நாத * ஸஹிதமான மனோஹங்கார புத்தி சித்த முள்ளமென்னு மைந்துடனுங் கூடிநின்று † பாஃய கரணங்களினாலே காணப்பட்ட சத்தாதிப் பிரபஞ்சத்தை யெ

ல்லாம் சிவாகாரமாகவும் விஷய சுகங்களை சிவாநந்தமாகவுங் கண்டு நிற்பது நின்மலசாக்ரம்.

* ஸஹிதம் - கூடினது, † பாஃய - வெளியிலுண்டான.

நான்குகனவில்-சாக்கிராவத்தைக்குக் காரணமாகிய அகாரம் உகாரத்திலும் பாஃய விஷயங்களைப் பற்றும் மனசு அகங்காரத்திலும் லயிக்க, அகங்கார முதலாகிய நான்கும் தத்பிரேரகமாகிய உகாராதி நான்குடனும் ஸ்வப்ன ஸ்தானமாகிய கண்டத்திலே அந்தக்கரண விருத்தியுடனே * சோஹமென நிற்பது நின்மல ஸ்வப்னம்.

* சோஹம் - அது நான்.

சுழுனைமூன்று - ஸ்வப்பனு வத்தைக்குக் காரணமாகிய உகார மகாரத்திலும்* கிராஹகமாகிய அகங்காரம் புத்தியிலும் லயிக்க,புத்திமுதலாகிய மூன்றும் தத்பிரேரகமாகிய மகாராதி மூன்றும் சுழுத்தி ஸ்தானமாகிய † தாலுமூலத்திலே தேகேந்திரிய விருத்தி ‡ ரஹிதமாக § வாசாமகோசரமான ஞேயஞான ஞாத்ரு என்னும் ¶ த்ரிபுடிஞான மாகிநிற்பது நின்மல சுழுத்தி.

* கிராஹகம்-கிரஹிக்கிறது, † தாலுமூலம் - வாயினிருபக்கத்தினடி, ‡ ரஹிதம் - இல்லாதது, § வாசாமகோசரம் - வாக்குக் கடங்காதது, ¶ த்ரிபுடி - மூன்றுவகை.

‡வந்திநிந் துரியந்தன்னி லிரண்டு- சுழுத்தி யவத்தைக்குக் காரணமாகிய மகாரம் விந்துவிலும் × நிர்ணயகையான புத்தி சித்தத்திலும் லயிக்க,சித்தமுதலாகிய விரண்டும் தத்பிரேரகமாகிய விந்துவாதி யிரண்டும் துரியாவஸ்தா ஸ்தானமாகிய ப்ருமத்யத்திலே தேகேந்திரிய வியாபாரமும் அந்தக்கரண விருத்தியு மற்று * ஞப்திமாத்திரமாய் நிற்பது நின்மல துரியம்.

‡வந்திடுமென்றது- ஆகதநாதத்தை. × நிர்ணயகம்-நிச்சயித்தல். * ஞப்தி - அறிவு,

ஒன்று துரியாதீதம் - துரியாவஸ்தைக்குக் காரணமாகிய ¶ ஆகத விந்துநாதம் குடிலையிலும் சித்தம் பிரகிருதியிலும் லயிக்க, நின்மல துரியாதீதத்துக்குக் காரணமாகிய * அநாகதநாதமும் சிவாநந்தாநுபவியாகிய†வுள்ளமும் அதீதாவஸ்தா ஸ்தாநமாகிய பிரம ரந்தரத்திலேநின்று அகண்டாகார சச்சிதாநந்தாத்வய பரிபூர்ண சிவா ‡ நந்யாபி வியத்தியைப் பெறுவது நின்மல துரியாதீதம்.

¶ ஆகதம்-வந்தது. * அநாகதம்-வாராதது, *அநாகதநாதமாவது - பராசத்தி, † உள்ளமாவது ஆன்மஸ்வரூபஞானம். ‡ அநந்ய-வேறற.

தந்திடுஞ் சாக்கிராதி யவத்தைக டானந்தோறும்-இவ்வாறு சாக்கிராதி ஸ்தானமாகிய இருதயாதிகளிலே அகாராதி * யபிமானிகளான பஞ்சசத்திகளும் ஆன்மாவினுடைய அநுக்ரகார்த்தமாகக் கிரமத்திலே †யுத்தரோத்தராதிகமாக ‡சிவாபிவியத்தியைக் கொடுத்தல் செய்யும்.

* அபிமானி - தனதாக நினைக்கிறவன், † உத்தரோத்தரம் - மேல்மேல். ‡ சிவாபிவியத்தி - சிவப்பிரகாசம்.

ஐந்தாவ தியாதோ வென்னில்? உத்தரமாக.

முந்திடுங் கரணந்தன்னின் செயன்முறு முணர்ந்து கொண்ணி - பாஹ்ய விஷயங்களைப் பற்று மநமுதலாகிய கரணங்களுன்கும், இதைக் கரணங்களாகவுடைய ஆன்ம ஞானமுமாமென அறிந்து கொள்வாயாக வென்றிதன்பொருள்.

இதற்குச் சம்மதி :—

ஜஹாவிஶாதெவாாவஜ௱ஂ—ை:ா ஹ௱ஂ௯ஃ கா
ொோெண வ விஷயஜ௱நதெ— ஜாஹ௱ஂதஃஃஸ

ப்ராணாதிகரணவ்யாப்ருதி விஷயஜ்ஞாநாபாவஸுஷுப்தி: ப
ரம் | தத்ர த்ரிவ்ருத்யவ்யாப்ருதிஹீந ஜபோ க்ராஹ்யோ
ஜாத்யஸ்யாங்கம் ததாமோக்ஷாபரதஸ் ஸவிந்த்ரியா
தீதம் ஶிவமேவாஜயதி.

விஶேஷ ஏவாயம் — ஜாக்ரத் காரணே ப்ரவர
ணம் யோகஸம்வேதநம் ஸ்ம்ருதி | ஜஸ்யேந்த்ரியவ்ரு
த்த்யாயஶ்நாந்த காரணவேதநம் || ஸ்வப்நே கர
ணேஷ்வேவ கேவலே ஸத்யேஷ்வேஷு மத: | ஸ்ந ப்ரு
வம் விஷயாப்ராணம் யோகஸம்வேதநம் யதா || ஸ்நா
ணே கரணம் வ்ருத்தி ஸுஷுப்திஸ்தத்ர ஜாயதே || வி
த்ருத்யஸ்துரீயம் தத் ப்ராணஸம்ஜ்ஞம் ப்ரக்ருதேஜத: ||
காயம் காரணயோ ரத்ர வ்ருத்தாஸ்தேஷ்வ ஸக்ர
ம: | ஸர்வார்த்தவ்ருக்ஷ க்ரியாவ்ருத்தி ஹேதோ நாதஸ்ய
வேதநம் || தத்ராதீதாவரம் ப்ரத்யக்ஷாத்
ஸம் க்ருஹ்ணாதி.

* ஷட்த்ரிம்சத் தத்வாதீதமே மோக்ஷமென்று சாஸ்திரங்களிலே சொல்ல, இவ்விடத்துச் சித்தம் நீங்கினவிடமே மோக்ஷமென்பது விரோத மாகையால், ஐந்தென்றது சிவதத்துவங்களொழிந்தேயென்னில்? அது கூடாது. சகலர்க்குச் சிவதத்துவங்கள் பிரேரககாண்டமும் சுத்தாசுத்த தத்துவங்கள் போசயித்ரு காண்டமுமொழிய போசகாண்டமாகிய காரணமாகாது. சித்தம் நீங்கவே தேர் நிலையிலே நின்றுள்ளளவில் வடம் பிடித்தபேர் கையை விட்டதுபோலும், கன்னிக்காரன் கன்னி யிடாமனின்றதுபோலும், விஷ † யாபி வியஞ்சகங்க

ளான புத்தி முதலாகிய ஆன்ம தத்துவங்களிருபத்து மூன்றும் பிரேரக போசயித்ரு காண்டங்களாகிய சுத்த தத்துவங்களைந்தும் வித்தியா தத்துவங்களேழு மொழியும். பிரேரக போசயித்ரு போக்கிய காண்டத்திரய தத்துவங்களிருந்தும் சித்த மலமாய் ஆன்மஞானம் சிவஞான ‡ பரவசமா யுள்ளளவில் கண்ணை மூடிக்கொண் டிருந்தவனுக்கு சூரியாதிப் பிரகாசங்கள் வஸ்து தரிசனங்களைப் பண்ணிவையாததுபோல, ஆன்மாவுக்கு விஷய தரிசனங்களைப் பண்ணிவையாது. ஆகையால் சித்தவியாபாரமே பந்தம், சித்தம் நீங்குவதுதே மோக்ஷம். இன்னும் அகாராதி சூக்கும பஞ்சாக்ஷரத்தி னுண்மை குருவினாலறிந்து அநுபவிக்க விளங்கும். பரஞானத்திலாலே சித்த ஸ்திரத்தைப் பண்ணினவனே பிரமாவுஞ் சிவனும் விஷ்ணுவும் இந்திரனும் சுப்ரமண்யனும் குருவும் சர்வ தேவதா ஸ்வரூபனும் யோகியும் § தபோதனனும் பண்டிதனும் ¶ மஹாபாகனும் ** க்ருதார்த்தனும் †† பரமார்த்த வித்தும்.

* ஷட்த்ரிம்சத் - முப்பத்தாறு, † அபிவியஞ்சகம்-தோற்றுவிக்கிறது, ‡ பரவசம் - ஒன்றிலடங்கினது, § தபோதனன் - தவத்தை தனமாகவுடையவன், ¶ மகாபாகன்-பாக்யமுள்ளவன், ** கிருதார்த்தன் - பயனடைந்தவன், †† பரமார்த்தவித்து - உண்மை யறிந்தவன்.

தது³க்தம் ஶ்ரீகாமோத்தரே — சித்தமேவ ஹி ஸம்ஸாரோ நிஶ்சித்தோ மோக்ஷ உச்யதே । தஸ்மாச்சித்தம் ஸ்திரீக்ருத்ய ப்ரஜ்ஞயா பரயா ஸ்வயம் ॥ ஸ ப்³ரஹ்மா ஸ ஶிவோ விஷ்ணுஸ் ஸ இந்த்³ரஸ் ஸ ஷடா³நந: । ஸ கு³ருஸ் ஸ ஸர்வதே³வாத்மா ஸ யோகீ³ ஸ தபோத⁴ந: ॥ பண்டி³தோ

ஸஶா உஹாஹாவ: க்ருதாஸு-ு: வாரஶாஸு-ுவிஸு। உஷ ஹாய-ஸஹம் வித்தம் ஜாயதே யேந நிஷ்டஷிதி.

இக்கருத்தே எட்டாஞ் சூத்திரத்திலே-௩௪-செ, "மருவு பசுகரணங்கள் சிவகரணமாகத், துன்னிய சாக்கிர மதனிற் றுரி யாதீதந் தோன்று முயல்" என்றது.

இதனை இவ்வுரையாசிரியர் -௩௯-வது, செய்யுளாகக் கொண்டுரைகூறினர்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சுத்தாவத்தை ஸ்வரூபஞ் சொல்லுகின்றார்.

அந்தக்கரணாதி பிரேரக பிரணவபஞ்ச கலாரூபிகளா யிருதயத்திருக்கும் சுத்த தத்துவமைந்தையும் பற்றி இருதய முதற் பிரமரந்திரமுடிவாக வருஞ் சாக்கிராதிகளைந்து மகாராதியைந்துந்தொடங்கி மேல் கீழ் முறைமையில் ஒவ்வொன்று குறைந்துவரு மகாராதி ரூபசுத்த வித்தியாதி சிவதத்துவ மைந்தையும் முறைமையி லுடைத்தாம்; வித்தரிக்குமிடத்து வித்தரிக்கின்றேம்.

இதனை இவ்வுறை யாசிரியர் - ௩௫-வது, செய்யுளாகக்கொண் டுரைகூறினர்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தேயென மேற்கூறிப்போந்த சாக்கிராதியவத்தைகளைந்தினுள், சாக்கிரத்திற் சுத்த

வித்தையீறாகிய ஐந்து கருவியும், சொப்பனமுதலிய நான்கினும் முறையே அவற்றுளோரோவொன்றொழித் தொழிந்த கருவியுங் கலாதிகளைச் செலுத்திநிற்குமென்பதாம்.

தானந்தோறும் கலாதிசடொழிற்படு மிடந்தோறும்.

உந்துதல் செலுத்துதல்

இச்செய்யுள் பிறிதோரவத்தைக் கோதியதபோலுமென மலையாமைப்பொருட்டுக் கரணங்தன்னிற் செயன்றுறுங் கண்டு கொள்ளென மேற்கூறியவதனை ஈண்டு மறித் துணர்வுசெழக் கூறினார். இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப.

ஈண்டைந்துநான்கு மூன்றிரண்டொன்றென்றது செலுத்துங்கருவிகளையென்பது, உந்திடுமென்றதனானும் "சுத்தக்கருவிகளைத் தங்கொண்டே சொல்லவத்தையைந்துஞ் சித்திக்கும் போதத்திலொன்றொன்றுசென்றிடும்" என்பதனானுமறிக.

இனி, இவ்வாறன்றி 'அறிகருமுதலவத்தை யடைகருமிடத் தேயைந்துஞ் செறிகரும்' என மேற்கூறிப்போந்ததனையே ஈண்டு 'ஐந்துசாக்கிரத்தின்' என்றனுவதித்து அவைச் சொப்பனமுதலியவற்றின் முறையே அவை நான்குமூன்றிரண்டொன்று பொருந்துமென்ற வாறுசக்கொண் டுரைத்தலுமொன்று.

இப்பொருட்குச் சாக்கிராதியவத்தைகளிற்றெனக் கூட்டுக.

தானம் நுதல்முதலியவிடம்.

உந்துதல் பொருந்துதல்.

இவை நான்குசெய்யுளானும், மேலவத்தையென்றவற்றின் பெயரும் வகையு மிடமும் அவற்றதியல்பு மிவையென்பது கூறப்பட்டது.

இதனை இவ்வுரையாசிரியர் - ௫௬ - வது, செய்யுளாகக் கொண் டுரைகூறினர்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மேல் சகலாவத்தையிற் காரியாவத்தையாகிய நிலையிற்படுமவத்தைக்கும் சுத்தாவத்தையிற் காரியாவத்தை யாகிய மேலாலவத்தைக்கும் கருவிகள் நின்ற முறைமை யருளிச்செய்கிறார்.

ஐந்து சாக்கிரத்தி னான்கு கனவினிற் சுழுனைமூன்று வந்திடுந்துரியந்தன்னி லிரண் டொன்று துரியாதீதந் தந்திடும்- அன்வயப் பொருள். நிலையிற் படுமவத்தைக்குக் கருவிகள் சுத்த தத்துவங்கள். அவை வருமாறு:—அதீதத் துக்குச் சிவதத்துவம் ஒன்றும், துரியத்துக்குச் சிவதத்துவமுஞ் சத்திதத்துவமும் ஆக இரண்டும், சுழுத்திக்குச் சிவதத்துவமும் சத்திதத்துவமும் சாதாக்கியதத்துவமும் ஆக மூன்றும், சொப்பனத்திற்கு சிவதத்துவமும் சத்திதத்துவமும் சாதாக்கிய தத்துவமும் ஈஸ்வர தத்துவமும் ஆக நாலும், சாக்கிரத்துக்குச் சுத்த தத்துவங்களைந்தும், இப்படியே இந்தக் கருவிகள் சிவனாலே வந்துகூடும். மேல் சுத்தாவத்தையிற் காரியாவத்தைக்கு இந்தக் கருவிகள் ஒன்றொன்றாக நீங்கு முறைமை யருளிச் செய்கிறார்.—சாக்கிராதியவத்தைகள் தானந்தோறு முந்திநிற்கரணந்தன்னில் செயல்தொறும்-சுத்தவித்தை நீங்கின வவதரம் சாக்கிரத்திற் சாக்கிரம், ஈஸ்வரம் நீங்கின வவதரம் சாக்கிரத்திற் சொப்பனம், சாதாக்கியம் நீங்கின வவதரம் சாக்கிரத்திற் சுழுத்தி, சத்திதத்துவம் நீங்கின வவதரம் சாக்கிரத்திற் துரியம், சிவதத்துவம்நீங்கின வவதரம் சாக்கிராதீதம், இந்தச் சுத்த தத்துவங்களைந்தும் அருள் மேலீட்டில் ஒன்றொன்றாக நீங்கும்,— உணர்ந்துகொள்ளே-இந்த முறைமையை உபதேசத்திலே யறிந்துகொள்வாயாக.

இதனாற் சொல்லியது, சகலத்திற் காரியா வத்தைக்கும் சுத்தத்திற் காரியாவத்தைக்கும் சுத்ததத்துவங்களைந்தும் ஒன்றொன்றாகக் கூடின முறைமையும் நீங்கின முறைமையும் அறிவித்தது.

முன்னற் றிருவிருத்தத்துக்கும் இந்தத் திருவிருத்தத்துக்கும் பிரமாணம். சிவஞானபோதம் ச-சூ, எ-வெ, "இலாடத்தே சாக்கிரத்தை யெய்தியவுள்ள, மிலாடத்தே யஞ்சவத்தை யெய்து-மிலாடத்தே, யவ்வவ் விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே, யவ்வவற்றை நீங்கலது வாங்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

இவ்வுரையாசிரியர் - ௩௱ - வது, செய்யுளாகக் கொண்டுரையிட்டனர்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சாக்கிராதி யவத்தைகள் - அறிதரு முதலவத்தை யடைதருமிடத்தேபென மேற்கூறிப் போந்த சாக்கிராதி யவத்தைகளைந்தனுள்,— சாக்கிரத்தி லைந்து - சாக்கிரத்திற் சுத்தவித்தையீறாகிய வைந்து கருவியும்,— கனவினான்கு - சொப்பனத்தின் மயேச்சுர மீறாகியநான்கு கருவியும்,— சுழுனைமூன்று-சுழுத்தியிற் சாதாக்கிய மீறாகிய மூன்றுகருவியும்,—வந்திடுந் துரியந்தன்னி லிரண்டு-வருகின்ற துரியத்திற் சத்தியீறாகிய விரண்டுகருவியும்,—தந்திடுந் துரியாதீத மொன்று-தரப்பட்ட சிவதத்துவமாகிய ஒருகருவியும்,— தானந்தோறும் - கலாதிக டொழிற்படுமிடந்தோறும்,—கரணந்தன்னிற் செயலொரும்-கருவி

யால் விடயங்களை யறியும்,— உந்திடு முணர்ந்து கொள்ளே-செலுத்தி நிற்றலை நீநுண்ணுணர்வா லுணர்ந்து கொள்வாய்.

இவ்வுரையாசிரியர் - ௩௬ - வது, செய்யுளாக உரையிட்டனர்.

மறைஞானதேசிகர் உரை.

மேல் மத்தியாலவத்தையுஞ் சுத்தாவத்தையுந் தொகுத் துணர்த்து கின்றார்.

அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தேயைந்துஞ், செறிதரு கரணந்தன்னிற் செயபெறுறுங் கண்டுகொண்ணீ, பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற வருளாலாங்கே, குறிவொடு மைந்தவத்தை கூடுவர் வீடுகூட. (௩௫)

(இ-ள்.) அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தேயைந்துஞ் செறிதரும் — ஆன்மா வெல்லாக் கருவி கரணாதிகளுடனே கூடின வெல்லாத்தையு மறிகிற சாக்கிராவத்தையிற் றானே பஞ்சாவத்தையைப் பொருந்தி நிற்பன். அதெங்ஙன மென்னில்?

கரணந்தன்னிற் செயபெறுறுங் கண்டு கொண்ணீ — வாராய் மாணவக! யாதாமொருவனொ ரிடத் தொருபொருளைக் கொடுத்துக் கலங்கியவ்விடத்து மூர்ச்சித் திருத்தல் சாக்கிரத்தி லதீதமெனக் கண்டு கொள்வாயாக.. அந்தமூர்ச்சையிற் சற்றே பிராணவாயுவியங்குகை சாக்கிரத்திற்றுரியம். அப்பொருளை யெவ்விடத்து வைத்தோமோ வென்றையப் படுகை சாக்கிரத்திற் சுழுத்தி. அப்பொருளை யின்னி

ன்ன விடத்தென் றையுற்றிடிற் சாக்கிரத்திற் சொப்பனம். அப்பொருளைக் கண்டெடுத்தல் சாக்கிரத்திற் சாக்கிரம். இப்படி யதிதமுதலாக வடைவே யான்மா வானவன் மேலுங்கீழும் பொருந்திப் போக்குவரவு செய்வன். அஃதென்போல வென்னில்? நித்தியஞ் சிலம்பிப்பூச்சியான தெப்படி மேலுங்கீழும் போக்குவரவாகப் பிரவேசியா நிற்கும், அதுபோல.

பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற	சிவனிடத் திரண்டற வைக்கியத்தைப் பொருந்தச் சீவன்முத்தத் தன்மையை யடைந்திருக்கிற ஞாதாக்களும் தாங்கள் சனன மரணத்தைப் போக்குகையின் பொருட்டும்,
அருளாலாங் கே குறி பொடுமைந் தவத்தை கூடுவர் வீடுகூட.	சிவனது காருண்ணியத்தினால் லாடத்தானத்திற் சாக்கிராவத்தையிலே நிற்கையிலேதானே மோட்சத்தை யடைகை காரணமாக வாசாரிய னுபதேசித்த குறிப்படியே நின்று பஞ்சாவத்தையையும் பொருந்திச்

சமாதியி லிருப்பார்கள் எ-று.

இந்தச் சமாதியா லவத்தை சமலமெனப் பெறும்.

சுத்தாவத்தை நின்மலாவத்தை யெனப்பெறும்.

இந்தநின்மலாவத்தை சதேகை விதேகை யென விருவிதமாம்.

இதிற் சதேகையாவது:—சீவன் முத்தித் தன்மையி னிட்டையைப் பொருந்தி யிருத்தல்

விதேகையாவது:—முத்தியை யடைந்த காலத்திற் சுவாநந்தானு பூதியைத் தியாநித்திருத்தல்.

முற்கூறிய சதேகாவத்தை சடீசவிருத்திக் கிரமமெனவும் கலாவிருத்திக்கிரம மெனவு மிருவிதம்.

இதின்முந்திபது, பிசாக்கிரத்தி னுச்சாரம் சாக்கிராவத்தை, விந்து மாத்திரோச்சாரம் சொப்பனாவத்தை, நாதமாத்திரோச்சாரம் சுஷுப்தி யவத்தை, சத்தியந்தோச் சாரம் துரியாவத்தை, சிவாநந்தம் துரியாதீதம். இதற்கடைவேதானம் இதயமுத லெனவறிக. அதனை விரிக்கிற்பெருகும், ஆகமத்திற்காண்க. (ருடு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——()——

மேல் மத்தியாலவஸ்தை யுணர்த்துதல்.

அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ் செறிதருங் கரணந்தன்னிற் செடமுறுங் கண்டுகொண்ணீ - அறியப்பட்ட சகலா வத்தையைப் பொருந்தும் ¶ லலாடஸ்தானத்திலே விழித்திருக்கையிலே அஞ்சவஸ்தையும் பொருந்தும்.

அதெவ்வா றென்னில்? முன்சொன்ன கீழாலவத்தை யையந்துக்குங்கருவி பிரிந்தமுறைமையிலே லலாடத்தானத்திலேதானேயந்தந்தக் கருவிகளைப் பிறியு மதுவே யேதுவாக வந்த வஞ்சவத்தையையும் பொருந்தும்; இது சூக்குமித்துப் பார்த்துக் கண்டு கொள்வாயாக. அவையாவன?

சாக்கிராவத்தையா யிருக்கையிலே புத்ர தாராதி மரணசிரவணத்தினாலே யாகுதல் இஷ்டவஸ்துச் சேதங்களினாலே யாகுதல் + கதாப் × பிரசராகைளினாலே யாகுதல் மூர்ச்சைவந்து பிராணவாயுவும் ஜீவியாமனின்ற வவசரம் சாக்கிராதீதம்.

அற்பம் பிராணவாயுவும் ஜீவித்துள்ளளவில் சாக்கிர துரியம்.

பிராணவாயுவு மனசுங்கூடி ‡ கேதமாத்திரமேயாக நின்றது சாக்ர சுழுத்தி

இருபத்தைந்து கரணங்கள் கூட தத்÷ வேதஞமாத்திரமே அநுபவிப்பது சாக்ரசொப்பனம்.

தத்துவ முப்பத்தாறுங்கூடி பூர்வம்போலே சர்வவியாபாரத்துடனு மிருப்பது சாக்ர சகலம்.—

பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற வருளாலாங்கே குறியொடு மஞ்சவத்தை கூடுவர்வீடுகூட - குருகடாக்ஷத்தினாலே ஜனனத்தை யொழிப்பதான பிறிவற்ற சிவஞானத்தை யுடையவர்களுக்குச்சாச்கிரத்திலே யைந்தவத்தையும்போல நிர்மலசாக்ராதி யைந்தவத்தையு மடைந்து முத்தியின் பொருட்டுச் சச்சிதானந்த மயமாகக்குறிக்கப் பட்ட சிவத்துடனே கூடியடைவர்கள்.

பிறப்பற வென்றது போதர மலமுத்தியென்றது § புநருத்தியென்னில்? அல்ல. தீவ்ரசத்தி நிபாதர்க்கு தீட்சையினாலே விஞ்ஞானகலப்பிராப்தியாம், விஞ்ஞானகலர்க்கு ஜனனமில்லையாகையால் பிறப்பற வென்றது. இன்னும்விஞ்ஞான கலர்க்கு சுத்தமாயையும் ஆணவமலமும் திரோதானமு முண்டாகையால் அதுநீங்குதற்கு வீடுகூட வென்றது.

மோக்ஷமென்பது-அஞ்ஞான †மோசனம்.

¶லலாடம்-நெற்றி + கதா-தடி × பிரகாரம்-அடி ‡ கேதம்-துன்பம், ÷வேதஞ-அறிவு §புநருத்தி-இரட்டித்துச்சொல்லல் † மோசனம்-விடுதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

கீழாலவத்தையைச் சொல்லி மத்தியா லவத்தையைச் சொல்லாநின்று சுத்தாவத்தைத் தோற்றரவு முரைக்கின்றார்.

அறிதருமுதலவத்தை - சகலாவத்தை, அதினிடத்தில் மத்தியா லவத்தைத் தோற்றும்; பொருள் வித்தரிக்குமிடத்து வித்தரிக்கின்றாம்.

× இவ்வுரையாசிரியர் இதனை-௩௪-வது, செய்யுளாகக்கொண் டுரையிட்டனர்.

சிவஞானயோகியருரை வருமாறு.

சாக்கிராதிபவத்தையென மேற்கூறிப்போந்த வைந்தனுள் முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின் கண்ணேயுஞ் சாக்கிரமுதலைந்தவத்தையுளவாம். அவை கருவியான் விடயங்களை யறியுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமா யிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்ளப்படும். இனி இவையேயன்றிக் கேவலசகலங்கணீங்கிய சுத்தத்தினும் அவ்வாறே யைவகையவத்தையுள, அவை யுண்மையதிகாரத்து ளுணர்த்தநின்றனவென்பதாம்.

முதலவத்தை யடைதரு மிடமாவது மேற்கூறிய இலாடத்தானம்.

அறிதருமிடத்தேயென விரையும்.

சுத்தாவத்தையினியல்பு ஈண்டுக்கூறுதற் கோரியையில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டுக்கூறியவை மாத்திரையேபோலுமென மலையாமைப் பொருட்டு இவ்வாறுகூறியொழிந்தார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்த வவத்தைகள் என்னாற் றரிசனப்பட்ட தில்லையென்ற மாணாக்கனுக்கு, இந்த வவத்தைகள் தரிசிப்பிக்கவேண்டி சகலாவத்தையில் காரியாவத்தை யருளிச்செய்கிறார்.

அறிகருமுதலவத்தை யடைதருமிடத்தே யைந்துஞ் செறிதரும் - விஸ்வ வியாபாரத்தை யறியப்பட்டு வருகிற சாக்கிரம் பொருந்தி யிருக்கிற இலாடஸ்தானத்திலே சேர வைந்தவத்தையு முண்டாகாநிற்கும், இவையிற்றை யறியும்படி யென்னெனில்?—கரணந்தன்னின் செயல்தொறுங் கண்டுகொண்ணி - முற்கூறப்பட்ட கீழாலவத்தைகளி லுண்டாகிய கருவிகள் ஏற்றக்குறைதலாய் நின்ற முறைமையை முப்பத்தாறுடுங்கூடி நின்ற விடத்திலே யறிந்து அதுவு மிப்படியென்று புத்திபண்ணுவாயாக. மேல் சுத்தத்தில் காரியா வத்தை யருளிச்செய்கிறார்.—பிறிவிலா ஞானத்தோறும் பிறப்பற வருளாலாங்கே-ஒருக்காலும் விட்டுநீங்காத ஞானத்தைப் பெறுதற்குப் பக்குவரானவர்களும் சனனமொழிய தம்பிரானார் காருண்ணியத்தினாலே அந்த விலாடஸ்தானந் தன்னிலே,—குறியொடு மஞ்சவத்தை கூடுவர் வீடுகூட - ஆசாரிய னுபதேசத்தினாலே மேலாலவத்தை யைந்தையும் பொருந்துவர்கள், மோட்சம் பெறுகைப் பொருட்டாக.

அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தேயைந்துஞ் செறிதரும் - விஸ்வ வியாபாரத்தை யறியப்பட்டு வருகிற சாக்கிரம், பொருந்தியிருக்கிற இலாடத்தானத்திலே ஐந்தவத்தையுமுண்டாம்; அதுநிலையிற் படுமவத்தை. அதெங்ஙனே யென்னில்? ஒரு பண்டத்தைவைத்து மறந்துபோனவன் பண்டம் போச்சுதென்று நினைத்தபொழுது பிராணவாயுவு மியங்காமல் மூர்ச்சித்திருந்த வவதரம் துரியாதீதம். பின்பு பிராணவாயு வியங்கின வவதரம் துரியம். இன்னவிடத்திலேயல்லோ பொருந்தினோமென்று நினைவெழுந் திருந்தவவதரம் சுழுத்தி. இன்னவிடத்திலேயல்லோ வைத்தோமென்று அறிந்த வவதரம் சொப்பனம். அந்தப் பொருளைச் சென்று கண்ட வவதரம் சாக்கிரம். என்

ணவே இந்த வவத்தையிற் கருவிகள் ஏற்றல் குறைச்சல்கள்போல அந்தக் கீழாலவத்தையு மென்றறிக. இது சகலாவத்தையிற் காரியவவத்தை.

அருளா லாங்கே குறியொடு மஞ்சவத்தை - சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிராதீதம், ஆக இவை யைந்தும் மேலாலவத்தை என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சகலத்திற் காரியாவத்தையாகிய நிலையிற்படு மவத்தையும் சுத்தத்திற் சாரியா வத்தையாகிய மேலாலவத்தையும் நின்றமுறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அறிதருமுதலவத்தை யடைதரு மிடத்தே - சாக்கிராதிய வத்தையென மேற்கூறிப்போந்த ஐந்தனுள் முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின் கண்ணேயும்,— ஐந்தும் செறிதரும் - சாக்கிரமுதலைந்தவத்தை யுளவாம்.— கரணந்தன்னிற் செயலுரும் நீ கண்டுகொள் - அவைகருவியான் விடயங்களை யறியும் செய்கைதோறும் நீ யதினுணுக்கமா யிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்ளப்படும்.— பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற - இனியிவையேயன்றிப் பிறிவரிய ஞானத்தை யறிந்தோரும் பிறப்பு நீங்கி,—அருளாலாங்கே வீடுகூட - அவ்வருளா லவ்விடத்து வீடினையடைதற்,— குறியொடுமஞ்சவத்தை கூடுவர் - கேவல சகலங்க ணீங்கிய சுத்தத்தினு மவ்வாறே யைவகை யவத்தையைக் கூடுவர் அவை யுண்மையதிகாரத்து ளுணர்த்தநின்றன.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய விரண்டினுக்கும் யோக சுத்தாவத்தைக்
கும் பல மீதென் றுணர்த்துகின்றார்.

இருவகைச் சாக்கிராதி யவத்தைகளியல்புதானு,
மொருவகைக் கிழேறாக்கி யுற்பவங் காட்டுமொன்று,
பெருகமே லேக்கித்தீய பிரப்பறுத் திடுமியோகிற்,ற
ருவதோர் சமாதிதானுந் தாழ்ந்துபின் சநநஞ்சா
ரும். (௬௯)

(இ-ள்) இருவகைச் சாக்கிராதி யவத்தைகளியல்புதானும் — சமலாவத்தையாகிய மத்தியாலவத்தைச் சாக்கிராதியெனவும், நின்மலா வத்தையிற் சாக்கிராதியெனவும், எனக்கூறிய விருவிதமான வவத்தைகளின் முறைமையைவிசாரிக்கில் அவ்விரண்டுந் தம்மிலொக்குமோ வென்னில்?

ஒருவகைக் கிழேறாக்கி யுற்பவங்காட்டும் — முந்தினது மலசகிதமாய் மறைப்புண்கையான்மாக்களுக்கு ஜநநத்தை யுண்டாக்கிக் கிழே தள்ளிவிடும்.

ஒன்று பெருகமேலேக்கித் தீய பிறப்பறுத்திடும் — மற்ற நின்மலாவத்தை பொல்லாதெனக் கூறிய ஜநந மரணங்களிற் செலுத்தாமன் மேலான மோக்ஷத்தை யடைவிக்கும். அவையாவன:—

ஆன்மாவானவன் புறக்கரண முட்கரணமாகிய விரண்டினுங் கூடியிருக்கிற தன்னை யறிவது நின்மலசாக்கிரம். அந்தப் புறக்கரணத்தைவிட் டுட்கரண வியாபாரத்துடன் கூடித் தன்னை யறிகிறது நின்மலசொப்பனம். அந்த வுட்கரணத்தின் வியா

பாரத்தை விட்டுப் போகங்களின் விருப்புமின்றி நிச்சலமான மனதுடன் கூடியிருப்பது நின்மலசுழுத்தி. அந்த மனத்தையும் விட்டுச் சித்தாகிய ஞானத்துடனே கூடியிருப்பது நின்மலதுரியம். அதற்குமேலாய் நிரஞ்சனமாய் சுவசம்வேத்தியத்துக்கெட்டாத ஞானரூபமாகிய சிவனுடனைக்கியம்பண்ணி யிருப்பது நின்மல துரியாதீதம். இவைகளொன்றுக்கொன்று சூக்குமமாயிருக்கு முறைமை சற்குருவினுடைய வுபதேசத்தா னன்றாக விளங்குமென வறிக.

இஃதன்றியும் பலவாகக் கூறுமவைகளையு மறிந்துகாண்க.

யோகிற்றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்தபின் சநநஞ்சாரும்.	யோகசமாதி சாதாரண மாதலான் மேலான ஞானமடைதற்குத் தாழ்ந்த யோக சமாதியைப் பொருந்தினவர்களந்த ஜநநம் விட்டுப் பின்பொரு ஜநநத்தை யெடுத்து ஞானாசாரியனாலே ஞானத்தை யடைந்து நிராதார சமாதியைப் புரிந்து பரமமான

மோட்சத்தை யடைவர்கள். எ-று.

உம்மை யிழிவுசிறப்பு.

யோகசமாதியாவது:-யோகபலத்தாலே சாக்ரத்தானத்திற் றன் காணப்பட்ட ப்ரவிருத்திகளெல்லா மற்றதின் வழி செல்லாமற் பிரத்தியாகாரத்தாலே திரும்புதல் சாக்கிரத்திற் சாக்கிரம்.

அப்படியிருக்கவு மனதானது வேறொன்றினுஞ் செல்லாமற் றாரணையி னிறுத்துதல் சொப்பனம்.

இத்தாரணையிற் றிடமாகநின்று தியானஞ்செய்வது சுழுத்தி.

சமாதியிற் றற்சொரூப தரிசனந் தோன்றுவது துரியம். அஃதாவது கேவல மறிவேமயமாயிருத்தல்.

இந்த ஞானத்துக்கு மேலாகிய சிவனைத் தரிசித்திருப்பது துரியாதீத மெனவறிக.

இதற்கு சிந்தியவிஸ்வ சாதாக்கியத்தறிக.

"அவத்தை விதமெல்லாம் சிந்தியத்தாராய்க, பவத்தை யறுப்பார் பரந்துநிற்கு - மவத்தைவித, முண்டுணர்க மற்றைய நல் லோத்தினுமெல் லாமுணர்ந்த, பண்டிதர்போற் பாதம் பணிந்து" எனவறிக. (௩௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சமல நிர்மல பேதத்தினாலே கீழாலவத்தை மேலாலவத்தை யென்னும் பேதத்தைக் கூறுகின்றது.

இருவகைச் சாக்கிராதி யவத்தைக ளிபல்புதானும்- சாக்கிராதி யவத்தைகள் சமலநின்மலத்தையினாலே யிரண்டு விதமாயிருக்கும்.—ஒருவகைக் கீழ்நோக்கி யுற்பவங் காட்டும்-முன் சொன்ன சமலசாக்கிராதி யானது அதோமுகமாய்க் கிரமத்திலே யதீதாவத்தையை யடைந்து ஜநநத்தையுண்டாக்கும்.—ஒன்றுபெருக மேனோக்கித் தீயபிறப் பறுத்திடும் - நின்மல சாக்கிராதியானது முன்சமல சாக்கிராதியிலே விபுத்துவஞ்சத்துவ கர்த்திருத்துவங்கள் கிரமத்திலே *சங்குசித மானதுபோல நின்மல சாக்கிராதியிலே ஊர்த்துவமுகமாய் விபுத்துவாதிகள் கிரமத்திலே விகாசமாய் அபரிச்சின்னமாய் பொல்லாதாயே ஜநநாதிகளை யொழிக்கும்.—யோகிற்றருவதோர் சமாதிதானுந் தாழ்ந்துபின் ஜநநஞ்சாரும்- சாதாரயோகத்தில் சமாதியாகிற அதீதாவத்தையும் நின்மல துரியாதீதாவத்தைக்கு அற்பம் †நூனமா யதனால் காலாந்தரத்திலே ஜநநத்தையும் பொருந்தும். விபுவாயிருக்கிற ஆன்மாவுக்கிப்படிச் சங்கோச விகாசமே சொ

ல்லுவா னேனென்னில்? மாயாதியுபாதி வசத்தினாலே சங்கோசமும் சத்வரகித மானதினாலே விகாசமும் சம்பவிக்கும்.

* சங்குசிதம் - குறைதல், † நூநம் - குறைவு.

இதனை-கூசு-வது, செய்யுளாகக் கொண் டுரையிட்டனர்

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சொல்லிய கீழாலவத்தை மேலாலவத்தை யிரண்டினது செய்தி யிசைக்கின்றார்.

யோகிற் றருவதோர் சமாதி - சாலம்ப சிவயோக சமாதி,—சனனம் - அபிமத புவனேசுர சாரூபம்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறிப்போந்த சாக்கிரமுதலியவைந்துங் கீழ்நோக்கிச்சென்றொடுங்குமுறையும் மேனோக்கித் தோன்றுமுறையும் பற்றி யிருவகைப்படும். அவற்றுள் ஒடுங்குமுறையது கன்மார்சிப்புக் கேதுவாகலாற் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம், தோன்றுமுறையது கன்மநுகர்ச்சிக் கேதுவாகலாற் பரம்பரையிற் பிறவியறுதற்குக் காரணமாய் மேற்படும். இனி இதயமுதற் றுவாதசாந்த மீறாகிய தானங்களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும் பற்றாதும் பிரத்தியாகாரமுதலவகைப்பட்டு நிகழும் யோகாவத்தையும் அதுபோல ஒடுங்கியுந் தோன்றியுமவ்வாறே பயன்றருவதன்றிப் பிறிதன்றென்பதாம்.

யோகிற்றருவதோர் சமாதியுண்டென்பதும் அனுவாதமுகத்தா னீண்டே பெற்றாம்.

தாழ்தல் இழிதல்

சனனஞ்சார்தல் ஏறுதல்.

இந்தபோகாவத்தைதைபத்தானே மீட்சியில்லாதாகிய ஞானவத்தை போலுமெனக்கொண்டு மயங்குவார்க்கு அங்ஙனமயங்காமைப்பொருட்டு இதனை யதனோ டொப்பவைத் தீண்டுக்கூறினார்.

இச்செய்யுளிற்கூறிய மூன்றுபெசமும் முறையே சகலத்திற்கேவலஞ் சகலத்திற்சகலஞ் சகலத்திற் சுத்தமெனப் படுமென்க.

இதனுள் இருவகைப் பிறப்பறுத்திடுமென்றது தாப்பிசையாய் அறிகருமுதலவத்தை யடைதரும்இடத்தே யைந்துஞ் செறிதருமென வருகின்றதனோடுஞ் சென்றியைந்து பொருடருமாதலான் அதற்குமிவ்வாறுரைத்துக் கொள்க.

இவ்வுரையாசிரியர் இச்செய்யுளை-௩௪-வது, செய்யுளாகக் கொண் டுரையிட்டனர்.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி முன்சொல்லப்பட்ட அவத்தைகள் ஒருவகைப்பட்டிருக்குமோ இருவகைப்பட் டிருக்குமோ வென்ன, இரண்டு வகைப்பட்டிருக்குமென்றும் அந்த அவத்தைகளின் முறைமையு மேலருளிச்செய்கிறார்.

இருவகைச்சாக்கிராதி யவத்தைக ளியல்புதானும் - இரண்டு வகைப்பட்ட சாக்கிர முதலான அவத்தைகளினுடைய முறைமை யானதுதான் எப்படியென்னில்?—ஒருவகைகீழேநோக்கி யுற்பவங்காட்டும் - முன் சொன்ன விரண்டுவகையில் ஒரு

வகை யவத்தை யிவனைக் கீழ்கள்ளி ஜநநத்தை யுண்டாக்கும்.—ஒன்றுபெருக மேனோக்கி தீயபிறப்பறுத்திடும் - ஒருவகை யவத்தை மிகவும் மேலேசெலுத்தி குற்றத்தை யுடைத்தாகிய ஜநநங்களைப் போக்கும்.—யோகிற்றருவதோர் சமாதிதானும் - முன்சொன்ன விரண்டுவகையு மன்றியே சிவயோகத்தி லுண்டாகப்பட்ட சமாதி யுடையவர்களுக்கும்,—தாழ்ந்துபின் சங்கம்சாரும் - இந்த ஜநநத்தில் பிறப்பறுது பின்பொரு ஜநநமெடுத்து ஆசாரிய கடாக்ஷத்தினாலே பிறவாநெறியாகிய உண்மையைப் பெறுவார்கள்.

இதனாற் சொல்லியது கீழாலவத்தை ஜநநத்தை யுண்டாக்குமென்றும் மேலாலவத்தை ஜநநத்தைப் போக்குமென்றும் இவை யிரண்டுமன்றி சிவயோகத்தா லுண்டாக்கப்பட்ட சமாதியுடையவர்களுக்குப் பின்பொரு ஜநநத்திலே சாயுச்சிய முண்டாமென்னு முறைமையு மறிவித்தது.

இவ்வுரையாசிரியர்-ருசு-வது, செய்யுளாகக்கொண் டுரையிட்டனர்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சாக்கிராதி யவத்தைக ளியல்புதானு மிருவகை - மேற்கூறிப் போந்த சாக்கிரமுதலிய ஐந்தும் கீழ்நோக்கிச் சென்றொடுங்கு முறைமையும் மேனோக்கித் தோன்று முறைமையும்பற்றி யிருவகைப்படும்,—ஒருவகை கீழேநூக்கி யுற்பவங்காட்டும்-அவற்றுளொன்று ஒடுங்கு முறைமையது கன்மார்ச்சிப்புக் கேது வாகலாற் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம்.—ஒன்று பெருக மேனோக்கித் தீயபிறப்பறுத்திடும்-ஒன்று தோன்று முறை கன்மநுகர்ச்சிக் கேதுவாகலாற் பரம்பரையிற் பிறவி யறுதற்குக்

காரணமாய் மேற்படும்,— யோகிற்றருவதோர் சமாதிதானும் தாழ்ந்துபின் சனனம்சாரும் - இனி யிதயமுதற் றுவாதசாந்த மீறுகிய தானங்களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும் பற்றுதும் பிரத்தியாகாரமுத லவகைப்பட்டு நிகழும், யோகா வத்தையு மதுபோல வொடுங்கியும் தோற்றியு மவ்வாறே பயன் றருவதன்றிப் பிறிதன்று.

இச்செய்யுளிற் கூறிய மூன்று பேதமும், முறையே சகலத்திற் கேவலஞ் சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தமெனப்படும்.

இவை நான்கு செய்யுளானும் மேல் ஐந்தவத்தை யென்ற வற்றின் பெயரும் வகையு மிடமும் அவற்றதியல்பும் இவையென் பதுகூறப்பட்டது.

இவ்வுரையாசிரியர் சிவஞானமுனிவ ருரையைத் தழுவின ராதலின் இதனை-௩௪-வது, செய்யுளாகக் கொண்டனர்.

மறைஞானதேசிகர் உரை.

மேற் காரணவத்தையினது பெயரைத்தொகுத்து வகுத் துணர்த்துகின்றார்.

கேவல சகலசுத்த மென்றுமூன் றவத்தையான்
மா, மேவுவன் கேவலந்தன் னுண்மைமெய்ப் பொறிக
ளெல்லாங், காவலன் கொடுத்தபோது சகலமு மலங்க
ளெல்லா, மோவினபோதுசுத்த முடையனாற் பவங்
துடைத்தே. (௩௭)

(இ-ள்.) கேவலசகலசுத்த மென்றுமூன் றவத்தை யான்மா மேவுவன் — ஆன்மாவானவன் கேவலமுதலிய மூன் றவத்தையினையும் பொருந்துவன்.

கேவலந்தன்னுண்மை

ஆன்மா வியாபாரமின்றி மறைப்புண்டு கிடத்தல். அஃதாவது, சங்காரகாலத்திலான்மாவினுடைய விச்சாஞானக் கிரியைகள் விளங்காமன் மல மேலீட்டினாலே மறைப்புண்டு மைக்குழம்பின்கண் விழுந்த மாணிக்கமான தொளி நீங்கினாற்போல விளங்காதிருக்கை.

மெய்ப் பொறிகளெல்லாங் காவலன் கொடுத்த போது சகலனும்

சிவன் றனது சிற்சத்தியாலே மாயாகாரியமாகிய கலைமுதலிய கருவிகளைத் தோற்றுவித்துக் கருவிகளை யான்மாக்கட்குக் கூட்டிக் காரியப்படுத்திப் போகங்களைப் புசிப்பிக்கை சகலாவத்தை.

மலங்களெல்லா மோவின போது சுத்தமுடைய னுற்பவந் துடைத்தே

ஆன்மாவானவன் றீக்கையினாலே மலங்கணீங்கி மேற் ஜநநமெடுப்பது மின்றி முன்போலச் சுத்தனாயிருக்கை சுத்தாவத்தையெனப் பெறும். எ-று.

கேவலாதி மூன்றுக்குந் தொகைப்பட உதாரணம். "தற்கேவலமுத்தி தானே தனிமையாம், பிற்பாற் சகலங் கலாதிப் பிறழ்வதாங், தப்பாற்புரிசுத்த கேவலஞ்சாக்கிரத், தப்பாற் புரிய வதிசுத்தமாமே." எனவறிக.

இதற்குச் சுவாயம்புவம். (௩௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் காரணாவஸ்தாத் திரயத்தை யுணர்த்துதல்.

கேவலசகலசுத்த மென்றுமூன்றவத்தை யான்மாமேவுவன் - ஆன்மாவானவன் கேவலமென்றும் சகலமென்றும் சுத்த

மென்றும் மூன்றவத்தையைப்பொருந்துவன். இவையிற்றுள்;— கேவலந்தன்னுண்மை - கேவலாவஸ்தையானது அநாதி சித்தமாய் மோக்ஷபரியந்தம் விட்டுப் பற்றன்றி + யாந்தரபந்தமான வாணவ மலத்தைக் காரணமாயுள்ளது.—மெய்ப் பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனும் - தேகேந்திரியங்களை ஈஸ்வரன் கூட்டினபொழுது கலாதிகளுக்குக் காரணமான மாயையால் வரும் சகலாவத்தை யுடையனுமவன்.—மலங்களெல்லா மோவினபோது சுத்தமுடைய னுற்பவந் துடைத்தே - பராசத்தி ஸ்பரிசத்தினாலே யாணவமாயை கன்மமென்று மலங்களெல்லா நீங்கினபொழுது சுத்தாவஸ்தை யுடையவனு யதனால் ஜநந மரணங்களைத் தள்ளப்பட்டவனுமவனென் றிதன்பொருள்.

இந்த காரணாவஸ்தையாகிய கேவல சகல சுத்தமூன்றுங் காரியாவத்தை பதினைந்து மாகப் பதினெட் டவத்தை யென்றுசிறிதுபெயர்ச் சொல்லுவர்கள், அதுஅறியாமை. சமலாதீதாவஸ்தையே கேவலம். சப்பிரதிபா சாக்கிரா வஸ்தையே சகலம். நின்மலா தீதாவஸ்தையே சுத்தம். ஆகையால் அவஸ்தை பதினஞ்சே! இதற்குச் சம்மதி சிவப்பிரகாசம் உண்மை- ௧௨-செ. "நீக்கமிலதீத மாசு நிறைந்த கேவலமா நீர்மை, சாக்கிரங் கலாதிசேர்ந்த சகலமாந்தன்மையாகு, நீக்கமி லிரண்டுங்கூடா தொழியவோர் நிலையினீடுஞ், சாக்கிரவதீதஞ் சுத்தத் தகைமையதாகுந்தானே."

ஞானப்பிரகாசருரை வருமாறு.

முன்சொல்லிய கீழாலவத்தை மத்தியாலவத்தை மேலாலவத்தைகட்குக் காரணாவத்தைகளைத் தொகுத்து வகுத்துரைக்கின்றார்.

உண்மை - பசுத்தன்மை.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மா அவ்வாறுநிகழுங் காரியவவத்தைகளை யுறுதற்குக்காரணமாகக் கேவலஞ் சகலஞ் சுத்தமென மூன்றவத்தையெய்துவன். அவற்றுட் கேவலமாவது தன்னிச்சாஞானக்கிரியைகளினிகழ்ச்சி சிறிதுமின்றித் தான்மாத்திரையே யுளனாதல். பின்பு தனுகரணாதியோடுங்கூடி அவையொருபுடை விளங்குமவதரஞ் சகலம். பின்பு பஞ்சமலங்களி நீங்கிச் சிவத்தோடு கூடி அவ்விச்சாஞானக்கிரியைக ளெங்குமாய் வியாபித்து விளங்குமவதரஞ் சுத்தமெனப்படு மென்பதாம்.

இதனானே மேற்கூறிப்போந்த அவத்தைகட்குக் காரணமிவையென்பதூஉம் அவற்றதியல்புங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொல்லிவந்த காரியவவத்தைப் பதினைந்துக்குங் காரணவவத்தை மேலருளிச் செய்கிறார்.

கேவலசகலசுத்த மென்றுமூன் றவத்தையான்மா மேவுவன் - கேவலவவததையென்றும் சகல வவத்தையென்றும் சுத்தவவத்தை யென்றும் ஆக மூன்றவத்தையையும் ஆன்மா பொருந்தா நிற்பன். இந்த வவத்தைகளின் முறைமை யெங்ஙனே யென்னில்?—கேவலந் தன்னுண்மை - ஆன்மாவினுடைய வுண

மை கேவலந் தானாய் நிற்கிறது.—மெய்ப் பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனும்-தநுகரண புவனபோகங் களை ஆன்மாவுக்குப் பரமேஶ்வரன் கொடுத்தபோது சகலாவத்தையைப் பொருந்தி நிற்பன்,—மலங்களெல்லா மோவினபோது சுத்தமுடைய னற்பவந்துடைத்தே - பஞ்சமலங்களுந் தன்னைவிட்டு நீங்கினபோது ஜநநங்களையும் போக்கி சுத்தாவத்தையும் பெருநிற்பன்.

இதனாற் சொல்லியது, கேவல சகல சுத்தமென்னு மூன்றவத்தையையும் ஆன்மாப் பொருந்துவன் என்றும் இவையிற்றில் கேவல வவத்தை ஆன்மாவுக் குண்மையென்றும் சகலவவத்தையைப் பரமேஶ்வரன் கொடுத்தபோது ஆன்மாப்பொருந்துவனென்றும் பஞ்சமலங்களும் ஆன்மாவைவிட்டு நீங்கினபோது சுத்த வவத்தையைப் பெருநிற்பன் எனனு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

ஆன்மா கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தை மேவுவன் - ஆன்மா அவ்வாறு நிகழுங் காரிப அவத்தைகளை யுறுதற்குக் காரணமாகக் கேவலஞ் சகலஞ் சுத்தமென மூன்றவத்தை யெய்துவன்,— கேவலந்தனுண்மை - அவற்றுட் கேவல மாயது தன்னிச்சாஞானக் கிரியைகளி னிகழ்ச்சிச் சிறிது மின்றித் தான் மாத்திரையே யுள்ளுதல்.—மெய்ப்பொறி களெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனும் - பின்பு தனுகரணாதியோடு முதல்வன் கூட்டக் கூடி யவை யொருபுடை விளங்கு மவதரய் சகலம்.— மலங்களெல்லா மோவினபோ தற்பவங் கொடைத்தே சுத்தமுடையன் -பின்பு பஞ்சமலங்களு நீங்கிச் சிவத்தோடு கூ

டி யவ்விச்சாஞானக்கிரியைக ளெங்கும் வியாபித்து விளங்கு மவதரம் சுத்தம் எனப்படும்.

இதனுனே மேற்கூறிப்போந்த அவத்தைசட்குக் காரண மிவையென்பதும் அவற்றதியல்பும் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேனிறுத்து முறையானே கேவலாவத்
தையிலக்கண முணர்த்து கின்ருர்.

அறிவில னமூர்த்தனித்த னராகாதி குணங்களோ டுஞ், செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன் செயல் களில்லான், குறியிலன் கர்த்தாவல்லன் போகத்திற் கொள்கையில்லான், பிறிவிலன் மலத்தினேடும் வியா பிகே வலத்திலான்மா. (௯அ)

(இ-ள்.) அறிவில ன் — தனக்கென வொன்றைச் செய்தற் கறிவி ல்லாதவன். அஃதேது காரணத்தாலென்னி ல்? மலத்தினுலே மிகவு மறைப்புண் டிருக் கிற சைதன்னியத்தை யுடைய ஞதலால்.

அமூர்த்தன் — தனக்கொரு வடிவில்லாதவன். அஃதா வது, கலைமுதலிய கருவிகளால் வடிவற்ற வன்.

நித்தன் — எப்போது முள்ளவன். அஃதாவது, நாச மில்லாதவன்.

அராகாதிகுண ங்களோடுஞ் செ றிவிலன் — இராகமுதலிய வறுவகைக் குணங்களு டனுங் கூடாதவன்.

கலாதியோடுஞ் சேர்விலன் — கலைமுதலிய தத்துவங்களுடன் பொருந்திப் போகம் புசியாதவன்

செயல்களில்லான் — தானாக வொருதொழிலைச் செய்தற்குச் செயலில்லாதவன். அஃதேதுகாரணத்தாலென்னில்? ஞானக்கிரியைகள் ஜீவியாதபடியாலெனவறிக.

குறியிலன் — தானின்னபடி யிருப்பனென்று நிருபித்தற்கோரடையாளங்களுமில்லாதவன்.

கர்த்தாவல்லன் — பிரகிருதி முதலிய தத்துவங்களாலுண்டாகிய போகங்களைத் தானாகவே புசிக்கமாட்டாத படியாலே கருத்தாவல்லன்.

போகத்திற் கொள்கையில்லான் — தானே மலத்தை நீக்கிக்கொண்டு கருவிகளுடன் கூடிப் போகங்களைப் புசிக்கமாட்டாதவன்

பிறிவிலன் மலத்தினோடும் — சகசமான வாணவ மலத்துடனே கூடிவிட்டு நீங்காதவன்

வியாபி — விபுவாயுள்ளான்.

கேவலத்திலான்மா — கேவலாவத்தையிலான்மாவான இச்சிறப்பினையுடையவன் எ-று.

இது கடைநிலைத் தீபகம்.

உம்மை - எண்.

திருமந்திரம், "அறிவிலன்மூர்த்த னராகாதிசேரோன், குறியொன்றிலானித்தன் கூடோன்கலாதி, செறியுஞ்செயலில்லோன் திண்கர்த்தாவல்லோன்,சிறியன் மலன்வியாபி கேவலத்தோனே"எனவறிக. (௩அ)

இதற்குச் சுவாயம்புவமுங் கிரணமுமறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சகலாவஸ்தை சுத்தாவத்தை யிரண்டிற்கும் ‡ விலக்ஷண மாகிய கேவலாவஸ்தை ஸ்வரூபங் கூறுகின்றது.

நித்தன்வியாபி யான்மா-நித்தியனும் வியாபியும் சித்ரூபனுமானவன்,—கேவலத்தில் - கேவலா வஸ்தையிலே,—கலாதியோடுஞ் சேர்விலன்-கலாவித்தியா ராகங்கள் பொருந்தப்படாதவன். ஆதலால்,—ராகாதி குணங்களோடுஞ் செறிவிலன்-இச்சாஞானக் கிரியையாகிய ¶ சகசகுணங்க ளுடைய வியாபார மில்லாதவன்,—அமூர்த்தன் - ஸ்தூலசூக்கும தேகமில்லாதவன். அதனால்,—குறியிலன் - அடையாளஞ் சொல்லப்படாதவன்,— செயல்களில்லான் கர்த்தாவல்லன் போகத்துக்கொள்கை யில்லான்-தேகேந்திரயாதிக ளில்லாம லிருக்கையாலொருகன்மத்தைப் பண்ணவுங் கர்த்தாவல்லன். ஆகையால் போக்தாவு மல்லன். இவ்வளவும் சகலாவஸ்தையில் விலக்ஷணம்.— பிறிவிலன் மலத்தினோடு மறிவிலன்-ஆணவ மலத்தைவிடப்படாதவ னாதலால் ஞானப்பிரகாச மில்லாதவன். ஆசாரியருடைய அநுக்கிரகத்தினாலே ஞானயோக சித்தனாகி ஆணவமலத்தினுடைய தடைநீங்கி சர்வஞ்ஞத்வாதி × ஷாட்குண்ணியாபி வியத்தி சுத்தாவஸ்தை யாகையால் கீழ்ச்சொன்னது சுத்தா வஸ்தைக்கு விலக்ஷணம்.

‡ விலக்ஷணம்-வேறு ¶ சகசம்-கூடவுண்டானது × ஷாட்குண்யம்-அறுகுணம்.

—

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கேவலாவத்தையி லான்மாவினது சுவரூபலக்கணங் தோயிந்ததடத்த லக்கணஞ் சாற்றுகின்றார்.

வெளிப்பொருள்.

——

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வரக்சடவனவாய அறிதன்முதல் ஏகதேசியாத லீறாகிய பத்துக்காரியங்களுள் ஒன்றுமின்றி யாணவமலத்தோடு மாத்திரையே கூடிநிற்பது கேவலமென்பதாம்.

ஈண்டு அமூர்த்தமென்றது உடம்பின் பிராகபாவத்தை, நித்தமென்றது தோற்றக்கேடுகளின் பிராகபாவத்தை, வியாபகமென்றது ஏகதேசத்தின் பிராகபாவத்தை.

ஏனையின்மைகளும் அவ்வப் பிராகபாவங்களைக் குறித்து நின்றனவாகலான் இவ்விலக்கணங்க ளேனையவத்தைகளிற் செல்லாமையின் இவற்றுளொன்றே கூறவமையுமாயினும், கேவலந்தன்னுண்மையென்றது விளங்குதற்பொருட்டு இவையனைத்தும் வகுத்துக் கூறினார்.

பிறிவிலன்மலத்தினோடுமென்றதும் அதன்பொருட்டு.

ஈண்டுக் குறியென்றது முதனிலைத்தொழிற்பெயராய் இச்சையையுணர்த்தி நின்றதென்பது செயலினைச் சாரவைத்தலானறிக.

அறிவிலனென்றதனையு மீண்டுத் தந்துரைக்க.

அராகாதிகுணமென்றது புத்திகுணமெட்டினையும்.

அராகாதிகுணங்களென்ற வுபலக்கணத்தால் ஏனைப் போக்கிய காரணடக்கருவிகளுங் கொள்ளப்படும்.

இதனானே தன்னுண்மை கேவலமாதல் காட்டப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் கேவல வவத்தையி னிலக்ஷண மருளிச்செய்கிறார்.

அறிவிலன்-சற்றுமொரு பிரஞ்ஞையு மில்லாதவனுமாய்,— அமூர்த்தன் - ஒருவடிவு மில்லாதவனுமாய்,— நித்தன் - ஒருகாலத்திலு மழிவில்லாதவனுமாய்,— அராகாதி குணங்களோடுஞ் செறிவிலன் - அராகத் துவேஷமுதலான குணங்களோடுங் கூடாதவனுமாய்,—கலாதியோடுஞ் சேர்விலன்-கலாதிமுதலான தத்துவங்களுடனும் பொருந்தாதவனுமாய்,— செயல்களில்லான் - ஒரு தொழில்களு மற்றவனுமாய்,—குறியிலன் - ஒரு அடையாளங்களு மில்லாதவனுமாய்,—கத்தாவல்லன்- தனக்கென்னவொரு சுதந்தரமுமில்லாதவனுமாய்,—போகத்துக் கொள்கையில்லான்-புசிக்கத்தக்க கோட்பாடுக ளொன்றுமில்லாதவனுமாய், இவையெல்லா மல்லவானு லிவனுண்மை யெப்படியென்னில் ?—பிறிவிலன் மலத்திேனுடும் வியாபி - ஆணவமலத்தைவிட்டு நீங்கப்படாத வியாபகத்தையு முடைத்தாய்,—கேவலத்திலான்மா - கேவல வவத்தையுடனே பொருந்தப்பட்ட வான்மாவின் முறைமை இப்படி யிருக்கும்.

இதனாற் சொல்லியது தனக்கென்ன ஒருபிரஞ்ஞையும் ஒரு வடிவுமற்று அழியாதவனுமாய்ப் பிரியாப் பிரியங்களுமில்லையாய்ச் சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆன்மதத்துவம் இவைகளு மில்லையாய் இவையெல்லாம் நீங்கினவிடத்தும் தற்சொரூபமுந் தெரியாமல் மலமே தனக்கு வடிவாய் நிற்பன்,கேவல வவத்தையைப் பொருந்தின வான்மாவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆன்மா - மேற்கூறிப் போந்த மூன்றவத்தை யுறுதற்குரிய வான்மா,—அறிவிலன் - அறிவு முன்னில்லாதவனும்,— அமூர்த்தன் - உடம்பு முன்னில்லாதவனும்,—நித்தன்-தோற்றக்கேடு முன் னில்லாதவனும்,—அராகாதி குணங்களோடு செறிவிலன்-புத்தி குணமெட்டினையு முன்பொருந் தாதவனும்,— கலாதியோடுஞ் சேர்விலன் - கலாதியறிவோடு முன்சேர்த லில்லாதவனும்,— செயல்களில்லான் - செயல்கள் முன்னில்லாதவனும்,— குறியிலன -இச்சைமுன் னில்லாதவனும்,— கர்த்தாவல்லன் - தனக்கென வொரு சுதந்தர முன் னில்லாதவனும்,— போகத்திற் கொள்கை யில்லான் - போகத்தின் முன் கொள்கை யில்லாதவனும்,— வியாபி - வியாபகத்தை முன்னுடையனு மாகிய விப்பத்துக் காரியங்களு முடையனாய்,—மலத்தினோடு பிறிவிலன் - ஆணவ மலத்தினோடு மாத்திரையே கூடிநிற்பன்,— கேவலத்தில் - கேவலத்தின் கண்.

இதனானே தன்னுண்மை கேவல மாதல் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

—o—

மேனிறுத்த முறையானே சகலாவத்தை யுணர்த்துகிறார்.

உருவினைக் கொண்டுபோக போக்கியத் துன்ன
ல் செப்பல், வருசெயன் மருவிச்சத்த மாதியாம் வி
டயந்தன்னிற், புரிவதுஞ் செய்தங் கெல்லா யோனியு
ம் புக்குழன்று, திரிதருஞ் சகலமான வவத்தையிற்
சீவன்சென்றே. (௫௬)

(இ-ள்.) உருவி ஆன்மாவானவன் கன்மானு குணமாகத்

னைக்கொண்டு	தூலசரீரத்தை யெடுத்துக்கொண்டு
போகபோக்கியத் துன்னல் செப்பல் வருசெயன் மருவி	கலைமுதலிய கருவிகளுடன் கூடி மாயை முதற் பிருதிவி யீறாகவுள்ளத் தத்துவங்களிற் சுகதுக்க ரூபமாகிய போகங்களைப் புசிக்கிரத்திலே விருப்பத்தைச் செல்லுதலையுமுடையனாய்க் கன்மத்துக் கீடாகக் கர்த்தாவாலே பொருந்தி,
சத்தமாதியாம் விடயந் தன்னிற் புரிவதுஞ் செய்து	சத்தாதி விடயங்களிலே விருப்பத்தையுஞ் செய்து,
அங்கெல்லா யோனியும் புக்குழன்று திரிதரும்	அவ்விடத்துக் கன்மத்துக்கீடாக வெண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்களிற் பிறந்துழன்று திரிவதுஞ் செய்து,
சகலமான வவத்தையிற் சீவன் சென்றே.	இப்படியே சகல வத்தையைப் பொருந்தியிருப்பன் எ-று.

இதுகடை நிலைத் தீபகம்.

"உருவுற்றுப் போக போக்கியத்துற்று, மருவுற்றபூத மநாதி மான்மன்னி,வரும்செயல் பற்றிடு சத்தாதிவைகிக்,கருவுற் றிடுஞ் சீவன் காணுஞ் சகலத்தே" எனவறிக.

இதற்குச் சுவாயம்புவம். (௩௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் கேவலாவஸ்தை சுத்தாவஸ்தை யிரண்டுக்கும் வில

க்ஷணமான சகலாவஸ்தா * வஸ்திதனுன வான்ம வியாபாரங் கூறுகின்றது.

* அவஸ்திதன் - இருந்தவன்.

சகலாவஸ்தை பொருந்தின ஆன்மா ஈஸ்வரனாலே கூட்டப்பட்ட மாயாதேகத்தைத் தரித்துக்கொண்டு போகபோக்கிய காண்டத்தை யுடையனாகிப் போகத்தை யிச்சிக்கவும் புசிக்கவும் வசநாதிக் கிரியைகளு முண்டாய்ச் சத்தாதி விஷயங்களையும் பொருந்திப் புண்ணிய பாவங்களையுஞ்செய்து அதனாலெண்பத்து நான்குநூறாயிர மியோநி பேதங்களிலும் பிறந்திறந்து திரிவனென் றிதன்பொருள்.

சகலாவஸ்தை, நித்திய சகலமென்றும் மகாசகலமென்றும் † த்விவிதம்.

† த்விவிதம் - இருவிதம்.

இதில் மகாசகல லக்ஷண மிப்பொழுது கூறியது.

கீழ் சப்பிரதிபாசாக்கிரமென்றது நித்தியசகல லக்ஷணம்.

இதனாலான்மா பசுத்துவ சம்பந்தத்தினாலே பசுவென்று பெயராய் ஞானாதிக ளற்றிருந்து கலாதியோகத்தினாலே கிஞ்சித் ஞானப்பிரகாச முண்டானதனால் சேதனனென்று பெயருமாய்ப் பிராண வாயுவுடனே கூடியிருக்கையால் ஜீவனென்று பெயருமாய் துவிதமாயிருக்கிற புண்ணிய பாபங்களுக்குக் ‡ கர்த்தாவு மதன் பலங்களைப் புசிக்கிறவனும் புசிக்கிற காலத்திலே தனக்கு வேண்டாததை விடவும் வேண்டியதைக் கிரகிக்கவும் இச்சையை யுடையவனும் ராகத்வேஷாதிகளை யுடையவனுந் தனக்கு § போகார்த்தமாகத் தேடின வஸ்துவை யத்னத்தினாலே ரக்ஷிக்கிறவனுந் தேகேந்திரியாதிகளைத் தானென் றபிமானம்பண்ணு மவனும் கர்த்தவ்ய க்ருத்யங்களிலே சோம்புதல்பண்ணு மவனும், அதனாலே பண்ணினோமில்லையென்கிற துக்கத்

தையுடையவனு ¶ மசூயையுடையவனும் குலதன வித்தியாதிக ளினாலே தனக்குச் சரியில்லையென்னு மபிமானியுஞ் சிறிது காரி யத்தைச் சோம்புதலற்றுச் செய்கிறவனும் பிராணாதி வாயுக்க ளைப் பிரவர்த்திப்பிக்கிறவனும் பிரத்தியக்ஷார்த்தங்களை யறிகி றவனும் தத்த தார்த்தங்களைக் கேட்கிறவனும் கூடப்படிக்கிறவ னும் கூடிப்படிக்கிறவர்களோடே கேட்டுத் தரிக்கமாட்டாதிருந் தால் + லச்சிக்கிறவனும் ÷ ஹாச்யரசத்திலே பிரியனும் × நய னோன் மீலனாதிக் கிரியைகளைப் பண்ணுமவனும், சாஸ்திராதிக ளை விசாரிக்கிறவனும் சந்தோஷிக்கிறவனும், பரனை யறிவிக்க இச்சையுடையவனும், புத்திர தாராதிகளிடங்களிலே மோகிக் கிறவனும் வசனிக்கிறவனும் கந்தத்தைக் கிரகிக்கிறவனும் ○ அ நுசந்தானம் பண்ணுகிறவனும் ஒரு விஷயங்களிலே தன்மயத் தை யடைகிறவனும் போக வஸ்துக்களைத் தேடுகிறவனும் இவை முதலான அநேக பாவங்களை யுடையவனாவன்.

‡ சர்த்தா - செய்யவேண்டிய, § போகார்த்தம் - போ கநிமித்தம், ¶ அசூயை-பொறாமை, + லச்சிக்கிறவன்-வெட்க முள்ளவன், ÷ ஆச்யரசம் - ஹாச்சரியாசம், × நயனோன்மீல னம் - கண்விழித்தல், ○ அநுசந்தானம் - தியானம்.

இதற்குச்சம்மதி:—

ததுக்தம் காமிகே — தத்ராத்₃தா வஶந்னாவ்யாத ஸ்தி₂தே ஜீவஸஞ்ஜ்ஞித꞉ | வர்ண்ய வாவாப்த꞉ கதா₂ கர்மிணா விவயஸ்ய ச || தத்₃வஸ்யா நேஹா ஞாச ப்ரதிகரேம ஜிஹ்வாஸதி | ஶ்ரூத்வா ஸத்யந கரோ வாயுஸம் தேஷஹிஷ்யதி ரக்ஷதி || ஸஹம் கரோதி தேஹாத்₃ரா ப்ரத்₃ரா ப்ரதிசரோசதி | ஸஹ்யஸரேயதி ஸாகரேஷா நிதராத்₃ஸித்₃ரயே || தமேவ ப்ரதி

स्यन्द्यते प्राणादि स्वदीक्षिते । श्रोत्राणि
मज्जते शक्तिहस्तस्य श्रीमयं तत्त्रवि ॥ विचारयन्ति
संस्थानि जीवस्य तत्त्रवि विभाव्यति । शक्तिजीवस्थिति स
न्धते श्रीयते विच रामधे ॥ हाव वेवेदनवेके
वासीभूताः निहतानि वसुपेषः ।

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சகலாவத்தையி லான்மாவின திலக்கணஞ் சாற்றுகின்ருர்.

புரிவதுஞ்செய்து - விரும்புவதுஞ்செய்து.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறியவின்மைகள் பத்துக்கும் மறுதலையாகிய விப்பத்துக்காரியமு முடையனுய்ச் சீவித்துநிற்பது சகலமென்பதாம்.

போககாண்டமாகிய கலாதியைப் போகமென்றும்,போக்கிய காண்டமாகிய புத்தியாதியைப் போக்கியமென்றுங் கூறினர்.

உன்னலென்றது ஈண்டு விரும்புதன்மேற்று.

செப்பலென்றது செப்பப்படுவனவாய நால்வகைவாக்குக்களையு முணர்த்தி அவை காரணமாய் நிகழுமறிவின்மேல் ஆகுபெயராய் நின்றது.

புரிவதுமென்ற உம்மையால் நுகர்வதுமென்ற தெஞ்சிநின்றது.

உருவினைக்கோடல் அமூர்த்தனுதற்கும், போகபோக்கியத்துச் செறிதல் கலாதியோடுஞ் சேர்விலன் அராகாதிகுணங்களோடுஞ் செறிவிலனுதற்கும், உன்னல் செப்பல் வருசெயன்மருவல் அறிவிலன் செயல்களில்லான் குறியிலனுதற்கும், சத்தமாதியாம் விடயந்தன்னிற் புரிவதுஞ்செய்தல் கருத்தாவல்லனுதற்கும், உம்மையாற்போந்த நுகர்வதுஞ்செய்தல் போகத்திற் கொள்கையில்லானுதற்கும், எல்லாயோனியும் புக்குழலுதல் நித்தனுதற்கும், சென்றுதிரிதரல் வியாபியாதற்கும் மறுதலையாயவாறு கண்டுகொள்க.

இதனுனே மெய்ப்பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனுதல் வகுத்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் சகலவவத்தை யருளிச்செய்கிறார்.

உருவினைக்கொண்டு - கன்மத்துக் கீடாக வொவ்வொரு சரீரங்களை யெடுத்துக்கொண்டு,— போகபோக்கியத் துன்னல் செப்பல்-புசிப்புக்குத்தக்க பொருள்களை நினைப்பதுஞ் செல்லுவதுமாய்,—வருசெயன்மருவி-மனத்தாலும் வாக்காலும் வருகிற வயிற்றைக் காயத்தாலே தொழிற்படுத்துவதுமாய்,— சத்தமாதியாம் விடையந்தன்னிற் புரிவதுஞ்செய்து-சத்தமுதலான விடையங்களி லுண்டான சுகதுக்கங்களையும் அனுபவித்து,—அங்கெல்லாயோனியும் புக்குழன்றுதிரிதரும்-அவ்விடத்து எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிகளிலும் கன்மத்துக்

டோகப் பிறந்து உழன்று திரியாநிற்பன்,— சகலமானவவத்தையிற் சிவன்சென்றே - சகலமாகிய வவத்தையிலே ஆன்மாப் பொருந்தி இப்படி நிற்பன்.

இதனாற் சொல்லியது, கன்மத்துக் கேற்றதோ ரொருசரீரத்தைக்கொண்டு புசிப்புக்குத்தக்க மனவாக்குக் காயங்களினாலுண்டாகிய நினைவையு முரையையுந் தொழிலையும் பொருந்திச் சத்தாதி விஷயங்களி லுண்டாகிய சுகதுக்கங்களையும் புசித்து எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிகடோறும் வட்டஞ்சுத்தித் திரியுஞ் சகலவவதைதைப் பொருந்தின வான்மாவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

சிவன் - மேற்கூறிப்போந்த கேவலத்தைப் பொருந்திய ஆன்மா,—உன்னல்செப்பல் - அறிவிலனாதற்கும் மறுதலையாய் விரும்பிக் கூறுதற் கேதுவாகிய நால்வகை வாக்குகளால் நிகழு மறிவினையும்,—உருவினைக்கொண்டு - அமூர்த்தனாதற்கு மறுதலையாகிய வுருவினைக்கோடலும்,—இங்கெல்லா யோனியுட்புக்குழன்று - இவ்விடத்தி னித்தனாதற்கு மறுதலையாகிய தோற்றக்கேடுகளிற் பட்டுழன்றும்,—போக்கியத்து - அராகாதிகுணங்களோடுஞ் செறிவிலனாதற்கு மறுதலையாகிய போக்கியகாண்டமாகிய சலாதியைச் சேர்தலும்,—வருசெயல் - செயல்களிலனாதற்கு மறுதலையாகிய தொழில்க ளுடைத்தாதலும்,—மருவுதல்-குறியிலனாதற்கு மறுதலையாகிய விச்சையுடைத்தாதலும்,—சத்தமாதியாம் விடையந்தன்னிற் புரிவதுஞ்செய்து - கர்த்தாவல்லனாதற்கு மறுதலையாகிய சத்தாதி விடயங்களின் மேற்கொண்டு செய்தும்,—புரிவதுமென்ற வும்மையால் நுகர்வதுஞ் செய்து,—போகி - போகத்திற் கொள்கை யிலனாதற்கு மறுதலை

யாகிய போகநுகர்ந்தும்,—சென்று திரிதரும் சகலமான வவத்தையில் வியாபியாதற்கு மறுதலையாகிய வேகதேசியாதலுமாகிய விப்பத்துக்காரிய முடையனாய் ஜீவித்து நிற்பது சகலாவத்தை யென்பதாம்.

இதனானே மெய் பொறிக ளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனுதல் வகுத்துக் கூறப்பட்டது.

*இவ்வுரையாசிரியர் இதுபோன்ற விடங்களில் பதவுரைகள் சிவஞானயோகியர் பொழிப்புக்கிணங்கச் செய்வதிலுள்ள அருமையும் புத்திநுணக்கத்தையும் கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

மேனிறுத்த முறையானே சுத்தாவத்தை யுணர்த்துகின்றார்.

இருவினைச் செயல்களொப்பி லீசன்றன் சத்தி
தோய்ந்து, குருவருள் பெற்றுஞான யோகத்தைக் கு
றுகிமுன்னைத், திருமலமறுத்து பண்டைச் சிற்றறி
வொழிந்தஞானம், பெருகிநா யகன்றன்பாதம் பெறு
வது சுத்தமாமே. (சo)

(இ-ள்.) இருவினைச் செயல்களொப்பில் — புண்ணிய பாவமாகிய விரண்டுந் தம்மிலொருகாலத்திற் றுலையொத்த வவதரத்திலதனைப் புசிக்கவொட்டாமலதனைத்தடுக்கும்.

ஈசன்றன் சத்தி தோய்ந்து — சிவனுடைய சத்திபதிந்து நாள்வகையினுள்ளதி தீவரசத்தியான சிவனிடத்திற் பதியும்பொழுது.

குருவருள் பெற்று — ஞானசாரியனாலே தீக்கையைப் பெற்று

ஞான யோகத்தைக்குறுகி — சிவப்பிரகாச மாகிய ஞான யோகத்தைப் பொருந்தி. "மலத்தினு மநாதிமுத்தன் மயமுணர்ந் துணர்தல்ஞான், முலப்பிலா வவனுள்வேறற் றுறைதலே யுணர்தல்யோகம்" எனவறிக.

முன்னைத் திரிமல மறுத்து — தீபம்வந்தா லந்தகாரம் போமாறு போல இந்தஞான யோகத்தைப் பொருந்தின தபோபலத்தா லிவனுக்குப் பழையதாய் வரப்படா நின்ற மும்மலமும் போய்,

பண்டைச்சிற்றறிவொழித்து — இவனுக்குப் பழையதாய் வரப்படா நிற்கிற கிஞ்சிஞ்ஞயத்துவத்தை விட்டு,

ஞானம் பெருகி — சிவனைப் போலச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களைப் பொருந்தி,

நாயகன் றன் பாதம் பெறுவது சுத்தமாமே. — சிவனுடைய சீர்பாத கமலங்களை யடைந்திருப்பது சுத்தாவத்தை. எ-று.

"இருவினையொப்பி லொழிந்து சத்திபதி யாதோவென்னில் சத்திபதியுந் தமோமலபாகமுறினே யொத்த வினையில் லார்கண்ணும்" எனபதனுன், மல பரிபாகமே சத்தி நிபாதத்துக்கு முதற்கார ணமெனவறிக.

"இருவினை நேரொப்பி லின்னருட்சத்தி, குருவென வந்து குணமலநீக்கித், தருமரன் ஞானத்தார் றன்செயலற்றுத், திரிமலநீங்கிச் சிவமாதல் சுத்தமே" எனவறிக.

இதற்குக் கிரஞுகமங் காரணம். (௪0)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சுத்தாவஸ்தை யுணர்த்ததல்.

புண்ணிய பாபங்களுடைய பலமானது இரண்டு ஏககா

லத்திலே ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் புசிக்கவுஞ்*சேஷமாயுள்ள சர்வகன்ம பக்குவமும் மலபரிபாகமு மானபொழுது பரமேஸ்வரனுடைய திரோதான சத்தியானது மலங்களைச் செலுத்திவந்தது ஏககாலத்தில் சமமாகவந்த விரோதியாகிய பலத்தைப் புசிப்பிக்கப்படா தாகையால் திரோதானத்தை யொழிந்து கிருபையாக ஆன்மாவினிடத்திலே பொருந்த,அக்காலத்தில் கிருபையினாலே சிவனுசார்யமூர்த்தமாக வெழுந்தருளிப் பஞ்சகலா சோதனைபைப்பண்ணி ஞான யோகத்தைக் கூட்ட, அந்த ஞானயோகத்தினாலே யநாதியே பொருந்திபிருந்த வாணவமாயை கன்மமென்னு மலத்திரயத்தையு மொழித்து அந்த மலங்களினாற் பொருந்தின கிஞ்சிஞ்ஞத்தையு மேகதேசத் வத்தையுமொழிந்து சர்வஞ்ஞத் தவாதிக குணண்டாய், ஆன்ம நாயகனாகிய சிவனுடனே யிரண்டற்றுச் சிவானுபவியாக நிற்பது சுத்தாவஸ்தை.

* சேஷம் - மீதி.

இந்த சுத்தாவஸ்தையானது ஜீவன்முத்தி பரமமுத்தி பேதத்தினாலே யிருவகைத்தாம்.

இவ்விடத்துச் சொன்னது பரமமுத்தி சுத்தாவஸ்தை.

ஜீவன்முத்தி சுத்தாவஸ்தை, 'துன்னிய சாக்கிரமதனிற் றுரியாதீதம்' என்ற பதத்திலே கூறுவாமென் றிதன்பொருள்.

இருவினைச் செயல்களொப்பி லென்றதற்குச் சிலசாஸ்திரங்களிலே † பிரம ஹத்தியா மகாபாதக பலமும் அஸ்வமேத மகா ‡ கிரது பலமும் ஏககாலத்திலே § துல்ய பலமாகப் பக்குவமானபொழுது சத்திநிபாதமென்று சொல்லியிருக்க இவ்விடத்து விருதத கன்ம த்வய ¶ சாம்யமும் சர்வகர்மம் பக்குவமும் ஆணவமல பரிபாகமுமானபொழுது சத்திநிபாதமென்று கூறியதென்னையோ வென்னில்? உள்ளது.

† பிரம ஹத்தியா-பிரமஅத்திதோஷம், ‡ கிரது - யாகம், § துல்ய - சரியான, ¶ சாம்ய - ஒப்பு.

கன்மமானது *திருஷ்ட ஜன்ம †போக்யமென்றும், ‡ அதிருஷ்ட ஜன்ம போக்யமென்றும் §நியதகால போக்யமென்றும் மூன்று விதமாம்.

* திருஷ்ட - காணப்பட்டது, †போக்யம்-புசிக்கத்தக்கது, ‡ அதிருஷ்டம் - காணப்படாதது, § நியதகாலம்- ஏர்ப்படுத்தியகாலம்.

இவையிற்றுள் திருஷ்டஜன்ம போக்கியமாவது? அந்த ஜன்மத்திலே பலிக்கும் * ஆயுர்விர்த்திகரமான சஞ்சி ஓம புத்ர காமேஷ்டியாதிகள்.

* ஆயுர்விர்த்திகரம் - ஆயுசை வளர்க்கிறது.

அதிருஷ்ட ஜன்மபோக்கிய மாவது? தேகாந்தத்திலே ஸ்வர்க்கத்திலே யாதல் நரகத்திலேயாதல் புநர் ஜன்மத்திலே யாதல் பலிப்பது.

நியதகால போக்யமாவது? மஹா புண்ணியங்களுக்குள்ளே பிரதானமானது அஸ்வமேதம், மகாபாதஹங்களுக்குள்ளே ப்ரதானமானது பிரம அத்தி. நின்ற கன்மமெல்லாம் நியதகால போக்யமல்லவோவெனில்? ஒக்கும். அஸ்வமேத † த்விஜவதகர்ம்ம பரிபாகமல்லா காலத்திலே ‡ யிதரகன்ம பரிபாகமானுல் அந்த கன்மபலத்தையே புசிப்பிக்கும். இவைகள் பரிபாகமான காலத்திலே யிதரபுண்ணிய பாவங்கள் பரிபாகமாகில் பலா § திக்யத்தினலே யிதரபுண்ணிய பாபங்களைத் தள்ளித் தன்னுடைய பலத்தையே புசிப்பிக்கும், ஆதலா லிவைகளே நியதகால போக்யம்.

† த்விஜவதம் - பிரமஅத்தி, ‡ இதர-வேறு, § ஆதிக்யம் - மிகுதி.

இதரபுண்ணிய பாபங்களுடைய பலம் மகத் புண்ணிய பாபபோக காலா * நந்தரம் புசிப்பிக்கும். அந்த விரண்டி னுள்ளே யொன்று துர்ப்பலமும் ஒன்று ப்ரபலமுமாகில் துர்ப் பலத்தைத் தள்ளி பிரபலம் புசிப்பிக்கும். இரண்டுஞ் சமபலமே யாகில் புண்ணியத்துக்குப் புண்ணியமாகுதல் பாபத்துக்குப் பாபமாகுதல் தத்காலத்திலே பக்குவமாயிருந்தால் சகாயப லத்தினாலே அசகாயத்தைத் தள்ளித் தன்னுடைய பலத்தைப் புசிப்பிக்கும். இரண்டும் சமபலமாய்ச் சமகாலமுமாகில் இதர கன்மங்கள் பரிபாக மாகாதிருந்தால் இந்த விரண்டு கன்மங் களும் † சுந்தோப சுந்தந்யாயமாக நசிக்க இதர கன்மபல ங்கள் கிரமத்திலே புசிக்கப்படும். சர்வகன்மங்களு மேககால த்திலே பரிபாகமாகில் ஆணவமல பக்குவ பரிபாக மாகாமலிரு ந்தால் சர்வ கன்மங்களும் நசிக்க விஞ்ஞான கேவலனாவன். ஆணவமலமும் பக்குவமாகில் சத்திபதியும்.

* அநந்தரம் - பின்பு, † சுந்தன் உபசுந்தன் - இரண்டுக ந்திருவன், இவர்களின் நாசம் பாரதக்கதையா லுணர்ந்து கொள்க.

அஶ்வமேத த்விஜவதமென்றது ஸ்வர்க்கநரக ஏதுவாய் * அந்யோந்ய விருத்தமுமாய் சமபலமுமாயிருக்கிற † ஆமுஷ் மிக புண்ணிய பாபங்களுக்கு ‡ உபலக்ஷணம். * ஐஹிகத்தி லும் † நபும்சகனாகிறத்துக்கு ஏவாதன பாபமும் புருஷனாகி றதற்கு ஏதுவான புண்ணியமும் அந்யோந்யவிருத்தம். இவ் வாறெல்லாங் கண்டுகொள்க.

* அந்யோந்ய - ஒன்றுக்கொன்று, † ஆமுஷ்மிகம் - மறு மை, ‡ உபலக்ஷணம் - ஞாபகம். * ஐஹிகம் - இம்மை, † நபு ம்சகன் - அலி.

[illegible]
[illegible]

होमृञ्जुक्तिसंसक्तः ॥ सूपादयोऽमोमल-
च्युति विशेषं तत्प्रभावतः । तज्ज्ञेयं च सम-
तोऽदृष्टहोमं तदच्युते ॥ स्वाराज्यादि
विहोमेऽन्यास देहान्ते पार्श्वावयोः ।
अदृष्टवेदनीयं च कर्मागं शिव दर्शने ॥ अ-
श्वमेधो विजय कृतःकामेन होमतः । तयो-
स्सामर्थ्ययोरेका देहस्थ प्रवृत्तिः पापा । अ-
नेन्यन्तकापस्या दृष्टा जन्मान्तरविकर्मणा । उ-
योमैरहिकयोः स्वर्गहयोस्संहवेसति ॥
क्षेत्रा क्षेत्रान्तेना सत्प पदिता शक्ति
रेश्वरी । कर्माणं सञ्चितं पक्वा अन्यतर
स्यतः ॥ तथा तच्छेवच् होमज्ञन्यच्काराणे
रहेच् । तथाउष्टिकयो रश्च देयविजयया
त्नेना ॥ यथावच्संहवेशक्ति विरोधविनां-
शिनी । अन्यच्कर्मासं होमं विये तपार-
षस्यसा ॥ तत्रानीय तयोस्सत्य संहवेप
रिवक्वयोः । विरक्तयोऽचसाशक्ति स्वानोशना
त्यहोमता ॥ यथा ज्ञ्यच्कर्मसवर्षु सतेज्य
विनाशिनी । तथा विज्ञानदीक्षामयं पं शङ्ख्याच्
कर्मनाशकः ॥ कर्मनाशात्तमस्याविवादेकसह
कारिणः । पतत्यनीक्षिनीशक्ति स्वादनुग्रह
विणीति ॥

ஸ்ரீமத் ததிவர்ணு ச்ரமாசார்யவர்ய சைவபரிபாலக
சிவாக்கிரயோகிபண்ணின சிவஞான சித்தியார்
நாலாஞ்சூத்திர வியாக்கியானம்
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சுத்தாவத்தையிலான்மாவின திலக்கணஞ் சொல்லுகின்றார்.

இருவினைச் செயல்களொப்பில் - மல பரிபாகாதிக்கத்தினாலே புண்ணியபாவ பலோபகாராபகாரங்களிலே சமபுத்திவந்துள்ளளவில்,— ஈசன்றன் சத்திதோய - சிவனது சத்தி நிபாதம்வர,— குருவருள்பெற்று - தேசிகனது தீக்ஷானுக்கிரகத்தையடைந்து,— ஞான யோகத்தைக்குறுகி - சுப்பிரபேதத்துச் சொல்லிப்படிக்குச் சமாதி தியானங்களை முன்பின்னாகப்பொருந்தி, சிவதருமோத்தரத்திற் சொல்லியபடிக்குச் சாத்திரமுகமாய்ச் சிவனைப் பரோக்ஷ ஞானமாய்ப்பார்த்தல் தியானித்தல்களைப்பண்ணி யென்றுமாம்.—முன்னைத் திரிமலமறுத்து - அநாதிமலமாயா கன்மங்களைவிட்டு,— பன்மைச் சிற்றறிவொழிந்து - மலமாயா கன்மங்களாற் பண்ணப்பட்டுத் தொண்டுதொட்டுவரும் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவத்தை நீங்கி,—ஞானம்பெருகி-சர்வஞ் ஞத்துவ சர்வ கர்த்திருத்துவரூப சிவத்துவம் விரிந்து,— நாயகன் றன்பாதம் பெறுவது-சிவசத்தி சமான தனது சிற்சத்தியைப் பொருந்துதல்,—சுத்தமாமே-சுத்தாவத்தையாகும்.

அவத்தைகளின் முறைமை யறைகின்றாம்.

கிரமத்திற் கேவலா வத்தை யென்றும், சகலாவத்தையெ

ன்றும், சுத்தாவத்தை யென்றும்; காரணாவத்தை மூன்றுபிர காரமாம். அந்தமூன்றினுள்,

சகலாவத்தையிற் றத்துவ தாத்துவிகங்களை மேல்விடுத ல் முறைமையிற் கேவலாவத்தையைக் கீழ்த்தீண்டி முறைமை யிற்செல்வது கீழாலவத்தை.

கேவலாவத்தையக் கீழ்விடுதல் முறைமையிற் சகலாவத் தையை மேற்றீண்டி முறைமையிற் செல்வது மேலாலவத்தை.

கேவலாவத்தை சகலாவத்தை யிரண்டையும் தீண்டி மத் தியமாயிருப்பது மத்தியாலவத்தை.

கேவலாவத்தையைத் தீண்டாது சகலாவத்தை மாத்திர த்தைத் தீண்டி நிற்பது பிரேரகாவத்தை.

கேவலாவத்தை சகலாவத்தைக ளிரண்டையும் கீழ்முறை மையில் விட்டுச் சுத்தாவத்தையை மேன்முறைமையிற் றீண்டி முச் சிவத்துவாபிவியத்தி முறைமையிலுண்டாம் பொருட்டு, இ ருதயத்தினின்றும் புருவமத்தியநுனி மட்டில், கண்டத்தி னின் றும் பிரமரந்திர நுனிமட்டில் புருவமத்தியத்தி னின்றும் து வாதசாந்த நுனிமட்டி லோரொட்டாக இதயத்தி னின்றும் துவாதசாந்த நுனிமட்டாகற்றான், இவைகளிற்போய்த் தங் குவது நின்மலாவத்தையென்ற பேர்பெற்ற மேலாலவதத்தை.

இப்படிக் காரணாவத்தை மூன்றும் காரியாவத்தை யைந் துங்கூட்டி எட்டுப்பிரகாரமாம்.

எட்டினுள் முறைமையில் கேவலாவத்தாலக்சணங் காண் பிப்பாம்:—

விஞ்ஞான கைவல்லியத்திற்றான், பிரளய கைவல்லியத் திற்றான், நித்திய நித்திரா கைவல்லியத்திற்றான், சிவதத்துவ த் தானமாயிருக்கும் பிரணவபஞ்ச சலாவிர்ப்பூத வதிசூக்கு மை முதலிய ஐந்து வாக்கொடு கலை முதற் பிருதிவி முடிவாகி

ய முப்பது கலைகள் மாயை மகாமாயையி னொடுங்கத்தான், தொழிலற்றிருக்கத்தான், மலகலுஷிதனாய்த்தான், மலகன்ம கலுஷிதனாய்த்தான், நித்திரா முத்திரித தத்துவதாத்துவிக மல கன்மமோக கலுஷிதனாய்த்தான், சும்மாவிருத்தல்.

சகலாவத்தா லக்ஷணங் காண்பிப்பாம்.:—

திரும்பச் சுத்தா சுத்தகலைகள் கூடச் சுத்த பெத்த முத்தனாயும் அசுத்த பெத்தனாயும், சுத்தமாயா புவனங்களிலேயும் அசுத்த மாயா புவனங்களிலேயும் போகத்தைப் புசித்திருத்தல் நித்திய பெத்த மத்திய நித்திரா கேவல நீங்கஅப்போ தப்போது போகத்தைப் புசித்திருத்தலுமாம்.

சுத்தாவத்தா லக்கணம் காண்பிப்பாம்:—

சுத்தசகலத்துவ மென்று முன்சொல்லிய அபர முத்தியும் பரமுத்தியும், அந்த விரு முத்தியின்பொருட் டுபாசனையுமாம்.

கிழாலவத்தா லக்கணங் காண்பிப்பாம்:—

நித்திய நித்திராகேவலப்படு முறைமையிற் பூதமைந்தும் தன்மாத்திரை ஐந்தும் சீவியாதிருப்ப, தூலசரீர சம்பந்த தாத்துவிகமாயிருக்கும் வாயுக்கள் பத்தும், சூக்கும சரீர சம்பந்த தத்துவமாயிருக்கும் வாக்காதி கன்மேந்திரியங்களைந்தும், கிரியா சத்தியோடுங் கூடிய கன்மேந்திரிய தாத்துவிகக் கிரியை யென்கின்ற வசனாதி யைந்தும், சூக்கும சரீர சம்பந்த தத்துவ மென்கின்ற ஞானேந்திரிய மைந்தும், ஞான சத்தியோடுங் கூடிய ஞானேந்திரிய தாத்துவிக ஞானத்துக்கு விஷயமாகிய தாத்துவிக சத்தாதியைந்தும், தத்துவமென்கின்ற அந்தக்கரணங்களாலும், புருடதத்துவ மொன்றும், ஆக முப்பத்தைந்தும் கேளாமற் கேட்டுத் தொடாதுதொட்டுப் பாராமற் பார்த்து ரசியாது ரசித்து மணவாது மணந்து இலாடத்திற் சீவித்து நிற்றல் கிழாலவத்தையிற் சாக்கிரம்.

இந்திரியம் பத்துஞ் சீவியாதிருப்ப; வாயுப்பத்தும், வசனாதியைந்தும், சத்தாதியைந்தும், மனமுதலந்தக்கரண நாலும், புருட தத்துவமொன்றும் ஆக இருபத்தைந்தும் நித்திரா மயக்கத்தினாலே அது வென்பதை இதுவென்று ஆபாசமாயறிந்து கண்டத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் சொப்பனம்.

வாயுவொன்பதும், வசனாதியைந்தும், சத்தாதியைந்தும், மனமுதலந்தக்கரண மூன்றும், சீவியாதிருப்ப; பிராணவாயுவு மனோவஸ்தா விசேஷ சித்தமும், புருஷதத்துவமுமாக மூன்று மினிமேல்வருஞ் சாக்கிரத்தில் வசனிக்கப்படாத வஸ்து சிந்தனத்தைப் பண்ணி, இருதயத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் சுழுத்தி.

சித்தஞ் சீவியாதிருப்ப;பிராணவாயு புருடதத்துவ மாகவிரண்டுஞ் சரீரக் காப்புச் சூக்கும சிந்தனங்காண்பித்து நாபியிற்சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் றுரியம்.

பிராணவாயுச் சீவியாதிருப்பப் புருடதத்துவமொன்றும் இனிமேல்வரும் சாக்கிரத்திற் சுகமாய் நானித்திரை பண்ணினே னென்பதனுற் சூசிக்கப்பட்டு ஆந்தர சரீர தமோ மாத்திரத்தை விஷயீகரித்து மௌட்டியத்துள் மூழ்கி வேதனத்தையொழிந் தொழிபாமலிருக்கும் சிவதத்துவ கர்ப்பநாத மணங்கலாதிகலுஷிதமாய்ப் பண்ணி லிங்கத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் றுரியாதீதம்.

மேலாலவத்தா லக்கணங் காணபிப்பாம்:—

கலாதி பஞ்சகஞ்சுக புருஷன் பிரணவ கலைகளெந்தினுட் போதமூல வதிசூக்குமைக்குக் காரணமாகிய சிவதத்துவ மெனகின்ற நாதத்தோடுகூடி லிங்கத்தில் மலத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் றுரியாதீதம்.

நிருவிகற்ப ஞானமூல சூக்குமைக்குக் காரணமாகிய சத்திதத்துவமென்கின்ற விந்துவோடு கூடி நாபியில் மாயையோடு மணந்து சீவியா நிற்றல் மேலா லவத்தையிற் றுரியம்.

சவிகற்ப ஞானமாதலுக்கு யத்தினமாகா நிற்கும் நிருவிகற்ப ஞானமூல பைசந்திக்குக் காரணமாகிய சதாசிவதத்துவமென்கின்ற மகாரத்தோடு கூடி இருதயத்திற் சித்தமூலப் பிரகிருதியோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சுழுத்தி.

சவிகற்ப ஞானமூல மத்திமைக்குக் காரணமாகிய விசுரதத்துவ மென்கின்ற வுகாரத்தோடு கூடிக் கண்டத்தில் அந்தக்கரணத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சொப்பனம்.

பிறனுடைய செவிக்குட் போய்ச் சொல்லிய முறைமையில் விகற்ப ஞானத்தை யுண்டாக்கும் வைகரி வாக்குக் காரணமாகிய சுத்த வித்தியா தத்துவ மென்கின்ற அகாரத்தோடு கூடி லலாடத் தானத்திற் புறக் கரணத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சாக்கிரம்.

மத்தியாலவத்தா லக்கணம் காண்பிப்பாம்:—

முன் கண்ட புருஷனைத் தூரத்திற் கண்டு நாமசாதிகளின்று மறந்தி மத்தியாலவத்தையிற் சாக்கிராதீதம்.

பெருமூச்சறைந்து விசாரித் தறிவோமென்பது மத்தியாலவத்தையிற் சாக்கிர துரியம்.

முன்கண்ட விடமாத்திரந் தோற்றுதல் மத்தியா லவத்தையிற் சாக்கிர சுழுத்தி.

முன் னவ்விடத்திற்கண்ட புருஷ னிவனென்பது மத்தியாலவத்தையிற் சாக்கிர சொப்பனம்.

சந்தோஷத்தோடு பார்த்துக் கட்டிக்கொள்ளுதல் மத்தியாலவத்தையிற் சாக்கிர சாக்கிரம்.

பிரேரகாவத்தா லக்கணங் காண்பிப்பாம்:—

பிரணவ பஞ்சகலா ரூபமா யிருதயத் திருக்கின்ற சிவதத்துவமைந்தும் கலைமுதல் வித்தியா தத்துவ மேழும், ஆன்மதத்துவத்துக்குள் அந்தக் கரண நாலும், புறக்கரண மைந்தினு ரூபாதிக் குசிதமா யிருக்கின்ற வொன்றும், தன்மாத் திரைகளொ டொற்றுமை யுடைமையா யிருக்கும் பூதங்களைந்தினுள் நேத்திராதிக் குசிதமா யிருக்கின்ற வொன்றும், ஆகப் பதினெட்டுத் தத்துவமுஞ் சீவியா நிற்பது பிரேரகாவத்தை.

அந்தப் பிரேரகா வத்தையிற் றத்துவங் களின் றொழின் முறைமை மானதப் பிரத்தியக்ஷப் பிரசங்கத்திலே காண்பித்தோம், கண்டு கொள்க.

அந்தப் பிரேரகா வத்தையில் ஒரு பொருளைக் கண்டது சாக்கிரம்.

நிச்சயித்தது சொப்பனம்.

கலந்தது சுழுத்தி.

அதி லாவேசந் துரியம்.

அதி லவசம் துரியாதீதம்.

நின்மலாவத்தையென்கின்ற மேலா லவத்தை யிலக்கணங் காண்பிப்பாம்:—

அது வெகுபிராகாரமாயிருக்கும், அதிலொரு பிரகாரங் காண்பிப்பாம்.

புறக்கரண முட்கரணங்களோடு கூடத் தன்னைக் காண்பது சாக்கிரம்.

புறக்கரணம் நீங்கி யுட்கரண விர்த்தி மாத்திரத்தோடு தன்னைக்காண்பது சொப்பனம்.

உட்கரணம் நீங்கிச் சொல்லுதற் கரிதாயு மறிதற் கரிதாயுந் தன்னைக் காண்பது சுழுத்தி.

சின்மாத்திரமாய்த் தன்னைக் காண்பது துரியம்.

சிவனுக்கொப்பச் சிவத்துவாபிவியத்தி மாளுகத் தன்னைக் காண்பது துரியாதீதம்.

திரும்ப அதிலொருப் பிரகாரங் காண்பிப்பாம்:—

பிண்டத்து மண்டத்தும் உள்ளும்புறம்பும் அபரநாதம் அபரவிந்து, பரநாதம், பரவிந்து ரூபமாய்ச் சத்தார்த்தமாயிருக்கின்ற சிவதத்துவமுதற் சுத்த வித்தை யீறுகுஞ் சிவதத்துவ பஞ்சக ரூபியாகும் பிராசாத சோடசகலைகளைப் பற்றி வருவதோர் அவத்தை ஞானசித்தியிற் சொல்லப்பட்டது.

மூலாதாரத்தைத் தொட்டு இருதயத்திற் பிராசாத மந்திரத்தின துற்பத்தி சாக்கிரம்.

கண்ட முதற்றுனம் பற்றிச் சமனுந்தமாகச் சின்மாத்திரான்மா மணப்ப மந்திரம் நடப்பது சொப்பனம்.

உன்மனு ரூபமாய் மந்திர மகாமாயையி லயித்தல் சுழுத்தி.

உன்மனுசூனியம் துரியம்.

உன்மனுமூல சுழுத்தித் தானத்துச் சின்மாத்திரான்மாவாகிய ஆன்மதத்துவ மாயிருந்து உன்மநிபந்தத் துரியத்தானத்துப் பரமென்கின்ற பரமான்மாவாகிய வித்தியா தத்துவமாயிருந்து சிவத்துவாபி வியத்திபொருந்திச் சிவமென்கின்ற சிவான்மாவாகியசிவதத்துவமாய்மாந்திரீகனை திருத்தல் துரியாதிதம்

திரும்ப அதிலொரு பிரகாரங் காண்பிப்பாம்:—

பிராசாத கலைகள்போல முன்சொன்ன பிரகாரம் சிவதத்துவ பஞ்சக ரூபியாய்ப் பிராசாதகலா கர்ப்பங்களாயிருக்கின்ற அகராதி காதாந்த பிரணவ பஞ்ச கலைகளைத்தொட் டிருதயமு

தற் றுவாதசாந்த வியாபகப் பிரமரந்திர முடிவாகும் பஞ்சா தாரத்துச் செல்லுந் தன்னையுஞ் சிவனையும் சாக்கிராதி துரியா தீதாந்த சாட்சிரூப பிரமாதி சதாசிவாந்த தேவதாகாரமாய்க் கண்டு, அந்த அவத்தையைந்தம்விட்டுக் கடந்து போமிடத்து ச் சமனுந்தத்தில் தற்காண்டல் சாக்கிரம்.

தற்பரம் பார்த்தல் சொப்பனம்.

தற்பர சமாவேசம் சுழுத்தி.

தற்பரகோடியிற் றுக்குதல் துரியம்.

தானதுவானது துரியாதீதம்.

திரும்ப ஒருபிரகாரம் காண்பிப்பாம்:—

ஞானசித்தியிற் சொல்லிய மூலாவத்தைக்குட் காண்பிக் கப்படும் அவாந்தராவத்தா பேதம் ரௌரவாதிகளிற் காண்பி க்கப்பட்டது. அவைவருமாறு:—

சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிரசுழுத்தி, சாக்கிரதுரியம், காலபரம, அதீதம், பரதரிசனம், விசுவக்கிரா சம், உபசாந்தம், சிவதரிசனம், சாயுச்சியம் என்னும் பேதத்தினு லே இந்தமேலாலவத்தைப் பதினொருபேதம்.

சாக்கிர சாக்கிரமுதற் காலபராந்தம் ஆன்மசாக்கிரமு தல் ஆன்ம துரியா தீதாந்தமாகிய ஆன்மாவின தஞ்சவத்தை.

சாக்கிரதுரியமுதல் விசுவக்கிராசாந்தம் பரசாக்கிர முத ற் பரதுரியா தீதாந்தமாகிய பரன தஞ்சவத்தை.

பரதரிசனமுதற் சாயுச்சியாந்தம் சிவசாக்கிரமுதற் சிவ துரியா தீதாந்தமாகிய சிவன தஞ்சவத்தை.

சாயுச்சிய கோடிக்குட் டசதுரிய முதற் றுறியகற்பனைகள் விழுந்திருக்கும், மேற்போகா.

அவற்றுள் ஆன்மசாக்கிரம் காரியவிசுவவியாத்தி யென் கின்ற காரியவிசுவரூபம்.

ஆன்மசொப்பனம் காரிய விசுவக் கிராசம்.

ஆன்மசுழுத்தி காரிய விசுவோப சாந்தி.

ஆன்மதுரியம் ஆன்மதரிசனம்.

ஆன்மதுரியாதீதம் ஆன்மசாயுச்சியம்.

பராசாக்கிரம் காரண விசுவ வியாத்தி யென்கின்ற காரண விசுவரூபம்.

பரசொப்பனம் காரண விசுவகிராசம்.

பரசுழுத்தி காரணவிசுவோப சாந்தி.

பரதுரியம பரதரிசனம்.

பரதுரியாதீதம் பரசாயுச்சியம்.

சிவசாக்கிரம் வாசனு விசுவவியாத்தி யென்கின்ற வாசனுவிசுவரூபம்.

சிவசொப்பனம் வாசனு விஸ்வக்கிராசம்.

சிவசுழுத்தி வாசனு விச்வோபசாந்தி.

சிவதுரியம் சிவதரிசனம்.

சிவதுரியாதீதம் சிவசாயுச்சியம்.

சிவசாயுச்சியஞ் சித்திக்கும் பொருட்டு ஆன்ம சுழுத்தி முதற் காலபராந்தந் தியானத்தானம், அதீதமுதல் விசுவக்கிராசாந்தம் சமாதித்தானம், உபசாந்தமுதற் சாயுச்சியாந்தம் சாக்ஷாத் காரத்தானம்.

திரும்ப வதிற் பிரமாதி பரநாதாந்தமாகிய வஸ்துக்களிலே பார்த்தல், கிரகித்தல், தழுவுதல், ஆவேசித்தல், அவசமாதல் அஞ்சும் ஒவ்வொன்றுக்கு அஞ்சவத்தை யறியப்படும்.

திரும்ப முன்சொல்லிய விந்தப் பதினு ரவத்தைகளைத் தனக்குள் வைத்த ஞானசித்தியில் மூலாவத்தை அஞ்சினுட்லே சிவத்துவாபி வியத்தி சூக்குமசிவத்துவாபி வியத்தி பரசிவத்துவாபி வியத்திகள் கிரமத்திலே வரும் பொருட்டு மூவைந்து பதினைந் தவத்தைகள் காண்பிப்பாம்.

இதயத்துச் சிவபாவனை பண்ணுமிடத்துக் குவிந்து, இதயமுதல் இதயாக்கிராந்த துவாத சாந்தத்திற் சிவபாவனை பண்ணுமிடத்தில் விரிந்து, இதய முதற் றுவாதசாந்தம் வியாபித்திருக்கும் பூதான்ம அந்தரான்ம தத்துவான்ம சீவான்ம மந்திரான்ம சாலம்ப சிவயோகங்களி னொன்றினுற் பூதான்மாதி மந்திரான் மாந்த ஆன்மாக்களி னைந்தில் மற்றை நாலு முன்வைத்த ஒன்றைச் சயம் பண்ணி, நிராலம்ப சிவ யோகம் பண்ணுமிடத்து இதயமுதற் புருவமத்தியாந்த மட்டாகத் தூலசாக்கிராதி தூல துரியாதீதாந்த மாகிய வைந்தவத்தை தூலான்ம தூலபர தூலசிவத் தோற்ற முன்னாகத் தூல சிவத்துவாபி வியத்தி தோற்றும் பொருட்டுக் காணப்படும்.

கண்ட முதற் பிரமரந்திராந்த மட்டாகச் சூக்கும சாக்கிராதி சூக்கும துரியாதீதாந்த மாகிய வைந்தவத்தை சூக்குமான்ம சூக்குமபர சூக்குமசிவத் தோற்ற முன்னாகச் சூக்குமசிவத்துவாபிவியத்தி தோன்றும் பொருட்டுக் காணப்படும்.

புருவமத்தியமுதற் றுவாதசாந்தமட்டாகப் பரசாக்கிராதி பரதுரியாதீதாந்த மாகிய வஞ்சவத்தை, பரான்ம பராபர சிவத்தோற்ற முன்னாகப் பரசிவத்துவாபி வியத்தி தோற்றும் பொருட்டுக் காணப்படும்.

திரும்ப விதுதானே ஓரொட்டாக முன் சொல்லிய மூலாவத்தையின தக்கிரமுமாம்.

பின்னொருபிரகாரங் காண்பிப்பாம்:—

இதய முதற் றுவாதசாந்தாந்தமாக, முன்சொல்லிய இந்தப் பதினைந்தவத்தைகளைத் தனக்குள் வைத்த மூலாவத்தையில் இதய முதற் றுவாதசாந்தாந்தந் தொட்ட பிரமரந்திராந்தமாகப் பூதான்மா வென்கின்ற பஞ்சபூதங்களிலே காண்க. பஞ்ச பூதங்களோடு கோத்த பஞ்சகலைகளிலேதான் காண்க.

பஞ்சகலைகளோடு கோத் தஞ்சு பகுப்பாய்த் தத்துவான்மா வென்கின்ற தத்வங்களிலே தான் காண்க.

பஞ்ச கலைகளோடு கோத்த அந்தரான்மா வென்கின்ற அதிசூக்குமாதி வைகரியாந்தமாகிய பஞ்ச வாக்குகளிலேதான் காண்க.

பஞ்ச கலைகளோடு கோத்த தூலதர தூலசூக்கும சூக்குமதர சூக்குமதம சீவான்மா வென்கின்ற அகங்காரங்களிலே தான காண்க.

பஞ்சகலைகளோடு கோத்த மந்திரான்மாவென்கின்ற மந்திரகலைகளிலே மூலாவத்தை ஞானசித்தி வசனப்படி முன்பு தானே காண்பித்தோம்.

இப்படிக் காண்பித்த சுத்தாவத்தா பேதங்களெல்லாஞ் சாக்கிராதி துரியாதீதாந்தமாய் முன் சொல்லிய அசுத்தமாகிய கீழாலவத்தை ஐந்தையும் முறைமையிற் சயம்பண்ணும் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி சாட்சாத்காரம் என்கின்ற அங்காங்கியோக ரூபமாகும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீத மென்கின்ற அவத்தை யைந்தாய்; ஒன்றுயிருக்கிற சுததாவத்தை யொன்றிலே சுருக்கப்படும்.

சிவஞானயோகியருணை வருமாறு.

———o———

மேற்கூறிய பத்தனுள், சத்தமாதியாம் விடயங்கன்னிற் புரிவதுஞ்செய்தல் கழிதற் கேதுவாகிய இருவினை யொப்பும். போகபோக்கியக் கருவிகளின் செறிவு கழிதற் கேதுவாகிய சத்திநிபாதமும், உருக்கழிதற் கேதுவாகிய குருவருளும், எல்லா யோனியும் புக்குழலுதல் கழிதற்கேதுவாகிய ஞானசாதனமும்

சென்று திரிதருதலாகிய ஏகதேசத்தன்மை கழிதற் கேதுவாகிய மும்மலநீக்கமும், சத்தமாதியாம் விடயந்தன்னி னுகர்வது கழிதற்கேதுவாகிய வாதனை நீக்கமும், பாசவறிவிச்சை செயல்கள் கழிதற்கேதுவாகிய ஞானப்பெருக்கமும், முறையே கிடைப்ப; அவற்றானக்காரியம் பத்தும் நீங்கப்பெற்றுத் திருவருளைக் கூடுதல் சுத்தமென்பதாம்.

சத்தி நிபாதத்திற்கு மூலமாகிய மலபரிபாகமும் இருவினையொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமு மென்னு மின்னோரன்னவற்றை ஈண்டுக் கூறுதொழிந்தார், மேற்கூறிய காரியம் பத்தும் நீங்குதற் கேதுவாவன மாத்திரையே யீண்டுக் கூறப்புகுந்தாரன்றி அனைத்துங் கூறப்புகுந்தா ரல்லராகலின் அவையெல்லாம் முன்னர்க் கூறப்படும்.

இதனானே மலங்களெல்லாமோவினபோது சுத்தமுடையனுமாறு வகுத்துக் கூறப்பட்டது. 'புருடனே யறிவனாகில்' என்றது முதல் இத்துணையும் 'வெவ்வே றணைதரும்' என்றதின்றுங்கூற்றை வகுத்தோதிய வாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் சுத்தவவத்தையை யருளிச்செய்கிறார்.

இருவினைச் செயல்களொப்பில் - புண்ணியபாவங்க ளிரண்டினாலும் உண்டான விதாவகிதங்கள் ஒன்றுக்கொன்று ஏறுமற் குறையாம லிரண்டுஞ் சமமாய் ஒருகாலத்திலே புசிக்க வரு மவதரத்திலே,—ஈசன்றன் சத்திதோய - பரமேஸ்வரனுடைய சத்தி இவனிடத்திலே பதிய அதனாலே,—குருவருள்பெற்று -தேசிக கடாக்ஷமுண்டாய் அந்தக் கடாக்ஷத்தினாலே,—

ஞானயோகத்தைக்குறுகி - சிவஞானத்தைப் பொருந்து முறைமைகளினாலே சென்று பொருந்தி அந்தப்பிரகாசத்தினாலே,—மூன்னைத் திரிமலமறுத்து-அநாதியேயிவனைக் கூடிநின்று மறைக்கிற அந்தக் காரியமாகிய மூன்று மலங்களையும் போக்கி அதனாலே,—பண்டைச் சிற்றறிவொழிந்து-பழைய வான்மபோதமுங் கெட்டு,—ஞானம்பெருகி - அநாதியே யிவனிடத்திலே அப்பிரகாசமாய் நின்ற ஞானமும் பிரகாசித்து இங்ஙனஞ் சொல்லிப் போந்த முறைமைகளினாலே,—நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே- சகலலோக நாயகனாகிய பரமேஶ்வரனுடைய சீர் பாதத்தை இந்த வான்மா இரண்டறச்சென்று கூடுகிறவதுவே சுத்தவவத்தையாம்.

இதனாற் சொல்லியது, இருவினை யொப்பும் சத்திநிபாதமும் குருகடாக்ஷமும் ஞானத்தைப் பெறுகையும் பாசக்ஷயமும் உண்டான வவதரத்திலே இவனுக்கு முன்புள்ள சிற்றறிவும் போய் பேரறிவுமுண்டாய் அந்த வறிவாலே பரமேஶ்வரனுடைய சீர்பாதத்தை வேறறச்சென்று கூடுமதே சுத்தவவத்தையென்னு முறைமை யறிவித்தது.

'கேவலசகலசுத்தம்' என்று எடுத்த திருவிருத்தத்துக்கு வியாக்கியானம் 'அறிவிலன்' 'உருவினைக்கொண்டு' 'இருவினைச் செயல்கள்,' என்றமூன்று திருவிருத்தத்திலும்வந்து முடிந்தது.

கேவலமென்றது மாயை மாமாயை காமியம் என்று சொல்லப்பட்ட மலங்களெல்லாநீங்க ஆணவமலத்தாலே சருவான்மாக்களு மறைப்புண்டுகிடக்கிற சருவ சங்காரத்தை. சகலமென்றது சிருஷ்டி தொடங்கிச் சருவசங்காரமளவும் ஆன்மாக்

கள் எண்பத்து நான்குநூறாயிரம் யோனிகள்தோறும் கன்மத்துக்கீடாகப் பிறந்து இறந்துவருகிறதை. சுத்தமென்றது பாமமுத்தியை. இவை மூன்றுங் காரணாவத்தை என்னுமதுங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இருவினைச் செயல்களொப்பின் - மேற்கூறிய பத்தினுள் சத்தமாதியாம் விடயந் தன்னிற் புரிவதுஞ் செய்தல் கழிதற்கேதுவாகிய இருவினை யொப்பும்,— ஈசன்றன் சத்திதோய- போக போக்கியக் கருவிகளின் செறிவு கழிதற் கேதுவாகிய சத்திநிபாதமும்,— குருஅருள்பெற்று - உருக்கழிதற் கேதுவாகிய குரு அருள்பெறுதலும்,— ஞானயோகத்தைக்குறுகி- எல்லாயோனியும் புக்குழலுதல் கழிதற்கேதுவாகிய ஞானசாதகமும்,—முன்னைத் திரிமலமறுத்து-சென்று திரிதருதலாகிய ஏகதேசத்தன்மை கழிதற்கேதுவாகிய மும்மல நீக்கமும்,—பண்டைச் சிற்றறிவொழிந்து - சத்தமாதியாம் விடயந் தனில் நுகர்வது கழிதற் கேதுவாகிய வாதனைநீக்கமும்,— ஞானம் பெருகி - பாசவறிவிச்சை செயல்கள் கழிதற் கேதுவாகியஞானப்பெருக்கமும் முறையே கிடைப்ப,— நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே-அவற்றா னக்காரியம்பத்து நீங்கப்பெற்றுத் திருவருளைக் கூடுதல் சுத்தாவத்தை யென்பதாம்.

இதனானே மலங்களெல்லா மோவினபோது சுத்தமுடையனாமாறு கூறப்பட்டது.

'புருடனே யறிவனாகி' என்பது முதலியவற்றையும் 'வெவ்வேறென்னை தரும்' என்ற மூன்றாங் கூற்றை வகுத்தோதிய வாறு.

☞ ச - சூ, ௯ - அ, முடிந்தது.

☞ நான்காஞ் சூத்திரம் முற்றிற்று.

" நாற்யான் "

என்ற நான்காஞ் சூத்திரம்.

நாற்பது

முடிந்தது.

பாயிர முட்பட செய்யுள்—உ௯௦.

*௯-௪-சூ-ள், பசுலக்கண்.இவ்வதிகாரங்களின் பெயர்களை உரையாசிரியர்கள் வெவ்வேறாகக் கூறுவதை முகவுரையிற் கூறுதும்.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௫—சூத்திரம். பாசமோசநலக்ஷணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலஞ்சாஞ்சூத்திர மென்னுதலிற்றோ வெனில்? இவ்வான்மாக்களிடத்துத் தமதமுதலுபகார முணர்த்துதனுதலிற்று.

இத்தலைச்செய்யு ளென்னுதலிற்றோ வெனின்? அந்தக்கரணங்களு மான்மாவுங் கூடியிருந்தாலு மல்லாத்தையுங் காட்டுமுளத்தைக் காணுப் பொறிபோலக் காட்டுங் கடவுளைக் காணுதென் றுணர்த்துத னுதலிற்று.

பொறிபுலன் கரணமெல்லாம் புருடனு லறிந்தான்மாவை, யறிதரா வவையேபோல வான்மாக்களனைத்துமெங்குஞ், செறிதருஞ் சிவன்றனாலே யறிதருஞ் சிவனைக்காணு, வறிதருஞ் சிவனேயெல்லா மறிந்தறிவித்துநிற்பன். (க)

(இ-ள்.) பொறிபுலன் கரணமெல்லாம் புருடனுலறிந்தான்மாவை யறிதரா வவையேபோல — இந்திரியாதி விடயங்க ளான்மாவோடே கூடி யறியாநிற்கவு மவை யந்தவான்மாவை யறியமாட்டாத முறைமைபோல,

ஆன்மாக்களைத்து மெங்குஞ் செறிதருஞ்சிவன்றனாலே யறிதருஞ் சிவனைக்காணா — சர்வான்மாக்களுக்கு மெங்கும் பரிபூரணமாய் நிற்கிற சிவனாலே யெல்லாத்தையு மறியாநிற்பர்களானாலு மந்தச்சிவனை யறியமாட்டார்கள்.

அறிதருஞ்சிவனே யெல்லா மறிந்தறிவித்து நிற்பன். — எல்லாத்தையு முள்ளபடி யறியுஞ் சிவன்றானே யறிந்தான்மாக்களையு மறிவித்து நிற்பன் என்று.

ஏகாரம் தேற்றம.

இதற்குச் சிவஞானபோதம். (க)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

முதற் சூத்திரத்திலே சகத்துக்குக் கர்த்தா வொருவனுண்டென்று ஏழு *வுபபத்திகளினாலே நிச்சயித்துப் பாரிசேஷத்தினாலே அந்தக்கர்த்தா சிவனென்றுகூறி, இரண்டாஞ் சூத்திரத்திலே சிருஷ்டிக்கிரமங்கூறி, மூன்றாஞ் சூத்திரத்திலும் நாலாஞ் சூத்திரத்திலும் தேகேந்திரியாந்தக்கரணாதிகளுக்கு அந்யனான்மாவென்றும், ஆன்மலக்ஷண மிவ்வாறென்றுங்கூறி; மேலைந்தாஞ்சூத்திர மொன்பது விருத்தத்தினாலுஞ் சிவனான்மாக்களிடத்திலந்தரியாமியாய் நின்று ப்ரேரிக்கு முறைமையைச் † சங்கோத்தரங்களினாலு முதாஹரணங்களினாலுங் கூறுகின்றது.

* உபபத்தி - சாதனம், † சங்கை-சந்தேகித்தல், உத்தரம் - மறுமொழி.

ஆன்மாக்க ளனைத்துமெங்குஞ் செறிதருஞ் சிவன்றனாலே யறிந்திடுஞ் சிவனைக்காணா—சர்வான்மாக்களுஞ் சர்வவியாபியாகிய சிவனுடைய பிரேரணையினாலே சர்வ வஸ்துக்களையு மறியும். இவ்வாறறிந்தும் சிவப்பிரேரணையினாலே யறிகிறோ மென்கிறத்தையுஞ் சிவனையுமறியார்கள். அதென்போல வென்னில்?—

பொறிபுலன் கரணமெல்லாம் புருடனா லறிந்தான்மாவை யறிதரா தவையேபோல - அந்தக்கரணங்களும் ஞானேந்திரியங்களும் புருஷனாலே விஷயங்களைக் கண்டும் புருஷனாலே யறிகிறோ மென்கிறதையு மந்தப் புருஷனையு மறியாததுபோல வென்னில்? 'ஐந்தையுங்கொண் டறிவதொன் றுண்டதான்மா வைம்பொறி யறிந்திடாவே' என்றும், 'உணர்வன கரணமென்னி லொன்றையொன் றுணராவென்றும் அந்தக்கரணங்களையும் ஞானேந்திரியங்களையு முன்னே ஜடமென்று சொல்லிப்போந் திவ்விடத்து விஷயங்களை யறியுமென்றது விரோதமென்னில்? அதல்ல. இந்திரியாந்தக் கரணங்க ளறியு மென்று சொன்னது முக்ய விருத்தியாகவல்ல, லக்ஷணையாக காரண காரியோப சாரமாகச் சொன்னது. அது விஷயோன்முகமான ஆன்ம ஞானத்தினுடைய விஷய ஞானோதயத்துக்கு இந்திரியாந்தக் கரணங்கள் சஹகாரி காரணமாயிருந்து ஆன்மசம்யோகத்தினாலே சஹகாரி யானோ மென்பதையு மான்மாவையு மறியாததுபோலவென் றர்த்தம்.

லக்ஷணையானது, ஆதாரம் காரணம் காரியம் சமீபம் உபகாரம் * தர்மானுக்ரதம் என்றாறுவிதமாம். அவையாவன:—

* தருமாநு கிருதம் - தருமத்தை யொக்குதல்.

ஆதாரமாவது, மஞ்சா : க்ரோசந்தி யென்றது, மஞ்சஞ் ஜடமாகையால் சேதனதர்மமான † ஆக்ரோசம் முக்ய விருத்தியாகக் கூடாதாகையா லந்த ‡ மஞ்சஸ்தனா யிருக்கிற புரு

ஷனுடைய ஆக்ரோசத்தை ஆதாரமாக விருக்கிற மஞ்சத்து க்கு லக்ஷணையாகச் சொன்னது.

† ஆக்குரோசம் - கூப்பிடுதல். ‡ மஞ்சஸ்தன் - கட்டி லி லிருக்கிறவன்.

காரண லக்ஷணையாவது, பொன்மழை பெய்ததென்றபொ ழுது மேகம் ஸ்வர்ணத்தை வர்ஷியா தாகையால் மேகம் வர் ஷித்த ஜலத்தினாலே § சச்யாதி யபிவிருத்தித் துவாரா தாங் யலாபப் ¶ பிரயுக்த ஸ்வர்ணலாபம் வருகையால் பரம்பரா கா ரணமாயிருக்கிற தண்ணீரை வர்ஷித்தது பொன்மழை யென் பது + காரணே.

§ சச்யம் - பயிறு, ¶ பிரயுக்த - உண்டான. + கார ணே - காரணத்தில்.

காரிய லக்ஷணை யாவது, பருத்திப் புடவை யென்றபொ ழுது பருத்தியே புடவை யாகாதாகையால் பருத்தியினுடை ய காரியமாகிய நூற்புடவை காரியத்தினாலே காரணத்தை லக்ஷணையாகச் சொன்னது.

சமீபலக்ஷணையாவது, கங்கையிலே யிடைச்சேரி யென்ற பொழுது கங்கை பிரவாகிக்கிற தாகையா லதிலே குடியிருக்கி றது முக்கியமாகக் கூடாதாகையால் கங்கைக் கரையிலே யி டைச்சேரியென்றது.

உபகார லக்ஷணையாவது, பிக்ஷை யிந்த வூரைவிட் டப் பாற்போக வொட்டா தென்றபொழுது பிக்ஷை தகையக் கை யைப் பிடித் திருத்த முக்கியமாகக் கூடாதபடியாலே பிக்ஷா × சௌகரியத்தினாலே இந்த வூரைவிட்டுப் போக மனதுவா ரா தென்பது.

× சௌகரியம் - சுளுவாய்ச் செய்யக்கூடுமானது,

தர்மாநுக்ருதி லக்ஷணையாவது, சிங்கோமாணவகா என்றபொழுது ÷ மாணவகன் முக்கியமாக சிங்கமாகா தையால் சிங்கதர்மமான சௌரியத்தை யுடையவனென்பது.

÷ மாணவகன்-மாணுக்கன்.

தது³க்தம் ஶ்ரீமந்மஹேந்த்³ரே — ஸ்யாதே³ காரணகார்யயோ: ஸித்³தே⁴ வா வாசகாரகே । யத்³ஆத்³யந்தக்ருதாஸ்வே த்ரிலக்ஷணா: ஸம்ப்ரயோஜகா: ॥ இதி.

இந்த லக்ஷணங்க ளிந்த சாஸ்த்ரத்திலே வந்த விடங்கடோறுங் கண்டுகொள்க.

சித்ரூபியாயிருச்சிற ஆன்மாவுக்கு ஜடமாயிருக்கிற இந்திரியாந்தக் கரணங்களை திருஷ்டாந்தமாகச் சொன்னது விரோதமென்னில்? அல்ல. ஆன்மாக்க ளனைத்துமென்று சர்வான்மாக்களையும் * பக்ஷ நிர்த்தேசம் பண்ணுகையால் சபக்ஷமில்லை. அதனாற் கேவல வியதிரேகியானது கொண்டு வியதிரேகமாக ஜடத்தை திருஷ்டாந்தமாகச் சொல்லுவ † துசிதமே.

* பக்ஷநிர்த்தேசம் - இடத்தைக் குறித்தல். † உசிதம்-யோக்யம்.

தது³க்தம் ரௌரவாக³மே — ஶிவஜ்ஞாநப்ரபோ³த⁴யே-விந்த்³ரக்ஷாணி ப³ந்த⁴வாஸ்ய ஐஶ்வர்யம்ஸோபி ஸம்ஹாநமிதி ।

ஜடத்துக்குச் சித்பிரேரணையில்லாமல் பிரவிருத்தியில்லையென்பதன்றிச் சித்துக்கு * சிதந்தராபேக்ஷையாக ஆன்மாக்களை சிவன் பிரேரிப்பனென்கிறபொழுது † அநவஸ்தை வருமென்னில்? அதற்குத்தரமாக,—

* சிதந்தரம் - வேறுசித்து, † அநவஸ்தை - முடிவில்லாமை,

அறிதருஞ் சிவனேயெல்லா மறிந் தறிவித்துநிற்பன் - ஆன்மாக்க ளறியும்படிக்குப் பண்ணுகிற சிவன் அந்யப் பிரகாசத்தை யபேக்ஷியாமற் றானே யெல்லாத்தையு மறிந்து ஆன்மாக்களுக்கு மறிவித்து வேறாறநிற்பன்.

சிவனேயென்ற ஏகாரத்தினாலேதானே யறிந்தும் பிறர்க்குமறிவிக்கிறவன் சிவன்.

தத்பிரதியேகி சைதந்யமான ஆன்மாக்கள் சிவனாலே யறிகிறதொழிந்து தாங்களாகவறியமாட்டார்கள், ஒருவர்க் கறிவிக்கவுமாட்டார்கள்.

சைதந்ய ஸ்வரூபம் சமனாயிருக்க விவ்வாறு பேத மெப்படி யென்னில்? கண்ணும் பிரகாசரூபமும் ஆதித்யனும் ப்ரகாச ரூபமாயும், கண் ணாதித்த ப்ரகாசத்தினாலே காண்பதொழிந்து தானாகக் காணவுமாட்டாது வேறொரு கண்ணுக்குக் காட்டவு மாட்டாது; ஆதித்யன் றன்னுடைய பிரகாசத்தினாலே யெல்லா வஸ்துவையுந் தானே கண்டு கண்களுக்குங் காட்டுவதுபோல வெனவறிக.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

—o—

இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துகிறார்.

பொறி - பஞ்சேந் திரியங்களாகிய புறக்கரணங்கள்,—காணம் எல்லாம்-மனாதி நான்காகிய உட்கரணங்கள்,—புலன்- விடயங்கள்,—புருடனால்-ஆன்மாவால்,—அறிந்து-சிற்சத்தியோடு புணர்ந் துணர்துதலால் அறிந்தென் றுபசரிக்கப்பட்டது,— ஆன்மாவை - பிரேரகனாகிய புருடனை,—அறிதரா - காணா.— அவையே போல-அந்த இருவகைக் கரணங்கள்போல,—ஆன்மா

க்கள்,—அனைத்தும் - எல்லா விஷயங்களையும்,—எங்குஞ் செறிதருஞ் சிவன்றன்னாலே - எவ்விடத்தும் பரிபூரணனா யிருக்குமீசுரனாலே,—அறிந்திடும் - தூல சூக்கும பரசரீங்களைப் புணர்த்திப் போதிப்ப வுணரும்,—சிவனைக் காணு -பிரேரகனாய் நிற்குமீசுரனைப்பாரா.—அறிதருஞ் சிவனே - சுதந்தர வறிவனாகிய வீசுரனே,—எல்லாமறிந் தறிவித்து நிற்பன் - முன் சொல்லிய முறைமையிற் சகலமு முணர்ந் துணர்த்தி யிருப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

நான்காஞ் சூத்திரத்திற் பசுவியல்பு கூறியவாசிரியர் அதன்மேனின்ற பாசத்தினியல்பு கூறுவாராய், அதனை யுள்ளடக்கி நிற்குந் திரோதான சத்தியினியல்பு ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

தன்னை யறியமாட்டாத பொறி முதலியவற்றைத் தானறிந் தறிவித் துடனிற்கும் புருடன். அதுபோலத் தன்னையறியமாட்டாதவப்புருடனை அறிந் தறிவித் துடனிற்பது சிவமென்பதாம்.

சிவனே யெல்லா மறிந் தறிவித்து நிற்பனெனப் பொருட்க ணோதியதனை உவமையினு மேற்குமா றிவைவித் துரைத்துக் கொள்க.

திரோதான சத்தியி னியல்பை உபசாரத்தாற் சிவன்மேலேற்றிக் கூறியவாறு.

அறிதருஞ்சிவன் முடிவின்க ணுண்மையறிவைத் தரக்கடவோனாகிய சிவன்.

அறி முதனிலைத் தொழிற்பெயர்.

அறிதருஞ் சிவனேயெல்லா மறிந் தறிவித்துநிற்பன் - ஆன்மாக்க ளறியும்படிக்குப் பண்ணுகிற சிவன் அந்யப் பிரகாசத்தை யபேக்ஷியாமற் றானே யெல்லாத்தையு மறிந்து ஆன்மாக்களுக்கு மறிவித்து வேறறநிற்பன்.

சிவனேயென்ற ஏகாரத்தினாலேதானே யறிந்தும் பிறர்க்குமறிவிக்கிறவன் சிவன்.

தத்பிரதியேகி சைதந்யமான ஆன்மாக்கள் சிவனாலே யறிகிறதொழிந்து தாங்களாக வறியமாட்டார்கள், ஒருவர்க் கறிவிக்கவுமாட்டார்கள்.

சைதந்ய ஸ்வரூபம் சமனாயிருக்க விவ்வாறு பேத மெப்படி யென்னில்? கண்ணும் பிரகாசரூபமும் ஆதித்தனும்.ப்ரகாச ரூபமாயும், கண் ணாதித்த ப்ரகாசத்தினாலே காண்பதொழிந்து தானாகக் காணவுமாட்டாது வேறொரு கண்ணுக்குக் காட்டவு மாட்டாது; ஆதித்தன் றன்னுடைய பிரகாசத்தினாலே யெல்லா வஸ்துவையுந் தானே கண்டு கண்களுக்குங் காட்டுவதுபோல வெனவறிக.

ஞானப்பிரகாசருனா வருமாறு.

—o—

இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துகிறார்.

பொறி - பஞ்சேந் திரியங்களாகிய புறக்கரணங்கள்,—கரணம் எல்லாம்-மனாதி நான்காகிய உட்கரணங்கள்,—புலன்- விடயங்கள்,—புருடனால்-ஆன்மாவால்,—அறிந்த-சிற்சத்தியோடு புணர்ந் துணர்துதலால் அறிந்தென் றுபசரிக்கப்பட்டது,—ஆன்மாவை - பிரேரகனாகிய புருடனை,—அறிதரா - காணா.—அவையே போல-அந்த இருவகைக் கரணங்கள்போல,—ஆன்மா

க்கள்,—அனைத்தும் - எல்லா விஷயங்களையும்,—எங்குஞ் செறிதருஞ் சிவன்றன்னாலே - எவ்விடத்தும் பரிபூரணனாயிருக்குமீசுரனாலே,—அறிந்திடும் - தூல சூக்கும பரசரீங்களைப் புணர்த்திப் போதிப்ப வுணரும்,—சிவனைக் காணா -பிரேரகனாய் நிற்குமீசுரனைப்பாரா.—அறிதருஞ் சிவனே - சுதந்தர வறிவனாகிய வீசுரனே,—எல்லாமறிந் தறிவித்து நிற்பன் - முன் சொல்லிய முறைமையிற் சகலமு முணர்ந் துணர்த்தி யிருப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

நான்காஞ் சூத்திரத்திற் பசுவியல்பு கூறியவாசிரியர் அதன்மேனின்ற பாசத்தினியல்பு கூறுவாராய், அதனை யுள்ளடக்கி நிற்குந் திரோதான சத்தியினியல்பு ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

தன்னை யறியமாட்டாத பொறி முதலியவற்றைத் தானறிந் தறிவித் துடனிற்கும் புருடன். அதுபோலத் தன்னையறியமாட்டாதவப்புருடனை அறிந் தறிவித் துடனிற்பது சிவமென்பதாம்.

சிவனே யெல்லா மறிந் தறிவித்து நிற்பனெனப் பொருட்கண்ணோதியதனை உவமையினு மேற்குமா றிணைவித் துரைத்துக்கொள்க.

திரோதான சத்தியி னியல்பை உபசாரத்தாற் சிவன்மேலேற்றிக் கூறியவாறு.

அறிதருஞ்சிவன் முடிவின்க ணுண்மையறிவைத் தரக்கடவோனாகிய சிவன்.

அறி முதனிலைத் தொழிற்பெயர்.

இச்செய்யுள் முதனூ லஞ்சாஞ் சூத்திரம்போல இருகூற்ற தாமாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மூன்றுஞ் சூத்திரம் திருவிருத்தம் - ௪. நாலாஞ்சூத்திரம் திருவிருத்தம் - ௪௰. ஆக திருவிருத்தம் - ௪௪.

இது ஆன்ம இலக்கணம்.

இதில் மூன்றுஞ் சூத்திரத்தில் முதற்றிருவிருத்தம் 'உயிரெனப்படுவது'என்ற திருவிருத்தம் ஒன்றுக்கு மற்றுள்ள நாற்பத்துமூன்று திருவிருத்தமும் வியாக்கியானம்.அவைவருமாறு:—

'உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுற்று' என்ற பதத்திற்கு வியாக்யானம், 'உடலின்வே றுயிரோனிந்த' என்ற திருவிருத்தமுதல் 'சுத்தமா மான்மசித்தை' என்ற திருவிருத்த மீறாக இருபத்திரண்டு திருவிருத்தமளவும் வந்து முடிந்தது.

'செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப், பயில்வுறு மின்பதுன்பப்பலன்களு நுகரும்'என்ற பதத்துச்கு வியாக்யானம், 'அசித்தருவியாபகம்' என்ற திருவிருத்தமுதல் 'அறிவுடல் சிந்தை' என்ற திருவிருத்த மீறாகப் பத்துத் திருவிருத்த மளவும் வந்து முடிந்தது.

'பார்க்கிற் றுயிலொடு மஞ்சவத்தைப் படுமுண்மை துரியாதீதம்' என்ற பதத்துக்கு வியாக்யானம், 'கண்டுணர் புருடன்' என்ற திருவிருத்தமுதல், 'இருவினைச்செயல்கள்' என்ற திருவிருத்த மீறாகப் பதினொரு திருவிருத்த மளவும் வந்துமுடிந்தது.

ஆக நாற்பத்துநாலு திருவிருத்தத்துக்கும் வகை கண்டுகொள்க.

நாலாஞ்சூத்திர முடிந்தது.

* இதனை இவ்வுரை நாலாஞ்சூத்திர முடிவிற் சேர்த்துக் கொள்க.

மேல் உணர்த்து முறைமை.

முன்சொன்ன ஆன்மலக்கணத்தில் ஆன்மாக்கள் படுகிற வவத்தைத் தன்மை சொல்லி அநாதியே யுயிர்க்குயிராய் நின்றுணர்த்துகிற சிவனை ஆன்மாக்க ளிழந்து நிற்கிற முறைமைக்கு ஒருதிட்டாந்தமிட் டருளிச் செய்கிறார்.

பொறிபுலன் கரணமெல்லாம் புருடனலறிந் தான்மாவை யறிதராது-இந்திரியங்களும் அந்தக்கரணங்களு மற்றமுண்டான தத்துவங்களும் பிரபஞ்ச விடயங்களை யான்மாவினாலே யறியாநிற்கும். அந்தத் தத்துவங்கள் ஆன்மாவினாலே யல்லோ எல்லாத்தையு மறிகிறோமென்று ஒன்று மறியாமலான்மாவை யிழந்து நிற்கும்.—அவையேபோல வான்மாக்க ளனைத்து மெங்குஞ் செறிதருஞ்சிவன்றனாலே யறிந்திடுஞ் சிவனைக்காணு - அந்த விந்திரியங்களும் அந்தக்கரணங்களும் ஆன்மாவை யறியாதாற்போலச் சர்வான்மாக்களும் சட சித்துக்க ளிரண்டிலும் விட்டுநீங்காமல் நிற்கிற பரமேசுர னுடைய வருளாலே யறிந்து புசியா நிற்கச் சிவனுடைய ஞானத்தாலேயல்லோ வறிந்து புசிக்கிறோ மென்கிற முறைமை ஒன்றையு மறியமாட்டாது. அருளானது அதீதத்திலே வேண்டத் தக்கக் கருவிகளைக் கூட்டி யுணர்த்த அந்தக் கருவிகளைக் கூட்டி யான்மாப் புசிக்குமதொழிந்து இவன் புசிக்கிற விடமெல்லாந் திருவருள் கூடிநின்று புசிக்க வேண்டுவதில்லை என்ற சைவரை நோக்கி யருளிச் செய்கிறார்.— அறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறிவித்துநிற்பன் - சர்வஞ்ஞன பரமேஸ்வரந்தானே ஆன்மாக்கள் முன்புசெய்த கன்மத்துக்குத் தக்க சுகதுக்கங்களையு மறி

ந்து முறைபிறழாமற் கூட்டிப் புசிப்பிப்பன்; ஆன்மாக்கள் இஞ்சிஞ்ஞ ராகையால்.

திருவருள் அதீதத்தில் வேண்டத்தக்க கருவிளைக் கூட்ட, அந்தக் கருவிகளை ஆன்மாகூடித் தனக்குவேண்டின விடயங்களைத் தானே புசிப்ப னென்று சைவர் சொன்னதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம். "அறிவாயறியு மறிவுயிர்கேவலத்-தறிவில னிருளொடும் பிறிவில ணண்ணல்-கலே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, கருவிகரணங்கள் ஆன்மாவினாலே யறியச்செய்தே அன்மாவை யறியாது நின்ற தன்மைபோல, சர்வ ஆன்மாக்களும் சிவனாலே யறிகைச் செய்தே சிவனை யிழந்து நின்றமுறைமையும் இத்தன்மைத் தென்றும், இவனுக்குண்டான கன்மங்களைச் சிவனேயறிந்து கூட்டிப் புசிப்பிப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பொறிபுலன் கரணமெல்லாம் புருடனால் - ஐம்பொறி யந்தக்கரண முதலியன மேற்கூறிப்போந்த புருடனாலே புலன்,— அறிந்து - தத்தம் விஷயங்களை இஃதின்னதென் றளவிட்டறிந்தும்,—ஆன்மாவை யறிதலின் அவையேபோல - அறிகின்ற தன்மையும் தம்மை யதிட்டித்து நின்று செலுத்து மப்புருஷனையும் அறியமாட்டா. அவைபோல,—ஆன்மாக்களனைத்து மெங்குஞ் செறிதருஞ் சிவன்றனாலே - ஆன்மாக்க ளனைத்தினும் எவ்விடத்தும் வியாபகமாகியமுதல்வனது சிற்சத்தியான்,— அறிந்திடுஞ் சிவனைக்காணு-வினைப்பயன்களையறிந் தனுபவிக்குந் தம்மையுந் தம்மைச்செலுத்தி நிற்குந் திருவருளையு மறியமாட்டா.—

அறிதருஞ் சிவனே யெல்லாமறிந் தறிவித்துநிற்பன்- முடிவின்கண் உண்மையறிவைத் தரக்கடவோனாகிய சிவன், தன்னை யறியமாட்டாத பொறிமுதலிய வற்றைத் தானறிந்து மறிவித்து முடனிற்கும் புருஷனைபோலத் தன்னை யறியமாட்டாத அப்புருஷனை யறிந்து மறிவித்து முடனிற்பன் என்பதாம்.

திரோதான சத்தியி னியல்பை யுபசாரத்தால் சிவன் மேலேற்றிக் கூறியவாறு.

இச்செய்யுண் முதனூலிந்தாஞ் சூத்திரம்போல இருகூற்ற தாமாறு கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

—o—

அருகன், சர்வான்மாக்களுக்குஞ் சிவனறிவிப்பானாகின் எல்லார்க்குமொருபடித்தாக வறிவிக்கவேண்டாவோவென, அந்தச்சிவன் கன்மத்துக் கீடாகக் கொடுப்பனென் றுணர்த்துகின்றார்.

இறைவனே யறிவிப்பானேலீண்டறி வெவர்க்குமொக்கும், குறைவதி கங்கடத்தங் கன்மமேற் கோமான்வேண்டா, முறைதரு செயற்குப்பாரு முளரிகட் கிரவியும்போ, லறைதருந் தத்தங்கன்மத் தளவினுக் களிப்பனாதி. (௨)

(இ-ள்.) இறைவனே யறிவிப்பானேலீண்டறி வெவர்க்குமொக்கும் உமதுகர்த்தா வெல்லார்க்கு மறிவுகளைக் கொடுப்பனென்று நீர் சொல்லில்? அப்பொழுதறிவெல்லார்க்கு மொத்திருக்க வேணும்.

குறைவதிகங் கடத்தங்கன்ம மேற் கோமான் வேண்டாம் — கன்மத்துக் கீடாகவே யான்மாக்களுக் கறி வேறியுங் குறைந்தும் வருமாகிற் கர்த்தா வதனைக் கொடுக்க வேண்டுவ தில்லைக் காணும்.

முறை தருஞ் செயற்குப் பாரும் — பூமி யெல்லார்க்கும் பொதுவா யிருக்கவு மிருவ ரொருகாலத்தி லுழுது விரைவிரைக்கவுங் கண்டோம், ஒருவனுக்கு வீரயோகமாகவுண்டாயு மொருவனுக் கொன்றுங் காணமற் போகவுங் கண்டோம்; அதுபோலவும்,

முளரிகட் கிரவியும்போல் — தடாகத்திற் றாமரை யரும்பி னின்றாலும் பக்குவமானத்தை யாதித்த னலர்த்துமாறுபோல மாயையாகிற தடாகத்திலே மயங்கிக்கிடக்கிற வான்மாக்க ளாகிற பதுமத்தைச் சிவனாகிற வாதித்தன் பருவமறிந் தலர்த்துவன்.

அறைதருந் தத்தங் கன்மத் தளவினுக் களிப்பனுதி. — அவைபோலென் றுவமித்துச் சொல்லப் பட்ட சிவனும், மான்மாக்கள் கன்மத்துக் கீடாக வறிவை யேறவுங் குறையவு முண்டாக்குவன், கர்த்தாவை யன்றி யுண்டாக மாட்டாதுகாண். எ-று.

இதற்குப் பௌட்கரத்து மதங்கத்து மறிக. (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் கர்த்தாவே யறிவிக்கச் சர்வான்மாக்களுக்கு மறிவொக்க வேண்டுமென்னுஞ் சங்கைக் குத்தரம்.

இறைவனே யறிவிப்பானே லீண்டறி வெவர்க்கு மொக்கும் - சர்வான்மாக்களுக்குங் கர்த்தாவே யறிவிப்பானாகி லறி

வான தெல்லார்க்கு மொருபடித்தா யிருக்கவேணும்.—குறை வதிகங்க டத்தங் கன்மமேற் கோமான் வேண்டா - அறிவினு டைய * தாரதம்யமான தவர்க ளவர்களுடைய கன்ம தாரதம் யத்தினுலே வருமென்னில், அப்பொழு தீஸ்வரனறிவிப்பனெ ன்னத் தேவையில்லை யென்னில்? கன்மஞ் ஜடமாகையாற் று னே பலத்தைக் கொடாது. கன்மங் குணமாக வீஸ்வரனே யறியப்பண்ணுவ னென்பதற் குதாகரணமாக.— மு றைதருஞ் செயற்குப்பாரு முளரிகட் கிரவியும்போ லறைதருந் தத்தங்கன் மத் தளவினி லளிப்பனுதி - உழவு ஏருழுதலாகச் செய்யுங்கோ ளாற்றுக்கேற்ற பலன்களைப் பூமிகொடுக்குமாப்போல ஆன்மா க்கள் பண்ணும் புண்ணிய பாவங்களுக்கேற்ற வறிவு முதலான பலன்களைக் கொடுப்பதும், பக்குவமாகிய தாமரை முகைகளை † யாதித்தியன் ‡ விகசநம்பண்ணுமாப்போல மலபரிபாகமான ஆன்மாக்களைப் பக்குவானு குணமாக சர்வஞ்ஞத்துவாதிகளைப் பிரகாசிப்பிப்பதும் பதார்த்தத் திரயங்களுக்குள்ளே ஆதிபக § வாச்யனுன சிவனென்று ஆகமங்க ளறையாநிற்குமென் றித ன்பொருள்.

* தாரதம்யம் - ஏற்றக்குறைவு, † ஆதித்யன் - சூரியன், ‡ விகசநம்-மலரச்செய்தல், § வாச்யன் - சொல்லத்தக்கவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அருகன் ஈசுரனறிவிப்பானுகில் அறிவு அனைவர்க்கு மொ ருபடித்தாக வேண்டு மென்ன மறுத் துரைக்கின்றார்.

இறைவனே யறிவிப்பானேல்-சிவனே போதிப்பனுகில்,— ஈண்டறிவெவர்க்கு மொக்கும்-இவ்விடத் துணர்வு எல்லார்க்கு

மேருது குறைபாது ஒத்திருக்க வேண்டும்.—குறைவதிசங்கடத் தங் கன்மமேல்-அறிவின துயர்ச்சி தாழ்ச்சி புண்ணியபாவ பாக தாரதம்மியத்தாலென்று நீர் சொல்லில்,—கோமான் வேண்டா - ஒரு காரியத்துக் கிருகாரணங் கற்பிப்பது கற்பனு கௌரவமென்னுந் தோஷம் வருமாதலால் ஈசுரனறிவிப்பானென்பது சொல்ல வேண்டுவதில்லை, சத்தியம்; நீ சொல்லியது அநேகாந்திகமாயிற்று. அதெப்படி?—முறைதருஞ் செயற்குப்பாரும் - மந்த தீவிராதி தொழிற்கு மந்த தீவிராதி பலம் பலிக்கும் பொருட்டு வேறு காரணமாகிய பூமியும்,—முளரிகட்கு- பக்குவ முறைமை தப்பாதலருந்தாமரைப் பூவுக்கு,—இரவியும் போல்-சூரியனு மொப்ப,—ஆதி-ஈசுரன்,—அறை தருந் தத்தங் கன்மத் தளவினுக்கு அளிப்பன் - சொல்லப்பட்ட பலவித பக்குவ சககாரி கன்மங்களைப் பின்சென்று உயிர்களைப் போதிப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவற்றுள், முதற்கூற்றுப் பொருளை உள்ளடக்கிநிற்கு மிரண்டாங்கூற்றை அவ்வம் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்து கின்றார்.

அறிவித்தற் பொருட்டு இறைவன் வேண்டப்படுமெனக் கொள்வார்க்கும், அறிவுகளொருபெற்றியவாதலினறி வேற்றத்தாழ்வுகளாய் நிகழ்தற்குக் காரணங் கன்மமெனக் கொள்ள வேண்டுதலின் அதுவே யமையும் வேறு மோ ரறிவிப்பானைக் கோடன் மிகையாமா லெனின்? அற்றன்று. பங்கயத்தின தலர்ச்சிக்குப் பங்கயமேயன்றி இரவியும், உழவுமுதலிய செயல்களின் பயனுக்கு அச்செயலேயன்றி விளைநிலமுங் காரணமாதல்

கண்டாமன்றே! அவைபோல் அவ்வக் கன்மம் பக்குவமாதலும் பயன்றருதலும் வேறோ ரிறைவனையின்றி யமையாமையின் மிகையாதல் யாண்டைய தென்பதாம்.

குறைவதிகங்கடத்தங்கன்மமெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

செயல் ஆகுபெயர்.

முறைதருசெயல், உழுதல் எருப்பெய்தல் வித்தல் நட்டல் நீர்கால்யாத்தல் காத்தலென் றிம்முறையாற் றரப்படுஞ் செயலென்க.

அற்றேல் கன்மத்தோடுங் கூடிய வுயிரே அதற்குக் காரணமாத லமையும், வேறுமோ ரிறைவ னென்றுக் கென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

ஆன்மா தானே யறியுமதொழிந்து சிவ னறிவிக்கவேண்டுவதில்லை, சிவனறிவிக்கில் எல்லார்க்கு மறிவொத்திருக்கவேண்டும் என்ற அவிகாரவாதியை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

இறைவனே யறிவிப்பானே லீண்டறி வெவர்க்கு மொக்கும் - பரமேஶ்வரன் சர்வான்மாக்களுக்கு மறிவுகளைக் கொடுப்பனென்று சொல்லில்? இவ்விடத்துச் சர்வான்மாக்களுக்கும் அறிவு ஒத்திருக்கவேணும்.—குறை வதிகங்க டத்தங் கன்மமேற் கோமான்வேண்டாம் - தந்தாங் கன்மத்துக் கீடாக ஆன்மாக்களுக்குப் பிரஞ்ஞை யேறிக்குறைந் திருக்குமாகில் கர்த்தாவேண்டுவதில்லை. கன்மஞ் ஜடமாகையாலும் ஆன்மாவுக்குத் தனக்கென்ன வறிவில்லாதபடியாலும் சர்த்தாவே கன்மத்தையறி

ந்து கூட்டவேண்டும். கர்த்தா வப்படி யறிந்து கூட்டில் விகாரியாகானோ வென்னில்? அப்படிக் கூட்டினுங் கர்த்தா விகாரியாகான். அதெங்ஙனே யென்னில்?—முறைதரு செயற்குப்பாரும் - கிருஷிசெய்வார்க்குச் செய்யப்பட்ட செய்திக்கீடாகக் கிரமத்திலே பலிக்கிற க்ஷேத்திரமும்,—முளரிகட் கிரவியும்போல்-பக்குவப்பட்ட தாமரைக்கு ஆதித்தனைப்போலவும், (செய்த செய்திக்குத்தக்க பயனைக் கொடுக்கச்செய்தே பூமியானது விகாரமற்று நின்றமுறைமை போலவும், ஆதித்தனாலே காரியப்படுகைச்செய்தே ஆதித்தன் விகாரமற்று நின்ற முறைமைபோலவும்),—அறைதருந் தத்தங்கன்மத் தளவினி லளிப்பனாதி - சொல்லப்பட்ட தந்தங் கன்மத்துக் கிடாக ஆன்மாக்களையும் பிரபஞ்ச விஷயங்களையுங் கூட்டிக் காரியப்படுத்துகைச் செய்தேயும் சிவனுக்கு விகாரமில்லை.

ஆன்மா தானேயறியுமென்ற அவிகாரவாதிமதத்தை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "இருந்தான் கேள்வி திருந்திடுமுயிர்க - ளறிவினதாயிற் பொறிபுலனென்னை - மற்றவைபற்றி யுற்றறிந்திடுதலி - னறிவெனவழங்கு முயிரெனவுணர்த்தல்-காணுங்கண்ணினன் கைகொடுதடவிப்பி-பூணும் பொருளின் பெயர்பலபுகற-லென்னுங்கிளவி தன்னொடுதகுமே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவன் சர்வான்மாக்களுக்கும் அறிவிப்பனாகில் அறிகிறமுறைமை யெல்லார்க்கு மொத்திருக்கவேண்டும் என்றும், அவரவர் கன்மத்துக்கீடாக அறிவு ஏறிக்குறைந்திருக்கு மென்னில்? சிவன் வேண்டுவதில்லை என்றும், அவிகாரவாதி சொல்ல; பூமியானது செய்தசெய்த தொழிலுக்குத் தக்க பயனைக் கொடுக்கச்செய்தேயும், ஆதித்தன் தாமரையைப் பக்குவப்படுத்துகைச் செய்தேயும் விகாரமறநின்ற தன்

மைபோல: சிவனும் ஆன்மாக்களையும் பிரபஞ்ச விஷேபத்தை யும் கூட்டிப் புசிப்பிக்கைச் செய்தேயும் விகாரமற நிற்பனெ ன்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அறிவிப்பா னிறைவனே லீண்டறி வெவர்க்கு மொக்கும்-அறிவித்தற் பொருட்டு இறைவனே வேண்டப்படுமெனக் கொ ளவார்க்கு மறிவுகளெவர்க்கு மொருபெற்றிய வாதலின்றி,—கு றைவதிகங் கடத்தங் கன்மமேல் கோமான் வேண்டா-ஏற்றத் தாழ்வாய் நிகழ்தற்குக் காரணம் கன்மமெனக் கொள்ள வேண் டுதலி னதுவே யமையும் வேறோ ரறிவிப்பானைக் கோடன் மிகையாமா லெனின்? அற்றன்று —முளரிகட் கிரவியும் - பங்க யத்தி னலர்ச்சிக்குப் பங்கயமேயன்றி யிரவியும்,— முறைதரு ஞ செயற்கும் பாரும்போல -உழுதல் எருப்பெய்தல் வித்தல் நட்டல் நீர்கால்யாத்தல் காத்த லிம்முறையாற் றரப்படு முழ வுமுதலிய செயல்களின் பயனுக்கு அச்செயலேயன்றி விளைநில முங் காரணமாதல் கண்டா மன்றே! அவைபோல,—அறைதரு ங் கத்தங் கன்மத்தளவினுக் களிப்பனுதி- சொல்லுகின்ற வவ்வ க் கன்மம் பக்குவமாதலும் பயன்றருதலும்,— வேறேறிறைவ னையின்றி யமையாமையின் மிகையாதல் யாண்டையதென்ப தாம்.

மறைஞானதேசிகர் உரை.

உமதுகர்த்தா வுணர்த்த வேண்டா, ஆன்மாத்தானே யறியுமெ ன்று சொல்லுவானை நோக்கி மறுத்துணர்த்துகின்றார்.

அறிந்திடுமான்மா வொன்றை மற்றொன்று லறிதலானு, மறிந்தவை மறத்தலானு மறிவிக்க வறிதலானு, மறிந்திடுந் தன்னையுந்தா னறியாமை யானுந் தானே, யறிந்திடு மறிவனன்று மறிவிக்க வறிவனன்றே. (௫)

(இ-ள்.) அறிந்திடு மான்மா வொன்றை மற்றொன்று லறிதலானும்	ஆன்மா யாதாமொன்றை யறியும்பொழுது தானாகவறியான், ஒவ்வொரு விடயங்களை யொவ்வோ ரிந்திரியங்களினாலே வியாபித்துக்கொண் டறிகையாலும்,
அறிந்தவை மறத்தலானும்	இப்படி யறிந்தபொருளை மலமேலீட்டினாலோரோ ரவதரங்களிலே யதனை மறந்து விடுகையாலும்,
அறிவிக்க வறிதலானும்	ஒருபேரறிவன் முன்னிலையாக நின் றுணர்தலானும்,
அறிந் திடுந் தன்னையுந்தா னறியாமை யானும்	எல்லாத்தையு மறிகிற தான் றிரோதாயி மறைக்கத் தன்னை யறியாதிருக்கை யாலும்,
தானே யறிந்திடு மறிவனன்றும்	சிவனைப் போலத் தானே யறியத்தக்க வறிவுகளை யுடையனல்லன்.
அறிவிக்க வறிவனன்றே	ஆகையா லொருத்தன் போதிக்க வறியா நிற்பன் எ-று.

இதற்குப் பௌட்கரத்தும் நிசுவாசத்து மறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலான்மாக்கள் ஸ்வதந்த்ரமாக வொன்றையு மறியார்கள் சிவனறிவிக்கவே யறிவார்க ளென்பதை ஏதுபூர்வமாகக் கூறுகின்றார்.

சர்வத்தையு மறிய யோக்கியனாகியுள்ள ஆன்மாவானவன் சப்தாதி விஷயங்களை சுரோத்திராதி யிந்திரியங்களினாலே யறிகையினாலும், அறிந்த வஸ்துக்களை மறைக்கையினாலும், ஒருத்தராலே போதிக்க வறிகையினாலும், அல்லதுவிஷயங்களை யறியுந் தன்னைத்தா னறியாமையாலும், தானேயறியுஞ் ஞானஸ்வரூபியல்ல † ஸ்வரூபபரப்பிரகாசனான சிவனறிவிக்க வறியும் ஞானஸ்வரூபியேயென்றிதன் பொருள்.

† ஸ்வபரப் பிரகாசன் - தன்னையும் எதிரியையும் தெறிவிக்கிறவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கருத்தா வறிவிக்கவேண்டியதில்லைக் கன்மத்துக் கேற்க ஆன்மாவே யறிவானென்ன, மறுத்துணர்த்துகின்றார்.

அறிந்திடுமான்மா - அறியுந்தன்மையை யுடைய உயிர்,—ஒன்றை - சத்தமுதலிய விடயங்களி லொரு விடயத்தை,—மற்றொன்றால் - சோத்திரமுதலிய விந்திரியங்களி லோரிந்திரியத்தால்,—அறிதலானும் - உணர்தலானும்,— அறிந்தவை மறத்தலானும் - உணர்ந்த சத்தமுதலிய விஷயங்களை மலத்தோடு தமோகுண மருவ நினை வறுதலானும்,— அறிவிக்க வறிதலானும் - அறிந்தவன் போதிக்க வறிதலானும்,—அறிந்திடுந் தன்னை

யுந்தா னறியாமை யானும் - தன்னை நானென்று சுவசம்வே தனப் பிரத்தியட்சத்தினாற் கிஞ்சிஞ்ஞ கர்த்தாவாகி யறிந்தாலும், சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவாயும் சிவனைப்போ லிருக்குந் தன்னை யுள்ளபடி யுணரா திருத்தலானும்,— தானே யறிந்திடு மறிவனன்றாம் - மலம் சிற்சத்தியை மறைத்தலால் மறைப்பில்லாத முத்தியிற் சுதந்திர வறிவனானாலும் பெத்தத்திற் சுவதந்தர வறிவனல்லனாம்,—அறிவிக்க வறிவனன்றே.-சிவன் பரதேகஞ் சூக்குமதேகந் தூலதேகமாகும் திரிதேகங்களைக் கூட்டிப் போதிப்பக் கிஞ்சிஞ்ஞனா யிருப்பன்றானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இந்நான் கேதுக்களானும் அறிவு நிகழ்ச்சிக்குப் பொறிபுலன் முதலியவற்றோ டொப்ப வேறுகாரணத்தை யவாய்நிற் பதன்றி உயிர் தானே யறியவற் றன்றென்பதாம்.

ஒன்றை யொன்றினாலறிதலே யதனியல்பென்பாரை நோக்கி அறிந்தவை மறத்தலானு மென்றும், அறிந்ததனைப் பின்னறிய வேண்டாமையின் மறக்கலாயிற் றென்பாரை நோக்கி மீளவறிவிக்க வறிதலானு மென்றும், எவ்வாற்றானு மறிதலிற் றிரிபில்லைபன்றே யென்பாரை நோக்கி அறிந்திடுந் தன்னையுந்தா னறியாமையானு மென்றுங் கூறினார்.

இதனானே சாங்கியர்மதம் பரிகரித்து முதற்கூற்றை வலியுறுத்துவானாயிற்று.

விதந்துகூறாது ஒன்றை யொன்றினா லெனப் பொதுப்படக் கூறியது மதன்பொருட்டு.

அற்றேல் ஈண்டொன்றினு லெனப்பட்ட மாயேயமே யத ற்கமையும், இறைவ னெற்றுக்கென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

திரம்பவழகியருரை வருமாறு.

ஆன்மா தானே யறிவன் அவனுக்கொருவ ரறிவிக்க வேண் டுவதில்லை யென்ற அவிகார வாதியை நோக்கி மேலு மருளித் தருளிச் செய்கிறார்.

அறிந்திடு மான்மாவொன்றை யொன்றினு லறிதலானும் - தானே யறியுமென்று நீ சொன்ன வான்மா ஒவ்வொரு விஷ யங்களை ஒவ்வொரு இந்திரியங்களைப் பொருந்தி நின்று அறிய வேண்டுகையாலும், அதுவன்றியும்,—அறிந்தவை மறத்தலானு ம்- ஒருவரறிவிக்க வறிந் தவைவிற்றையும் மறந்து விடுகையாலு ம்,—அறிவிக்க வறிதலானும் - அந்த மறந்தவை தன்னையு மீளவு மொருவ ரறிவிக்க வறிகையாலும்,—அறிந்திடுந்தன்னையுந் தா னறியாமையானும் - இந்த முறைமைகளிலே அறிந்துவருகிற த ன்னுடைய வுண்மையையும் தானறியமாட்டாதாகையாலும்,— தானேயறிந்திடு மறிவனன்றும் - இங்ஙனஞ் சொன்ன முறை மைகளால் இந்த வான்மா தானே யறியத்தக்க வறிவை யுடை யவனல்லன். ஆனால் இவனறியும்படி யேதென்னில்?—அறிவிக் கவறிவனன்றே - பரமேஸ்வர னறிவிக்க வறியுமதொழிந்து ஆ ன்மா தானாக வொன்றையு மறியமாட்டான்.

இதனுற் சொல்லியது, சிவ னறிவிக்க வான்மா வறியும தொழிந்து பல பிரகாரத்தாலும் தானாக வறிவனென்னு முறை மை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அறிந்திடுமான்மா - அறியப்பட்டுவரு மிவ்வுயிர்,—ஒன்றை யொன்றினு லறிதலானும் - ஒவ்வொருவிடயங்களை யொவ்வொரு இந்திரியத்தா லறிதலானும்,—அறிந்தவை மறத்தலானும் - அறியப்பட்டவற்றை மீளமறத்தலானும்,—அறிவிக்க வறிதலானும் - ஒருவனுணர்த்த வுணர்தலானும்,—அறிந்திடுந் தன்னையுந் தானறியாமையானும் - இவ்வாறறிகின்ற தன்னையுந்தா னறியாமையானும்,—தானேயறிந்திடு மறிவனன்றும் - முதல்வன்போலச் சுதந்திரவறிவின்றி,—அறிவிக்க அறிவனன்றே - அறிவிக்க அறியுந் தன்மையது.

இதனானே சாங்கியமதம் பரிகரித்து முதற்கூற்றை வலியுத்தவாறு மாயிற்று.

மறைஞானதேசிகர் உரை.

முதல் விருத்தத்திற் றொந்தனையாம்படியே கர்த்தாதானே கருவிமுதலிய வொன்பதானு முணர்த்து முறைமை யுணர்த்துகின்றார்.

கருவியாற் பொருளாற்காட்டாற் காலத்தாற் கருமந்தன்னா, லுருவினா லளவானூலா லொருவரா லுணர்த்தலானு, மருவனு யுண்மைதன்னி லறியாது நிற்றலானு, மொருவனே யனைத்தினாலு முணர்த்துவ னருளினாலே. (ச)

(இ - ள்.) கருவி தத்துவங்களாலும்
யால்

பொருளால்	விடயங்களாலும்
காட்டால்	சோமசூரியாக்னிப் பிரகாசங்களாலும்
காலத்தால்	செல்காலமுதலிய மூன்று காலத்தாலும்
கன்மந்தன்னால்	புண்ணியபாவமாகிய கன்மத்தாலும்
உருவினால்	தநுவாலும்
அளவால்	அளவைகளாலும்
நூலால்	சாத்திரங்களாலும்
ஒருவரால்	வேறொருவராலும்
உணர்த்தலானும்	இப்படிப் பலவிதத்தா லறிவிக்க வேண்டுகையாலும்
அருவனு யுண்மைதன்னி லறியாது நிற்றலானும்	அந்த ஆன்மா நமக்கு அரூபமே யுண்மையான வடிவென்று முறைமையை யறியாமனிற்கையாலும், கேவலாவத்தையிலே யருவமே வடிவாய் ஒன்றையு மறியா னிற்கையாலும்,
ஒருவனே யனைத்தினு முணர்த்துவனருளினாலே. உம்மை தொக்கது	தனது காருண்ணியத்தினாலே கர்த்தாவானவ னிவைக ளெல்லாவத்தையுங் கொண் டிவனுக் குணர்த்தா நிற்பன். எ-று (௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதவுமது.

ஞானேந்திரியங்களினாலும் விஷய பூத பதார்த்தங்களினாலும் § சௌராதிப் பிரகாசங்களினாலும் வசந்தாதி ருதுகாலங்களினாலும் பாருடைய ‡ நயனேங்கிதாதிக் கிரியைகளினா

லும் பிரத்ய க்ஷாநுமான ஆகமங்களினாலும் தத்தத் காரியா + பிஞ்ஞரா யிருக்கிற ஆப்தராலும் அறிவிக்கையினாலும் அநாதி சித்தமாகிய கேவலா வஸ்தையிலே அரூபியுமா யோரறிவு மற் றிருச்சையாலும் ஜக தேகநாயகனாகிய சிவனே கிருபையினா லே கீழ்ச்சொன்ன சகலஏதுக்களினாலு மான்மாக்க ளறிவைப் பிரகாசிப்பிப்பர்.

§ சௌரம்-சூரியனது ‡ நயநேங்கிதம்-கண்சாடை. + அபிஞ்ஞா - அறிந்தவர்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சீவன்போதிக்கு முறைமையைப் போதிக்கின்றார்.

கருவியால் - பிரகிருதி குணதத்துவ நீங்கலாகக் கலாதத் துவமுதல் இந்திரியமீறாகும் கரணங்களால்,—பொருளால்-பூத தன்மாத்திரைமுதலிய தத்துவத்துதித்ததாத்விகமாலை சந்தன ம் மகளிர்முதலிய போக்கியவஸ்துவினால்,—காட்டால்- சூரிய ப்பிரகாசமுதலிய வொளியால்,—காலத்தால்-நியதி துணையா கும் சூக்குமகாலதத்துவப் பிரேரண சகாய தூலகால தத்து வகாரியமாகிய செல்கால நிகழ்காலம் வருங்கால மென்கின்ற காலத்தால் —கருமந்தனால் - புண்ணியபாவ மென்கிற வதி ஷ்டத்தால்,—உருவினால்-(கருவியாலென்பது சூக்கும தேகத் தாலென்று பொருளாதலால்,) உருவினாலென்றது தூலசரீரத் தால்,—அளவால் -(முன் கருவியா லென்றது கொண்டு பொரு ள் மறைப்புப் பொருந்தாத கருவி சலக்குஞ் சிற்சத்திப் பிரத் தியட்சஞ் சித்தித்தலால்,(இவ்விடத்து அளவாலென்றது பொ ருள் மறைப்புப்பொருந்திய கருவிகலக்கு மிலிங்கஞ்சேர்ந்த சிற் சத்தியனுமானத்தால்,)—நூலால்-பொருள் மறைப்புப் பொரு

ந்துங் கருவிகலக்குஞ் சத்தஞ் சார்ந்த சிற்சத்தியாகு மாசமத்தால்,—ஒருவனால் - ஆகமத் தடங்கும் உலோகவாதத்தால்,—உணர்த்தலானும் - போதித்தலானும்,— உண்மைதன்னி லருவனு யறியாமைனிற்றலானும் - கேவலத்துத் தூல சூக்குமபர தேகங்க ளில்லாதிருக்கவுஞ் சுதந்தர வறிவனாய்த் தோற்றுவிரு த்தலானும்,(சிவன முத்திவியத்தி பண்ணுமிடத்துக் கருவியின் மறையாது பண்ணனி உணர்த்தி நிற்றலானும் என்றும் பொருள்.) ஒருவனே-ஒப்பற்ற சிவனே,—எல்லாத்தானும் - சொல்லிய கருவிமுதலியவற்றால்,—அருளினாலே - அவற்றின்மறைந் தவற்றைச் செலுத்துஞ் சிவசத்தியால்,—உணர்த்துவன் - போதிப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———०———

கருவிமுதலிய வெட்டும் ஒருசேதனப் பொருளுங் கூடிநின் றொருவிடயத்தை யுணர்த்த உயி ருணர்தலானும், அல்வழி யுணராமையானும், இவையனைத்தையுங் கொண்டுகூட்டி யறிவிப்பா னொருசேதனன் வேறு வேண்டப்படுமாகலான், இறைவனையின்றி அறிதலமையா தென்பதாம்.

கருவி உயிர்செலுத்தப்படு மான்மதத்துவம்.

பொருள் தாத்துவிகம்.

காட்டு உயிரி னறிவிச்சை செயல்களை விளக்குவனவாய கலைமுதலியன.

காலம் கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத்துங் காலதத்துவம்.

கருமம் கன்மத்தை யேறாது குறையாது நிறுத்து நியதி தத்துவம்.

உரு உடம்பு.

அளவை பிரமாணம்.

நூல் நூல்கட்குக் காரணமாய நால்வகை வாக்கு.

ஒருவிடயத்தை யறிதற்கண் இவற்று ளொன்றையின்றியு மமையாமை கண்டுகொள்க.

கருமமும் நூலும் ஆகுபெயர்.

இயற்பெயர்பொருளாகவைத் துரைப்பாருமுளர்.

தன்னுண்மை உண்மையென்த் தலைக்குறை.

உண்மையிலொன்று மிலனாதல்பற்றி அருவனென்றார்.

இவைமூன்று செய்யுளானும், முறையே கன்மமு முயிரு மாயேயமு மென்னு மிவையே ஆண்டைக் கவையுமென்னு மாருகதர் மீமாஞ்சகர் சாங்கியர் முதலியோரை மறுத்துப் பாரி சேடவளவையான் அறிதருஞ் சிவனேயெல்லா மறிந் தறிவித் துநிற்றல் வலியுறுத்தப்பட்டது.

திரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவன், ஆன்மாவுக்கு அறிவிக்குமிடத்துப் பல பிரகாரத்தா லு மறிவித்தா லறியுமதொழிந்துத் தானாக வொன்றையு மறியா னென்று மேலு மருளிச் செய்கிறார்.

கருவியால் - இந்திரியங்களாலும்,—அந்தக்கரணங்களாலும்,—பொருளால் - விஷயங்களாலும்,—காட்டால்-இவனுக்குக் காட்டாய் நிற்கிற சுத்ததத்துவங்களாலும்,—காலத்தால் - வித்தியா தத்துவங்களாலும்,— கன்மந்தன்னால் - புண்ணியபாவங்களாலும்,—உருவினால்— பூதங்களாலும்.—அளவால் -அளவைப் பிரமாணங்களாலும்,— நூலால் -சாத்திரங்களாலும்,—

ஒருவரால் - அவன் அவள் அவராலும்,—உணர்த்தலானும்-முன் சொல்லப்பட்ட இவையிற்றைக் கொண்டு அறிவிக்கவேண்டுகை யாலும்,—அருவனு யுண்மைதன்னி லறியாது நிற்றலானும்-தன் னுடைய வுண்மையான கேவலத்தை விசாரித்துப் பார்க்கில் அ ரூபியுமாய்த் தானாகவொன்றையு மறியமாட்டாமல் நிற்கையா லும்,—ஒருவனே யெல்லாத்தாலு முணர்த்துவ னருளினாலே- பரமேஸ்வரனே யிவையெல்லாத்தையும் ஆன்மாவுக்குக் கொடு த்துத் தன்னுடைய காருண்ணியத்தினாலே யறிவியா நிற்பன். ஆகையால் ஆன்மா தானாக வறியான்.

இதனாற் சொல்லியது, ஆன்மாவுக்குக் காட்டாய் நிற்கிற சுத்ததத்துவங்கள் முதலாயுள்ள கருவிகரணங்களாலும் புண் ணிய பாவங்களாலும் அளவைப் பிரமாணங்களாலும் சாத்திர ங்களாலும் அவன் அவள் அவராலும் ஆக இவையிற்றைக் கொ ண்டு அறிவிக்க வேண்டுகையாலும், தனக் குண்மையான கேவ லத்தில் தானாக வொன்றையும் அறியாதிருக்கையாலும், பரமே ஸ்வரன் தன்னுடைய காருண்ணியத்தினாலே இவை யெல்லாத் தாலும் அறிவியாநிற்பன்; ஆன்மா பாசபந்தியாகையால் என் னு முறைமையு மறிவித்தது.

'அறிந்திடுங் கருவியால்' என்ற திருவிருத்த மிரண்டுக்கும் முன்னற் றிருவிருத்தத்துக்கு இட்டப் பிரமாணம் என்னுமது ங் கண்டுகொள்க.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

கருவியால் - உயிர்செலுத்தப்படும் ஆன்ம தத்துவத்தாலு ம்,—பொருளால் - தாத்துவிகமாகிய பொருளாலும்,— காட் டால்-உயிரி னறிவிச்சை செயல்களை விளக்குவனவாய் கலைமுத

லியன வற்ருலும்,—காலத்தால்-கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத்தும் காலதத்துவத்தாலும்,—கருமந்தன்னல் - கன்மத்தை யேருது குறையாது நிறுத்தும் நியதிதத்துவத்தாலும்,—உருவினுல்-உடம்பாலும்,—அளவால் - பிரமாணங்களினுலும்,—நூலால்-நூல்கட்குக் காரணமாகிய நால்வகை வாக்குகளாலும்,—ஒருவராலுணர்த்த லானும்-ஒருசேதனப் பொருளா லொருவிடயத்தை யுணர்த்த வுயிருணர் தலானும்,—உண்மைதன்னி லருவஞயறியாது நிற்றலானும் - அவ்வுயிர்த் தன்னுண்மையி லருவனு யுணராமையானும்,— எல்லாத்தாலு மருளினுலே யுணர்த்துவனொருவனே - இவை யனைத்தையும் கொண்டு கூட்டி யருளாலறிவிப்பானொரு சேதனன் வேறு வேண்டப்படு மாகலா னிறைவனையின்றி யறிதலமையாதென்பதாம்.

இவை மூன்று செய்யு ளானும்,முறையே கன்ம முயிரு மாயையமென்னுமிவையே யாண்டைக் கமையுமென்னு மாருகதர் மீமாஞ்சகர் சாங்கியர் முதலியோரை மறுத்துப் பாரிசேட வளவையா னறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறிவித்து நிற்றல் வலியுறுத்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலதனை வற்புறுத்தி யுணர்த்துகின்ருர்.

கருவியும் பொருளுங்காட்டுங் காலமுங் கன்மந்
தானு, முருவமு மளவுநூலு மொருவரு முணர்த்தலின்றி, யருவனு யகிலமெல்லா மறிந்தவை யாக்கிவேரு,
யொருவனே யுயிர்கட்கெல்லா முயிருமா யுணர்த்தி
நிற்பன். (௫)

(இ-ள்.) கருவியும்பொருளுங் காட்டுங் காலமுங் கன்மந்தானு முருவமு மளவு நூலுமொருவருமுணர்த்தலின்றி

முற்கூறிய வொன்பதானு மொருவராலு முணர்த்த வுணராமற் சர்வத்தையு மறிந்தவனான படியாலே பரமகர்த்தாவாய் நின்றும், அப்பொழுது ரூபியாயோ வரூபியாயோ வென்னில்?

அருவனு யிகல் மெல்லா மறிந்து

அந்தக் கர்த்தாவான ரூபசொரூபமாய்ப் பிரபஞ்சமெல்லாத்தையு முள்ளபடியறிந்து.

அவை யாக்கி வேறாய்

அவையிற்றை யுண்டாக்கித் திதியுஞ்செய் தவையிற்றுக்குத் தான் வேறுமாய், அது வெப்பொழுதும் வேறுமா யிருப்பனோ வென்னில்?

ஒருவனே யுயிர்கட்கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

இப்படிச் சிவனெல்லாத்தையு மறிந் தான்மாக்களுக்குப் பிரபஞ்சத்துக்கு வேறாயிருந்தானே யாகிலும் வியாத்தியினாலே யந்தக்கர்த்தா தானே யுயிருக்குயிராய்ச் சர்வான்மாக்களுக்கு மறிவைக் கொடுத் தறிவியா நிற்பன் எ-று.

இந்தவிரண்டுக்கு நிசுவாச காரிகை எனவறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

சிவன்று னெவ்வா றறிவனென்னில்? மேற் சிவன் ஸ்வதந்த்ர ஞானப் பிரகாச ஸ்வரூபராய்க் கேகேந்திரியாதி ரஹிதராகவே யெல்லாத்தையு மறிந் தெல்லாப் பிரபஞ்சத்தையு முண்டா

க்கி யெல்லாவுயிர்கட்கு முயிருமா யறிவித்து நிற்ப னென்பது கூறுகின்றது.

கீழ்ச் சொல்லிப்போந்த தேகேந்திரியாதி நிரபேக்ஷனாகவே சகலத்தையு மேககாலத்திலே * யதாவத்தாக வறிந்து தேக † ரஹிதனாகநின்றே சகல ஜகத்தையு முண்டாக்கிய தற் கர்த்தாவுமாய், சகலான்மாக்க ளிடத்திலு மந்தர்யாமியாக நின்று பரிபாகாநுகுணமாக வறிவுகளைப் பிரகாசிப்பிப்ப னென்றிதன்பொருள்.

* யதாவத் - சரியாய், † ரஹிதன் - இல்லாதவன்.

ததுக்தம் - ம்ருகேந்த்ரே — நித்யோதிதா நவச்சி ந்நவிஹைதே ஸர்வஜ்ஞத்வயச । ஜ்ஞேயா யிஶேஷ கா யத்ராதுள நதஸ்யை ஸுவாதிகம் வபு ॥ தேந ஸக்திர்வ பாமேவசக்தா பவதீஶஸ்ய ஜ்ஞ்யதே। நதஸ்ய நிவிஷ ஷஸஞ்ஜ்ஞாநம் தீஶைவ விஷய ஸ்ப்ருஹ இதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவன் கலாதத்துவாதி கருவி விளக்குச் சலப்பின்றி நின்மல சிற்சத்தி மாத்திரத்தாற் சுதந்திர வறிவனாயிருப்ப னென்பது தோற்றுவிக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இறைவனுக்குக் கருவிமுதலியன கூடி அறிவு நிகழ வேண்டாமையின் உயிர்கட்குப்போலத் தனக்குமே லொருவ னவாவ

ப்படும் போலுமென்னு மநவத்தைக் கிடமின்றித் தானே தமிய ளுயறிந்து மாக்கியு முணர்த்தியு நிற்குமென்பதாம்.

உலகெலா மறிக்தென்றது கேவலத்திற் சூக்குமவைந்தொழில் செய்தன்மேற்று.

ஆக்கியெனவே இனம்பற்றி ஏனைநான்கு தொழில்களு முடன்கொள்ளப்படும்.

அவை தூலவைந்தொழி லென்பது.

உணர்த்தி நிற்பனென்றது முதலவத்தை யடைதருமிடத்தே செயற்பாலனவாய் ஈண்டெடுத்துக் கொண்ட வதிசூக்குமவைந்தொழின் மேற்று.

அறிதலு மாக்குதலுமாகிய இருதிறத் தைந்தொழிலும் முதல்வன் செயலாதன்மேற் கூறிப்போந்தமையின் அவைபோலிவையும் முதல்வன் றொழிலேயா மென்பார், அறிந் தாக்கியுணர்த்திநிற்பனென உடன் கூறினார்.

இதனானே மேற்கூறியதுபற்றி அநவத்தை யின்றுமாறு கூறப்பட்டது.

அற்றாயினும், கருவியறிதலால் வரும் பயன் உயிர்க்காயவாறுபோல உயிரறிதலால் வரும் பயனும் அதனோ டுவமிக்கப்படுமிறைவனுக் காவான் செல்லும். செல்லவே யிறைவனும் பந்தமுறுவ னெனப்பட்டு வழுவாமாதலின், இறைவன் உயிர்போலறிவிப்ப னென்றல் இழுக்காம் போலு மென்னு மவ்வாதிகளை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருளை வருமாறு.

இப்படி யறிவிக்கிறதும் அறிவிக்க வறிகிறதும் எல்லா மந்தச் சிவன் தானேயாயிருக்க, ஓரான்மா வுண்டென்றதென நம்பு என்ற பரிணமவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

கருவியும் பொருளுங் காட்டுங் காலமுங் கன்மந்தானு முரு வமு மளவுநூலு மொருவரு முணர்த்தலின்றி - இந்திரியங்களா லும் அந்தக் கரணங்களாலும் விஷயங்களாலும் சிவதத்துவங் களாலும் வித்தியா தத்துவங்களாலும் புண்ணிய பாவங்களா லும் பூதங்களாலும் அளவைப் பிரமாணங்களாலும் சாத்திர ங்களாலும் அவன் அவள் அவராலும் அறிவிக்க வேண்டுவதின் றி,—அருவனு யகிலமெல்லா மறிந்து - அரூபியாய்நின்று பிரப ஞ்சத்தை யெல்லாம் தன்னுடைய ஞானத்தினாலே யறிந்து,— அவையாக்கி - அந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் தன்னுடைய கிரியாசத்தியாலே யுண்டாக்கி,—வேறுப் - அந்தப் பிரபஞ்சத் திற் றோயாமல் விஸ்வாதீதனாய்,— ஒருவனே யுயிர்கட்கெல்லா முயிருமா யுணராநிற்பன் - அந்தப் பரமேஸ்வரனே சர்வான் மாக்களுக்குப் பிராணனுமாய் அவரவர் கன்மத்துக் கேற்றகப் பிரபஞ்ச விஷயத்தை யறிவித்துநிற்பன். ஆகையால் அறிவிக் கிற முதலும் அறிவிக்கு முதலும் இரண்டு மான்மா வல்ல அறிவி க்க அறிகிற முதல் ஆன்மாவென் றறிவாயாக.

இதற்குப் பிரமாணஞ் சிவஞானபோதம்-ரு-சூ,௩-வெய்யவெய் யோ னொளியி லொடுங்கி விளங்காது, வெய்யோனே யாகாத மீ ன்போல-வெய்யவனிற்,கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம் புலனைக், கண்டிடனுப் மன்னுகலைக் காண்." என்னுமதுங் கண் டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவதத்துவ முதலாயுள்ள கருவிக ரணங்களாலும் புண்ணியபாவங்களாலும் அளவைப் பிரமாண ங்களாலும் சாத்திரங்களாலும் அவன் அவள் அவராலும் ஆக இவையிற்றைக்கொண் டறிய வேண்டுகையின்றி அசேகியாய் நி ன்று பிரபஞ்சத்தை யெல்லா மறிந்து உண்டாக்கியும் அதிற்றோ ய்வற நிற்பனென்றும், சர்வான்மாக்களுக்கும் பிராணனுமாய்

அவரவர் கன்மத்துக்கிடாகப் பிரபஞ்ச விஷயத்தை யறிவித்து நிற்பன் பரமேஸ்வரன் என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

ஒருவனே - இறைவனே,—கருவியும் பொருளும் காட்டும் காலமும் கருமந்தானு முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்தலின்றி யருவனாய் வேறாய் - தனக்குக் கருவிமுதலியனகூடி யறிவு நிகழவேண்டாமையி னுயிர்கட்குப் போலத் தனக்குமே லொருவன் வரப்படும்போலு மென்னு மனவத்தைக் கிடமின்றித் தானே தமியனாய்,— அகில மெல்லாமறிந்து - கேவலத்திற் சூக்கும வைந்தொழில் செய்தும்,—அவையாக்கி - தூலவைந்தொழில் செய்தும்,— உயிர்கட் செல்லாம் - ஆன்மாக்கட் செல்லாம்,—உயிருமா யுணர்த்தி நிற்பன்—அதிசூக்கும ஐந்தொழில் செய்துநிற்பன்.

இதனானே மேற்கூறியதுபற்றி யநவத்தை யின்றுமாறு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

——o——

இப்படி யுமதுசிவ னெல்லாத்தையு மறிந் தான்மாச்சனுக் கறிவிப்பனானா லவனுஞ் சுகதுக்கங்களை யனுபவிப்ப னெனின்? அவன்சுகதுக்கங்களை யறிந் தனுபவிப்பதில்லை "காட்டுவார்க்குண் டோகளிப் பிந்திரசாலத்-தாட்டுவார்க்குந் தோற்கூத்தாம்"என்பதனா லான்மாக்களுக்குச் சுகதுக்கங்களையு மறியு மறிவையுங் கொடுத்துத் தான்விகாரியாய் நின்று சுகாதிகளையு மனுபவி

யாதிருக்கையா லவனது சந்நிதிமாத்திரத்தா லான்மாக்க ளறிவு சீவியாதென் றுணர்த்துகின்றார்.

இறைவன்றன் சன்னிதிக்க ணுலகின்றன் சேட்டையென்னு, மறைகளு மறந்தாய்மாயை மருவிடான் சிவனவன்க, ணுரைதரா தசேதனத்தா லுருவுடையு யிர்கட்கெல்லா, நிறைபரன் சன்னிதிக்க ணீடுணர் வுதிக்குமன்றே. (சு)

(இ-ள்.) இறைவன்றன் சன்னிதிக்க ணுலகின்றன் சேட்டை யென்னு மறைகளு மறந்தாய் — சிவனது சன்னிதி மாத்திரத்திலே பிரபஞ்சஞ் சீவித்தொடுங்குமென்று வேதங்களிற் சொல்லுகிற முறைமையினையு மறந்தாயோ!

மாயை மருவிடான் சிவன் — சிவன் சர்வத்தையு மறிந்தவ னுகையாலே யிம்மாயாகாரிய மாகிய தத்துவங்களைக் கொண் டறியான்.

அவன்க ணுரைதரா தசேதனத்தால் — ஆதித்தன்முன் னந்தகார முண்டாகாத வாறுபோலச் சித்தாயிருக்கிற சிவனிடத்திலே யசித்தாகிய வத்துக்கள் தோன்றிச் சீவியாது.

உருவுடை யுயிர்கட்கெல்லா நிறைபரன் சன்னிதிக்க ணீடுணர் வுதிக்கு மன்றே — சர்வவியாபியா யிருக்கிற சிவனது சன்னிதிமாத்திரத்திலே தத்துவங்கள் காரியப்படும்பொழு திவ்வான்மாக்கட் கறிவுதோன்றுதலாற் கர்த்தாவினது சன்னிதிமாத்திரத்திலே பிரபஞ்சஞ் சீவிக்கும் எ-று.

இதற்குச் சித்தாந்திர மறிக. (சு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

இவ்வாருன்மாக்க ளிடத்தில் அந்தர்யாமியாய் நின்று ‡ நாநாவிதமாகப் பிரேரிக்கையால் சிவன் விகாரி யென்னில்? விகாரமானது மாயாசம்பந்தம். சிவன் அநாதி நின்மலனாகை யால் மாயை பொருந்ாது. ஆன்மாக்களுடைய அறிவு பிரகாசிப்பது சிவன் சந்நிமாத்ரத்திலே யென்பது மேற் கூறுகின்றது.

‡ நாநாவிதம் - பலவிதம்.

மீமாம்சகன் ஈச்வர னான்மாக்களை பிரேரிக்கையால் விகாரியென்னில்? கர்த்தாவின் சன்னதியிலே பிரபஞ்ச சேஷ்டையுண்டாமென்னும் வேதவாக்கியத்தை வேதவாதியாயிருக்கிற நீயு மிவ்விடத்து மறந்தாய்! விகாரமாவது மாயாசம்பந்த மாகை யால் சிவன்மாயையைப் பொருந்தான். மாயைசடமாகையால் பிரகாசத்தி னிடத்திலந்தகார நில்லாததுபோல நித்திய வியாபக சித்ரூபியான சிவனிடத்தில் மாயைபொருந்தா. ஆகை யால் சிவன் நிர்விகாரியே! ஆகில் ஆன்மாக்க ளறிவைப் பிரகாசிப்பிப்ப தெவ்வா றென்னில்? தேகேந்திரியாதிகளை யுடைய ஆன்மாக்களுக் கெல்லா மல கன்ம பரிபாகானுகுணமாக வறிவானது + அயஸ்காந்த சன்னிதியிலே ‡ அயசுக்கு சேஷ்டை யுண்டானதுபோலச் சிவன் சன்னதி மாத்திரத்திலே பிரகாசிக்குமென் றிதன்பொருள்.

+ அயக்காந்தம்-ஊசிக்காந்தம், ‡ அயம்-இரும்பு.

ததுக்தம் ஶிவஜ்ஞாநபோதே — ததாகாஶே ஶ்ரீ வஹ்நிஸ்தம் காஞ்சநம் யாவத் ஸந்நிதேஸ் | இதி.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவன் சித்தசித்துக்களைச் சேட்டித்தாலும் மாயை முத லிய சடபதார்த்தத்தோடு விகாரதோஷமு மசேதனதோஷ மும் வருமாதலாற் சம்யோக சம்பந்தியாயிரான். மாயைமுத லிய வஸ்துவும் அவனிடத் தசேதன தோஷம் வருமாதலாற் ச மவாய சம்பந்தியாயிரா. விகாரதோஷமும் ஏகான்மப் பிரச ங்கமு முறைமையில் வருமாதலால் ஆன்மாக்களிடத்து மவ்வி ருவகைச் சம்பந்தியாயிரான். காந்த சன்னிதி மாத்திரத்தா ல் இரும்பீர்ப்பதுபோற் சித் தசித்துகளைத் தொடாது. சங்கற் பசத்திரூப விஷயீகரித்தலாகிய தனது சன்னதி மாத்திரத்தா ற் சித்தசித்துக்களிற் காரியங்காணு மென்று செப்புகின்ருர்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இறைவனு லன்றி யுயிர் சேட்டியாமைக்கு மேற் காட்டிய பாரிசேட வளவையேயன்றி ஆகமவளவையு மினிது விளங்கக் கிடத்தலின் அதனையு மறியாது மறித்து மறித்துப் பிணங்குகின் றயேதாய்! எல்லாவற்றினு நிறைந்து நின்ற விறைவன் சன்னதி யி னிகழு மவ்வறிவின் பயன், வினைக்கிடாய் வரும் வடிவுடைய உயிர்கட்கே யுண்டா மதுவன்றி இறைவனுக்காதல் செல்லாது; சடமாகிய வுலகம் அவனெதிர் முனைத்துநிற்ற லாற்ருமையா லென்பதாம்.

மறந்தாவென்பது விளியுருபேற்ற பெயர்.

மாயையும் உணர்வும் ஆகுபெயர்.

உயிர்கட்கு உதிக்குமென வினையும்.

பிரிநிலை யேகாரம் விரித்துரைக்க.

ஐம்பொறிபோலன்றி உணர்தற்பய னுயிர்க்கேயாதற்கு ஏதுக்கூறுவார், உருவுடை யுயிரென விசேடித்தார்.

சந்நிதிக்க ணுணர் வுதிக்குமென்றது மதன்பொருட்டு.

"வினையாற் கண்டறிந்து நிற்குங்கா - ணெண்ணுஞ் சிவனசத்தை யின்று" என்றார் முதனூலாசிரியரும்.

இதனானே அறிவித்தல்பற்றி இறைவனுக்குத் தொடக்கின்மை கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவனுடைய சந்நிதியிலே பிரபஞ்சங் காரியப்படுமென்று வேதஞ் சொல்லுகச் செய்தே நீரொரு வான்மா வுண்டென்று சொன்னதென்ன நம்புதல் என்ற பரிணாமவாதியை நோக்கி மேலு மருளிச் செய்கிறார்.

இறைவன்றன் சன்னதிக்கண் ணுலகின்றன் சேட்டையென்னு மறைகளு மறந்தாய் - பரமேஸ்வரனுடைய சன்னதியிலே அவனையொழிந் துள்ள பிரபஞ்சங் காரியப்பட்டு வருமென்று வேதஞ்சொல்லாநின்றது, அந்தவார்த்தை யறிந்தாயில்லை. விஸ்வருபியா யிருக்கிற சிவன் விஸ்வத்தைவிட்டு நீங்கித் தனித்தொரு முதலாய்நிற்பனோ வென்னில்? அவனுடையகலப்பினாலே, விஸ்வமாய் நின்றதொழிந்து அவன் விஸ்வமாகான். அதெங்ஙனே யென்னில்?—மாயைமருவிடான் சிவன் - நின்மலனாயிருக்கிற பரமேஸ்வரன் மாயாசம்பந்தமாயுள்ள பசு முதலைப்போல இந்த மாயாகாரியமாயுள்ள பிரபஞ்சத்திற் படான். சிவனல்லோ பிரபஞ்சத்திற் படான், இந்தப் பிரபஞ்சந்தான் சிவனை

க்கூடி நிற்குமென்று நீ சொல்லில்?—அவன்கண்ணுறை அசேதனத்தால் - ஆதித்தன் சன்னதியில் அந்தகாரமில்லாதாற்போலச் சத்தான சிவனுடைய விடயத்தில் அசத்தான மாயை பொருந்தி நின்று சீவியாது, ஆகையால் இவையிரண்டுந் தன்னிற்கூடாது. இவைகூடிக் காரியப்படுகிற முறைமை யெங்ஙனே யென்னில்?—உருவுடையுயிர்கட்கெல்லா நிறைபரன் சன்னதிக்கணின்றுணர்வுதிக்குமன்றே - தேகத்தையுடைய வான்மாக்களுக்கெல்லாம் அநேகியாய்ப் பூரணனாயிருக்கிற பரமேசுவரனருளாலே அநாதியே ஆன்மாக்களுக்கு நிலைபெற்றுள்ள கன்மத்துக்கீடாகப் பிரபஞ்சவிஷயங்கள் தோன்றிக் காரியப்படாநிற்கும்.

இதற்குப் பிரமாணம், சிவஞானபோதம். ரு-சூ, உ-வெ, "மன்னுசிவன் சன்னதியில் மற்றுலகஞ் சேட்டித்த, தென்னு மறையினியல்மறந்தாய்—சொன்னசிவன், கண்ணுவுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா, ணெண்ணான் சிவனசத்தை யின்று." என்றும், சங்கற்ப நிராகரணம் பரிணாமவாதி மறுப்பு "தன்போலறிஞருந் தலைவருமிலரால்-மின்போ னிலைமையை வேண்டலும் பழுதே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவனுடைய சன்னதியிலே பிரபஞ்சங் காரியப்படுமென்று வேதஞ் சொல்லுகிற முறைமையையறிந்தாயில்லை யென்றும், சிவனுக்கு அசேதனமாயுள்ள மாயாசம்பந்த மில்லையென்றும், சர்வான்மாக்களுக்கும் சிவனுடைய சன்னதியிலே பிரபஞ்ச விடயங்கள் தோன்றிக் காரியப்படுமென்றும், பரிணாமவாதியை நோக்கி மறுத்தருளிச்செய்த முறைமை அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இறைவன்றன் சன்னதிக்க ணுலகின்றன் சேட்டையென்னு மறைகளு மறந்தாய் - இறைவனுலன்றி யுயிர் சேட்டியாமைக்கு மேற்காட்டிய பாரிசேட வளவையேயன்றி யாகம வளவையு மினிது விளங்கிக் கிடத்தலின் அதனையு மறியாது மறித்து மறித்தும் பிணங்குகின்ற பேதாய்!—எல்லா நிறைபரன் சந்நதிக்கண் - எல்லாவற்றினு நிறைந்து நின்ற இறைவன் சன்னிதியின்கண்,—நீநினைவர் வசேதனத்தா லுருவுடையுயிர்கட் குதிக்குமன்றே - நிசமூரவ்வறிவின் பயன் வினைக்கீடாய் வரும் வடிவுடைய வுயிர்கட்கே யுண்டாம் —சிவனவன்க ணுரைதராது - அதுவன்றி யிறைவனுக்காதல் செல்லாது,— மாயை மருவிடான் - சடமாகிய வுலகம் அவனெதிர் முகத்து நிற்றலாற்றுமையா லென்பதாம்.

இதனானே யறிவித்தல்பற்றி யிறைவனுக்குத் தொடக்கின்மை கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

சிவனிப்படித் திருமேனிகொண்டு பஞ்சகிருத்தியங்
களைத் தனது சன்னிதிமாத்திரத்திலே நடத்து
முறைமை யுணர்த்துகின்றார்.

உலகமே யுருவமாக யோனிகளுறுப்பதாக, யி
லகுபேரிச்சாஞானக் கிரியையுட் கரணமாக, வலகிலா
வுயிர்கட்கெல்லா மிருபயனாக்கியைந்து, நலமிகு தொ
ழில்களோடு நாடக நடிப்பனாதன். (எ)

(இ-ள்.) உலகமே யுருவமாக	இருநூற்றிருபத்துநாலு புவனமும் திருமேனியாக
யோனிகளுறுப்பதாக	எழுவகை யோனியிற் றோற்றிய வெல்லாவுயிர்களு மவனுக் கங்கமாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக	மிகுந்த பிரகாசத்தினையுடைய விச்சாஞானக் கிரியைகளவனுக் குட்கரணமான சைதன்னியமாக.
அலகிலாவுயிர் கட்கெல்லா மிருபயனுக்கி	தானொருவனுயிருந் தெண்ணிறந்த வான்மாக்களிடத்திலும் வியாபித்துநின் றவர்களுடைய வறிவுக் கறிவாய்நின் றதனு லவர்களுக் கிருபயனையு மார்ச்சிக்கப்பண்ணி
ஐந்து நலமிகு தொழில்களோ டாடகநடிப்பனுதன்	சிவன் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களை நடத்துமதே மிகுந்த தொழிலாக வனவரதமும் திருநடத்தைச் செய்யா நிற்பன். எ-று. (எ)

இதற்குச் சித்ததந்திரத்துங் காஞ்சபுராணத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

சிவனெவ்வாறுநின்று ஆன்மாக்களுக் கறிவைப் பிரகாசிப்பனென்ன? விஸ்வரூபியாகநின் றுணர்த்துவனென்னு முறைமை கூறுகின்றது.

புவனங்க ளிருநூற்றிருபத்துநாலும் ஸ்தூலரூபமாகவும் எண்பத்து நான்குநூறாயிரபேத யோனிகளு மவயவங்களாகவும் மஹத்தாகப் பிரகாசிக்கு மிச்சாஞானக் கிரியைகளந்தக்கரணங்களாகவுங்கொண் டெண்ணிறந்த வான்மாக்களுக்கு விஷ

யஞானத்தைப் பிரகாசிப்பித்து நலம்பெருகும் சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கு பஞ்சமூர்த்திகளை யதிஷ்டித்து நடனம்பண்ணுவர் ஜகதேகநாதனான சிவனென்றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சரீரிகட்கே கர்த்திருத்துவங் காணப்படுதலாற் சரீரமில்லாத பரசிவனாற் பிரபஞ்சங் காரியப்படு முறைமை யெப்படியென்ன? ஆன்மாவினது சங்கற்ப மாத்திர சன்னிதானத்தாற் றனது சரீரத்தில் நடத்தல் இருத்தல்முதலிய காரியங் காணப்படுமதுபோலச் சிவனது சங்கற்பமாத்திர சன்னிதானத்தாற் றனது சரீரமாக வுபசரிக்கப்பட்ட பிரபஞ்சத்திற் சிருட்டி முதலிய காரியங்கள் காணப்படும் என்றும், பின்னந்தச் சிருட்டி முதலிய கிருத்தியஞ் சிவனிடத் தசைதலில்லாமற் பிரபஞ்சத்திலசைதலாய்த் தோற்றுமதே நடனமென்றுஞ் சொல்லுகின்றார்.

உலகமே யுருவமாக - தாத்துவிக சூக்குமதேகதத்துவ புவன பௌவன தேகச்சிறப்பு பொது பொதுச்சிறப்புப் பிரபஞ்சமே உபசாரகற்பனை காட்டிய தூலசரீரமாக,

அல்லது அந்தப் பிரபஞ்சத்திற் பரநாதப் பிரதேசத்திருக்கும் இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை, யாகித் திவ்விய லிங்கத்திருக்கும் நாதாந்த சூக்குமாதி சத்திகலா கர்ப்ப வபரநாத பஞ்சகலா புஞ்சமேதா னுபசார கற்பனை காட்டிய தூல சரீரமாக,

அல்லது அந்த விருசரீரோபாதியுற்ற ஈசானி பூரணி ஆர்த்தி வாமை மூர்த்தியென்கின்ற அஷ்டத்திரிம்சத் கலாபேத

பஞ்ச சத்திகலையேதான் உபசாரகற்பனை காட்டிய தூல சரீரமாக,—

போனிக ளுறுப்பதாக - தேவ நரமிருக பசுபட்சி முதலியவற்றிற் றூலசரீரங்க ளுபசார கற்பனை காட்டிய புறவுறுப்பவயவங்களாக,

அல்லது அவ்வுரூப்புப் பாதியுற்ற அனந்த சத்திகளேதா னுபசார கற்பனை காட்டிய புறவுறுப் பவயவங்களாக,

வியாபினி, வியோமரூபை, அனந்தை, அநாதை அநாசிருதை ஆகிய திவ்வியலிங்கத் தச்சத்திருக்கும் பரநாத பஞ்சகலா புஞ்ச முபசார கற்பனை காட்டிய புறக் கரணங்களாக,

அல்லது அந்த விந்திரிப வுபாதியுற்ற ஆரணி சனனி ரோதயித்திரி என்கின்ற திரி சத்திகலைகளே தான் உபசார கற்பனை காட்டிய புறக்கரணங்களாக,—

இலகு பேரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக - திவ்விய லிங்கத் தச்சந்தாக்கி யிருக்குஞ் சமனுகலை உபசார கற்பனை காட்டிய அந்தக் கரணமாக,

அல்லது அந்தச் சமனுகலை யுபாதியுற்ற ஆதி சத்தி முன் பின்னுகப் பிரகாசித்துப் பெரிதாகும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தித் திரிகலா புஞ்சந்தான் உபசார கற்பனை காட்டிய அந்தக்கரணமாக,

புறக்கரண முட்கரண மிரண்டுஞ் சூக்கும தேக மாதலால், உன்மனை யுபசார கற்பனை காட்டிய பரதேகமாக,

அல்லது அந்த உன்மனை யுபாதியுற்ற பராசத்தி தான் உபசார கற்பனை காட்டிய பரதேகமாக,

இப்படி விசுவசரீர, வயிந்தவசரீர, சாத்தசரீரத் திரிசரீரத்தினுல்,—

அலகிலா வுயிர்கட் கெல்லா மிருபயனுக - எண்ணிறந்த

ஆன்மாக்களுக் கெல்லாம் பக்குவா பக்குவம் பார்த்துப் புத்தி முத்திக ளுண்டாகும் பொருட்டு,—

ஐந்து நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பனுதன் - சிவன் பஞ்ச கிருத்தியமாகிய நிருத்தம் பண்ணுவன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

புருடன் உடம்பு முதலியனவற்றைக் கொண்டுநின் றுணருமாறு போல, இறைவன் உலக முதலியனவற்றைக் கைக்கொண்டுநின் றுணர்த்துவ னென்பதாம்.

எனவே, தன் உடல்பொறிகரணங்களைச் செலுத்துதற்கண் உயிர்க்கு விகாரமில்லாமைபோல இறைவனுக் கதுபற்றி விகாரமில்லை யென்றவாறாயிற்று.

புலன் ஆகுபெயர்.

இறைவன் ஐந்தொழில் செய்தல், உயிர்கள்போலக் கரணத்தானன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்வதென்பது தோன்ற நாடகநடிப்ப னென்றார்.

ஈண்டைந்தொழி லென்றது அறிவித்தற்கட்படு மதிருக்கும மைந்தொழிலை.

இதனானே அதுபற்றி விகாரமின்மை கூறப்பட்டது.

அற்றேல் இவை நலமிகுதொழி லாமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பிரபஞ்சமெல்லாஞ் சிவசொரூபமாய்ச் சிவசத்திகளினுடைய கிருத்தியமாயிருக்க ஓரான்மா வுண்டென்று எங்கே காணப்

பட்டதென்று பரிணாமவாதி சொல்ல, இந்தக் கிருத்தியங்களெல்லாம் ஆன்மாக்களை யிரக்ஷிக்கைப்பொருட் டாகையால் ஆன்மா வுண்டென்று அருளிச்செய்கிறார்.

உலகமேயுருவமாக - சருவலோகங்களுந் தனக்குத் திருமேனியாக,—யோனிகளுறுப்பதாக - எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிகளும் அவையவங்களாகச் சொல்லப்பட்ட புறக்கரணமாக,—இலகுபேரிச்சாஞானக் கிரியையுட் கரணமாக - விட்டுவிளங்காநின்ற இச்சாசத்தியும் ஞானசத்தியும் கிரியாசத்தியும் இவை யுட்கருவிகளாக,—அலகிலா வுயிர்ப்புலன்கட் கறிவினையாக்கி - எண்ணிறந்த வான்மாக்களுடைய வறிவுகளுக்கு அறிவைக்கொடுத்து,—ஐந்து நலமிகுதொழில்களோடு நாடக நடிப்பனுதன் - அனுக்கிரகமே மிகுத்திருக்கப்படாநின்ற பஞ்சகிருத்தியங்களுடனே திருக்கூத்தைச் செய்யாநிற்பன் பரமேஸ்வரன்.

இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், பரிணாமவாதி மறுப்பு, "அத்தனியற்று மித்தொழில்பிறர்க்கோ - தனக்கோ விரிணு வெனக்கேதியம்புக - விளைவினிற்பித்தர் மாணுறுதொழில்போற் -றலைமையுமறிவு மிலகெனவிகழ்வர் -தனக்கெனிலஃது மிசைப்பதொன்றன்றே-தன்போலறிஞருந் தலைவருமிலரான்-மின்போல்நிலைபை வேண்டலும்பழுதே." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பரமேஸ்வரன் பிரபஞ்சமெல்லாந் தனக்குத் திருமேனியாகவும் எல்லா யோனிகளும் தனக்கவையவங்களாகவும் தனது சத்திகளுட்கரணமாவும் நின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறது ஆன்மாக்களை யிரக்ஷிக்கைப் பொருட்டாகையால் ஆன்மா வில்லையென்ற பரிணாமவாதியை நோக்கி, ஆன்மா வுண்டென்னு முறைமையுமறிவித்தது.

இதற்குப் பிரமாணம் முன்னற் றிருவிருத்தத்துக் கிட்ட பிரமாணத்திலே கண்டுகொள்க

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(புருடனுடம்பு முதலியவற்றைக் கொண்டுநின் றுணருமா றுபோல).—நாதன் - முதல்வனும்,— உலகமேயுருவமாக-தனக்கு இருநூற் றிருபத்துநாலு புவனமுந் திருமேனியாகவும்,— யோனிகளுறுப்பதாக - எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களும் அவயவங்களாகவும்,— இலகுபே ரிச்சாஞானக் கிரியையுட் கரணமாக - மிகுந்த பிரகாசத்தை யுடைய விச்சா ஞானக் கிரியைகளுட்கரணமாகவும்,—அலகிலாவுயிர் புலன்கட் கறிவினையாக்கி-எண்ணிறந்த வுயிர்களிடத் தறிவுக் கறிவாய் நின்றுணர்த்துதலைக் கைக்கொண்டு,—நலமிகு தொழில்க ளோந் தொடும் - நன்மை மிகுந்த வைந்தொழில்களையுமே,— நாடக நடிப்பன் - நாடகமாகநடிப்பன்.

இதனானே யதுபற்றி விகாரமின்மை கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படித் திருநடனத்தைச் செய்யுஞ்சிவ னான்மாக்கட் கிந்திரிய துவாரத்தாலே யறிவிப்பிக்கு முறைமை யுணர்த்துகின்றார்.

தெரிந்துகொண் டொரோவொன்றாகச் சென் றைந்து புலனும்பற்றிப், புரிந்திடு முணர்வினோடு போகமுங் கொடுத்துயோனி, திரிந்திடு மதுவுஞ்செ

ய்து செய்திகண் டுயிர்கட்கெல்லாம், விரிந்திடு முணர் வுங்காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன். (அ)

(இ-ள்) தெரிந்து கொண் டொரோ வொன்றாகச் சென்றைந்து புலனும்பற்றிப் புரிந்திடு முணர்வினோடு போகமுங் கொடுத்து — ஆன்மாக்கள், பொறிகள் மேற்சென் றுவ்வொரு பொருளாகத் தனித்தனியே சென் றவற்றால் விடயங்களை யதுவதுவாக வறிந்து பின்ன ரவ் விடயங்க ளைந்தினையுஞ் செறிந்து நின்று சுகதுக்கமாகிய போகங்களைக் கன்மத்துக் கிடாக யோனிகளை யெடுத்துப் புசித்து,

யோனி திரிந்திடுமதுவுஞ் செய்து — யோனிகடோறும் ×பூட்டையு நீரும்போல மாறிமாறிப் பிறப்பது மிறப்பதுஞ் செய்து

செய்தி கண்டு — இவ்வான்மாக்கள்படுகிற துயரத்தை யறிந்து தனது காருண்ணியத்தி னாலே,

உயிர்கட்கெல்லாம் விரிந்திடு முணர்வுங் காட்டி — ஞானாசாரியனை யதிட்டித்துக்கொண்டு பக்குவப்பட்ட வான்மாக்களுக் கிருவினையொப்பை யறிந்து ஞானதீக்கையைச் செய்து சர்வஞ்ஞத்துவாதியான வாறுகுணத்தையு முண்டாக்கி,

வீட்டையுமளிப்பன்மேலோன். — அந்தச்சிவன் றனக்குச் சமமான முத்தியையுங் கொடுப்பன் எ-று.

உம்மை யெதிரதுதழீஇய வெச்சம்.

இதற்குப் பௌட்கரமுஞ் சிந்தியவிசுவ சாதாக்கியத்து மறிக. (அ)

× பூட்டை-இறைகூடை.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

உயிர்ப் புலன்கட் கறிவினையாக்கி யென்றதற் கிது சம்சாரமே யாகையால் கிருபையினாலே கிருத்தியங்களைப் பண்ணுவனென்றதெப்படி யென்ன? இவ்வாறு போகத்தினாலே மலபரிபாகஞ்செய்து மலபரிபாகத்திலே மோக்ஷத்தைக் கொடுப்பனென்பது மேற்கூறுதல்.

ஆன்மா அந்தக்கரணத் துவாரா பஞ்சேந்திரியங்களைப் பொருந்தி யிந்திரியார்த்த சம்யோகத்தினாலே சப்தாதி விஷயங்களை யறிந்து க்ரஹிக்கும் போகத்தையுங் கொடுத்து யோநிமாறிப் பிறக்கும்படியுஞ்செய்து, இவ்வாறு சகலாவஸ்தையிலான்மாக்களுக்குக் கன்ம*சாம்யமானதை நோக்கிக் கன்ம சாம்யமான வான்மாக்களுக் கெல்லாம் பூர்வமுள்ள கிஞ்சிஞ்ஞதையொழித்து சர்வஞ்ஞத்து வாதிகளைப் பிரகாசிப்பித்து பரமமோக்ஷத்தையுங் கொடுப்பன், சர் †வோத்கிருஷ்டனாகிய சிவன்.

வீட்டையும் என்றவும்மை முன்சொன்ன போகமாத்திரமேயல்ல மோக்ஷமுங் கொடுப்பனென்பது.

வீட்டையு மளிப்பனென்பது போதும், விரிந்திடுமறிவுங்காட்டி யென்பது வேண்டாமென்னில்? சர்வஞ்ஞத்துவாதி யபிவியத்தித் துவாரா பரமமுத்திப் ‡ பிரதிபாதிதமாகையால் க்ரமமுத்தி §ப்ரதிபாதகநார்த்தமாக விரண்டு பதமும்வேணும்.

விரிந்திடு மறிவென்ற வும்மை பந்ததசையில் கிஞ்சிஞ்ஞத்துவாதிக ளன்றி முத்தியிலே சர்வஞ்ஞத்வாதிகளையும் பிரகாசிப்பிப்ப னென்பது.

* சாம்யம் - ஒப்பு, † உத்கிருஷ்டன் - உயர்ந்தவன், ‡ பி

ரதிபாதிதம் - சொல்லப்பட்டது, § ப்ரதிபாதனம் - சொல்லு தல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவன் அவ்வான்ம வர்க்கத்துக்கு மலத்தின் பக்குவம் அபக்குவம் பார்த்து, முறைமையிற் சிற்றறிவு பேரறிவு சிற்சத்தியில் விளங்கப்பண்ணி, முறைமையிற் போகமோக்ஷங்களைப் புணர்த்துவனென் றுணர்த்துகின்றார்.

ஓரோவொன்றாக - ஒவ்வொன்றாக,— தெரிந்துகொண்டு - விசாரித்து ஐபந்திரியவற்ற அறிவிச்குக் கிருகிக்கும்படிப் பண்ணி,—சென்றைந்து புலனும்பற்றி - பஞ்சேந்திரியவழி யறிவு விளங்கச் சத்த பரிச ரூப ரச கந்தங்களோடு சம்பந்தித்து,—புரிந்திடு முணர்வினோடு - மாலையிது, சந்தனமிது, வனிதையிவள், பாம்பிது, தேளிது, முள்ளிது, விஷமிது, சிங்கநாதமிது, உதிரமிதுவென் றென்றென்றிற் பண்ணிடும் புத்தியத்தியவசாயத்தினது அசிதம்ஸ புத்தி விருத்தி, சிதம்ஸ சிற்சத்தி விருத்தி மிச்சிர சிற்றறிவோடு,—போகமுங்கொடுத்து - திரும்ப வதனுற் புத்தியில்மாலை முதலானவற்றில் ஒவ்வொரு வஸ்துப் பிரதிவிம்பத்தாற் பரிணமித்த சுகதுக்க மோகங்களிற் சுகமிது துக்கமிது மோகமிது வென் றுட் சுகதுக்க மோகமயமாய் வரும் உள்ளாத்தியவசாயத்தினது சிதம்ஸ சிற்சத்திவிருத்தி அசிதம்ஸ புத்தி விருத்தியில் அழுந்தி வித்தியாதத்துவ மாத்திரத்தோடு கிளம்பி யதின்மேல் விழுந்து பிரிக்கரிதாய் விளங்குஞ் சிற்சத்தி விருத்தி விளங்குதலாகிய போகத்தையுங்கொடுத்து,—விரிந்திடு மறிவுங்காட்டி - சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ லட்சண சிவத்துவரூப சிற்சத்தி விருத்தி யென்கின்

றபேரறிவு பெருந்தொழில்களை விளக்கி,—வீட்டையு மளிப்பன் - தனக்கொப்பாகிய மோட்சத்தையுங் கொடுப்பன்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இறைவன் இங்ஙன மேகதேசவறிவை நிகழ்வித்துச் சிறுபோகங் கொடுத்துப் பிறவியிற் படுத்துத லதனாற் பருவமுதிர்வித்து வியாபகவறிவை நிகழ்வித்துப் பரபோகமுங் கொடுத்தற்பொருட் டென்பதாம்.

ஏகதேசவறிவு நிகழ்ந்தன்றிச் சிறுபோகநுகர்ச்சி செல்லாமையும் வியாபகவறிவு நிகழ்ந்தன்றிப் பரபோகநுகர்ச்சி செல்லாமையு முணர்த்துவார் புரிந்திடு முணர்விளோடு போகமுங் கொடுத் தென்றும், விரிந்திடு மறிவுங்காட்டி வீட்டையு மளிப்பனென்றுங் கூறினார்.

இதனானே தூலவைந்தொழிற்கட் படுவதாகிய அவ் வதிசூக்கும வைந்தொழிற்குப் பயன் கூறப்பட்டது.

அற்றேனும் அதனா லிறைவனுக் காகக்கடவ தென்னையென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பரமேஸ்வரன் ஆன்மாக்களுக்குப் போகத்தைக் கொடுக்கு முறைமை யெப்படி ! மோக்ஷத்தைக் கொடுக்கிற முறைமை எப்படி!என்ற மாணாக்கனை நோக்கி, இரண்டுதன்மையு மருளிச் செய்கிறார்.

தெரிந்துகொண் டொரோவொன்றாகச் சென்றைந்து புயு னும்பற்றி - முற்சனனத்தி லுண்டான கன்மத்துக்கிடாக நாடிக்கொண்டு ஒவ்வொரு விஷயங்களாக ஐந்து விஷயங்களையும் சென்று பொருந்தி,—புரிந்திடு முணர்விஞேடு போகமுங் கொடுத்து - இவையிற்றாலே விரும்பத்தக்க வறிவுகளுடனே சுகதுக்கங்களையுங்கூட்டி,—யோனிதிரிந்திடு மதுவுஞ்செய்து-எண்பத்துநான்குநூறாயிர மச்சுக்கள்தோறு மாறிப் பிறப்பதுஞ் செய்து, இப்படி எண்ணிறந்த பல பிறப்புகளிலும் பிறந்திறந்து கன்மத்தைப் புசித்துத் துலைத்து மலபரிபாகம் வந்த வவதரத்தும்,—செய்திகண்டு - ஆன்மாக்களுடைய பக்குவத்தைத் தனதுதிருவுள்ளத் தடைத்து,—உயிர்கட்கெல்லாம் விரிந்திடுமறிவுங்காட்டி-இந்த முறைமையிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களுக் கெல்லாம் ஜடசித்துக்க ளெல்லாம் வியர்த்தமாயிருக்கிற ஞானத்தையுந் தரிசிப்பித்து,—வீட்டையு மளிப்பன்மேலோன் - மோக்ஷத்தையுங் கொடாநிற்பன் சர்வத்துக்கு மேலாயிருக்கிற பரமேஸ்வரன்.

இதனாற் சொல்லியது, பரமேஸ்வரன் ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கிடான போகங்களைப் புசிப்பிக்கிற முறைமையும் அது புசித்துத் துலைந்த வவசரத்து ஞானத்தைப் பிரகாசிப்பித்து மோக்ஷத்தையுங் கொடுப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மேலோ னைம்புலனும்பற்றி யொரோவொன்றாகத் தெரிந்துகொண்டு சென்று - இறைவ னிங்ஙன மைம்பொறி வழியாக விடயங்களி லொவ்வொன்று மறிந்து செல்லுதற் கேது

வாகிய,— உணர்வினோடு புரிந்திடும் - ஏகதேச அறிவை நிகழ்வித்து,—போகமுங் கொடுத்து-சிறுபோகங் கொடுத்து,— யோனிதிரிந்திடு மதுவுஞ்செய்து -பிறவியிற்படுத்துதல்,— உயிர்கட்கெல்லாஞ் செய்திகண்டு அதனு லுயிர்கட்குப் பருவமுதிர்வித்து,—விரிந்திடு மறிவுங்காட்டி - வியாபகவறிவை நிகழ்வித்து,— வீட்டையுமளிப்பன் - பரபோகமுங் கொடுத்தற்பொருட்டென்பதாம்.

இதனுனே நூலைவந்தொழிற்கட் படுவதாகிய அவ் வதிருக்கும வைந்தொழிற்குப் பயன் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படியான்மாகட் கநுக்கிரகஞ் செய்யுமிடத்துச் சிவன்வேணுமோ, முதன்மையான வநுச்கிரக சத்தி யமையாதோ வென்ன; அவ்விருவருந் தம்மிற் பேதமில்லையாயினு மத ற்குத் தலைமை யீசனென்பதற் குதாரணமிட் டுணர்த்து கின்றூர்.

அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றித், தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை, மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க் களிப்பன்கண்கட், கிருளினை யொளியாலோட்டு மிரவியைப் போலவீசன். (சஉ)

(இ-ள்.) அருளது சத்தியாகு மரன்றனக்கு — சிவனுடைய வருட்சத்திதானே யனுக்கிரகத்தை யுண்டாக்கும். அவ்விருவருந் தம்மிற் பேதமோ வென்னில்?

அருளை யின்றித் தெருள்சிவ மில்லை

அந்தச் சத்தியையின்றி வேறேபிரகாசத் தினை யுடைத்தாகிய சிவமுமில்லை. இந்தச் சிவத்தையின்றிச் சத்திதானே வேறொருமுதலாக நிற்கவற்றோ வெனில்?

அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை

அக்கினிக்கு வெம்மையானது பிறிக்சப்படா திருக்குமாறுபோல, அந்தச்சிவசத்தியானது மவனிடத்துப் பிறிக்கப் படுவதுமில்லை.

மருளினை யருளால்வாட்டி

ஆகையினாலே பரமேசுரன் பருவஞ்செறிந்த வான்மாக்கட்குத் தன்னுடைய சத்தியா லிவனுக் கறியாமையாகிய விருளின் வலியைத் தடுத்து,

மன்னுயிர்க் களிப்பன்

தன்னிடத்து நிலைபெற்றிருக்கிற வான்மாக்கட்க் கனுக்கிரகத்தைச் செய்வன். அஃதென்போல வென்னில்?

கண்கட்கிருளினை யொளியாலோட்டுமிரவியைப் போல வீசன்.

ஆதித்த னானவ னெப்படித் தன்னுடைய கிரணங்களினாலே யிருளையோட்டிக் கண்ணுக்குக் காட்சியைக் கொடுக்கு மாறுபோலச் சிவனு மான்மாக்கட் குண்டாகிய வாணவாதி தோடத்தை நீக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிப்பன் எ-று.

இதற்கு வாதுளோத்தரத்து நிசுவாசத்துமறிக.

இவ்வைந்து சூத்திரத்தானும் பதிபசுபாச விலக்கணத்தைப் பொதுவியலாற் கூறியதெனவறிக. (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இரண்டாஞ் சூத்திரத்திலே அருளருரு வென்றதற்கு அருளென்பது கிருபை; கிருபை குணமாகையால். ஸ்வரூப மென்ப

தெவ்வாறென்ற சங்கைக் கிவ்விடத்து * சிங்காவலோக நியாயமாகமே லுத்தரங் கூறுகின்றது.

*அவலோகம் - பார்வை.

அருளென்றது அரனுடைய சத்தி பரியாய நாமம். சத்தி, சத்திமானாகிய சிவனுக்கு பிந்நமோ அபிந்நமோ வென்னில்? சத்தியைவிட்டுச் சிவனில்லை, சிவனைவிட்டுச் சத்தியில்லை. ஆகையால் பேதமோ அபேதமோ வென்னுஞ் சங்கைக் கிடமில்லை, சத்தி சிவரூபமென்றறி. ஆதித்தன் றன்னுடைய பிரகாசத்தினாலே யிருளைக்கெடுத்துக் கண்களுக்கு † ரூபவத் பதார்த்தங்களைக் காணும்படி செய்தாற்போலச் சிவனுந் தன்னுடைய வருளாகிய ஸ்வரூபப் பிரகாசத்தினாலே ஆன்மாக்களுடைய அஞ்ஞானத்தை நீக்கி விஷய தரிசனங்களைப் பண்ணுவிப்பர் என்றிதன்பொருள்.

ரூபவத் - ரூபமுள்ள.

இதனாற் சர்வப்பிரபஞ்சமும் சிவனிடத்திலும், சிவனும் சர்வான்மாக்களிடத்திலும் அந்தரியாமியாகையால் சிவன் * அந்தர்ப் பகிர் வியாப்தனாகி நின்று ஸ்வதந்தர கர்த்தாவாகி தேகேந்திரியாதிகளுக்கு ஆன்மாபோல ஆன்மாக்களை அந்தர் †நியமநத்தையும் பகிர் ‡ பிரவர்த்தநத்தையும் பண்ணுவனென்றும் ஆன்மாக்களீஸ்வர § பரதந்தரனென்றுஞ் சொல்லியது.

* அந்தர்பகிர் வியாப்தன் - உள்ளும்வெளியும் வியாபித்தவன், † நியமநம் - அடக்குதல், ‡ பிரவர்த்தநம் - செலுத்தல், § பரதந்திரன் - உள்பட்டவன்.

தது₃க்தம் ஸம்ஸ்வர ஶ்ரீதாயாம் — ஸூர்யோ ஹி ஸர்வ லோகாநாம் உத்பாதிதவிஸர்க₃: । ஸர்வம் ஸர்வ ஸாக்ஷிணம் ... நாநாத்வம் ... ॥ யஸ்யாஜ்ஞா

ஸவஹ்ஜிஹம் யொமீஸவஹாஹுஸ: வஸ: । ஸொஹம்யா
தாவியாதாவ காமொநிவிஹ்ஹூதெதாஉஷவ: ॥ உமெய்வ
ஹம்வூவிதம் விஹூம் ஊயாஸஷமெவு ஸ்யெதஜமகூ ॥ ஐகி.

சிவாக்ரயோகி பண்ணின சிவஞானசித்தி
ஐந்தாஞ்சூத்திர வியாக்கியானம்
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

கடகாரியம் பண்ணுமிடத்துக் குலாலனுக்குத் தண்ட சக்கராதிபோலச் சிவனுக்குப் போகமோட்சகாரியம் பண்ணுமிடத்துப் பின்ன கரணமில்லை சகசத்தியே காரணமென்று சாற்றுகின்றார்.

அருளது - மலமுத்தி சிவத்துவ வியத்திரூப வனுக்கிரக கிருத்தியமாவது,—

சத்தியாகும் - சிவனது சாமர்த்தியமாம். சத்தியின தருளாகிய தொழில் சத்தியாகாதாதலால் ஆகுபெயராக்கி அருளை அனுக்கிரக கிருதியத்தை பண்ணுவது சத்தியென்று தொகைப் பொருள் விரித்துப் பொருள்கொள்க.—

அரன்றனக்கு,—

அருளையின்றித் தெருள்சிவமில்லை - பிறப்பொருட் பிரகாசமாகிய தீபசத்தியே தற்பொருட் பிரகாசமாகிய தீபமாயுமிருத்தல் போலத் தாதான்மிய சமவாய சம்பந்தினியாய்ப் புறப்பொருளறிவாகிய சத்தியே தற்பொருளறிவாகிய சிவமுமாயிருத்தலால், அவ்வனுக்கிரகத்தைப் பண்ணுஞ் சத்தியினின்றும் பிரித்துப் பக்குவான்ம சிற்சத்தியின தறிவுதொழில்களை

த் தனது சத்தியாகிய கரணத்தால் அலர்த்துஞ் சிவமெனுமொரு பொருள் தரிசிப்பதின்று.

அந்தச் சிவமின்றி சத்தியில்லை - தற்பொருட் பிரகாசமாகிய தீபமே பிறப் பொருட் பிரகாசமாகிய தீபசத்தியுமா யிருத்தல் போற் ருதான்மிய சமவாய சம்பந்தியாய்த் தற்பொருளறிவாகிய சிவமே பிறப்பொருளறிவாகிய சத்தியாயு மிருத்தலால் அந்தச் சிவத்தினின்றும் பிரித்துச் சத்தியெனு மொரு பொருள் சாதிப்பதின்று. இப்படி யிருக்குஞ் சத்தியே கரணமென்று சாதித்திருத்தலால்,—

கண்கட்கிருளினை யொளியா லோட்டுமிரவிபைப் போல,—

ஈசன்-சிவன்.—

மன்னுயிர்க்கு- நிலைபெற்றபக்குவான்மாவினது சிற்சத்தியாகிய திருஷ்டிக்கு,—

அருளால் - அநுக்கிரகசத்தியால்,—

மருளினைவாட்டி - மறைக்கு முறைமையுடையமலசத்தியைத்திருப்பு முறைமை யுடையதாகச் செய்து, இருளைக்கத்தாற் கண்ணொளி காண்பதே போலென்ப தேகதேசவுவமை. வியத்திகருத்திய மின்றி யொளி காணப்படுதலால் என்றதில், விருப்பமின்றிப் படலமுத்தி கிருத்திய மாத்திரத்தாற் காணுதிருந்து, பின்பு வாசனை முத்தி தேசோபிவியத்திகளை முறைமையி லுண்டாக்கும் அஞ்சன தேவோத்தேசன் கிருத்தியத்தாற் கண்ணொளி விளங்கிக் காணப்படுதல் போலவென்பதே முற்றுவமையென்றெண்ணி, மலமுத்தி மாத்திரத்தாற் காணுதிருந்து மலவாசனைமுத்தி சிவத்துவாபிவியத்திகளைச் சர்ப்பகஞ்சுக முத்தி சர்ப்ப சரீர வியத்திபோற் சடுதி முறைமையி லுண்டா

ச்கும்போசனுகுதியோடு தத்தவியத்தியாகுதி கிருத்தியத்தாற் சிவத்துவம் விளங்கிக் காணுமென்று கழறுகின்றார்.—

அளிப்பன் - விரிந்திடு முணர்வுங் காட்டி வீட்டையு மளிப்பன் என்று முன் சொல்லியபடி மலமுத்தி கிருத்தியத்திற் பிண வாசனுமுத்தி சிவத்துவாபி வியத்திகளைத் தூல சூக்கும பர தாரதம்மியக்கிரம கிருத்தியத்தால் பெருந்தொழில் பிரியாத பேரறிவு பெருக்கிச் சிவத்துவ விளக்கஞ் செய்வன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அங்ஙனங் கொடுத்துக் காட்டி யளிப்பதாகிய வக்கருணை இறைவனுக் கியற்கைக் குணமெனப்படுஞ் சத்தியாகலான், குணங் குணியைவிட்டு நீங்காமையின் ஞாயிற்றிற் கொளிபோல இறைவனுக் கவ்வருட் குணம் மேம்படுதலின் வேறு யாண்டைக் காகக் கடவது பிறிதில்லை யென்பதாம்.

இதனுனே யவ்வருள் இறைவனுக் கணிகலமாதல் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி யான்மாக்களுக்குப் போகமோக்ஷங்களைச் சிவன் கொடுப்பானுகில் விகாரியாகானோவென்ற அவிகார வாதியை நோக்கி அருளிச்செய்கிறார்.

அருளது சத்தியாகு மரன்றனக்கு - அநாதியே அநுக்கிரக ஞயிருக்கிற சிவனுக்கு அந்த வருளானது சத்தியாம். தான் விகாரமறநின்று அந்தச் சத்தியைக்கொண்டு பிரபஞ்சத்தை நட

த்தவன். அப்படிச் சத்தியேன், அந்தச்சிவன் தானே யமையா தோ வென்னில்?—அருளையன்றித் தெருள்சிவமில்லை - இந்தச் சத்தியையின்றி யறிகைக்குச் சிவனுந் தனித்தொரு முதலல் லன். ஆனால் அந்தச் சத்தியே யமையாதோ சிவமே னென்னி ல்?—அந்தச்சிவமின்றிச் சத்தியில்லை - அந்தச் சத்தியும் இந்தச் சிவனையின்றித் தனித்தொரு முதலாகக் காரியப்படமாட்டாது. ஆனாற் சிவனாற் பயனேதென்னில்?—மருளினை யருளால்வாட் டிமன்னுயிர்க் களிப்பன்-மலத்தாலுண்டாகிய மயக்கத்தைத் த ன்னுடைய சத்தியாலே கீழ்ப்படுத்தி அநாதியே நிலைபெற்றஆ ன்மாக்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பன். அதெங்ஙனே யெ ன்னில்?—கண்கட் கிருளினையொளியாலோட்டுமிரவியைப்போ லவீசன் - அருளிடமாக நின்று காண்கிறவர்களுக்குக் கண்ணுக் கிருளையோட்டிக் காட்டாய்நிற்கு மாதித்தனைப்போல சிவ னும் பிரகாசியாநிற்பன்.

இதனாற் சொல்லியது, சிவனுக்கு அவனுடைய வருளான து சத்தியாமென்றும் அந்த அருளையின்றிச் சிவனுந் தனித்தொ ரு முதலல்லவென்றும் அந்தச் சத்தியும் இந்தச் சிவனையின்றித் தனித்தொரு முதலாகிக் காரியப்பட மாட்டாதென்றும் அநா தியே நிலைபெற்ற வான்மாக்களுக்கு மலத்தாலுண்டாகிய மயக் கத்தைத் தன்னுடைய சத்தியாலே கீழ்ப்படுத்தி மோக்ஷத்தை க்கொடுப்பனென்றும் கண்ணுக்கு அந்தகாரத்தைப் போக்கிக் காட்டா நிற்கும் ஆதித்தனைப்போல சிவனும் பிரகாசியா நிற் பன் என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அருளது அரன்றனக்குச் சத்தியாகும்-அங்ஙனங் கொடுத் துக் காட்டி யளிப்பதாகிய வக்கருணையு மிறைவனுக்கு இயற்கை

க் குணமெனப்படுஞ் சத்தியாதலால்,— அருளையின்றித் தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தியில்லை - சிவமுஞ் சத்தியுங் குணகுணி முறைமையாக நிற்குணம் குணியைவிட்டு நீங்காமையின்,— கண்சட்கிருளினை யொளியா லோட்டு மிரவியைப்போல - கண்கட்குப் புறவிருளைக் கிரணத்தாலோட்டிப் பிரகாசத்தைச் செய்கின்ற ஞாயிற்றுக் கொளிபோல,—மன்னுயிர்க்கு மருளினை யருளால் வாட்டி யீசனளிப்பன் - நிலைபெற்ற வுயிர்கட்கு மயக்கத்தினைத் திருவருளா னீக்கி யநுக்கிரகஞ் செய்கின்ற விறைவனுக் கவ்வருட்குண மேம்படுதலின் வேறுயாண்டைக்காகக் கடவது பிறிதில்லை.

இதனுனே யவ்வரு ளிறைவனுக்கு அணிகலமாதல் கூறப்பட்டது.

☞ ரு - சூ, க—உ, அ, முடிந்தது.

———o———

☞ ஐந்தாஞ் சூத்திரம் முற்றிற்று.

"நவமும்"

என்ற ஐந்தாஞ் சூத்திரம்

முடிந்தது.

பாயிரமுட்பட செய்யுள்—உ௩௧.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௧—சூத்திரம். பதிபாசதரிசன இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலாறுஞ் சூத்திர மென்னுதலிற்றோவெனின்? இப்படியுபகரித்த சிவனது வழித் தான்மாவென் றுணர்த்துகின்றது.

மேலித் தலைச்செய்யு ளென்னுதலிற்றோ வெனில்? அந்தச் சிவனுடைய சொரூப மறியப்படிற் சடம் அல்லதறியப்படாதெனி லபாவமாதலா லறியாதறிசவென் றுணர்த்துகின்றார்.

அறிவுறும் பொருளோவீச னறிவுறா தவனோ
வென்னி, லறிபொரு ளசித்தசத்தா மறியாத தின்றா
மெங்குஞ், செறிசிவ மிரண்டுமின்றிச் சித்தொடு சத்
தாய்நிற்ப, னெறிதருஞ் சத்தின்முன்ன ரசத்தெலா
நின்றிடாவே. (௧)

(இ - ள்.) அறிவுறும் பொருளோவீச னறிவுறா தவனோ என்னில்	சிவனறியப்படும் பொருளோ வறியப்படாத பொருளோ என்று சொல்லின்?
அறிபொருள சித்தசத்தாம்	ஆன்மாவினாலே சுட்டியறியப்பட்ட பொருள்களெல்லாஞ் சடமுமாயழிந்து போய்விடும்.
அறியாத தின்றாம்	அறியப்படாத பொருளாயி னாகாசபுட்பமு முயற்கோடும்போல வில்லாத பொருளாய்விடும்.

எங்குஞ் செறி சிவமிரண்டு மின் றி	இவ்விரண்டுக்கும் வேருய்ப் பரிபூரணமா யசிவன்
சித்தொடு சத் தாய்நிற்பன்	சைதன்னிய ஸ்வரூபனுயழிவின்றி நிற்பன்
நெறிதருஞ் ச த்தின முன்ன ர சத்தெலா நின்றி டாவே.	சர்வ வியாபியாயிருக்கிற சிவனது சன்ன திபி லுண்மைப்பொருளோ நிற்கும், அஃதல் லாத பாசங்களெல்லா நில்லா எ-று.

இதற்குச் சிவஞான போதமும் வாதுளோத்தரமும் இது முதலிந்து விருத்தத்துக்கு மெனவறிக (௬)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

இவ்வாறு சர்வவியாபியாய் நின்று பிரேரிக்குஞ்சிவ னறி யப்படுமவனோ வறியப்படாதவனோ வென்னுஞ் சங்கோத்தர ங்களை மேலாருஞ் சூத்திர மொன்பது விருத்தத்தினாலே கூறு கின்றது.

அறிதரும் பொருளோவீச னறிவுறுதவனோ வென்னில் - ஈஶ்வரன் அறியப்படும் வஸ்துவோ வறியப்படாத பொருளோ வென்னில்?—அறிபொருள் சித்தசத்தாம் - அறியப்படும் வஸ்து வெல்லாம் ஜடமுமாய் அநித்தியமுமாம். இவ்வாருகையா லறி யப்படாத வஸ்து சிவனென்னில்?—அறிபாத தின்றாம் - அறிய ப்படாத வஸ்து * ககந குசுமம்போல வில்லாததேயாம். அறி யப்படுமது அறியப்படாதது மல்லவாகி லந்தச் சிவனுடைய ஸ்வரூப மெப்படியென்னில்?—எங்குஞ் செறிசிவ னிரண்டு மின் றிச் சித்தொடுசத்தாய்நிற்பன் - சர்வவியா பியாகிய சிவன் மா

யாகரணங்களினாலே † வேதநியனும் ‡ சர்வான்மநா அவேத்தியனு மல்லாமல் சச்சித் ஸ்வரூபனாகின்றபன். மலோபுத்தி யகங்காராதி கரணங்களினாலே யேனறியப்படா னென்னில்?— நெறிதருஞ் சத்தின்முன்ன ரசத்தெலா நின்றிடாவே-பரம மார்க்கத்தைத் தரிசிப்பிக்கும் சத்சித் ஸ்வரூபன்முன்னே அசத்தும் சித்துமாகிய பிரத்தியக்ஷாரூடமான சப்தங்கள் பிரவர்த்தியாமல் × நிவர்த்தித்து விடும்.

* ககநகுசுமம் - ஆகாசப்பூ, † வேத்தியன் - அறியத்தக்கவன், ‡ சர்வான்மநா - முழுதும். × நிவர்த்தித்தல்-மறுத்தல்.

ததுக்தம் வாஸிஷ்டே — [illegible] ॥

ததாச சிவஜ்ஞாநபோதே — [illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

இப்படி யுபசரிக்குஞ் சிவம் அறியப்படும் பொருளோ அன்றோவென இரண்டு பக்ஷமு மிசையாதென் றிசைக்கின்றார்.

ஈசன் - சிவன்,—

அறிவுறும் பொருளோ - சாத்திய சிவயோகியாகுஞ் சிவாகமிக்கு அப்பிரத்தியக்ஷக் குறிப் பரோக்ஷலக்ஷண ஞானத்

தால், சித்தசிவ யோகிக்குப் பிரத்தியக்ஷக் குறியபரோக்ஷ லக்ஷண சாக்ஷாத்கார ஞானத்தால் வேதாந்தமாய்விடும். அநித்திய மென்று பொருளுரைக்கில் அறியப்படும் பதார்த்தமோ

அறிவுராதவனோ- அறியப்படும் பொருளல்லவோ,—

என்னில்- என்றுவினாவில் இவ்விரண்டு பக்ஷத்துள்,—

அறிபொருள் - அறியப்படும் பொருள்,—

அசித்தாம் - சடமாம்.—

அசத்தாம்— அசுத்தமாயை சுத்தமாயையினது காரியமென்கின்ற காரண காரியப் பொருள் சுத்தமென்று சொல்லப்படு மாயினும் சித்தைக்குறித் ததுவும் அசுத்தமாதலால் அசுத்தமாம், அசத்தென்பதற்கு இவ்விடத் தசுத்தமென்று பொருளுரையாது அசத்திய மென்று பொருளுரைக்கில் வேதாந்தமாய் விடும், அநித்தியமென்று பொருளுரைக்கில் அறியப்படும் பொருளாகிய மாயை மலம் மகாமாயையெனும் பரமகாரணப் பொரு ளறியப்படுதலால் அநித்தியமாய் விடும்.—

அறியாததின்றாம் - அறியப்படாத பொருள் முக்காலத்திலில்லாத முயற்கோடு போல அசத்தியமாம்,—

எங்குஞ் செறிசிவம் - எல்லாப் பொருளி னுள்ளும் புறம்பும் வியாபித்திருக்கும் நிருபாதிகான்ம வர்க்கமாகும் சிவம் சிவமாகுஞ் சிவம்,வியத்தியத் துவைதத்தா லிரு சிவம் ஒப்பாகுஞ் சாத்தியத் துவைத்ததாலொரு சிவம்,—

இரண்டு மின்றி - அறியப்படும் பொருளன்றி,—

சித்தொடு சத்தாய் நிற்கும் - நிற்குமென்ப தறியப்படும்.

சிவயோகி யல்லா வுலகத்தாரிடத்தில் மல கன்ம மாயாகாரியகலாபுத்தியாதி கலோபாதி மஹாமாயாகாரிய வாக்குக் கலோபாதிபற்றி அது கங்கை, இது காவேரி அறிபவ னது விதுவல்லா நான் தேவதத்தன் எனபது முதலா யுதிக்கும் சவிகற்ப ஞானமெனுஞ் செயற்கைச் சிற்றுச் சுட்டறிவிற் சற்றுந் தோன்றுதிருந்தாலும், சித்தசிவ யோகிபோற் சித்தசிவ யோகி

யாய்ச் சர்வபாதார்த்தகமும் சாக்ஷாத்கரித்துப்பார்க்க இச்சிக்குஞ் சாத்திய சிவயோகியிடத்திற் கண்ணொளி முதலிய கரணமுதற் புறக்கருவிப் பிரத்தியக்ஷ மிசையாது சிவாகமவெழுத்துக்கண்ணிசைவு பற்றி மலவிருண்மறைப்பச் சிறிது சிந்துங் கலை விளக்குமுதலிய வுட்கருவி பொருந்திச் சிவசத்தித் தீக்ஷழற் சிவாகமவாக்கியப் பொருள்வழி செல்லுஞ் சிவசத்தி விளக்கிய சிவப்பிரமாண சிற்சத்தியினது செயலாயுந் தனது செயர்கைச் சிற்றுச் சுட்டறிவினு ளற்றற்றுச் சுட்டு விட்டுச் சுருங்கிவிரிந் ததிப்பதாயும், பிரத்தியக்ஷ மில்லாப் பரோக்ஷ மென்று வடமொழிபடிக்கும் படர்க்கைச் செயற்கைப் பேரறிவாயும் நாதப் பிரகூதிச் சுத்த வித்தை சுத்தகலைகளை யுள்ளுறை சோதியாய்ப் வைத்த புத்தி யகங்காரங்களினது போதகர்வப் பிரவாசந் தோய்ந்து சவிகற்பமாயிருக்கு மறிவிற் பசிதாக மண முதலிய பொருள்போல அது விது நானென் றுதிக்குஞ் சிற்றுச் சுட்டறிவினாற் சுட்டியறியப்படா தாகிலும் அந்தப் பசிதாக மண முதலிய பொருளில் இது பசி இதுதாகம் இதுமணம் என்றொரு பிரகாரம் ஸ்புரித்தறியாம லறியப்படும்.

அதுபோல் அதுசிவம் நான்சிவம் என்றொரு பிரகாரம் ஸ்புரித்தறிப்படும் பொருளை யறிபொருளாய்ப் பரோட்சமாய்க் குருபோதிக்கக் கேட்டுச் சிந்தித்தறியாம லறியப்படும் சித்தசிவயோகிக்குச் சிவசத்தி மனத்துணைச் சிற்சத்தி சாத்தியத்தியான முற்றிய சமாதி முகிழ்க்குஞ் சாட்சாத்காரத்தில் அப்படித் திரிச்சிய மின்றிச் சித் திருக் கிர்த்துருபமா யறியப்படும்.

நீர் சொல்லிய வெல்லாம் நற்பொருள் தானே! சூக்குமவிசாரத்தினால் யூகிக்கப் பட்டது. அதில், முத்தான்மாக்களுக்குச் சிவசம சாமர்த்தியஞ் சித்தித்திருத்தலால் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவங் காணப்பட்டது; இப்படிச் சகத்துக் கீ

சுரர் அநேகராய் அநேகேசுர வாதியானீர். சத்தியமேநீசாற்றியது. சிவனிலய போகாதிகார சத்தி சாமர்த்தியங்களைக் கிரமத்தில் பிரத்தியக்ஷமாயும் பராக்ஷமாயு மடையுமிடத்து முத்தான்மாக்களாலு மடையா திருக்கப்படாது.

சிவனடைந்த பஞ்சகிருத்தியம் பண்ணுமிடத்து முத்தான்மாக்களுக்குஞ் சங்கோச மில்லாச் சிவ சம சாமார்த்திய சங்கற்பங்க ளிருத்தலாற் றங்கள் தங்கள் சத்திசாமர்த்திய சங்கற்பங்களைச் சுருக்கி யொதுக்கி வர்ச்சிக்கப்படா தாகையாற் பண்ணுவர்கள்.

அதில்விசேஷ மேதென்னில்? முத்தான்மாக்களுக்குச் சித்திக்குங் கிருத்திய கர்த்திருத்துவம் அவச்சனீய சம்சித்த பஞ்ச கிருத்திய கர்த்திருத்துவஞ் சிவனுக்குக் கிருபா சம்சித்தபஞ்ச கிருத்திய கர்த்திருத்துவம். அவ்விரு கர்த்திருத்துவங்களும் ஒத்துப் பொருந்தாது. பொருந்திப் பிரதக்குப் பிரதான பின்ன விஷமசங்கற்பாதி காரியத்துவங்க ளின்றி இது இப்படியாகக் கடவதென்ற அப்பிரதக்குத் துல்லிய சங்கற்பாதி காரியத்துவங்களாகி யேகிபாவமாகாது, ஏகிபாவங்களாயிருக்கும்.

அதனால் நவமிதுவாகக்கடவது புராண மிதுவாசக்கடவதென்று பின்ன சங்கற்ப மில்லாமையால், அநேகேசுர வாதத்துக்கு ஆஸ்பதமேயில்லை.

சகத்கர்த்தாச் சிவனொருவனே. முத்தான்மாக்கள் சகத்கர்த்தாக்களா யிருந்தாலும் பின்ன சங்கற்பப் பிரவிருத்தியில்லாமையால் சகத்கர்த்தாக்க ளன்றென்று சிந்திக்சப்படும்.

“ஆரணவுருவாந்தில்லையம்பலங்காணப்பெற்றோ
ரோருணர்வாவரென்றுமொன்றலரொன்றாலலர்
காரணராகாரொத்தகருத்தினர்நிருத்தவின்பப்
பூரணரவர்கள்வாழும்புவனமும்பொதுவாமன்றே”

என்று கோவிற்புராணத்தும், "எம்மையொத்திடுஞ் சிவானுபூதி முத்தி யம்பலத்தே யுண்டாம்" என்று திருவாதவூரர் புராணத்தும் "தம்மைப்போலத் தம்மடியார்க்கு மினபளிப்பன்" என்று பிள்ளையர் தேவாரத்தும் பாவனுபலம். சொல்லப்பட்டது;

சித்தொடுசத்தாய் நிற்கும் என்பதற்கே செப்பிய வுரை விரிவையும். மேலுரைப்பாம்.

நெறிதருஞ் சத்திமுன்னர் - முத்திவழி காட்டுஞ்சிவசன்னிதானத்லே,—

அசித்தெலாம்-அசுத்த சுத்தப்ரபஞ்ச மனைத்தும்,—

நின்றிடாவே - சிவனைக்குறித்துச் சொரூபமாத்திரமாயும், உபாதியுற்ற வுயிர்களைக் குறித்துப் போக்கியமாயும், போசகமாயும், சிவனாலே பிரபஞ்சத்திற் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியம் பண்ணும் பொருட் டறியப்படாதது பண்ணப்படாதாகையால் அறியப்பட் டிருந்தாலும் சிவனைக் குறித்துப் போக்கியமாயும், போசகமாயும், சிருட்டிமுதலிய கிருத்திய பாத்திரமாயு மறியப்படாது. இப்படிப் பொரு ளுரைப்பதன்றிச் சிவசன்னிதானத்திலே நில்லாது ஒருபிரகாரத்தி னுலேயுஞ் சிவனு லறியவும்படாதென்று பொருளுரைத்தாற் சிவனுக்குப் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவமாகிய சகத்கர்த்திருத்துவம் அதனுல் நிருபாதிக சொரூபமாய்ச் சித்திக்கும். அதனுல் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ மிரண்டுமின்றிச் சடபதார்த்தத்துக்கொத்துச் சிவனெனும் பதார்த்தஞ் சூனியமாய்ச் சர்வசாத்தர விவகாரங்களும் சமித்துப்போம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி எஞ்சிநின்ற பதிப்பொருளுக்கிலக்கணம் ஆறுஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

சிவன் சுட்டியறியப்படும் பொருளாயிற் ஜடமாயழிந்து போவதுமாம், ஒருவாற்றானு மறியப்படாத பொருளாயிற் சூனியமாம், நெறியாகிய சிவஞானத்தாற் றரப்படுஞ் சிவத்தினெ ஞிர் அசத்தாகிய பாசஞானஞ் சிறிது மில்லாமையிற் சிவம் அவ்விரண்டு தன்மையுமின்றிச் சித்தசத்தாகி நிற்குமென்பதாம்.

இருவர் கூற்றுப் வேறுமுடிபு கோடலிற் றிணைவழு வின்மையுணர்க.

அசத்தெனவே அசித்தாதலு மடங்குமாயினும், விளங்குதற்பொருட்டு வேறு கூறினார்.

சித்தொடு சத்தாய் நிற்குமென்றது மது, ஜடத்தை நீக்குதற் பொருட்டுமாம்.

தருகல் ஈண்டு விளங்குதன்மேற்று.

ஈண்டுச் சத்தென்றது சிவமென்னுந் துணையாய் நின்றது.

அசத்து முன்னில்லாமையின் அறிபொருளாதலும் நெறிதருசத்தாகலின் அறியாப்பொருளாதலு மில்லையெனப்பார், நெறிதருசத்தின் முன்ன ரசத்தெலா நிறைபிடாவாகலா னிரண்டுமின்றியென்றார்.

ஆகலானென்பது சொல்லெச்சம்.

முதல்வனுக்குத் தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல்பு மேற்புனருற்பவம் வருமா றுணர்த்து முகத்தாற் பெறுவிக்கப் பட்டமையால், இது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பியல்பெனக் கொள்க.

அற்ருகலினன்றே யுண்மை யதிகாரத்தைச் சார ஈண்டு வைத்தோதியதூஉ மெனக.

முதனூ லாருஞ்சூத்திரத்திற் கொண்ட விருகூற்ருடும் அறியாத தின்ருமெனறதனை வேறு கோடலால் இச்செய்யுள் முச்கூற்றதாய வாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருளை வருமாறு.

அப்படி பிரபஞ்சத்தை வேருரு முதலாகச் சொன்ன தைநம்பு எல்லாஞ் சிவசொரூபமென்ற பரிணுமவாதியைநோக்கி, அந்தச் சிவனுண்மை உனக்குத் தெரியாதென்றும் சொல்ல, அது எப்படி எனறு அவன்கேட்ட முறைமை மேலருளிச் செய்கிருர்.

அறிதரும் பொருளோவிச னறிவுரு தவனே வென்னில்- பாமேஶ்வரன் ஆன்மபோதத்தா லறியப்படும் பொருளோ அறியப்படாத பொருளோவென்று நீ கேட்கில்?—அறிபொருளசத்து - ஆன்மாவா லறிபத்தக்க பொருள்களெல்லாம் அசேதனமாய் அழிந்துபோகையால் இவனு லறியத்தக்க பொருளல்ல. அந்தச் சிவம் ஆன்மாவா லறியபட்டதெல்லாம் அசத்தாயழிந்துபோகையால் அந்தச் சிவனை இவனு லறியப்படாதென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிருர்.—சத்தாமறியாததின்ரு மெங்குஞ் செறிசிவமிரண்டுமின்றிச சித்தொடுசத்தாய் நிற்கும் - சிவம் இவனு லறியப்படா தென்னில்? முயற்கோடு போல இல்லாததாம். ஆகையால் எவ்விடத்தும் விட்டு நீங்காமல் சம்பூரணமுய் நிற்கிற சிவம் இவனு லறியப்பட்ட அசத்தானதும் இவனு லறியப்படாத சத்தானதும் இரண்டுமன்றி

சைதந்நிய சொரூபியாய் நிற்கும். எல்லாஞ் சிவசொரூபமா யிருக்க இப்படிச் சொன்னதென நம்பு என்ற பரிணாமவாதியை நோக்கி மீளவு மருளிச்செய்கிறார்.— நெறிதரு சத்தின்முன்னரசத்தெலாநின்றிடாவே - முன் சொல்லிவந்த முறைமையையுடைய சிவனுடைய சன்னதியிலே யசத்தான பாசங்கள் ஒன்று நில்லாது.

அறிபொருள் சத்தென்று பரிணாமவாதியை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "புவனமியாவும் புனிதனதுருவெனி - லவன்முதற்காரண மன்றாமென்னி - னிமித்த காரண நிகழ்த்துவதென்னீ-யவனே காரண மனைத்து மென்றறைந்தனை-மண்டனிற்குலாலன் தண்டசக்கராதிக்-காரணமூன்றுமோர்பேரணைந்திட - வித்தாரணியிற் கண்டதுசாற்றுக" என்னுமதுங் கண்டுகொள்க.

சத்தா மறியா ததின்றாமென்று பாடாணவாதியை மறுத்ததற்குப் பிரமாணம், சங்கற்ப நிராகரணம், "காட்சியென்னக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்துரைக்கிற் - கரணபாவ மரணங்கருமர-மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவரன்றே" என்னவே சிவனை யிவனு லறியப்படாதென்பது கருத்து.

இதனாற் சொல்லியது ஆன்மபோதத்தா லறியப்பட்டது அசத்தா யழிந்துபோகையால் அது சிவமுத லல்ல, இவனுலறியப்படாதது முயற்கோடுபோல இல்லாதது, ஆகையால் அதுவும் அந்தச் சிவமுதலல்ல வென்றும் ஆகையா லிவையிரண்டு மல்லவாய் எங்கும் பரிபூரணனாய்ச் சைதந்நிய சொரூபியா யிருப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஈசனறிதரும் பொருளோ வென்னி னறிபொருள் சித்தசத்தாம் - சிவன்சுட்டி யறியப்படும் பொருளாகிற் சடமா யழிந்துபோவதுமாம்,—அறிவுறு தவனோவென்னி னறியாததின்றும்-ஒருவாற்றானு மறியப்படாத பொருளாகிற் சூனியமாம்,—நெறிதரு சத்தின்முன்ன ரசத்தெலாநின்றிடாவே-நெறியாகிய சிவஞானத்தாற் றரப்படுஞ் சிவத்தினெதிர் அசத்தாகிய பாசஞானம் சிறிது நில்லாமையால்,—எங்குஞ்செறிசிவம் - எவ்விடத்தும் வியாபகயாகிய சிவம்,—இரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்பன் - அவ்விரண்டு தன்மையுமின்றிச் சித்துச் சத்தாகி நிற்பன்.

இது சொரூபலக்ஷண மெனப்படும் சிறப் பியல்பெனக் கொள்க.

முதனூ லாருஞ்சூத்திரத்திற் கொண்ட விருகூற்றுடும் அறியாத தின்றுமென் றதனை வேறுகோடலா லிச்செய்யுள் முக்கூற்றதாயவாறுகாண்க.

மறைஞானதேசிகர் உரை.

—o—

மேனிறுத்த முறையானே யசேதன மென்பதனை
யேதுக்களால் விரித்துணர்த்து கின்றார்.

ஆவதா யழிவதாகி வருதலா லறிவுதானுந், தாவலா லுலகுபோகந் தனுகர ணாதியாகி, மேவலான் மலங்களாகி விரவலால் வேறுமாகி, யோவலா லசித்தாஞ்சுட்டி யுணர்பொரு ளானவெல்லாம். (உ)

(இ-ள்.) ஆவதா யழிவதாகி வருதலால்	எ-து இந்தப் பிரபஞ்சந் தோன்றியு மழிந்தும் வரக் காண்கையாலும் "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குறித்தே" என்பதனால் திதிக்கப்பட்டு வருகையாலு மெனப் பொருளுரைக்க.
அறிவு தானுந் தாவலால்	ஆன்மாவுக் கொவ்வோ ரவதாரங்களிலே யறிவானது சென்று பற்றுதலாலு மன்னியமாய்விட்டு நீங்கிப்போகையாலும் அஃதன்றி
உலக போகந் தனு கரணு தியாகி மேவலால்	தனுவுங் கரணமும் புவனமும் போகங்களுமாக விவைக ளெல்லாங் காணப்பட்டுக் காரியப் படுகையாலும்
மலங்க ளாகி விரவலால்	மாயா காரியமாய்ப் பொருந்துகையாலும்
வேறு மாகி யோவலால்	ஓரவதாரங்களிலே ஆன்மாவுக் கன்னியமாய்க் காணப் படுகையாலும்
அசத்தாஞ் சுட்டியுணர்பொருளானவெல்லாம்.	ஆன்மாவாலே சுட்டி யறியப்பட்டவைகளெல்லாஞ் சடமாகையா லிதற்கு நிலையில்லையென் றறிவாயாக எ-று.

தனுகரணுதி யென்றது உலகபோக மெனமுறைபிறழ்ந்ததென்னையோ வெனில்? தலைதடுமாற்ற மென்னுந் தந்திர வுத்தியென வறிக. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

பிரபஞ்ச சத்தென்று மீமாம்சாதிகள் சொல்ல, இவ்விடத்து அசத்தென்று சொன்ன தெவ்வாறென்னில்? மேல்வ துபூர்வமாக பிரபஞ்சம் அசத்தென்று நிரூபிக்கின்றது.

பிரபஞ்ச முற்பத்தி நாசத்தையடைந்து வருதலாலு மான்ம ஞானமானது பிரபஞ்சத்தை வியாபித் தறிகையாலுந் தநுகரண புவன போகங்களாக ஆன்மாவுக்கு மாறிப் பொருந்தி வருகையாலு மான்மாவுக்கு மயக்கறிவுக் கேதுக்களாகப் பொருந்துதலாலும் சிவானுக் கிரகத்தினாலே யான்மாவுக்குச் சத்தியஞானம் பிரகாசித்தளவி லிவைகளெல்லா மான்மாவுக் கந்நியமுமா யசத்துமாய்ப் போகையினாலு மான்மா தனக் கந்நியமாய்ப் பிறித் தறியப்பட்ட வஸ்துக்க ளெல்லா மசத்தென் றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——०——

அறிபொருள் சித்தாதலால் அறியப்படும் பொருள் அசித்தென்றிசைக்கின்றார்.

அறிவுதானும் தாவலால் - உணர்வு விட்டுப் போதலால், விஷயீ கரித்த லென்றுமாம்.—உலகு - புவனம்,—போகம் - போக்கிய பதார்த்தம்,— தனு - தூல தேகம்,—கரணம் - சூக்கும தேகம்,—பலங்களாகி - மாயா மலங்களாகி.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——०——

சுட்டறிவாவது காலத்தா னேகாதசமாதலும் இடத்தானேகதேசமாதலும் அதுவதுவாய்ப் பலவேறு வகைப்படுதலும் மலத்தொடு விரவுதலும் வேறுபடுதலுமாகிய இவ்வியல்புகளுடைமையான் அசத்தேயாகலின், இவ்வறிவினு லறியப்பட்டன வனைத்தும் அசத்தாவனவன்றி யவற்று ளொருபொருளுஞ் சத்தாதல் செல்லா தென்பதாம்.

அசித்தா மென்பதூஉம் பாடம்.

உம்மை முன்னையது இழிவுசிறப்பு.

இதனானே அறிபொருள்களி னொருசாரனவேயன்றி அனைத்து மசத்தாத லில்லையென்னுந் தார்க்கிகரை நோக்கி அறிபொருளனைத்தும் அசத்தென்பது அவ்வறிவியல்பு பற்றித் தெரிந்துணர்த்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இவனா லறியப்பட்ட தெல்லா மசத்தா யழிந்துபோமென்றதென நம்பு, என்ற பரிணமவாதியை நோக்கி மேலு மருளிச்செய்கிறார்.

ஆவதா யழிவதாகி வருதலால்-காணப் பட்ட பிரபஞ்சமெல்லாம் தோன்றியுமழிந்தும் வருகையாலும்,—அறிவுதானுந் தாவலால்-ஆன்மபோதஞ்சென்று அதுவது வென்று சுட்டியறிகையாலும்,—உலகபோகந் தனுகரணாதியாகி மேவலால் - மாயாகாரியமாகிய தனுகரண புவனபோகங்களுமாய்ப் பொருந்துகையாலும்,— மலங்களாகி விரவலால் - மாயாமலமுங் கன்மமலமும் ஆகப் பொருந்துகையாலும்,—வேறுமாகியோவலால்-ஆன்மாவுக்கு அன்னியமுமாய் ஓர் அவதரங்களிலே நீங்குகையாலும் இங்ஙனஞ் சொல்லிவந்த முறைமையினால்,—அசத்தாஞ்சுட்டி யுணர்பொரு ளானவெல்லாம் - ஆன்மாவால் சுட்டியறியத்தக்கவை யெல்லாம் அசத்தியமுமாய் நிலையில்லாத பொருளாம்.

இதனாற் சொல்லியது பிரபஞ்சந் தோன்றி நின்று ஒடுங்கி மீளவுந் தோன்றுகை யாலும் அதுவிது வென்று சுட்டியறி

கையினாலும் தனுகரண புவனபோகமா யிருக்கையினாலும் மலங்களாக வந்து பொருந்தி நீங்குகையினாலும் ஆன்மபோததாலறியப்பட்ட பிரபஞ்ச மெல்லாஞ் சித்தல்லவா யிருக்கையினால் சிவசொரூப மல்லவென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

அறிவுதானும் - சுட்டறிவாவது,—ஆவதா யழிவதாகி வருதலால் - தோற்ற நாச முறுதல்பற்றிக் காலத்தா லேகதேசமாதலும்,—தாவலால் - இடத்தா னேகதேச மாதலும்,— உலகபோகந் தனுகரணதியாகி மேவலால்- புவனபோகந் தனுகரணமாகி யதுவதுவாய்ப் பலவேறு வகைப்படுதலும்,—மலங்களாகி விரவலால் - மலத்தோடு விரவுதலும்,— வேறுமாகி யோவலா லசத்தாம் - வேறுபடுதலுமாகிய விவ்வியல்புகளுடைமையான் அசத்தே யாகலின், ஆன்மா,—எல்லாஞ் சுட்டியுணர்பொருள் - இவ்வறிவினா லறியப்பட்டவனைத்து மசத்தாவனவன்றி யவற்றி லொருபொருளுஞ் சத்தாதல் செல்லாது.

இதனானே யறிபொருள்களி னொருசாரனவேயன்றி யனைத்து மசத்தாதலில்லை யென்னுந் தார்க்கிகரை நோக்கி யறிபொருளனைத்து மசத்தென்பது அவ்வறிவியல்புபற்றித் தெரிந்துணர்த்தப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

(இதவுமது.)

மண்டனில் வாழ்வும்வானத் தரசயன் மாலார்வாழ்வு, மெண்டரு பூதபேத யோனிக ளியாவுமெல்லாங்,

கண்டவிந் திரமாசாலங் கனாக்கழு திரதங்காட்டி, யுண்
டுபோ லின்றாம்பண்பி னுலகினை யசத்துமென்பர்.(ரு)

(இ-ள்.) (மண்டலில்வாழ்வும்...அசத்துமென்பர்.) எ-து. இ
ந்த்ரசாலமுதலிய லீலைகளைப் பார்க்கும்பொழுது மெய்போல
த் தோன்றிப் பின் னதனுண்மையை விசாரித்தறியுமிடத் தஃ
தில்லையாகு முறைமைபோல, மண்முதலாயுள்ள மூன்றுலோகத்
திலுள்ள போகங்களுக்குப் பிரமாவு மாலு மொன்றுக்கொன்
று மாறுகொண்டடித்துப் பட்டுப் புசிக்குஞ் செல்வங்களுக் பூ
தபரிணமத்தி லுண்டாகிய வெண்பத்துநான்கு நூறாயிரமென்
றெண்ணப்பட்ட யோனிபேதங்களு மற்று முண்டாகப்பட்ட
வைகளெல்லாத்தையும் நிலையில்லாத வசத்தென்று சொல்லு
வர்க ளறிவாலுயர்ந்தோர்கள். எ-று. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

பாஞ்சராத்திரிகள்¶பிராகிருத லோகமே அநித்தியம், அப்
பிராகிருத லோகம் நித்தியமாகிய திவ்ய மங்கள + விக்ரகரா
கிய விஷ்ணு வெழுந்தருளி யிருப்பர் என்பர்கள்; அதவு மசத்
தேயென்பது மேற் கூறுகின்றது.

பூமியி லுண்டாகிய ஐஸ்வரியங்களும் ஸ்வர்க்கத்திலே தே
வேந்திராதி தேவர்களைஸ்வரியங்களும் சத்யலோகத்திலே பிர
ம்மாதிகளுடைய ஐசுவரியங்களும் பிரகிருதிக்குமேலப்பிராகிரு
தலோகத்தில் பரவாசுதேவர் முதலாகிய பெயர்களுடைய ஐஸ்
வரியங்களும் பிரதிவ்யாதி பிரகிருதி பரியந்த லோகங்களு மிந்
தலோகங்களி லுண்டான தேகங்களு † மிந்திரசாலம்போலுங்
கனவுபோலும் பேய்த்தேர் போலும் * தாத்காலிகத்திலே மெ

ய்யாகத் தோன்றிப் பின் பில்லையாகையால் பிரபஞ்சத்தைப் பெரியோர்கள் அசத்தென்றுஞ்சொல்லுவர்கள்.

அர்த்தாங்கி காரமாக அசத்து மென்கையால் சத்தென் கிறத்தையுந் தோற்றிவிக்கின்றது. ஆகையாற் சதசத்தாகச் சொல்லவேணும். அப்படிச் சொல்லி லனேகாந்திக தோஷ முண் டென்னில்? அஃதன்று. ‡ சுத்திகா ரசிதப் பிராந்தி போல + பிராதிபாசிக மாத்திரமு மல்லாமல் சிவனையு மா ன்மாக்களையும்போல நித்யத்வமல்லவாம் ÷ ஆப்பிரளய சத் தாகையால் லோக § திருஷ்டியா சத்தும் சாஸ்திர திருஷ்டி யா அசத்து மாகையால் சதசத் தென்னும் வியவகாரத்தினு லனேகாந்திக வாதப் ‖ பிரசத்தியில்லை. பிரபஞ்சத்துக்கு பிர ளய முண்டென்ப தெதினாலே யறியப்பட்ட தென்னில் சுழு த்தியிலே ஆன்மாவுக்கு இந்திரியாந்தக்கரணங்க ளில்லை யா கையால் ┼ ஆயு ரவசானத்திலே தேகாதிகள் நாசமாகையா லிந்த தேகாபிமானிக்கு ஆயுரவசானத்திலே தேக நாசமான துபோல பிரமாண் டாபிமானியான பிரமாவினுடைய ஆயுர வசானத்திலே பிரமாண்டம் பிரளயத்தை யடையும். மேலு ள்ள தத்துவ புவனங்களு மிவ்வாறே தத்தத் தபிமானதேவ தாமூர்த்திக ளாயு ரவசாநத்திலே பிரளயத்தை யடையு மாகை யால் சர்வப்பிரளய முண்டு.

¶ பிராகிருதம் - பிரகிருதியுடையது × விக்ரகம் - சரீரம் † இந்தரசாலம் - கண்கட்டி வித்தை * தாத்காலிகம் - அந்த காலத்தது ‡ சுத்திகாரசிதம் - கிளிஞ்சல்வெள்ளி + பிராதிபா சிகம் - தோற்றுகிறது ÷ ஆப்பிரளயம் - பிரளயபரியந்தம் § தி ருஷ்டியா - பார்வையால் ‖ பிரசத்தி - சம்பந்தம் ┼ ஆயு ரவா சனம் - ஆயுசுமுடிவு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதுவுமது.

சமுத்திரதம் - கானல்,—இந்திர சால முதலியவை தங்கள் தங்கள் சுபரூபங்களை யுண்டு போற் காட்டி,—இன்றும் பண்பின் - பொய்யாந்தன்மை போல்,—மண்டலில் வாழ்வுமுதலிய வெல்லாம்; உண்டு போலின்றும் பண்பின் - உற்பவித்தெப் போது நிலை பெற்றிருப்பது போலிருந்து சடுதி நாசமாதலால்,—பொய் போற் புரிப்பது மாத்திர மெய்யே யென்று விவேகித்தறியாத வேதாந்திகள்,—உலகினை யசத்துமென்பர், சைவசித்தாந்திகள் இயற்கையாற் சத்துச் சத்திய மென்றும் பிரபஞ்சத்தை அசத்தசத்திய மென்பார்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

காணப்பட்டன வளைத்தும் இந்திரசால முதலியனபோல நெடுங்கால நிலைபெறுவபோலத் தோற்றி யங்ஙனம் விரையக்கெட்டு மறைந்துபோ மியல்புபற்றி அவற்றை யசத்தென்றலமைவுடைத் தென்பதாம்.

அசத்துமென்னு மும்மை பொருட்டன்மையாற் சத்தென்பதுபட நின்ற வெதிர்மறை.

இந்திரசாலம் தோன்றும் பொழுதே இல்லையாய் வேறுவனவற்றிற்கும், சனுக்காட்சி கடைபோதலின்றி இடையே யழிவன வற்றிற்கும், சமுத்திரதம் ஒருகாரணங்காட்டி யழிவெய்துவனவற்றிற்கும் உவமையாயின.

இதனானே, சற்காரியவாதத்தில் அசத்தென வொன்றின் மையின் ஈண்டறிபொருள் அசத்தென்றலமையுமாறு யாங்ஙனமென்னுஞ் சாங்கியரை நோக்கி, அறிபொருள் அசத்தாமாறு உவமையோடு படுத்துக் காட்டப்பட்டது.

இவையிரண்டு செய்யுளானும் 'அறிபொருளசித்தசத்தாம்' என்ற முதற்கூற்றை வலியுறுத்தவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

சத்தியம்போற் றோன்றி அசத்தியமாய்ப் போமென்றதெங்ஙனமென்றும் அசத்திய மென்று சொல்லுகிறவைதான் ஏதென்றுங் கேட்ட பரிணாமவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

மண்டலில்வாழ்வும்- பூமியிலுண்டானவர்களுடைய வாழ்வுகளும்,—வானத்தரசயன் மாலார்வாழ்வும்- தெய்வலோகத்துக்கு இராசாவான இந்திரன் பிரமா விஷ்ணு இவர்கள் செல்வங்களும்,— எண்டரு பூதபேத யோனிக ளியாவுமெல்லாம்-பஞ்சபூதங்களென்று சொல்லப்பட்ட பூதகாரியங்களின் வகுப்புக்க ளெல்லாம் உண்டுபோற் றோன்றி யில்லையாய்ப் போம். அதெங்ஙனே யென்னில்,— கண்ட விந்திரமாஞாலங் களுக்கமு திரதங்காட்டி யுண்டுபோ லின்றும்பண்பினுலகினை யசத்து மென்பர்- காணப்பட்ட விந்திரஞாலங் காண்கிறவர்களுக் குண்டாய்க் காட்டுகிறவர்களுக்கு இல்லையான தன்மை போலவும் உண்மையாகக் கையு மெய்யுந் தீண்டி நிற்க விழித்த விடத்துப் பொய்யான கனவு போலவும் கண்ணுக்குநீர்போலத் தோன்றி நிருபித்தார்க்கு அதுபொய்யாய் கான

ளுள்ளதாகத் தோன்றின முறைமைபோல விசுவத்தையும் நிலை நில்லாதென்றே சொல்லுவர்கள்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்சூ-சூ,க-வெ "அசத்தறியாய் கேணீ அறிவறிந்தெல்லா, மசத்தாகுமெய்கண்டா ரூயி - ளசத்தல்லாய், நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு, மோரினவை யின்ருமாருப்பு,, என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது பூலோகத்தி லுண்டானவர்கள் செல்வமும் தெய்வ லோகத்தி லுண்டான பிரம்ம விஷ்ணு இந்திரன்முதலா யுள்ளவர்கள் செல்வமு மற்றுமுண்டான பூதகாரியமாகிய சர்வயோனிக ளுடைய பேதங்க ளெல்லாம் காணப்பட்ட விந்திரஞாலம் போலவும் கனவுபோலவும் பேய்த்தேர் போலம் உள்ளதாகத்தோன்றி இல்லையான முறைமைபோல விசுவத்தையும் நிலைநில்லாததென்றே சொல்லுவர்கள் என்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மண்டனில் வாழ்வும் - மண்ணுலகி னரசனாய் வாழ்தலும்,—வானத்தர சயன் மாலார்வாழ்வும்- மேலுலகத்திந்திரன் அயன் மான் முதலியோர் பதவியைப்பொருந்தி வாழ்தலும்-எண்—ரு பூதபேத யோனிகள்யாவு மெல்லாம்- எண்பத்திநான்கு நூருயிர யோனி பேதங்களிற் பொருந்தி வாழ்தலும்,—கண்டவெல்லாம்-காணப்பட்டனவாகிய விவ்வளைத் தும்,—இந்திரமாஞாலம்-இந்திரஞாலந் தோன்றும் பொழுதே யில்லையாய் வேறுபட்டும்,—கனு -கனக்காட்சிக் கடைபோதலின்றி யிடையே யழிபப்பட்டும்,—கழுதிரதம் - கழுதிரதம் ஒருகாரணங் காட்டியழியப்பட்டு நின்ருற்போல,—உண்டுபோற் காட்டி - நெடு

ங்கால நிலைபெறுவனபோலத் தோன்றி,— இன்றும்பண்பில் - அங்ஙனம் விரையக்கெட்டு மறைந்துபோமியல்பு பற்றி,—உலகினை யசத்துமென்பர்-அவற்றையசத்தென்றல் அமைவுடைத்தென்பதாம்.

இதனானே சற்காரிய வாதத்தி லசத்தென வொன்றின்மையி னீண்டறிபொரு ளசத்தென்ற லமையுமாறு யாங்ஙனமென்னும் சாங்கியரைநோக்கி அறிபொரு ளசத்தாமாறு உவமையொடுபடுத்துக் காட்டப்பட்டது.

இவைஇரண்டுசெய்யுளும் ‘அறிபொரு ளசித்தசத்தாம்’ என்று முதற்கூற்றை வலியுறுத்தவாறு.

☞ சூ-௫, ௧-௮, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

மேலீச னறியப்படாதவனென்று சொல்லுவாரை நோக்கி யவ னறியப்படுவனென் றுணர்த்துகின்றார்.

உணராத பொருள்சத்தென்னி லொருபய னில்லைத்தானும், புணராது நாமுஞ்சென்று பொருந்துவ தின்றுமென்றுந், தணவாத கருமமொன்றுந் தருவது மில்லைவானத், திணரார்பூந் தொடையுமானமக் கெசி மயிர்க் கயிறும்போலும். (௪)

(இ-ள்.) உணராத பொருள் சத்தென் னி லொருபய னில்லை — ஒருவராலுமென்று மறியப்படாத பொருளைச் சிவனென்று நீசொல்லில்? அவனா லொரு ப்ரயோசனமுமில்லையாய்விடுங்காண்,

தானும்புணரா து	அதுதா னம்மையும் வந்து பொருந்தமாட்டாது.
நாமுஞ் சென்று பொருந்துவ தின்றும்	நாமு மதைச் சென்று கூடுதற் கறிவின்மையா லதனைக் கூடவுமாட்டோம்.
என்றுந் தணவாத கருமமொன்றுந் தருவதுமில்லை	எப்பொழுது மான்மாவைவிட்டு நீங்காத பஞ்சகிர்த்யங்களை யுண்டாக்கமாட்டாது,
வானத் திணரார்பூந் தொடையுமாமைக் கெழுமயிர்க் கயிறும்போலும்	ஆகாசத்திற் கொத்தார்ந்த பூவாலே யுண்டாக்கின மாலையும், ஆமையின் முதுகிலெழுந்த ரோமத்தா லுண்டாக்கின கயிறு முண்டென்பதற் கொக்குங் காண் நீசொல்லியது. எ-று.

இதற்குப் புராணத் தறிக. (௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேலறியப்படாத பொருளை சத்தென்னி லாகாசப் பூவுமாமை மயிர்க்கயிறும்போல வில்லையா யதனாற் ப்ரயோசனமுமில்லை யென்னுஞ் சங்கை.

அறிடப்பட்ட தெல்லா மநித்தியம் அறியப்படாத தெல்லா நித்தியசதசெதன்னில்? அறியப்படாத வஸ்துவினாலே யொரு ப்ரயோசனமுமில்லை, அது நம்மை யொருக்காலும் பொருந்தத்தக்கதில்லை, நாமதை யொருக்காலும் பொருந்தத்தக்கதில்லை, கெடாததாக நமக்கொன்றை யது தரத்தக்கதில்லை, இப்படி

க்கொத்ததாக ஒருவஸ்து வுண்டென்கிறது ஆகாயத்திற்பூங் கொத்து மாமை மயிர்க்கயிறு முண்டென்பதற் கொக்கும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவமொருபிரகாரத்தினுலு மறியப்படாத பொருளென் றுரைப்ப மறுத் துணர்த்துகின்றார்.

உணராத பொருள் சத்தெனில் - சிவமறியப்படும் பொருளன்றென்று சொல்லில்,—ஒருபயனில்லை - போக மோக்ஷங்கள் வந்து பொருந்துவதின்று,—தானும் புணராது நாமுஞ் சென்று பொருந்துவதின்றாம் - சிவன்தானும் தமக்கொத்த சிவசாதியாகக் கடவர்களென்று சங்கற்பிப்பது மின்று, நாமுமொத்தொரு சிவசாதிபாவதின்று,—என்றுந்தணவாதகரும மொன்றுந் தருவதுமில்லை-நித்திய கன்மானுஷ்டானங்களைக் கற்பிப்பதுமின்றி இடைவிடாது பஞ்சகிர்த்தியம் பண்ணுவதுமின்று,—வானத்தினாரார் பூந்தொடையு மாமைக்கெழு மயிர்க் கயிறும் போலும் - ஆகாசப் பூமாலை ஆமை மயிர்கயிறு போற் சூனியப்பொருளாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அறிபொருள்போல அறியப்படாத பொருட்குத் தோற்றக்கேடுமுதலியன வின்மையான் அதனைச் சத்தெனச் சொன்டாற் படுமிழுக்கென்னை யெனின்? அங்ஙனங் கொண்டதனாற் பெறக்கடவதோர் பயனில்லை, ஒருஞான்றும் அதனோடெமக் காரியமுண்டாமாறு மில்லை, அதனு லாகக்கடவதோர் செய

னுமில்லை யென்பது ; ஆகாயப்பூவானியன்ற மாலை ஆமைமயிரா னியன்ற கயிறுமுதலிய உணராத பொருள்களின் வைத்தறிய ப்படுதலான், அது பொருளன்றென்பதாம்.

ஆகாயத்தினு மாமையினும் பூவுமயிரும் புலனாதலின்றி அதிசூக்குமமாயுள அவற்றானாகற்பாலனவு முளவெனக்கொண்டு பிணங்குவாருளராயினும், அவறை மறுத்தற்பொருட்டு அறிந்து செய்வதொரு வினைமுதலை யின்றியமையாத காரியப் பொருண்மேல் வைத்துகூறினார்.

இதனானே, அறியாதது உண்டென்றூற் படுமிழுக்கென்னை யென்னு மாணாக்கனை நோக்கி இரண்டாங்கூற்று வலியுறுத்தப் பட்டது.

அற்றேல் இவ்விரண்டுமின்றி நிற்கும் பொருளை அநிர்வசநீயமென்றது சித்தொடுசத்தாய் நிற்குமென்றது யாங்ஙனமென்னும் மாயாவாதியைநோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

ஆன்மாவி னறிவா லறியப்பட்ட தெல்லாம் அசத்தா யழிந்து போகையால் சிவனை இவனா லறியப்படா தென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச் செய்கிறார்.

உணராத பொருள் சத்தென்னில் ஒருபய னில்லை - ஒருவராலு மறியப்படாத பொருள் சிவமென்று நீ சொல்லில் ?— ஒரு பயனில்லை - ஒரு பிரயோசனமு மில்லை என்பானேன்,— தானும் புணராது - அதுதான் நம்மை வந்து பொருந்தாது. அதுவுமன்றி,—நாமுஞ் சென்று பொருந்துவ தின்றாம் - நா

மு மதைச் சென்று கூடமாட்டோம்,—என்றுந் தணவாதக ருமமொன்றுந் தருவதுமில்லை - எப்பொழுதும் விட்டுநீங்காத பஞ்ச கிருத்தியங்களையும் உண்டாக்கமாட்டாது. அதுவன்றியு ம் இவனாலறியப்படாத சிவம்,—வானத்திணரார்பூந்தொடை யு மாமைக் கெழு'மயிர்க் கயிறும் போலும் - ஆகாசத்திலே செ த்துக் கொத்தாகநிறையப் பூத்த பூவாலே மலடிபெற்ற மக ன்கட்டின மாலையும் ஆமையின் முதுவிலே முளைந்த மயிராலே திரித்தகயிறும் போலும்.

இதனாற் சொல்லியது சிவனை யான்மாவா லறியப்படா தென்ற பாடாண வாதியை நோக்கி அவனால் நமக்கொரு பய னு முண்டாகாதென்றும், நாமும் அவனைக் கூடுவதில்லை அவனு ம் நம்மைப் பொருந்துவ தில்லை, ஆகையால் ஆகாசப் பூமாலை போலவும் ஆமை முதுவில் மயிர்க் கயிறுபோலவும் இல்லாத பொருளாய்ப் போம்; ஆகையால் அது அர்த்த மாகாதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

உணராதபொருள் சத்தெனில் ஒருபயனில்லை - அறிபொ ருள்போல அறிப்படாதபொருட்குத் தோற்றக்கேடு முதலி ய வின்மையா னதனைச் சத்தனெக்கொண்டாற் படும்இழுக் கெ ன்னை யெனின்? அங்ஙனங் கொண்டதனாற் பெறக்கடவதோர் பயனில்லை.—என்றுந் தானும் புணராது நாமுஞ்சென்று பொரு ந்துவ தின்றும்-ஒருஞான்று மதனோடெமக் கோரிசைபுண்டா மாறுமில்லை.—தணவாதகருமமொன்றுந் தருவது மில்லை - அத னு லாகக்கடவதோர் செயலுமில்லையென்பது,— வானத்திணா ரார் பூந்தொடையு மாமைக் கொருமயிர்க் கயிறும் போலும்-

ஆகாயப்பூவா லியன்றமாலை ஆமைமயிராலியன்ற கயிறுமுத லிய வுணராதபொருள்களின்வைத் தறியப் படுதலானது பொருளன்றென்க.

இதனானே யறிபாத துண்டென்ருற் படுமிழுக் கென்னை யென்னு மாணுக்கனை நோக்கி யிரண்டாங்கூற்று வலியுறுத்தப் பட்டது.

சூ - ரு, உ - அ, முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

பாடாணவாதியுரைதுசிவனை யறியுமிடத் தேனைப் பொருள்
கள்போல வறிவா லறியப்படாதோ வென்று வி
னவ அவனைக்குறித் துணர்த்துகிருர்.

தத்துவஞ் சத்தசத்துச் சதசத்து மன்றென்ரு
லென், னுய்துணர்ந் துண்டோயின்றே வென்றவர்க்
குண்டென்றேதில், வைத்திடுஞ் சத்தேயாகு மனந்
தொடு வாக்கிறந்த,சித்துரு வதுவசித்த மனத்தினுற்
றேர்வதெல்லாம். (ரு)

(இ-ள்) தத்துவஞ் சத்தசத்துச் சதசத்துமன் றென்ருலென் — உண்மைப் பொருளாகிய சிவ ஞன்மாக்களாற் காணப்பட்டுண்டாயிருக்கிறவனுமல்ல, இல்லாத பொருளா யிருக்கிறவனு மல்ல, சத்து மசத்துமா யிருப்பானு மல்ல, இந்த மூவகை யன்றியிலே காணப் படாமலுங் காணப் பட்டுமிருப்ப தொன் றுண்டென்று சொல்லுகிறதினு லென்ன பயன்தான்.

உய்த்துணர்ந் து — சிவனென்பா னொருவனுண்டோ வில்லை

ண்டோவின் றோ வென்றவர்க் குண்டென் றோதில் — யோ வென்று கேட்டவர்களுக்குச் சிவனு ண்டென்று சொல்லுமிடத்து,

வைத்திடுஞ் சத்தேயாகும் — அச்சிவ மூண்டென்று சொல்லப்படும். அஃதொழிய வொருக்காலுங் காணப்படான். அஃதென்னெனில்?

மனத் தொடு வாக்கிறந்த சித் துருவது வசித் தா மனத்தினுற் றேர்ந்ததெல் லாம். — அதுதான் மனோவாக்குக் காயங்களுக் கெட்டாமல் நிற்கிற சிற்சொரூபமாயிருக்கு மாதலால் நீ மனத்தா லுகித் தறியப்படுவ தெல்லா மசித்தாதலா லதுவழிந்து போகா நிற்குமென் றறிவாயாக எ-று.

சிவஞானபோதம். ரு, சூ, உ-வெ. "எண்ணிய சத்தன் ற சத்தன்று மென்றலென், கண்ணியுரைகென்றன் மெய்கண்டா ன்—எண்ணி, யறிய விரண்டா மசத்தாதல் சத்தா, மறிவதியா மெய்சிவன்றாளாம், என்றார் முன்னூலாரும். (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இதற்கு மேலுத்தரம்.

தத்துவஞ் சத்தசத்துச் சதசத்து மன்றென்றலென்- பர தத்துவனுகிய சிவ னறியப்படில் அசத்தாம், அறியப்படானு கில் * சத்பாவமே யில்லையாம், அதனுற் சதசத்தென்னில்? † வி ருத்த தர்மத்வயாச்ரய மொருவஸ்துவுக்குக் கூடாது. இவ் வாறு ‡ சங்கிதமாக வொருவஸ்து வுண்டென்று சொல்லுகிற தினுற் பிரயோசன மென்ன வென்னில்?—உய்த்துணர்ந்து

டோவின்றே வென்றவர்க் குண்டென்றேதின்-முமுக்ஷுக்க ளாய் சைவமதத்திலேயுற்றுச் சாஸ்திரங்களை யோதிச் சரீரா திகளுக்கு மான்மாக்களுக்கும் பரமாக வொருவஸ்து வுண்டோ வில்லையோவென்று§ ப்ரஶ்னைபண்ணுமவர்களுக் குண்டென்று சொல்லு முறைமை,—வைத்திடுஞ் சத்தேயாக மனத்தொடுவா க்கிறந்த சித்துருவது-மனோவாக்குகாயாதிகளை நீங்கினின் றறி யப்படும் பரம சிவம் சத்சித் ஸ்வரூபமென் றாகமங்கள் ஸ்தா பித்திடும்.—அசித்தாமனத்தினாற் றேர்வதெல்லாம்-மனது முத லான கரணங்களினாலே யறிவதெல்லாம் ஜடமு மநித்தியமு மாமென் றிதன்பொருள்.

* சத்பாவம் - இருப்பு, † விருத்ததருமத்துவயம்-விரோ தமான இரண்டுதருமம், ‡ சங்கிதம்-சந்தேகிக்கப்பட்டது. § ப்ரஶ்னை - வினா.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

வேதாந்தி விசேஷர்கள் பிரமமநிர்வசநீய மென்று சொல் ல மறுத் துணர்த்துகின்றார்.

தத்துவம் - பிரமம்,—சத்தசத்துச் சதசத்து மன்றென்று லென் - நீர் சத்தென்று சொல்லுஞ் சிவமுமன்று, அசத்தென்று சொல்லும் பிரபஞ்சமு மன்று, சதசத்தென்றுசொல்லு மான் மாவு மன்றென் றநிர்வசனீயமாய்ச் சொல்லிற் குற்றமேது. அ ப்படி அநிர்வசனீயமாய் அப்பிரயோசனமாய் ஒரு பொருளிரா து.—உய்த்துணர்ந்து - விசாரித்துப்-பார்த்து,— உண்டோவி ன்றோ வென்றவர்க்கு-அந்த அநிர்வசனீயமாகும் பிரம முள்ள பொருளோ வில்லாதபொருளோ வென்றுகேட்டவர்க்கு,—உ ண்டென்றேதில் - இல்லையென்றால் முயற்கொம்பொக்கு மெ

ன்று உள்ளபொருளென் றுரைக்கில்,—வைத்திடுஞ் சத்தேயாக - சத்தாகிய சிவமதுவென்று சாற்றப்படும்.—அச்சிவமிந்திரியப் பிரத்தியக்ஷ மல்லாதிருந்தாலு மானதப் பிரத்தியக்ஷ மாகாதோ வென்ன? ஆகாதென் றறைகின்றார்.—'மனமொடுவாக்கிறந்தசித்தருவது-முன்சொல்லிய பிரகாரத்தாற் சிவசத்தி விளங்க விளக்குஞ் சிற்சத்திப் பிரத்தியக்ஷமா மந்தச் சிவமுதலிய சிற்பொருள் சிற்சுவரூபம்,— மனத்தினாற் றேர்வதெல்லாம் - சமூலப்பிரபஞ்ச காரணங்களுடனே கூட்டமெல்லாம்,—அசித்தாம்-சடரூபமாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

மேற்கூறிப்போந்த இருதிறனுமல்லாத பிரமப்பொருளாவது உள்பொருளுமன்று இல்பொருளுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்று என்று அநிர்வசனமாகக்கூறிற் படுமிழுக்கென்னை யெனின்? நன்று சொன்னாய். அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும்பொருளொன்று உண்டோவில்லையோவென வினாயினார்க்கு இல்லையென்னில், உணராத பொருட் கோதிய குற்றமாமென் றஞ்சி உண்டென்று கூறுவாயாகின், பிரமமுள்பொருளாவதன்றி அநிர்வசனமாதலின் றென்பதற்கு உளவாயமொழியே சான்றாயிற்று. உள்பொருளாயி னறியப்படுமெனிற் சுட்டுணர்விற்பட்டன வெல்லாஞ் சடமா யழிவெய்திவிடுமாதலாற் சுட்டுணர்வினைக் கடந்து நின்ற சேதனப் பொருளே யது வென்பதாம்.

தேர்வதெல்லாமென்பது "உள்ளிய தெல்லா முடனெய்தும்" என்றாற்போல ஒருமைப் பன்மை மயக்கம்.

அற்றேல், அறிபொருளுமன்று அறியாததுமன்றென விடு

ப்பதுஉம் சத்து அசத்துச் சதசத்து மன்றென்பதுபோல் அநிர்வசனமாய் முடியுமன்றே யென்னு மவ் வாதியைநோக்கி அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

பாடாணவாதி மத மேலருளிச் செய்கிறார்.

தத்துவஞ்சத்தசத்து சதசத்துமன்றென்றுலென்-நீ அந்த வுண்மையை நிருபித்து சத்துமல்ல அசத்துமல்ல ஆகையால் உண்டென்றது மில்லையென்றதும் இரண்டுமல்ல வென்றால் பிரயோசனமென்,— உய்த்துணர்ந்து-கேட்டவர்களுக்குத் தன்னுடைய வறிவைப் பிரித்தறிந்து,—உண்டோ வின்றோ வென்றவர்க் குண்டென்றோதில் - அந்தப்பொருள் உள்ளதோ இல்லாததோவென்று கேட்டவர்க்கு அந்தச் சத்தியத்தைத் தரிசித்தவன் உண்டென்று சொன்னபடியாலே,—வைத்திடுஞ் சத்தேயாக - திவ்வியாகமங்கள் அந்த உண்மையைச் சத்தென்றே சொல்லப்படும்.—மனத்தொடு வாக்கிறந்த சித்துருவது - மனவாக்குக்குக் காயங்களுக்கெட்டாத ஞானசொரூபமாயிருக்குமந்தச் சிவம்,—அசித்தா மனத்தினுற் றேர்வதெல்லாம் - ஆனமபோதத்தாலே சுட்டி யறியப்பட்டதெல்லா மசத்தாயழிந்து போகாநிற்கும்.

இதற்குப் பிரமாணம். சங்கற்பநிராகரணம், பாடாணவாதி மதம். "காட்சி யென்னக் காணுத்துயர - மாட்சியைமுத்தியெனவகுத் தனரோ"எனவே சிவனை இவனுலறியப்படா தென்பது கருத்து. சிவஞானபோதம். சு-சூ,உ - வெ, "எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென், கண்ணியுள தெனறன்

மெய்கண்டா—னெண்ணி,யறியவிரண்டா மசத்தாதல் சத்தா, மறிவறிபா மெய்ச்சிவன் றாளாம்.” என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பாடாணவாதி இவனா லறியப்பட்ட பிரபஞ்சம் அசத்தென்றும் இவனா லறியப்படாத சிவம் சத்தென்றும் தன்மதங் கூறின பெருமை யறிவித்தது.

—

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

தத்துவஞ்சத்தசத்து சதசத்து மன்றென்றாலென்-மேற்கூறிட் போந்த விருதிறமல்லாத பிரமப்பொருளாவது உள்பொருளு மன்று இல்பொருளு மன்று இரண்டுமாவது மன்று வேறுமன்று என் றநிர்வசனமாகக்கூறிற் படு மிழுக்கென்னை யெனின் நன்று சொன்னாய்,— உய்த்துணர்ந் துண்டோ வின்றோ வென்ற வர்க்கு-அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும்பொரு ளொன் றுண்டோ வில்லையோவென வினாயினார்க்கு,—உண்டென்றோ தில் வைத்திடுஞ் சத்தேயாகும்-இல்லையெனி லுணராதபொருட் கோதிய குற்றமென்றஞ்சி யுண்டென்று கூறுவாயாகிற் பிரமம் உள்பொருளாவதன்றி யநிர்வசனமாத லின்றென்பதற் குளவாய மொழியே சான்றாயிற்று — மனத்தினாற் றேர்வவெல்லா மசித்தாம்- உள்பொருளாயின் அறியப்படுக வெனிற் சுட்டுணர்விற்பட்டனவெல்லாஞ் சடமா யழிவெய்திவிடு மாதலால்,— மனத்தொடு வாக்கிறந்த சித்துருவது - சுட்டுணர்வினைக் கடந்துநின்ற சேதனப் பொருளே யதுவென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யான்மாவா லறியப்படாதாகி லொருமுத லு மில்லையோ வென்றவனைக்குறித் தறியுமிட முணர்த்துகின்றார்.

அறிபொரு ளசத்தாய்வேறு மறிவுறுப் பொருள்சத்தென்னி,லறிபவ னறியானுகி லதுவின்று பயனுமில்லே, யறிபவ னருளினுலே யந்நிய மாகக்காண்ப, னறிபொரு ளறிவாய்வேறு யறிவரு ளுருவாய்நிற்கும். (௬)

(இ-ள்.) அறிபொருளசத்தாய்வேருமறிவுறுப் பொருள் சத்தென்னில் — ஆன்மபோதத்தாற் சுட்டி யிந்திரியங்களாலேகண் டதனைப் புத்தியினுலே யறியப்படுமவையெல்லா மசத்தென்றும் இவ்வான்மாவுக்கு வேறு யறிடப்படாத பொருள் சத்தென்று நீ சொல்லில்?

அறிபவ னறியானுகி லதுவின்றுபயனுமில்லே — எல்லாத்தையு மறிந்து பிரயோசனங்கொள்ளத்தக்க வான்மாச் சத்தாகிய பொருளே யறியா திருப்பானுகி லந்தப் பொருளென்பதொன்று மில்லேயாய் அந்தப் பொருளாற் கொள்ளும்பிரயோசனமு மில்லேயாம். ஆனுற் சசவிஷாணம் போல வத்தியந்தா பாவமோ வென்னில்?

அறிபவ னருளினுலே யந்நியமாமாகக்காண்பன் — சிவனுடைய வருளினுலே பக்குவான்மாக்க ளவனேத் தனக்குவேறறக் காண்பர்கள்:

அறிபொரு ளறிவாய் வேருய் — அறியப்படும் பொருளாகிய சிவனே சத்போகமாகவும் வாக்குமனுதீத கோசரனுகவுந் தனக்குவேறற வறிவர்கள்.

அறிவரு ளுருவாய் நிற்கும். — அவனுடைய சத்தியே தாரகமாய் நின்று சுவானுபூதியாகிய மேலான வின்பத்தை யுற்றிருப்பார்கள் எ-று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலு மதற்கே புரநடை—.

அறிபொருளசத்தாய்வேரு மறிவுருப்பொருள் சத்தென்னில்-அறியப்பட்ட வஸ்துக்களெல்லாம் அநித்தியமுமா யந்நியமுமாம். அறியப்படாததே நித்தியமென்னில்?—அறிபவனறியானாகிலதுவின்று பயனுமில்லை-அறியவேண்டியஆன்மாவினாலே யறியப்படாததாகி லந்தவஸ்துவேயில்லை,அதனாற் பிரயோசனமுமில்லை யென்னில்? அந்த வஸ்துவு முள்ளதே, அறியும்படியுமிவ்வாறென்பது,—அறிபவனருளினாலே யந்நியமாகக் காண்பன்- அறியவேண்டிய ஆன்மா பராசத்தி யோகத்தினாலே தனக்கந்நியமில்லாமலே யந்தச் சிவனைத் தரிசிப்பன். தரிசிப்பனென்றபொழுதே காண்பானுங்காட்சியு முண்டாம். அப்பொழு தன்னியமாமென்னில் ? அவ்வாறல்ல. நின்மலானந்த பரசிவ நிட்டையிலே நின்ற ஆன்மா அந்த நிட்டை பிரிந்த பிறகு சிவாநந்தாநுபவமாவ திவ்வா றுண்டாயிருந்தது என்று தெரிகையினாலே யறிவனென்றதொழிய தாத்காலத்திலே யறிப்பட்டதல்ல. அஃதெப்படிப்போல வென்னில்? சுழுத்தியை யடைந்தவன் விழித்தபிறகு சுகமாக நித்திரை பண்ணினேனென் றறிந்ததுபோல விது ஜீவன்முத்தியிலே பரமமுத்தியிலே சிவமே யாகையினா லிந்த விசாரத்துக் * கவகாசமேயில்லை. ஆகையால் பனிரண்டாஞ் சூத்திரத்திலே எதிர்மறையாகச் சிவமேயாய் நின்றிடுவ னொன்றது.—அறிபொருளறிவாய்வேரு யறிவருளுருவாய்நிற்கும்-அறியப்படும் பொருளாகிய சிவன் ஞானஸ்வரூபியாய் வஸ்துத. ஆன்மாவுக்கு வேறுமாய்க் கிருபையினாலே யறிவாகிய ஆன்மாவைத் தமக்கு ரூபமாய் வேறறநின்று † அநுபவைக வேத்யராய் நிற்பரொன் றிதன்பொருள்.

* அவகாசம் - இடம், † அநுபவைகவேத்யன்-அநுபவ மொன்றினாலே யறியத்தக்கவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

முன் செப்பியது தன்னைத்தானே சிறிது சிறப்பித்துச்செப்புகின்றார்.

அறிபொருளசத்தாய் வேறும் - அறியப்படும் பொருள் அசுத்தமாய், அசித்தாம்,—அறிவுருப் பொருள் - அறியப்படாத பொருள்,—சத்தெனில்-சுத்தசித்துச் சிவமெனில்,— அறிபவனறியானாகில் - சாத்திய சிவயோகி சித்தசிவ யோகியாய் அறியுந் தன்மையுடைய ஆன்மாச் சிவத்தை யறியாதால்,— அதுவின்று - அச்சிவ மாகாயப் பூப்போற் போம்,—பயனுமில்லை - அச்சிவங் கொண்டு பெறும் போக மோக்ஷங்களும் முட்கோடு கொண்டுழுத பூமியிற் பயிர்ப் பலம்போற் போம்,—அறிபவன்-கரண கலாபமிது வென்று கைக்கொண்டு போக மோக்ஷங்களைச் சாதிக்கும் புருஷன்,—அருளினாலே - இலக்ஷணையினாலிசைத்தலால் ஆகமாதியில் வியத்தமாயும் மந்திர கலாபமார்க்க மஹோபுத்தி யகங்கார விருத்தியில் வியத்தமாயும் புல்லிற் பற்றிய தீபம் போலமேல் நிராலம்பமாயும் சிவசத்தி விளக்கு விளக்கும் தனது சிற்சத்தியினால்,—அனனியமாகக் காண்பன் - சாதிர்ச்ய மென்கின்ற சைவ சாதி சம்பந்தியாக முன் முதல் விருத்தத்துச் சொல்லிய ஞானத்தியான சமாதி சாக்ஷாத் காரக்கிரமத்திலறிந்து தியானித்துச் சமாதித்துச் சாக்ஷாத் கரிப்பன்,— அறிவு - அப்படிக்காணுமான்மா,— அறிபொருளறிவாய்வேறாய் - அறியப்படும் பொருளை அறிசிவப்பொருளை யறியும் வேற்றுச் சிதநாய்,— அருவருளுருவாய் நிற்கும்-தத்துவா தீதமாகிய சி

வனைச் சாக்ஷாத் கரிக்குமிடத்துப் பாச வாசனை தாக்காதபடிக்குச் சொல்லிய முறைமையிற் சிவசத்தி வியஞ்சக வியங்கியத் தன்மைச் சம்பந்திபாய் நின்று சாக்ஷாத் கரிக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

மேற்கூறிப்போந்த வாற்றால் அவ்விருதிறனு மிழுக்குப்படு மென்னுமதனை யறியவல்லா னொருவனுக்கு அச்சிவப்பொருளதனோடொற்றித்து நின்று அவ்வருளானே யறியற்பாலதாம், அங்ஙன மறியப்படும் பொருளாகிய வதுதான் அவ்வறிவேயாய் வேறுமா யுடனுமாய் நிற்பதோ ரியல்பிற்றாகலானென்பதாம்.

அறியுமா றிதுவென்பது பாரிசேடப் பிரமாணத்தா னுணர்த்துவார், 'அறிபொரு ளசித்தாய்வேறு மறிவுறுப் பொருள்சத்தென்னி னறிபவனறிபா னாகி லதுவின்று பயனுமில்லை, என மேர்போந்ததனை அனுவதித்துக்கொண்டு கூறினார்.

கிழவனறிந்தான் கிழத்தி யறிந்திலளென்புழிப்போல அதனையென்னு முருபேற்ற சுட்டுப்பெயர் வருவித்துரைக்க.

அறிவுருவாய் நிற்குமெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

உடனாய் நின்றன்றி யறிவையருளுதல் செல்லாமையின் அஃததற்குக் காரணமாதலறிக.

அகந்நியமாயவழிக் காண்பானும் காட்சிப்பொருளாமாறும் அருளா னுபகரிக்கப்படுமாறும் யாங்ஙனஞ் செல்லுமென்பாரை நோக்கி, அறிவேயாதலும் வேறாதலும் உடனாதலுமாகிய முத்திறமுந் தன்கட்டோன்ற நின்றதோ ரத்துவித வியைபுடைமையின் அவ்வாறாதல் செல்லுமென்பார், அறிபொருளறிவாய் வேறு யறிவருளுருவாய் நிற்கு மியல்பு முடன்கூறினார்.

இவையிரண்டு செய்யுளானும் மாயாவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மூன்றுங் கூற்று வலியுறுத்தப்பட்டது.

அற்றேல் அருளா லந்நியமாகக்காண்ட லெற்றுக்கு யோகபாவனை செய்து காணவே யமையுமென்னும் பாதஞ்சலனை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இவனை மறுத் தருளிச் செய்கிறார்.

அறிபொரு ளசத்தாய்வேறும் அறிவுருப்பொருள்சத்தென்னில் - ஆன்மாவினாலே அறியப்பட்ட பொருள்களெல்லா மசத்தா யழிந்துபோகையினால் நிலைநில்லாததுமா யிவனுக்கு அந்நியமுமா யிருக்கையா லிவனா லறியப்படாதபொருள் அந்தச் சிவமென்று நீ சொல்லில்?—அறிபவனறியானாகி லதுவின்றுபயனுமில்லை - அறியவேண்டும் பகுதியையுடைய ஆன்மாவா லறியப்படாதாகில் அந்தப்பொருளு மில்லையுமாய்ப் பிரயோசனமு மில்லையாம். ஆனாலந்தப் பொருளை யறியும்படி எப்படி யென்னில்?—அறிபவனருளினாலே யந்நிய மாகக்காண்பன் - அறியத்தக்க பகுதியையுடைய ஆன்மா சிவனுடைய வருளினாலே சிவனை வேறாகக் காணுநிற்பன்.—அறிபொருளறிவாய் - இப்படி யறியத்தக்க பொருளானது இவனுக்கறிவுமாய்,—வேறாய் - இப்படிநின்று விடயங்களை யறிவிக்கையினு மிவனுக்கு வேறுமா யிருக்கும். ஆனா லந்தச்சிவ மிவனுக் கன்னியமோ வென்னில் அப்படி அந்நியமாயிராது. அதெங்ஙனே யென்னில்?—அறிவருளுருவாய்நிற்கும் - அந்த விடயங்களைக் காணு மிடத்துச் சிவனுடைய ஞானத்தினாலே யறிகையினா லந்த ஞானத்துக்கு வேறற அந்த ஞானமே வடிவாய்நிற்பன்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் பாடாணவாதி மதம் "காட்சியென்னக் காணுந்துயர - மாட்சிமையுமுத்தி யெனவகுத்துரைக்கிற் - காணுபாவ மரணங்கருமா - மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவரன்றே" என்றும், சிவஞானபோதம்-சூ-சூ,௯-வெ, "உணர்ப வசத்தாத லொன்றுணர்ந் தொன்றை, யுணருநீ நாஞுணரா யாயி—னுணருமுனிற், றுனிரண்டா மெய்கண்டான் றன்ஞ லுணர்தலாற், றுனிரண்டாய்க் காணுன் றமி." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, சிவனை யிவனுலறிபப்படாதாமாகில் அவனு லிவனுக்குப் பயனில்லையா மென்றும் அவனை யறியுமிடத்து அந்நியமாய் நின் றறியப்படும் என்னுமுறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

---o---

அறிபொருளசித்தாய் வேறும் - அறியப்பட்ட பொருள் சடமா யழிதலுமாம்,—அறிவுருப் பொருள் சத்தென்னில் - அறியப்படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலியன வின்மையானகளைச் சத்தெனக் கொள்ளின்,—அறிபவ னறியானுகிலதுவின்ற பயனுமில்லை - அறியப்பட்ட ஆன்மாவா லறிதல்வேண்டும். அஃதிலனே லங்கனங் கொண்டதனுற் பெறக்கடவதோர் பயனுமில்லை.—அறிபவ னந்நியமாக வருளினுலே காண்பன்-மேற்கூறிப்போந்த வாற்ற லவ்விருதிறமு மிழுக்குப் படுமென்னுமதனை யறியவல்லா னொருவனுக்கு அச்சிவப்பொரு ளதனேடொற்றித் துநின்று அவ்வருளானே யறியற்பாலதாம்,— அறிபொருளறிவாய் வேறு பறிவருளுருவாய் நிற்கும்-அங்ஙன மறியப்படும்

பொருளாகிய வதுதா னவ்வறிவேயாய் வேறுமா யுடனுமாய் நிற்பதோ ரியல்பிற்றுகலான்.

இவையிரண்டு செய்யுளானு மாயாவாதி மதம்பற்றி யாச ங்கித்துப் பரிகரித்து மூன்றுங்கூற்று வலியுறுத்தப் பட்டது.

சூ-௬, ௩-வது, புறநடை முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

—o—

சிவனைச் சுவானுபூதியாற் காண்பதன்றி வேறொன் றாலுங் காணப்படாதென் றுணர்த்துகின்றார்.

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம், பாவிக்கு மதுநானென்னிற் பாவகம் பாவங்கெ ட்டுப், பாவிப்ப தென்னிற்பாவம் பாவனை யிறந்து நின்று, பாவிக்கப் படுவதாகும் பரம்பர னருளினாலே. (எ)

(இ-ள்.) பாவிப்ப தென்னிற் பாவம் — பாவபதார்த்தமா யுள்ள சிவனைப் பாவிக்கத்தக்க தென்று நீ சொல்லில்? அதுகா ணப்படுகையால் அசத்தாய் விடும்,

பாவகங்கடக்கிற்பாவம் — வன்னரூபங்களாகப் பாவிக்கப் படாத து சிவமென்னி லது வடிவறுதியாகையான் மனதாலே கற்பித்துக் கொள்ளவேணும் ஆதலா லதுவுமல்ல,

பாவிக்கு மதுநானென்னிற்பாவகம் — பாவிக்கப்படுஞ் சிவந்தான் காணுங் நா னென்று நீசோகம் பாவனை பண்ணுமதுவு ம் பாவனையாய் விடும். அதுவும் அல்ல,

பாவங்கெட்டுப் பாவிப்ப தெ — பாவிப்பதற் கேதுவாயுள்ள கரணங்கள் கெட்டுப் பாவிக்கப்படுவது சிவமென்னில்?

ன்னிற் பாவம்

அப்பொழுது பாழாய் விடும், அதுவுமல்ல. இப்படியானா லதெப்படியென்று கேட்கிறுயாகில்

பாவனையிறந்துநின்று பாவிக்கப் படுவதாகும் பரம்பரனருளினாலே.

இதனைப் பரம்பரனருளினாலே பாவனையிறந்து நின்று பாவிக்கப் படுவதாகு மெனப் பதமாறுக. எல்லாத்துக்கு மேலாயிருக்கிற பரமசிவனை யவனுடையவருளே தாரகமாய் நின்று சுவானுபூதியா லறிவதாதலான் மற்றவற்ருற் காணப்படான் எ-று.

பாவகம் காணப்படும் என்னவே ஊனக்கண்ணாற் காணப்படான் ஞானதிருட்டியாலே காணப்படுவனென்பது கருத்து. "அவனருளே கண்ணுகக் காண்பதல்லா, லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவனிறைவனென்றெழுதிக் காட்டொணுதே" எனவறிக.

இதற்குச் சிந்தியத்தும் நிச்சுவாச தந்திரத்து மறிக. (எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் விசார * புரஸ்ஸரமாக சிவபாவநா † நிருபணம்.

பாவிப்பதென்னிற் பாவம்-சிவனை யந்தர்யாமியென்று நினைக்கவென்னில் அப்பொழுது மனதுண்டு. மனதினுலறியப்பட்டதெல்லா மசத்தாகையால் நன்று.—பாவகம்கடக்கிற் பாவம்-பாவ ‡ நாதீதனென்று நினைக்கவென்னில்? அபாவம் பிரயோசனமில்லையாம்.—பாவிக்கு மதுநானென்னில் - நான்ருனே யந்தச் சிவமென்று தியானிப்பனென்னில்?—பாவகம் - பாவனை மாத்திரமே யொழியப் பலனில்லை. அதெவ்வாறென்னில்? கண்ணை ஆதித்தனென்று பாவித்தால் அதனாலே யந்தகாரம் போ

காததுபோலவும், §ஜிஹ்வையைச் சர்க்கரையென்று பாவித்தாலதனாலே மதுரமில்லாதது போலவும்,—பாவங்கெட்டுப் பாவிப்பதென்னிற் பாவம் -ஒருபாவனையும் பண்ணுமல் ஞானேச்சாப்பிரயத்தினுதிக ளெல்லாம் கெடநிற்பதே பரமபாவனை யென்னில்? அப்பொழுது விஷயசுகமும் ¶ நிருபாதிக சிதாநந்தாநுபவமு மிரண்டுமில்லையா யாணவ கேவலமாம். மேல் சிவபாவனை யெவ்வாறென்னில்?—பாவனையிறந்துநின்று பாவிக்கப்படுவதாகும் பரம்பரனருளினாலே - மனோபாவநாதிகளை நீங்கிநின்று தேகாதி யபேக்ஷையாய்ப் பரமான வான்மாக்களுக்கு பரமாகிய சிவனுடைய சத்தியோகத்தினாலே சிதாநந்த ஸ்வரூபமாகிய சிவத்தைத் தரிசித்து ¶ அதிசயேந × சிவோகமென்று பாவிக்கப் படுவதாமென் றிதன்பொருள்.

* புரஸ்ஸரம்-முன்னிட்டு † நிரூபணம் - சொல்லுதல். ‡ அதீதன் -' கடந்தவன, § ஜிஹ்வை-நாக்கு, ¶ நிருபாதிசம் உபாதியில்லாதது, × அதிசயேந - மிகுதியாய், + சிவோகம் - நான்சிவன்.

த்ருஷ்ட்வா ஸர்வாந்தர்யாமிணம் ஜ்ஞாநரூபம் ஸர்வஸாக்ஷிணம் ஸாவம் ஸாவயேத் ஸதா | ஶிவோ(அ)ஹமிதி நாதீதத்வ க்ஷோபாவத்ருஷ்டே || பாவேந பாவபாவேந பாவக்ருத்யா நிராஶ்ரய: | ஶிவோ(அ)ஹம்பாவநாயி விநிர்முக்தம் பாவேந மஹிதைகதாம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

விதேகபரமுத்தி சாக்ஷாத்காரணம் சதேகசீவன் முத்தி சாக்ஷாத்கார சித்திபுபாயத்தியான சாமாதி ஸ்வரூபஞ் சாற்றுகின்ருர்.

பரம் - சிவஸ்வரூபம்,—

பாவிப்பதென்னில் - பாசஞானவிளக்கு விளங்கிக் கலக்கும் பசுஞானத்தாற் றியானிப்பதென்று செப்புகில்,—

பாவம்- தடத்தலக்ஷண சிவப்பொருளாய்ச் சுட்டுப் புத்திபோத விஷயமாய்ப்போம்.—

பாவகங்கடக்கில் -பாவனாதீதமென்று பார்க்கில்,—

பாவம் - தியானமாத்திர மதவென்னு ஞானத்துக் கிலக்காகிலும் அதுவிது அதுநானென்னுந் தியானத்துக் கிலக்காகாது.—

பாவிக்கு மதுநானென்னில் - பாவிக்கப்படாத தூரத்துப் பாவிக்கப்படும் சமீபத் திதுநானென்று தியானிக்கில் சூக்குமபுத்திமான்கட்கு வாச்சியார்த்தத் தியாச்சியத்தால் இலக்கியார்த்தமாய் வாய்க்குமாகிலும் மந்தமதிமான்கட்கு,—

பாவகம் - பாவிக்கும் பாசாங்குமாத்திரம், அப்பிரத்தியக்ஷபோதம் பிரத்தியக்ஷபோதம் இரண்டும் அண்டா தாகையால்,—

பாவங்கெட்டுப் பாவிப்பதென்னில் - மனச்சங்கற்ப முன்னாக வுதிக்கும் புத்திபோதம்போக்கித் தியானம் பண்ணப்படுமென்னில்,—

பாவம் -பாவிப்பதென்று சொல்லுகலால் கெட்டது போகப் பின்னு மீதொரு புத்திபோதந்தானே பின்னை யெப்படித் தியானிப்பது,—

பரனருளினாலே - இலக்ஷணையா லிசைத்தலாற் சிவசத்தி விளக்கவிளக்குஞ் சிற்சத்திச் சித்து மனச் சங்கற்பத்தால்,—

பாவனையிறந்து நின்று - மனோபுத்தியசங்கார சங்கற்பபோத கர்வப்பிரவாகங்களைக் கீழ்ப்படுத்திக் கடத்திக் கடந்து சிவசத்தி தாரகமாய்த் தரித்த சிற்சத்திச் சித்து மனச்சங்கற்ப முன்னாகச் சிவசத்திக் குறிப் பதிஞானவிளக்கு விளக்குஞ் சிற்

சத்திக்குறிப் பதிஞானச்சித்துப் புத்திச்சித்தகங்கார வியாபாரபோதகசர்வக்குறிப் பதிஞான நிரந்தரப் பிரவாகங்களினால்,—

பாவிக்கப்படுவதாகும் - சிவமிது நானென்று தியானம் பண்ணப்படும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

நீ கூறும் பாவனையாவது, கருவிகளோடுங் கூடிநின்று செய்வதெனிற் சகலமாய்ப் போகலானும், கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதென்னில் அப்பொழுது கேவலம் வந்து தலைப்படுமாகலானும், இரண்டுமின்றிப் பாவிப்பதென்னில் அஃது தநிர்வசனீயமெனப்பட்டுப் பாழாய் முடியுமாகலானும், அவ்வாறன்றிப் பாவனைக்கு எய்தாத பொருளை யெய்திய தாகவைத்துப் பாவிக்கும் பொருள் யானென்று தன்மேல்வைத்துப் பாவிப்பதென்னில் அதனாலாவதோர் பயனில்லையாகலானும், அப்பாவனையனைத்தும் நாடகமாத்திரையே யாமாகலான் மேற்கூறியவாறு அநந்நியமாய் நின்று அவ்வருளாற் காண்டலே யீண்டைக்குரிய பாவனையாவதன்றிப் பிறிதில்லையென்பதாம்.

பாவிக்குமதுநானென்னிற் பாவகமென்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க.

பாவம் பாவகம் நாடகமெனபன வொருபொருட்கிளவி.

இதனானே பாதஞ்சலர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றாயினும், பரம்பரனருளினாலே பாவிக்கப்படுவதென்றது மலமாசு தீர்ந்தவழிச் சிவத்தோடொப்பதாய வுயிரறிவே அதனை யறியுமென்றற் படும்இழுக் கென்னையென்னும் சமவாதசைவரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருளை வருமாறு.

—o—

அவனைப் பாவித் தறியுமதொழிந்து இவனு லந்தச் சிவனை யறியப்படாதென்ற பாடாணவாதியை நோக்கி மீளவு மறுத் தருளிச் செய்கிறார்.

பாவிப்பதென்னிற்பாவம் - அந்தப்பொருள் தியானிக்கப் படுவதென்று நீ சொல்லில்? தியானிக்கப்படு மிடத்து ஒரு கரு விகூடிநின்று தியானிக்க வேண்டுகையினால் கருவிகூடிநின் றறி யப்பட்டது தியானமா யழிந்துபோய்விடும்.—பாவகங்கடகிற் பாவம்- தியானங்களால் தியானிக்கப் படாதவனென்று தியா னிப்பனென்னில்? தியானமாத்திர மொழிந்து அந்தப்பொரு ள் தரிசனமாகாது.—பாவிக்கு மதுநானென்னிற் பாவகம் - தி யானிக்கிற விவன் தானே அந்தப் பொருளென்னில்? பெறுவா னில்லையாம்.—பாவங்கெட்டு பாவிப்பதென்னிற்பாவம் - இந்த மூன்றுமல்ல வென்னில்? கர்த்தாவில்லையாம். ஆனால் அந்தப் பொருளைப் பாவிக்கு மது எப்படியென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கிறார்.—பாவனை யிறந்துநின்று பாவிக்கப்படுவதா கும் பரம்பரனருளினாலே-எல்லாத்துக்கு மேலாயிருக்கிற சிவனு டைய காருண்ணியத்தினாலே தியானிப்பதே பயன், அல்லாத தியானங்களாற் பயனில்லை.

பாவிக்கு மது நான் என்பது பரிணாமவாதி. இந்தச்செய்யுள் பாடாணவாதியை மறுத்தது. இதற்குப் பிரமாணம் சிவஞான போதம், சூ-சூ,௬-வெ, "பாவகமேற் தானசத்தாம் பாவனு தீ தமெனிற்,பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்-பாவகத்தைப், பாவித்தல் தானென்னிற் பாவகமாந் தன்னருளால், பாவிப்ப து பரமில் பாழ்." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவன் பாவகங்களா லறியப்படானென்றும் அவனைத் தியானிக்குமிடத்து அவனுடைய காருண்ணியத்தினாலே தியானிப்பதே பயன் என்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

பாவிப்ப தென்னிற் பாவம் - நீகூறும் பாவனையாவது கருவிகளோடு கூடிநின்று செய்வதெனிற் சகலமாய்ப் போகலானும்,—பாவகம் கடக்கிற் பாவம்-கருவிகளை நீங்கிநின்று பாவிப்ப தென்னில் அப்பொழுது கேவலம்வந்து தலைப்படு மாகலானும்,—பாவங் கெட்டுப் பாவிப்பதென்னிர் பாவம் - இரண்டு மின்றிப் பாவிப்ப தென்னில் அஃதநிர்வசனீயமெனப் பட்டுப் பாழாய் முடியு மாகலானும்,— பாவிக்கு மதுநானென்னிற் பாவகம் - அவ்வாறன்றிப் பாவனைக் கெய்தாத பொருளை யெய்தியதாக வைத்துப் பாவிக்கும் பொருள் யானென்று தன்மேல் வைத்துப் பாவிப்பதென்னி லதனாலுவதோர் பயனில்லை யாகலானும்,—பரம்பர னருளினாலே பாவனையிறந்து நின்று பாவிக்கப்படுவதாகும் - அப்பாவனை யனைத்து நாடக மாத்திரையேயாமாகலான் மேற்கூறியவாறு அந்நியமாய் நின்று அவ்வருளாற் காண்டலே யீண்டைக் குறிப பாவனையாவ தன்றிப் பிறிதில்லை யென்பதாம்.

இதனானே பாதஞ்சலர் மதம்பற்றி யாசக்கித்துப் பரிசரித்து மேலது வலியுறுத்தப் பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

அந்தச் சிவனைத் தானே வேறாகக் காண்பதன்றிப் பின்னமாகக் காணப்படாதென் றுணர்த்துகின்றார்.

அன்னிய மிலாமையானு மறிவினு ணிற்றலானு,
முன்னியவெல்லா முண்ணின் றுணர்த்துவ னாதலானு,
மென்னது யானென்றோது மிருஞ்செருக் கறுத்தலானுந்,
தன்னறி வதனாற்காணுந் தகைமைய னல்ல னீசன். (அ)

(இ-ள்.) அன்னியமிலாமையானும்	ஆன்மாக்களிடத்தில் வியாத்தியால் வேறாய்நிற்குந் தன்மை யில்லாதபடியாலும்,
அறிவினு ணிற்றலானும்	இவனுடைய வறிவுக் கறிவாய்ப் பிரகாசித்து நிற்கையாலும்,
உன்னியவெல்லா முண்ணின் றுணர்த்துவ னாதலானும்	ஆன்மாக்கள் யாதொன்றை யுள்ளத்திற் கருதினார்கள் அதனை யதனையறிந் ததுவதுவாகவே வேறாநின் றறிவிக்கையாலும், (வேண்டுவார் வேண்டியதே யீவான்கண்டாய்.) என்பதனாலும் (குறைவில்லார் குற்றேவல் செய்கின்றான்காண்.) என்பதனாலுமறிக.
என்னது யானென்றோது மிருஞ்செருக் கறுத்தலானும்	யானென தென்னுஞ் செருக்கின்றி நிற்கையாலும்,
தன்னறிவதனு	இந்த வேதுக்களெல்லா முடைத் தாகை

ற் காணுந் தகை யா லவனை யான்ம போதத்தா லறியத்தக் கையை னல்ல னீச க முறைமை யுடையனல்லன். எ-று. (அ)
ன்

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மா சித்தருபனுயிருக்கச் சிவஞானத்தினுலே சிவனைத் தரிசிக்கவேணு மென்பானேன் னென்றதற் குத்தரம்.

அன்னியமிலாமையானும்-சிவன் ஆன்மாவுக் கந்நியமில்லாமையாலும்,—அறிவினு ணிற்றலானும்-ஆன்மா சிவஞான வியாப்திக்குள்ளே வியாப்பியனுகி நிற்கையாலும்,—உன்னிய வெல்லாமுன்னின் றுணர்த்துவனுதலானும் - ஆன்மா நினைப்பதெல்லாத்தையும் சிவ னந்தரியாமியாக நின்று நினைப்பிப்ப னுகையாலும்,—என்னது யானென்ருேது மிருஞ்செருக் கறுத்தலானும் - சிவனுக் கந்நியமாக வொரு வஸ்துவு மில்லாத படியாலே யென்னு தியானென்கிற * மமத்துவாங்கார ரகிதனுகையினுலும்,—தன்னறிவதனுற் காணுந் தகைமைய னல்லனீசன் - ஆன்மாவைச் சிவன் பிறிவறக் கலந்திருக்கையாற் சிவஞான † வ்யதிரிக்தமாக ஆன்மஞானத்தினுலே தரிசிக்கப்படுமவ னல்லனென் றிதன்பொருள்.

* மமத்துவம் - எனது, † வ்யதிரிக்தம் - வேறு.

——

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பாசஞானம் விளக்கிக் கலக்கும் பசுஞானத்தா லறிந்து பாவித்துப் பார்க்கப்படான் பரனென்று பாஷிக்கின்ருர்.

அன்விய மிலாமையானும் - பிரியாது பிரித் தூகித்துப்பா ர்க்குமிடத் தான்மாவுக்குச் சிற்றறிவு சிற்றொழில் முதலிய வேற்றுப் பசுக்குறி மித்தையாய்ப் பேரறிவு பெருந்தொழி ன் முதலிய ஒப்புச் சிவக்குறியுள்ளதா யொருசிவசத்தி யாதலா னும்,—அறிவினுணிற்றலானும் - காண்பவனுக்கு முன் கண்டித் திராத அகண்டமா யவனது சிற்றுச் சுட்டறிவுக்கு மட்டுப் படாது அதினுள்ளும் புறம்பும் உருவியிருத்தலானும்,—உன்னிய வெல்லாம் - குறித்தவெல்லாம்,—உண்ணின் றுணர்த்துவனுத லானும் - சாக்ஷாத் தனது சத்தியால் விளக்கிநுற் பெத்தாவ த்தைப் பேதித்துக் காண்பவனது சிற்சத்தி பேரறிவாய்ப் பெ ருகி மோக்ஷ சிவசாக்ஷாத்கார முத்தியவத்தையாய்ப் போம்,— அதற் கருகமல்லாமையாற் கலை வித்தை புத்தி முதற் கரண ங்களில் மறையாது மறைந்து உள்ளுறை கலைமுதற் கரண கஞ்சுக கலுஷிதமா யிருக்குங் காண்பவன்கட் சிற்சத்தி யறிக ற்குறி விர்த்தியைச் சிறிது சிற்றறிவாய் விளக்கிப் போதித்தலா னும்,—என்னது யானென்றோது மிருஞ்செருக் கறுத்தலானும் - புத்தியகங்கார விர்த்திச் சிற்றுச் சுட்டறிவுச் சுட்டுவிட்டுச் சிட்டமாய்ச் சிவசத்திமாத்திர சகாயமாய்த் தனித்த சிற்ச த்தியிற் சிவந்தாக்கும் நோக்கந் தூக்கியிருந்தலாலும்,—தன்ன றிவதனுற் காணுந் தகைமைய னல்லனீசன் - கலைபுத்தி முதற் கரணக் குறிப் பாசஞான விளக்கு விளக்க விர்த்திக் குறி ப் பாசஞானம் விளக்கும் பரிமித சிற்சத்திக் கரணக்குறிப் பசு ஞானக் கட்பார்வை விர்த்திக்குறிப் பசுஞானத்தால் ஈசன் பார்க்கப்படுங் குறியுடையனன்று.

கலை புத்திமுதற் பாசஞானங்களை மேற்கிளம்பாமற் கிள ம்பக் கீழ்ப்படுத்துஞ் சிவனது சத்தி கரணக்குறிப் பதிஞான விளக்கு விளக்க விர்த்திக்குறிப் பதிஞானம் விளக்கும் பார்ப்

பவனது சிற்சத்திக் கரணக்குறிப் பதிஞானக் கட்பார்வை விர்த்திக்குறிப் பதிஞானத்தா லீசன் பார்க்கப்படுங் குறியுடைய னென்று பரமசித்தாந்தம்.

போகத்தின் பொருட்டாம் மாலை சந்தன மகளிர் முதற் போக்கியக் குறிப்பொருளையும் மோக்ஷத்தின் பொருட்டுப் போக்கியக்குறி பொருந்தாச் சிவப்பொருளையும் பார்ப்பவனுக்கு அவனது கரணக்குறிச் சிற்சத்தியை விளக்குங் கலைமுதற் றத்துவங்களுந் தாத்துவிக விளக்க விர்த்திகளுஞ் சிவனைக்குறித்து இயற்கைக் கரணபலங்களா யிருக்குஞ் சிவசத்தியும் சிவசத்தி விளக்க விர்த்தியும் பார்ப்பவனது சிற்சத்திக் கரணத்தை விளக்குதலாற் செயற்கைக் கரணங்களென்று செய்யப்பட் டிருந்தாலும் இயற்கைக் கரணங்கள், இயற்கை செயற்கைப் பலங்களாகா.

அப்படித்தான் சிவனைப் பார்ப்பவனைக் குறித்துச் சிவசத்தி யியற்கைக் கரண மென்றிசைக்கின்ற தற்பொருளறிவு சிவம், புறப்பொருளறிவு சிவசத்தியாதலால், தற்பொருளறிவாகிய சிவக்குறிச் சிற்சத்தியால் ஈரறிவு நடுப்பொதுவறிவுப் பிரமாதிரு ரூபமாயிருந்து, சிவன் புறப்பொருளறிவாகிய சிவசத்திரூபஸ்வரூப தற்பொருளைப் பார்ப்பன்.

சிவசத்தியாற் சிவன் பார்க்கப் படான், பார்க்கப் படுவனுகிற் புறப்பொருளறிவாதலாற் சிவசத்திக்குச் சிவன் புறப்பொருளாய்ப் போவன், பிரமிதி பலமும் பார்ப்பவனுக்கின்றிச் சிவனதாம். ஆகலினால் ஆதித்தனது கிரணத்தால் விளக்கப்பட்ட கண்போலச் சிவசத்தியால் விளக்கப்பட்ட பார்ப்பவன் சிற்சத்தியாற் சிவன்றன் சத்திமுதலிய பொருள்களுடன் கூடப் பார்ப்பவனுற் பார்க்கப் படுவனென்பது பரம சித்தாந்தம்.

பிரமாபிரமாணப் பிரஸ்தாபத்திலேயும் பிரதரிசிப்பித்தோ மொத்துக்காண்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அச்சிவம் ஒன்றாய் வேறா யுடனுமாய் நிற்பதொன்றாகலா னும், அந்நிலை அறிவானு மறிபொருளு மறிவுமெனப் பகுத்தறிய வாராமையானும், அஃதுயிரறிவா லறியப்படுவதொன் றன்றெ ன்பதாம்.

'உன்னியவெல்லா முன்னின் றுணத்துவன்' என்பதற்கு மேல் 'அறிவருளுருவாய் நிற்கும்' என்பதற்கு உரைத்தாங் குரை க்க.

செருக்காலுண்டாகிய பகுத்துணர்வைச் செருக்கெனவுப சரித்தார்.

அற்றேல் அம்முத்திறம் ஆண்டுளவென்ப தெற்றாற் பெறுது மென்னுமவரை நோக்கி யஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இவன் அந்த வருளைக்கொண்டு அறிந்தானுமாகில் அந்தவ ருளை இவனு லறியப்படாதோ வென்ற சங்கிராந்த வாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

அன்னியமிலாமையானும்-ஆன்மாவுக்கு வேறல்லாதபடியா லும்,—அறிவினுணிற்றலானும்-இவனுக்குப் பிராணனாய் நிற்கை யாலும்,—உன்னியவெல்லா முன்னின் றுணர்த்துவனுதலானு

ம் - இவ னினைத்தவைவெல்லாம் உள்ளேநின்று அறிவிக்கையினு லும்,அப்படிக்காட்டுகிற முதலை யிவன் காணுதிருப்பானேனென் னில்?—என்னுதியானென்றேத மிருஞ்செருக் கறுத்தலானும்- யானெனதென்கிற பெரிய மமதையாயிருக்கிற ஆன்மபோதத் துக்கு அப்பாற்பட்டிருக்கிறவனுகையினுலும், இங்ஙனஞ் சொ ல்லி வந்த முறைமைகளால்,—தன்னறிவதனுற் காணுந் தகை மைய னல்லனீசன்- பரமேஶ்வரன் ஆன்மபோதத்தா லிது வ துவென்று சுட்டியறியத்தக்க முறைமையை யுடையவனல்லன்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம் சூ-கூ,டு-வெ "அ றிய விரண்டல்ல ஞங்கறிவு தன்ஞு, லறிபப்படா னறிவி னுள் ளா—னறிவுக்குக், காட்டாகி நின்ருனைக் கண்ணறியா மெய்யெ ன்னக், காட்டா தறிவறிந்து கண்டு." என்னுமதங் கண்டுகொ ள்க.

இதனுற் சொல்லிபது, சிவனுன்மாவுக் குயிராய்நின்று சர்வத்தையு முள்ளேநின்று உணர்த்திக்கொண்டு நிற்றலால் அ வனை யான்மபோதத்தா லறியப்படானென்னு முறைமை யறிவி த்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஈசனன்னிய மிலாமையானு மறிவினு னிற்றலானு மன் னிய வெல்லாமுண்ணின் றுணர்த்துவ னுதலானும்-அச்சிவமொ ன்ருய் வேரு யுடனுமாய் நிற்ப தொன்ருகலானும்,— என்ன து யானெனரேத மிருஞ்செருக் கறுத்தலானும் - அந்நிலை யறி வானு மறிபொருளு மறிவுமெனப் பகுத்தறிய வாராமையானு ம்,— தன்னறி வதனுற் காணுந் தகைமைய னல்லன் - அஃது யிரறிவா லறியப்படுவ தொன்றன்று.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி மயங்கியறிகிறது ஆன்மாவினிடத்து அவனிற்கிற கலப்பினாலே சிவனென்று மயங்குகின்றாரைக் குறித்து ஆன்மா சிவனல்லகாணென் றுணர்த்துகின்றார்.

ஒன்றெனு மதனாலொன்றென் றுரைப்பதுண் டாகையாலே, நின்றனன் வேறாய்த்தன்னி னீங்கிடா நிலைமையாலே, பின்றிய வுணர்வுக்கெட்டாப் பெருமையனறிவினுள்ளே, யென்றுநின் றிடுதலாலே யிவனவனென்னலாமே. (கூ)

(இ-ள்.) ஒன்றெனு மதனால் — அந்த ஆன்மாவுஞ் சிவனு மொன்றென்று காணுமென்று நீசொல்லுகிறவ னாதலால்

ஒன்றென் றுரைப்பதுண் டாகையாலே — அந்தப் பிரம மொன்றென்று சொல்லுகிறவான்மா வொரு பொருளுண்டாயிருக்கையினாலே, என்னவே கேட்பாரின்றி யுரையாடாதென்பதாம்.

நின்றனன்வேறாய் — அந்தப் பிரம மான்மாவுக்கு வேறாய்நிற்பன்காண்.

அஃதாவது, அந்தக்கர்த்தாவை யதுவென்று சொல்லிநின்றறிகின்ற வறிவு வேறேயொன் றுண்டாகையால்

தன்னி னீங்கிடா நிலைமையாலே பின்றிய வுணர்வுக்கெட்டாப் பெருமையன் — அந்தச் சிவ னான்மாவினிடத் தெள்ளுக்கு ளெண்ணெய்போலக் கலந்து வ்யாபித்து நிற்கிறவனாகையாலே மலசம்பந்தமான வான்மபோதத்தாற் சுட்டி யறியப்படாத பெருமையையுடையன்.

அறிவினுள்ளே யென்று நின்றிடுதலாலே	அப்பொழுதிந்த வான்மாவு மவனுடைய வ்யாபகத்தினாலே யடங்கி நிற்கையாலே
இவனவ னென்னலாமே.	இந்தவான்மாவுஞ் சிவனு நிற்கிற வைக்யத்தினாலே யிந்தவான்மாவைச் சிவனென்று பசாரத்தாற் சொல்லலாம். எ-று.

இந்த விருத்த மிரண்டுக்குஞ் சர்வஞ்ஞானோத்தர மெனவறிக. (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

சிவ மேகமென்று சர்வ சுருதிகளுஞ் சொல்ல விவ்விடத்தநேகாத்மகஞ் சொன்ன தெவ்வாறென்ன ? மேலுத்தரம்.

ஒன்றெனு மதனாலொன்றென் றுரைப்பதுண் டாகையாலே - சுருதிகளிலே பிரம மொன்றேயென்று சொல்லுகிறதேயென்னில் ? ஒன்றென்று சொல்லுகிறவ னொருவ னுண்டாகையால்,—நின்றனன்வேறாய் - பிரம மொன்றென்றுசொல்லு மான்மாக்களுக்கு வேறாகநின்றானென் றறியப்பட்டது. அவ்வாறு வேறாயும்,—தன்னி நீங்கிடாநிலைமையாலே- சிவனு மான்மாவும் பிறிவறக் கலந்து நிற்கையாலே,—பின்றிய வுணர்வுக்கெட்டாப் பெருமைய னறிவனுள்ளே யென்றுநின் றிடுதலாலே யிவனவனென்னலாகும் - விகற்பவறிவாகிய புத்தியாதிகளினாலே யறியப்போகாத சிவ னான்மாவினோடு எக்காலமும் பிறிவறநிற்கையினால் இந்த ஆன்மாவையும் §விஸ்வ ஏகநாயகனாகிய சிவனே யென்று சொல்லலாமென் றிதன்பொருள்.

§ விஸ்வ ஏகநாயகன் - லோகத்துக்கொரு நாதன்.

சைவ பரிபாலக சிவாக்கிரயோகிகள் பண்ணின
சிவஞானசித்தி யாருஞ்சூத்திர வியாக்கியானம்
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

வேதாந்தி விவேகித்தறியாது சித் தேகமென்று செப்பினனென்று செப்புகின்றார்.

நீ யொன்றென்றோதும் பிரமம் அறிந்து சொல்லப்படும் பொருளோ, அப்படியாகிற் சொல்லியபின் வேறொருவனாற் கேட்டறியவும்படுமோ, அப்படியெல்லாமன்றோ, அன்றெனில் முயற்கொம் பொத்து நிஷ்பிரமாணமாம். சுயம்பிரகாசமாய்த் தன் மாத்திரத்துக்குச் சத்தா மாத்திரமா யிருக்குமென்னில் பிரமஞானம் சாதகனுக்கு முத்தி சாதனமென்பதுங் கெட்டு நிஷ்பிரயோசனமாம். அந்தப் பிரமம் அடக்கமாய்ப் பண்ணி உனக்குத்தானே உபயோகமா யிருக்கப் பண்ணிக்கொள் இங்கு வேண்டுவதில்லை. அப்படி ஏன் சொன்னீர் அந்தப் பிரமம் அறியாமலறியப்படும், சொல்லாற் சொல்லப்படும், கேளாமற் கேட்கப்படும், அப்படி நீ

ஒன்றெனுமதனால் - அந்தப்பிரமத்தை யொருபொருளென்றறிந்து பிறர்க்கறியச் சொல்லுதலால்,—

ஒன்றென் றுரைப்பதுண்டு - பிரமமொன்றென்றோதும் நீ முதலிய பொருள் ஒசப்படும் பிரமத்துக்கு வேறாயுள்ளதாம்,—

ஆதலாலேநின்றனன் வேறாய் - அறிபவனாகிய பிரமாதா, அறிந்து சொல்பவனாகிய வத்தா, சொல்லக் கேட்பவனாகிய சுரோதா, அறிதல் சொல்லுதல் கேட்டற் கிரியைக் கருவியாகும்

பிரமாணம், வாக்கு, சுரோத்திரம், அறிதல் சொல்லுதல் கேட்டற் கிரியையாகும் பிரமிதி, வசனம், சிரவணம். அறியப்படுமது, சொல்லப்படுமது, கேட்கப் படுவதாகிய பிரமேயம், அபிதேயம், சுரோதவ்வியம். என்று நான்மூன்று பன்னிரண்டு பேதமாய்ப் பொருள்கள் பார்க்கப்படுதலால் சொல்லப்பட்டும் பிரமமென்னுஞ் சிவன் சொல்பவனுக் கன்னியமாய் நின்றுனுதலால், நீ ஒன்றென்று சொல்லியது என்மாதா மலடி யென்பதற் கொக்கும். சத்தியமே நீர் சொல்லியது, ஒன்றுதானே இரண்டாம். அதில்லாதது பிரமமென்ற சுருதிச்சொல், சொல்லுக்கு முந்தி முத்திமானுதலால், முத்தான்மாக்கள் சிவனுக்கு ஒப்பாவர்களென்றோதப்படுவர்கள்; சிவன் முத்தான்மா ஒப்பாவனென்று ஓதப்படான். ஆதலால் ஒப்பற்றதென்று பொருள். நன்று நீ சொல்லியது; முந்திமுத்தி பிந்திமுத்தி யென்பதும் விசாரிக்குமிடத்திற் சிவனுக்கு பந்தமேயில்லாமையால், முத்தியே யில்லையென்பதும் மலத்தைக்குறித்து வந்த செயற்கைவார்த்தை. மலத்தைக் குறியாமல் அவனுக் கொப் பிவர்கள் இவர்களுக் கொப்பு அவன்என்பது இயற்கை வார்த்தை. இயற்கையால், இரு சிவமாயொத் தொரு சிவசாதியாய் ஒரு சிவமாகியிருக்கும் சிவப்பிரமம் வேற்றுச் சாதிப் பொருளோ டொப்ப தன்றென்று பொருள்.—

பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமையன் - பாசஞானம் விளக்கிக்கலக்கும் தூல சவிகற்பச் சிற்றுச்சுட்டறிவுச் சிற்சத்தி விர்த்திப் பசுஞானத்துக்கு மட்டுப்படாத மகிமையையுடையன் சிவன்,—

தன்னின் - சிவசத்தி ரூபக்கருவிப் பதிஞானவிர்த்திப் பதிஞானம் விளக்கித் தெளிக்கும் சூக்கும சவிகற்பச் சுட்டாது சுட்டுப் பேரறிவுத் தன். சிற்சத்தி ரூபக் கருவிப் பதிஞான பதிவிஷய விர்த்திப் பதிஞானத்தில்.—

நீங்கிடா நிலைமையாலே - வியாபித்து மேன் மிஞ்சிப்போ காத படியினாலேயும்,—

அறிவினுள்ளே யென்று நின்றிடுதலாலே - அந்தத் தன்ப திஞானக் கோடிக்குட் குறையா தொத்துவியாபித்துக் கல வாது கலந்து ஒரு சிவசாதியாய் நிற்றலாலும்,—

இவனவ னென்னலாமே - அவனிவனென்று மாறிக் குருச ங்கமாதியில் அவனிவனென்றும் அதுவன்றி இவனவ னென்ப திலக்ஷணை யென்றெண்ணி அவனுனென்றும், அத்தி அஸ்மி அ ந்தத் திசைத்துச் சோஹஞ் சோகம் இவைகாட்டும் சிவோயம் சிவோகம் என்று ஒன்றையொன் ருக்ரஷிக்கு மிரண்டு பாவனை யியற்றலாமே.

இவ்விரு சிவத்தியானத்திற் சிவசாதி குறியாது சிவப்பொ ருள் மாத்திரங் குறித்த சிவத்தியானம் பொய்யாகிலும் கருட மாந்திரிக தாதான்மிய பாவனைபோல் சத்திய பலங்கொடாது விடாது. அரதத்தாசாரியர் சதுர் வேததாற்டரியதில்,

“ அனிகம் சிவதாதாத்மயபாவநம் ததாபிவிஷம்ப்ரமார் ஷ்டி :”என்றிப்பாவனையைத தானே படித்தார்.

ஸ்வரூபசிவதாதாத்மிய சிவத்தியான மதனுண்மூசிழ்க்கு ஞ் சிவசாதி விசிஷ்டசிவத்தியான மிரணடும் சத்தியபலமும் அ ப்படிப்பலிக்கும்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி, ஸ்ரீமந் மாணிக்கவாசர், ஸ்ரீமத் அருணகிரிநாதர் என்னு மிவர்கள் தேவாரத்தும், திருவாசகத் தும், அலங்காரத்தும் “வழித்தலைப்படுவான் முயல்கின்றே னு ன்னைப்போ லென்னைப் பாவிக்க மாட்டேன்” என்றும் “ஆன ந்தவார்சுழலே யொப்பாக வொப்பிவித்த வுள்ளத்தா ருள்ளி

ருச்கும்" என்றும் "என்னை யுன்னி லொன்ருய் விசித்து" என்
றும், இப்பாவனையைத் தானே படித்தார்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

சிவமுமுயிரு மொன்றெனபாரை நோக்கி அஞ்ஞானத்தி
தொருபொருள் உண்டென்பதுபற்றி வேருய்நிற்றல் பெரும
வேறென்பாரை நோக்கி அறிவுக்கறிவு பிரிந்துதோன்ருமைபட்
வேறென்னுமறிவுக் கெட்டாது உடனுதல் பெர்ரும். த
வே கூறுவாரை நோக்கி அவ்வறிவினுள்ளாக நீர்நிழல்போ
ற்நித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி ஒனுருதல் பெர்
. . சலான் அப்பெற்றித்தாய வத்துவிதநிலையை யருளி
டங்கமாகக் கான்—மே தக்கதென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானுஞ் சிவசமவாதி மதம்பற்
சங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

இப்படி யறிந்துநிற்கிறது தானல்லோ வந்தச் சிவம் எ
ற பரிருமவாதியை நோக்கி யருளிச்செய்கிருர்.

ஒனறெனு மதனுல் - இப்படி யறிந்துநிற்கிற நானும் சி
னும் ஒனருகாணுமென்று சொல்லுகிற வதனுல்,—ஒனறென
. . . கையாலே நின்றனனவேருய் - அது வென்று
. . . ப்பட்ட சிவம் அது விது வென்று சுட்டியறிந்து
ல் . . . விந்த ஆன்மாவுக்கு வேருயிருக்கும் அந்தச் சிவதன

...ன்றித் தானே யறிவதொரு வான்மாவு முண்டே! அப்படி ...ண்டாகில் அந்தச் சிவத்தை இந்த வானமாவா லறியாதோ ...வன்னில்?—தன்னில் நீங்கிடா நிலைமையாலே - அந்தச் சிவ ...த இதுவென்று சுட்டி யறிகைக்கு அவனுக்கு இவன் அன்னி ...மாயிரான். ஆனால் இப்படிநின் றறிகிறதுதானே சிவமென்னி ...?—பின்றிய வுணர்வுக்கெட்டாப் பெருமைய னறிவினுள்ளே ...னாநின் றிடுதலாலே யிவனவனெனலாகும் - ஆனபடியா ...த்தால் சுட்டியறியப்படாத பெருமையையுடையவன் எப்பொ ...தும் அனமாவுக்குப் பிராணனாய் நின்று அறிவிக்கையினாலே ...னபானவச் சிவமென்றுஞ் சொல்லலாம்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், "அகிலமுந் ...ளப வறிவோன்றானு - மகிலமுமறிஞரையறிவிப்போனு-மறி ...ாகசறிவா யறிகனமோனு - மறிவிற்சறிபொரு ளாவோன்று ...ன் —கலமுமேனி யானவனெனறும்." சிவஞானபோதம் சூ- ...,சூ-வெ, "அதுவெனனுமொன்றன் றதுவன்றி வேறே, யது ...வன றறிவறிவு முண்டே—பதுவென், றறியவிரண்டல்ல ... ...றிவுந்தற, லறியுமறிவே சிவமு மாம்." என்னுமதுங் கண்டு ...காள்க.

இதனாற் சொல்லியது சிவன் சர்வான்மாக்களுக்கும் உயி ...ாய்நின்று அறிவிக்கையினாலே இந்த ஆனமா தானே சிவமு ...ம் என்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

...னவெனுமதநுே லொனறென் றுரைப்பதுண் டாகையா ... வேறும் நாறனன - சிவமுமுயிரு மொன் றெனபாரை

நோக்கி யங்ஙன மறிவதொரு பொருளுண்டென்பது பற்றி வேறாய்நிற்றல் பெறாரும்,—தன்னி னீங்கிடா நிலைமையாலே பின்றிய வுணர்வுக்கெட்டாப் பெருமையன் - வேறென்பாரை நோக்கி யறிவுக்கறிவு பிரிந்து தோன்றாமைப் பற்றி வேறெனவு மறிவுக்கெட்டாது உடனாதல் பெறாரும்,—அறிவுனுள்ளே யென்று நின் றிடுதலாலே யிவனவ னென்னலாமே - அவ்வளவே கூறுவாரை நோக்கி யவ்வறிவு னுள்ளாக நீர்நிழல்போ லொற்றித்து நிற்றல் பற்றி யுயிரே சிவமெனும்படி யொன்றாதல் பெறாரும், ஆகலா னப்பெற்றித்தாய அத்துவித நிலையை யருளினாலே யநுபவமாகக் காண்டலே தக்கதென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானுஞ் சிவசமவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப் பட்டது.

☞ சு - ௬, ஒழிபு—முடிந்தது.

☞ ஆறாஞ் சூத்திரம் முற்றிற்று.

"பின்னவமும்"

என்ற ஆறாஞ்சூத்திரம்

ஒன்பது

முடிந்தது.

பொது முடிந்தது.

பாயிரமுட்பட - ௬உஅ.

[illegible] 1485

[illegible]

[illegible]

[illegible] 1711

[illegible] 1236 × [illegible]

1216 [illegible]

1216 [illegible]

[illegible] 1080

[illegible] 1083

1033

[illegible]

4. 230 Vishnu 1070

[illegible] [illegible] [illegible] 1236

Meaning of Jatuni 1195 [illegible]

[illegible] 1196 [illegible] 1117

[illegible] 1099 [illegible] 1112

[illegible] 1033

[illegible] [illegible]

From 3 kinds of ulkankam 1147 [illegible] 1599

[illegible] 1105

1045

[illegible] [illegible] [illegible]

1.2.4.5 1153

[illegible] 1312

[illegible] 1195

[illegible] 1126

1216

[illegible] 1047

[illegible]
[illegible]